சட்டச் சொல் அகராதி

தமிழ்–தமிழ்–ஆங்கிலம்

பதிப்பாசிரியர்
வ. ஜெயதேவன்

தொகுப்பாசிரியர்
கு. சிவமணி

சென்னைப் பல்கலைக்கழகம்
2007

150ஆம் ஆண்டு சிறப்பு வெளியீடு

சட்டச் சொல்லகராதி

தமிழ் — ஆங்கிலம்

பதிப்பாசிரியர்

வ. ஜெயதேவன்

தகைசால் பேராசிரியர் - தமிழ் இலக்கியத்துறை
முதன்மை ஆய்வாளர் & தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

தொகுப்பாசிரியர்

கு. சிவமணி

முன்னைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

சென்னைப் பல்கலைக்கழகம்
2007

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு: 2

சட்டச் சொல்லகராதி
வ. ஜெயதேவன் (பதிப்பாசிரியர்)

150ஆம் ஆண்டு வெளியீடு

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு: அக்டோபர் 2007

விலை ரூ. 160/-

கணினி வடிவமைப்பு: திருமதி ந. சுமதி

வடிவமைத்து அச்சிட்டோர்: ஸ்ரீ ராகவேந்திரா பிரஸ்
✆ 24614545, 24952913

வெளியிடுவோர்: பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் - சென்னை - 600 005

பேராசிரியர் சு. இராமச்சந்திரன்
M.Sc., Ph.D., Ph.D. (Miami)
துணைவேந்தர்

அணிந்துரை

புத்தகங்கள் நாகரிகத்தைச் சுமந்து வருவன; அவை இன்றேல், வரலாறு ஒசையற்றுப் போகும்; இலக்கியம் ஊமையாகி விடும்; அறிவியல் ஊனப்பட்டு விடும்; சிந்தனையும் எதிர்காலக் கணிப்பும் இயக்கமற்று விடும் எனப் புத்தகம் பற்றிச் சரியாகக் கூறப்பட்டுள்ளது. நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய அன்னை நிறுவனமான சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டை அடையாளப்படுத்த... நினைவு நூல்கள் வெளியிடுவதை விடவும் சிறந்த நிலையான வேறுபணி என்ன இருக்கமுடியும்?

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைப்பு நிறுவனங்களின் ஆசிரியப் பெருமக்கள் படைத்த இந்த நூல் தொகுதிகளுக்கு முகவுரை வரைவது அருமையும் பெருமையும் சான்ற சிறப்பு. இந்நூல்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு அர்ப்பணிப்புக்கும் நிலையான நினைவுப் பொருள்களாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்நூல்கள் அவற்றின் புத்தாக்க அணுகுமுறை, ஆய்வுத்தரம், நடைநலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பெறுகின்றன.

நமது பெருநிறுவனத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் இன்றியமையாத மைல் கல்லாக மட்டுமன்றி நமது நாட்டின் கல்விப் பாங்கிற்கு ஓர் உண்மையான, பொருண்மை மிக்க பங்களிப்பை இந்நூல்கள் நல்கும் என்று நம்புகிறேன்.

கல்விச் சமூகத்தினர், கூட்டுறவாளர்கள், பங்காளர்கள் அனைவருக்கும், அவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் அக்டோபர் 9, 2007இல் வெளியிடத்தக்க வகையில் இந்நினைவு நூல்களை உருவாக்கிய ஏனைய அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய செப்டம்பர் 5, 1857 முதல் இன்றுவரை எத்தனையோ மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது. மேலும் பல சிறப்புகள் வரவுள்ளன என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க இதயம் இறும்பூது எய்துகிறது. அன்பார்ந்த வணக்கத்துடனும் மனமார்ந்த வாழ்த்துக்களுடனும்

சு. இராமச்சந்திரன்
அக்டோபர் 2007

பதிப்புரை

புது தில்லியில் உள்ள பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியோடு சென்னைப் பல்கலைக்கழகம் அதன் உலகப்புகழ் பெற்ற தமிழ் லெக்சிகன் (Tamil Lexicon) என்னும் தமிழ்ப் பேரகராதியை இப்பொது திருத்திப் புதுக்கிப் பெருக்கிப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்திற்காகப் பல்வேறு துறைகளில் வழங்கும் சொற்களும் இலக்கண, இலக்கியங்கள், உரைகள் மற்றும் இதழ்களில் வழங்கும் சொற்களும் திரட்டப்பட்டன. இவ்வாறு திரட்டப்பட்ட சொற்களைக் கொண்ட சிறப்பகராதிகள் சிலவற்றைத் தனித்தனியே வெளியிடலாம் என முடிவு செய்யப்பட்டது. இம்முடிவின்படி முதலில் தொல்காப்பிய அகராதி வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்போது சட்டச் சொல்லகராதி: தமிழ் - ஆங்கிலம் வெளியிடப்படுகிறது. முனைவர் கு. சிவமணி இவ்வகராதியை உருவாக்கியுள்ளார்.

தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் துணைவிளையுளாக மேலும் இத்தகு சிறப்பகராதிகள் சில வெளிவரவுள்ளன இவை அனைத்தும் தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பதிப்பிற்குப் பெரிதும் உறுதுணையாவன. தமிழ் உலகம் இத்தகு நன்முயற்சிகளை வரவேற்கும் என நம்புகின்றேன். இச்சட்டச்சொல் அகராதி வழக்குரைஞர்கள், நீதிபதிகள் சட்டம் பயிலும் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் முதலிய பலருக்கும் நன்கு பயன்படும் எனக் கருதுகின்றேன். இவ்வகராதியின் நிறைகுறைகள் குறித்த மதிப்பீடுகள் வரவேற்கப்படுகின்றன.

இவ்வகராதிக்கு அழகியதோர் அணிந்துரை நல்கிச் சிறப்புச்செய்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

வ. ஜெயதேவன்

பொருளடக்கம்

1. ஆய்வு முன்னுரை ix

2. சுருக்கக் குறியீட்டு விளக்கம் xxxix

3. சட்டச் சொல்லகராதி 1

ஆய்வு முன்னுரை

சட்டத்தமிழ், சட்டத்தமிழாக்க அமைப்புகள், சட்டத் தமிழாக்கக் கொள்கைகள், சட்டத் தமிழாக்கச் சிக்கல்கள், சட்டச்சொல் அகராதிகள், இந்த அகராதியின் அமைப்புமுறை ஆகிய பகுதிகள் இவ்வாய்வு முன்னுரையில் இடம்பெறுகின்றன.

1. சட்டத்தமிழ்

"படிப்பு ஓர் ஆயத்த மனிதனை உருவாக்குகிறது; சட்டம் ஒரு துல்லிய மனிதனை உருவாக்குகிறது" (Reading maketh a ready man; Law maketh an exact man) என்று சட்டவியலார் பெருமையுடன் கூறுவர். அச் சட்டம் தாய்மொழியில் அமையாமல், வேற்று மொழியில் இருந்தால் எத்தகைய விளைவு ஏற்படும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

பல்லாண்டுகட்கு முன்னர், கோவைமாவட்டத்தில் நடைபெற்ற ஒரு கொலை வழக்கில் நீதிபதி குற்றவாளிக்கு இறப்புத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார். நீதிமன்ற எழுத்தர் குற்றவாளியை நோக்கி, "உமக்குத் தூக்கு தண்டனை சொல்லியிருக்காங்க" என்று உரத்துக் கத்தினார். அதைக் கேட்ட அத் தீர்ப்புக்குற்றவாளி "சட்சு துரைங்களே! என்ன படிச்சீங்கன்னும் தெரியலே; எனக்குத் தூக்குப் போட்டிருக்கீங்க; "ரெண்டுநாளா வக்கீலிங்க என்ன பேசுனாங்கன்னு புரியலே" என்று புலம்பினார். அதற்கு நீதிபதி, "Ignorance of law is no excuse" (சட்டம் பற்றிய அறியாமை மன்னித்து விடுவிக்காது) என்று விளக்கம் அளித்தார்.

சட்டத் தமிழ் இலக்கியம்

தாய்மொழியிலேயே தடுமாறும் ஒருவர் அயல்மொழிச் சட்டத்தை அறிந்துவைத்திருக்க வேண்டும் என்பது பொருந்துமா என ஆழ்ந்து சிந்தித்ததன் விளைவே புதிய துறையாகிய சட்டத்தமிழ்.

இருபதாம் நூற்றாண்டின் வளர்தமிழ்ப்புலங்களுள் அறிவியல்தமிழ், ஆட்சித்தமிழ், சட்டத்தமிழ் ஆகிய மூன்றும் பல்வேறு சிக்கல்களையும் அறைகூவல்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றன.

சட்ட இலக்கியம் எத்தகையது என்னும் வினாவுக்கு விடையாக, "*சட்ட அடிப்படையில் உருவாகிய நீதிமுறை என்பது விஞ்ஞானமும் அன்று; கலையும் அன்று; இரண்டின் குணங்களும் கூடி, மனிதனின் தனிக் கருத்துவடிவமான ஓர் அற்புதப் படைப்பாகும்*" என நீதியரசர் அனந்தநாராயணன் நுட்பமாக விளக்கியுள்ளார் (அணிந்துரை, *குறள்கூறும் சட்டநெறி*).

ஆங்கிலத்திலுள்ள நம் நாட்டுச் சட்டங்களைத் தமிழாக்கம் செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளது. எனவே, சட்டத் தமிழ் இலக்கியம் என்னும் புதிய துறை உருவாயிற்று.

சட்டத்தமிழ் என்பதில் சட்ட மொழிபெயர்ப்பு, சட்டச்சொல்லாக்கம், சட்ட நூலாக்கம் ஆகியவை அடங்குகின்றன. இப்பணி எளிய செயலன்று; மிக அரிய செயலாகும்.

சட்டத்தமிழ் நூல்கள் பலவற்றை எழுதியுள்ள சட்ட நூலாசிரியரும் சட்ட ஆட்சிமொழி ஆணையத் தலைவராக இருந்தவரும் ஆகிய திரு.மா.சண்முகசுப்பிரமணியம் தமது *சட்டவியல்* என்னும் நூலின் முன்னுரையில், "*ஓரளவு அச்சத்துடனேயே சட்டவியல் என்னும் இந்நூலைத்*

தமிழில் ஆக்கத்துணிந்தேன். ஆனால் எழுதுவதில் ஈடுபட்டபின், எவ்வளவு நுண்ணிய கருத்துக்களையும் தமிழில் கூறமுடியும் என்பது தெளிவாயிற்று" என்று எழுதியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

சட்டமொழிபெயர்ப்புக்கும் இலக்கியம் போன்ற பிறதுறை மொழிபெயர்ப்புக்கும் அடிப்படையிலே பெரும் வேறுபாடு உண்டு. ஏனென்றால், *"ஒரு நாட்டின் அரசு செயல்முறைப்படுத்தும் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் கொண்டதே அந்நாட்டின் 'சட்டம்' ஆகின்றது"* என்று சட்டத்திற்குச் சட்டவியலார் பொருள்கூறுவர். சட்டத்தை எளிமையாக எல்லோரும் புரிந்து கொள்ளமுடியாது. அதனைத் தெரிந்துகொள்ள அத்துறை வல்லுநர்களின் உதவி தேவைப்படுகிறது. *"சட்டம் என்பது ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு"* என அறிஞர் அண்ணா, தமக்கே உரிய சொல்லாற்றலுடன் சட்டத்திற்கு எளிய விளக்கமளித்துள்ளார்.

சட்டமொழிபெயர்ப்பு என்பது, தனி ஒருவரின் உழைப்பு மட்டும் ஆகாது; அது பலருடைய கூட்டு முயற்சி.

> *"சட்ட மொழிபெயர்ப்பானது சட்டமியற்றுபவர், வழக்குரைஞர், நீதிபதி, மொழிவல்லுநர் ஆகிய நால்வரின் ஒருங்கிணைந்த பணியின் கூட்டு முயற்சி"*

என்பது கேரளச் சட்ட ஆட்சிமொழி ஆணையத் தலைவர் திரு எம். பிரபா அவர்களின் கருத்தாகும் (*Problems of Translation of Law,* 130).

இதையே ஒரு **'கூட்டுத் தவம்'** எனச் சுருக்கமாகக் கூறும் நீதியரசர் மகராசன்:

> *"ஒரு மொழியைக் கவனமின்றி இன்னொரு மொழியில் பெய்யும்போது, மூல மொழியின் ஆன்மா ஆவியாகப் பறந்துபோய்விடுகிறது; மிஞ்சுவது எல்லாம் மூலமொழியின் உயிரற்ற சடலம்தான். கவிதையை மொழிபெயர்க்கும்போது இந்தக் கஷ்டம் பன்மடங்கு அதிகமாகிறது. பகலவனுடைய கதிர்களைப் பின்னிக் கூடை முடைய முடியாது. ஆனால் சட்டத்தைப் போன்ற அறிவியல் சம்பந்தமான உரைகளைப் பெருமுயற்சியால் பிழையில்லாமல் மொழிபெயர்க்கக்கூடும். இரு மொழிகளின் பண்பு எல்லாம் தெரிந்த நிபுணர்களோடு கூடிக் கலந்தாலோசித்துக் கூட்டுத்தவம் செய்தால் அது கைகூடும்"*

என்று இலக்கிய நயந்தோன்ற மேலும் அதற்கு அவர் விளக்கமளித்துள்ளார் (முன்னுரை, *சட்டச்சொல் அகராதி* - 1979).

அருமைப்பாடு மிக்க இச்சட்ட மொழிபெயர்ப்புப் பணி மிகக் கடினமானதாக இருந்தபோதிலும் அதைச் செய்யத்தான் வேண்டும்.

> *"திட்பம், நுட்பம், தெளிவு இவை கூடிய சொற்களால்தான் சட்டக்கருத்துத் தொடர் அமைய இயலும். இப்பணி எளிதன்று; இருந்தாலும் இதில் சோர்வடையக் காரணமில்லை"*

எனச் சொல்லி ஊக்குவிப்பார் நீதியரசர் அனந்தநாராயணன் (முன்னுரை, *சட்டச்சொல் அகராதி* - 1968).

முதல் சிந்தனையாளர்

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்பெற்ற தஞ்சை மாவட்டத்திலே தாது ஆண்டில் (1876) பெரும்பஞ்சம் ஏற்பட்டது. ஒருவர் தம் கைப்பொருளை மட்டுமன்றிப் பற்பல செல்வரிடமும்

பொருளுதவி பெற்று மக்கள் பசிதீர்க்கப் பாடுபட்டார். இவ்வரிய செயலைக் கண்டு கோபால கிருட்டிண பாரதியார் மிகவும் மனம்நெகிழ்ந்து, "நீயே புருஷமேரு" எனத் தொடங்கும் ஒரு கீர்த்தனையைப் பாடினார்.

"பாரதியார் இயற்றிய கீர்த்தனைகளுள் இவ்வொன்றே நரஸ்துதியாக உள்ளது. வேறு எந்தச் சமயத்திலும் யார்மீதும் பாடியதாகத் தெரியவில்லை"

என டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார் (*கோபாலகிருஷ்ண பாரதியார்*, ப.53).

அந்தப் 'புருஷமேரு' மாயூரம் முன்சீப் ச.வேதநாயகம்பிள்ளை (11-10-1826 - 21-7-1889) ஆவார். *பிரதாப முதலியார் சரித்திரம்* என்னும் நூலை எழுதிப் புனைகதை இலக்கியத்துக்குத் தமிழில் வித்திட்ட பெருமைக்குரியவர் வேதநாயகர் என்பதைப் பலரும் அறிவர். ஆனால் சட்டத் தமிழின் முன்னோடியும் அவரே என்பதைச் சிலரே தெரிந்திருப்பர்.

"வேதநாயகர் தம் இருபத்திரண்டாம் வயதில் திருச்சிராப்பள்ளியில் வழக்கு மன்றத்தில் 'ரிக்கார்டு கீப்பர்' ஆக இரண்டாண்டுகளும், பிறகு மாவட்ட வழக்கு மன்றத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தார். 1856-இல் மாவட்ட முன்சீப்பு வேலையில் தரங்கம்பாடியில் அமர்ந்தார். பிறகு சீர்காழியிலும் மாயூரத்திலும் வேலை பார்த்தார். 1872-இல் ஓய்வு பெற்றார். பிறகு மாயூரம் நகரசபைத் தலைவராகத் தொண்டாற்றினார்" (*கலைக்களஞ்சியம்*, தொகுதி 9).

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நீதிமன்றப் பணிகளுடன் தொடர்புகொண்டிருந்த வேதநாயகர், பதினாறு ஆண்டுகள் (1856-1872) உரிமையியல் நீதிபதியாகப் பணியாற்றினார்.

"தொண்டை கிழித்துக் கொண்டு
சண்டை செய்யும் வக்கீல்கள்
அண்டையில் இருந்து நம்
மண்டையை உடைத்தால் -
ஆண்டவனை நினைப்ப தெப்போது நெஞ்சே!
ஐயன் பதத்தை நினைப்ப தெப்போது நெஞ்சே!"

என்று நீதிபதியின் நிலைபற்றி நகைச்சுவையுடன் பாடினாலும், தாய்மொழியில் நீதிமன்ற அலுவல்கள் நடைபெறவேண்டியதன் இன்றியமையாமையை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

அக்காலத்தில், உயர்நீதிமன்றத்துக்குச் 'சதர் அதாலத்' என்று பெயர். அந் நீதிமன்றத்தில் 1805 முதல் 1861 வரை பகரப்பட்ட 1448 தீர்ப்புகளைத் திரட்டித் தமிழாக்கம் செய்தார். 1862-இல் *சதர்க் கோர்ட்டாரவர்களின் சித்தாந்த சங்கிரகம்* என்னும் பெயரில் 266 பக்கங்கள் கொண்ட அத் தீர்ப்புத்திரட்டைத் தாய்மொழியாம் தமிழில் முதன்முதலில் வெளியிட்டுச் சட்டத்தமிழுக்குத் தோற்றுவாய் செய்தார். அத்தீர்ப்புத் திரட்டில் தமிழிலும் ஆங்கிலத்திலும் முன்னுரைகள் உள்ளன.

அந்நூலின் தமிழ் முகவுரை வருமாறு:

"வக்கீல்களும், வியாஜியக்காரர்களும் நியாய பரிபாலக விஷயத்தில் எவ்வகையிலாவது சம்பந்தப்பட்ட இதரர்களும், சதர்க் கோர்ட்டாரவர்களுடைய சித்தாந்தங்களை ஸ்பஷ்டமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமென்பது ஸகலரும் அங்கீகரிக்கும்படியான விஷயமே தவிர வேறல்ல. ஆனால் அந்த விதிகள் அநேக புஸ்தகங்களில் சிதறிக் கிடக்கிறபடியால், இங்கிலீஷ் பாஷை தெரிந்தவர்களும் அந்தப் புஸ்தகங்கள் ஸ்வாதீனம் உள்ளவர்களுங்கூட அந்த விதிகளை அறிந்து கொள்வது

மஹா பிரயாசமாயிருக்கின்றது. கட்சிக்காரர்கள் அடிக்கடி கோர்ட்டுக்கு வருவதும் அதனால் விருதா விரயத்திற்கும் சிரமத்திற்கும் அசௌக்கியங்களுக்கும் அவர்கள் உள்ளாவதும் ஆச்சரியமான காரியமல்ல. இந்த அசந்தர்ப்பங்களையெல்லாம் அறியும்படியான சமயங்கள் என்னுடைய முன்சீப் உத்தியோக மூலமாக எனக்குக் கிடைத்திருப்பதால் 1805 முதல் 1861வரையுள்ள சதர்க்கோர்ட்டின் ஸித்தாந்தங்களைத் திராவிட பாஷாரூபமாகச் செய்வது இங்கிலீஷ் தெரியாத நியாயாதிபதிகளுக்கும், வக்கீல்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் பிரயோஜனகரமாயிருக்குமென்றெண்ணி, அந்தப்படி பாஷாந்தரம் செய்ய உடன்பட்டேன். அந்தச் சித்தாந்தங்களில் சர்வலோக உபயுக்தமான விதிகள் அடங்கிய பாகங்களை மட்டும் மொழி பெயர்ப்பது போதுமென்றெண்ணி அந்தப்படி சங்கிரகம் செய்திருக்கிறேன்...”

மாயூரம் 1862 — ச. வேதநாயகம் பிள்ளை
செப்டம்பர் மீ 5 தீ — மாயூரம் முன்சீப்

2. சட்டத் தமிழாக்க அமைப்புகள்:

(அ) இந்திய அரசு

அரசமைப்புப் பேரவையின் தலைவராக இருந்த டாக்டர் இராசேந்திர பிரசாத், **‘அனைத்திந்திய மொழிகள் வல்லுநர் ஆணைக்குழு’** ஒன்றை உருவாக்கினார். இக்குழுவில் சமசுகிருதத்துக்கு ஐவர், இந்திக்கு ஐவர், ஏனைய மொழி ஒவ்வொன்றுக்கும் இருவர் என்னும் அளவில் சார்பாளர்கள் இடம்பெற்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய தமிழ்ப் பேராசிரியர், சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளையும், நாவலர் டாக்டர் ச.சோமசுந்தர பாரதியாரின் மருகரும் அரசமைப்புப் பேரவை உறுப்பினருமாகிய எல். கிருட்டிணசாமி பாரதியாரும் தமிழ்மொழியின் சார்பாளராகப் பங்கேற்றனர்.

ஆங்கில மூலத்திலுள்ள இந்திய அரசமைப்பை (Constitution of India) மாநில மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு ஏற்றவண்ணம், சட்டத்திலுள்ள இன்றியமையாத சொற்களுக்கு ஒரு பொது அகராதியை உருவாக்க வேண்டும் என்பதே இந்த வல்லுநர் குழுவின் பணி ஆகும். 863 சட்டச் சொற்கள் பொதுச் சொற்களாகத் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்குரிய மொழிபெயர்ப்புடன் வல்லுநர் குழுவின் ஒப்புதலுக்காக முன்வைக்கப்பட்டன. பெரும்பாலும், வடமொழிச் சொற்களே நேரிணையான சொற்களாக அமைந்தன. அவற்றையே இந்திய மொழிகள் அனைத்திலும் பயன்படுத்தவேண்டும் எனக் குழுவில் இருந்த பெரும்பான்மையினர் வற்புறுத்தினர். தமிழ்ச் சார்பாளர் இருவரும் இதனை ஏற்க மறுத்துக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

‘Water ways’ என்னும் ஆங்கிலச் சொற்களுக்குரிய மொழியாக்கமாக **‘ஜலபாதா’** என்னும் தொடர் அமைந்திருந்தது. இதனை ஏற்க மறுத்த பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை, “இதனைத் தமிழில் **‘நீர்வழி’** என்று சொல்லவேண்டும். ‘ஜலபாதா’ என்று சொன்னால் பொருளேவேறு (ஜலஉபாதை) என்று நயமாக எதிர்த்துக் குரல் கொடுத்தார். தென்னிந்திய மொழிகளின் சார்பாளர்களும் பேராசிரியருக்கு ஆதரவு அளித்தனர். எதிர்ப்பு வலுக்கவே, மாநில மொழிபெயர்ப்பில் இந்தப் பொது அகராதிச் சொற்களையே கொள்ள வேண்டும் என்னும் முந்திய நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொண்டு இயன்றவரை பயன்படுத்தலாம் எனக் குழு அறுதி முடிவு செய்தது.

1950-ஆம் ஆண்டில் இந்திய அரசு, தமிழக அரசுக்கு அரசமைப்பை மொழிபெயர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தது. வல்லுநர் குழு உறுப்பினர் இருவருடன் வழக்குரைஞர் பி.என்.அப்புசாமியும் மொழிபெயர்ப்புத்துறைச் செயலாளர் திரு விநாயகமும் அதில் இடம் பெற்றனர். பொது அகராதிச் சொற்களைப் பயன்படுத்தி அரசமைப்பின் தமிழாக்கம் என்னும் பெயரில் ஒரு மொழிபெயர்ப்பை இந்திய அரசு இக்குழுவுக்கு அனுப்பிவைத்தது. அதன் முகப்புரையில்,

"இந்த சம்விதான சபையிலே, பாரதத்தை
ஒரு சம்பூரண பிரபுத்வ சம்பன்ன
லோக தந்தராத்மக கணராஜ்யமாக
அமைத்து; அதன் நாகரிகர்கள்
அனைவர்க்கும் சமாதிக, ஆர்த்திக
நீதியை வழங்க அதிநியமம் செய்து
கொள்வோமாகவும்"

என்று தமிழ் எழுத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது (எல். கிருஷ்ணசாமி பாரதியார், *நமது அரசியலமைப்புச் சட்டமும் மொழிகளும்*).

Soveriegn Democratic Republic என்னும் தொடருக்குரிய தமிழாக்கம் '**இறையாண்மைமிக்க மக்களாட்சிக் குடியரசு**' என்பதாகும். மைய அரசின் தமிழாக்கத்தில் இத்தொடர் 'சம்பூரண பிரபுத்வ லோக தந்தராத்மக கண ராஜ்யம்' என மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. வடமொழி, தமிழ் எழுத்தைப் போர்த்திக்கொண்டு அரசமைப்புத் தமிழாக்கம் என்னும் பெயரில் தமிழகத்தில் தலைநீட்டியது. இம்மொழிபெயர்ப்பைத் தமிழாக்கக் குழுவினர் ஏற்கவில்லை.

தமிழில் பிறமொழிக் கலப்பைப் பற்றி,

"கண்ணுக்கு மை இடுவது போல, பிறமொழிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மை அதிகமானால், எப்படிக் கண்ணை அரித்து விடுகிறதோ, அழகைக் கெடுத்துவிடுகிறதோ, அதுபோலப் பிறமொழிகளை அதிகமாகக் கலப்பதும் நம்மொழிக்கு ஆபத்தான நிலைமையையே உண்டாக்கும்"

என்று அறிஞர் அண்ணா சொன்ன உவமையும் இங்கே கருதத்தக்கது.

(ஆ) தமிழ்நாடு அரசு:

ஆட்சிமொழிச் சட்டம்

இந்திய அரசமைப்பின் 345-ஆம் உறுப்பினை அடியொற்றிப் பல்வேறு மாநில அரசுகள் தங்களுடைய ஆட்சிமொழிகள் குறித்துச் சட்டங்களை இயற்றின. ஆனால், தமிழகத்தில் உடனடியாக அவ்வாறு செய்ய முடியவில்லை. அன்றைய நிலையில் தமிழ்நாடு சட்டப்பேரவை தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடியர் ஆகியோர் அடங்கிய சென்னை மாகாணச் சட்டப்பேரவையாக இருந்தமையால் மொழிச்சிக்கல் நிலவியது. 1953-இல் ஆந்திரரும், 1956 நவம்பர் முதல் நாளில் கேரளரும், கன்னடியரும் பிரிந்து சென்றமையால், தனித்தமிழ்ச் சட்டப்பேரவை 1-11-1956 முதல்தான் செயற்பட முடிந்தது.

தமிழகச் சட்டப்பேரவையினர், கட்சி வேறுபாடுகளை எல்லாம் களைந்து, 1956 டிசம்பர் 27-ஆம் நாள் தமிழை அரியணை ஏற்றினர். அன்றுதான் தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் (எண் 39 / 1956) இயற்றப்பட்டது. உணர்ச்சிப் பெருக்குடன் பலர் உரையாற்றினர்.

அப்போதைய நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் அவை முன்னவராகவும் இருந்தமையால் ஆட்சிமொழிச் சட்டத்தை முன்மொழிந்தார்:

"சட்டசபையின் சார்பாக, தமிழ்மக்களின் சார்பாக, இந்த மசோதாவைத் தமிழ் அன்னையின் மலரடிகளில் சமர்ப்பிக்கின்றேன். தமிழனாய்ப் பிறந்த பிறவிப் பயனை நான் பெற்றுவிட்டதாகவே கருதுகிறேன்... என்னைவிடத் தகுதி பெற்றவர்கள், தமிழுக்காக உழைத்தவர்கள், தமிழிலே பெரும்பாண்டித்தியம் பெற்றவர்கள் எல்லாம் இருக்க, எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது தனிப்பெருமை. அதைப்பற்றி உண்மையிலேயே எண்ணி எண்ணி மகிழ்கிறேன். இன்றைக்கு உயிர்நீத்த தமிழ்ப் பெரியார்களின் ஆவிகள் எல்லாம் பார்க்கக்கூடிய சக்தி பெற்றிருக்குமேயானால், இன்று நமது சட்டசபையின் மேலிருந்து ஆரவாரம் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை"

என்று அவர் உரைத்து, *"வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!" என மும்முறை முழங்க, அவரைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர் அனைவரும் வாழ்த்தொலி எழுப்ப, தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது"* (துரை. சுந்தரேசன், *தமிழ் ஆட்சிமொழி - ஒரு வரலாற்று நோக்கு*, பக்.339-340).

இச்சட்டம் 1957 சனவரி 14-ஆம் நாள் தமிழக ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று, தமிழ்நாடு அரசிதழில் 1957 சனவரி 23-ஆம் நாள் முறைப்படி வெளியிடப் பெற்றதன்மூலம், தமிழை ஆட்சிமொழியாக்கும் முயற்சியில் முதலடியை அரசு எடுத்து வைத்தது.

சட்ட அகராதிக் குழு

1957-ஆம் ஆண்டில், தமிழக அரசு, அப்போதைய சட்டக்கல்லூரி இயக்குநர் திரு மா.அனந்தநாராயணன் தலைமையில் சட்ட அகராதிக் குழு ஒன்றை அமைத்தது. பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை, திருவாளர்கள் ஆர்.வி.கிருஷ்ணையர், பெ.நா.அப்புசாமி, அ.அழகிரிசாமி, அ.பழனிச்சாமி ஆகியோர் இக் குழுவில் உறுப்பினராக இடம்பெற்றனர். A முதல் D வரையுள்ள ஆங்கிலச் சட்டச் சொற்களுக்கு நேரிணையாகச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்புக்கொண்ட ஓர் அகராதியை அக்குழு வெளியிட்டது என்பர் (நீதியரசர் மா. அனந்தநாராயணன், முன்னுரை, *சட்டச்சொல் அகராதி*-1968).

1959-இல் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் என்னும் ஓர் அமைப்பை அரசு உருவாக்கியது. சட்டத்தைச் செயற்படுத்தும் குழுவின் பணிவளர்ச்சிபற்றி ஆராய்ந்து உரிய அறிவுரை வழங்கி நெறிப்படுத்துவது இம்மன்றத்தின் குறிக்கோள் ஆகும்.

1965-இல் தமிழ் வளர்ச்சித் துறை என ஓர் இயக்ககத்தை அரசு தோற்றுவித்து, அதனிடம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு முழுவதையும் ஒப்படைத்தது.

தமிழ்நாடு ஆட்சிமொழி ஆணையம்

1966-இல் தமிழக அரசு சட்டத் தமிழாக்கத்திற்கென ஓர் ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையத்தின் நோக்கம் மைய-மாநில அரசுகளின் சட்டகை(Act) களைத் தமிழாக்கம் செய்வதாகும். சட்டம், தமிழ் ஆகிய இருதுறை வல்லுநர்களும் இணைந்து பணியாற்றும்போதுதான் சட்டத்தமிழ் செழுமையுறும் என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் ஆணையத்திற்கான தனிநிலைப்பணி விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றுக்கிணங்க, ஆணையத் தலைவர் உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், முழுநேர

உறுப்பினர் தமிழ் வல்லுநராகவும், செயல் - உறுப்பினர் மாவட்ட நீதிபதிப் பணியிலிருப்பவராகவும் அமைதல் வேண்டும். இவர்களேயன்றிப் பகுதிநேர உறுப்பினர்களும் சட்ட மொழிபெயர்ப்பாளர்களும் உண்டு. இந்த ஆணையத்தின் செயற்பாட்டைப் பொறுத்து அதை நான்கு காலப்பகுதியாகப் பிரிக்கலாம்.

முதலாம் காலப்பகுதி : தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணைக்குழு

1966-இல் சட்டத் தமிழாக்கத்திற்கு என்று, '**தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணைக்குழு**' என்னும் பெயருடன், ஓர் அமைப்பை அரசு தோற்றுவித்தது. அவ்வாணைக்குழுவில் அப்போதைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, **நீதியரசர்** மா.அனந்தநாராயணன் தலைவராகவும், முன்னாள் தலைமைச்செயலாளர் சு.வெங்கடேசுவரன் ஐ.சி.எஸ்., சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் மு.வரதராசனார், மாவட்ட நீதிபதி சே.ரங்கராசன் ஆகியோர் பகுதிநேர உறுப்பினர்களாகவும், சட்டத்துறைச் செயலாளர் தி.சி. இராமலிங்கம், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் வே.கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., ஆகியோர் பதவிவழி உறுப்பினர்களாகவும், பன்மொழிப்புலவர் கா.அப்பாதுரையார் முழுநேர உறுப்பினராகவும், சட்டப் பேரவைச் செயலாளர் மா. சண்முகசுப்பிரமணியம் செயல்-உறுப்பினராகவும், ஆங்கிலச் சட்டங்களைத் தமிழாக்கம் செய்வதற்கென்று சிறிய அளவில் அமைந்த மொழிபெயர்ப்புக் குழுவினரும் பணிபுரிந்தனர். மேலும், சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், செயலாளர் வைகுண்ட பட் ஆகிய இருவரும் தெலுங்கு, கன்னடம், வடமொழி இவற்றில் கொண்ட புலமையினால் ஆணையக் குழுவினருக்கு உதவியாக இருந்தனர்.

> "நீதிமுறையின் பண்பும் பயனும் நாட்டுமக்கள் நலமுற அறியும் வகையில் அமைய வேண்டுமானால், நீதிமன்ற மொழி நாட்டுமக்களுக்குப் புரியும் வகையில், அவர்களது தாய்மொழி வாயிலாகவே வழங்கப்படவேண்டும்; எளிமையையும் இயன்ற அளவு கடைப்பிடிக்கவேண்டும்; ஆனால் எளிமையின் பொருட்டுச் சட்ட நுட்பத்தின் நேர்மையைக் கைவிட்டுவிடக்கூடாது"

என்பதைத் தமிழாக்கக் கொள்கையாகக் கொண்டு, இந்த ஆணைக்குழு பத்தாண்டுக் காலம் செயற்பட்டது.

இந்திய அரசமைப்பையும், நூற்றுக்கணக்கான சட்டகைகளையும் நல்ல செறிவான சொற்களைப் பயன்படுத்தியும் இந்த ஆணைக்குழு தமிழாக்கம் செய்திருந்தது. ஆனால், அவற்றில் ஒன்றைக்கூட அச்சிட்டு வெளியிடவில்லை. 'ஏன் வெளியிடப்படவில்லை' என்று ஓர் உரையாடலின்போது அப்போதைய செயல்-உறுப்பினர் மா.சண்முகசுப்பிரமணியத்திடம் நான் வினவியபோது அவர் என்னிடம் ஒரு காரணத்தைத் தெரிவித்தார். இக்குழுவினர் செய்த அரசமைப்பின் தமிழாக்கம் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் திரு மு. கருணாநிதியின் பார்வைக்கு வைக்கப்பட்டது; மேலோட்டமாக அதைப் பார்த்த அளவிலேயே 'கரடுமுரடாக இருக்கிறது; எளிமைப்படுத்தலாமே' என்று அவர் கருத்துரைத்தார். ஆணைக்குழுவினர் உடனடியாக அவற்றை எளிமைப்படுத்தி வெளியிட்டிருக்கலாம். ஏனோ செய்யவில்லை.

1968-இல் இந்திய மொழி எதிலும் சட்டச்சொல் அகராதி வெளியிடப்பட்டிராத அந்த நாளில், முதன்முதலில் சட்டச்சொல் அகராதியைத் தமிழில் கொண்டுவந்த பெருமை நீதியரசர் அனந்த நாராயணன் குழுவிற்கு உரியது.

"சட்டக் கலைச்சொற்களின் ஒரேசீரான தமிழாக்கம் இல்லையெனில், ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களைத் தமிழில் அமைக்க இயலாது. இன்ன சட்டக் கருத்தினைக் குறிப்பது இன்ன தமிழ்ச்சொல் என்று அறுதியாக வரையறுத்து வகுத்தால்தான், அச்சொற்களைக் கொண்டு தமிழாக்கப்பெறும் சட்டங்கள் பொருள்மயக்கமோ முரண்பாடோ இன்றி அமையமுடியும். எனவே, சட்டங்களைத் தமிழாக்கவும் தீர்ப்புகளைத் தமிழில் எழுதவும், மொழிபெயர்க்கவும், சட்ட நூல்களைத் தமிழில் இயற்றவும் அடிப்படையாக அமைவது இச்சட்டச்சொல் அகராதி ஆகும்"

என்று அந்த அகராதியைப்பற்றி நீதியரசர் மா.அனந்தநாராயணன் அறிமுகம் செய்திருக்கிறார் (முன்னுரை, *சட்டச்சொல் அகராதி,* 1968).

நீதியரசர் அனந்தநாராயணன் நான்காண்டுகளுக்குப் பின் தலைமைப் பதவியிலிருந்து விலகினார். 1970 முதல் 1976 வரை ஆணைக்குழு தலைவர் இன்றியே செயற்பட்டது.

இரண்டாம் காலப்பகுதி : தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்

1976-ஆம் ஆண்டு நெருக்கடிநிலை சாற்றுகைசெய்யப்பட்டபோது ஆட்சிமொழி ஆணைக்குழுவும் கலைக்கப்பட்டு, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி, **நீதியரசர் எஸ். மகராசன்** தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில், அமர்வு நீதிமன்றத்தின் முன்னாள் முதன்மை நீதிபதி ஆ.சிதம்பரம் முழுநேர உறுப்பினராகவும், மாவட்ட நீதிபதி அலெக்சாந்தர் செயல்உறுப்பினராகவும், ஆட்சிமொழிக்காவலர் கீ.இராமலிங்கனார், தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, சட்டத்தமிழ் அறிஞர் இராசுச் செட்டியார், சட்டத்துறை முன்னாள் செயலாளர் கா.பாலசுப்பிரமணியம், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் மருகர் எஸ்.எஸ். இராமசாமி ஆகிய ஐவர் பகுதிநேர உறுப்பினர்களாகவும், தமிழ்நாடு சட்டத்துறைச் செயலாளர் எஸ். வடிவேலு, தமிழ் வளர்ச்சி இயக்குநர் கொண்டல் சு.மகாதேவன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் அவ்வை து.நடராசன் ஆகியோர் பதவிவழி உறுப்பினராகவும், சார்பு நீதிபதி கு.இராசாராம் துணைச்செயலாளராகவும், தி.வே.தெய்வசிகாமணி உதவிச் செயலாளர் பொறுப்பிலும் பணியாற்றினர்.

பெயரளவில் இருந்த சட்டத் தமிழாக்கக் குழு விரிவுபடுத்தப்பட்டது. கல்வித்துறை சார்ந்த பேராசிரியர், நீதித்துறை சார்ந்த வழக்குரைஞர்கள், படைப்பிலக்கியத் துறைசார்ந்த எழுத்தாளர்கள் எனப் பல்வேறு துறைகளையும் சேர்ந்த பன்னிருவர் சட்டமொழிபெயர்ப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுள் ஐவர் தமிழிலும், எழுவர் சட்டத்திலும் பட்டம் பெற்றவர்கள்.

1975 வரை இலக்கியவாணனாக உலாவந்த என்னைச் சட்டத்தமிழுக்கு வல்லந்தமாக இழுத்துப் பிணைத்து ஓர் ஈர்ப்பினை ஏற்படுத்திய பெருமை நீதியரசர் டாக்டர் எஸ். மகராசனுக்கே உரியது. தனி முறையில் நேர்ந்த எங்கள் முதல் சந்திப்பு ஏறத்தாழ நான்கு மணிநேரம் நீடித்தது. அப்போது கொள்கைமோதல், கருத்து வேறுபாடு, இலக்கியச் சொற்பூசல் ஆகியவை எங்களுக்கிடையே நிலவின; எனினும், 'உங்களைப் போன்ற அறிஞர் தாம் எங்கள் சட்ட ஆணையத்துக்கு உடனடித்தேவை, நீங்கள் எங்களுடன் பணியாற்ற வரவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்; நான் மறுத்துவிட்டேன்; இருப்பினும் அவர் அரசுக்கு எழுதி, விதிமுறைகளைத் தளர்த்தி என்னையும் ஆணையத்தில் இணைத்துவிட்டார். பதவிவழி மிகுமுதுநிலை மொழிபெயர்ப்பு அலுவலராக நான் அமைந்தபோதிலும், முதல் ஆணையத்தில் பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் ஏற்றிருந்த மொழிஉறுப்பினர் நிலையில் (அதற்குரிய ஊதியம் தவிர்த்துப் பிற எல்லா வகையிலும்), ஆணையம் என்னைப் பயன்படுத்திக் கொண்டது.

சட்டத்தமிழைச் 'சாமானிய' மக்களுக்கும் புரியும்படி ஆக்க வேண்டும் என்னும் பேரார்வத்தினால் நீதியரசர் மகராசன், முந்தைய ஆணையம் முயன்று உருவாக்கிய செறிவுமிகும் கலைச்சொல்லாக்கங்களைப் புறக்கணித்ததுடன், களையக்கூடிய வழக்குச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் பெரிதும் போற்றிக் கொண்டார். சில ஆங்கிலச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்துக் கொண்டார். இம்முறையே ஆணையத்தின் தமிழாக்கக் கொள்கை ஆயிற்று.

நீதியரசர் மகராசன் குழுவினர் பதவி ஏற்ற நான்கு திங்களுக்குள், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுகிற **"1973-ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைச் சட்டம்", "1960-ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டம்", "1872-ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டம்"** ஆகிய மூன்று சட்டத் தொகுப்புகளையும் தமிழாக்கம் செய்து, அப்போதைய ஆளுநர் மோகன்லால் சுகாதியா தலைமையில் 1976-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள் வெளியிட்டமை, அனைவரும் வியந்து போற்றிய ஓர் அருஞ்செயல் ஆகும்.

அதன்பின்பு, 1979-இல் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் இவ்வாணையம் செய்த ஒரு சட்டச் சொல்லகராதியையும் 11 சட்டங்களின் தமிழாக்கத்தையும் வெளியிட்டார். நீதியரசர் அனந்தநாராயணன் குழுவினரால் தமிழாக்கம் செய்யப்பெற்றுத் தட்டச்சு வடிவிலிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட சட்டங்கள் முடக்கி வைக்கப்பட்டன. புதிய சட்டச் சொல்லகராதியின் சொற்களைப் பயன்படுத்தி நூற்றுக்கும் மேற்பட்ட சட்டங்களை இவ்வாணையமும் தமிழாக்கம் செய்தது.

1976 நவம்பர் 14 முதல் தமிழகத்தில் உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திலும் தமிழே தீர்ப்புமொழி எனச் சட்டம் முன்னரே இயற்றப்பட்டிருந்தது. அந்நிலையில் எம்.ஜி.ஆர். அரசு, உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த உரிமையியல் நீதிமன்றங்கள் அனைத்திலும்கூடத் தமிழே தீர்ப்புமொழியாகும் எனச் சட்டப்பேரவையில் திடீரென அறிவித்தது. இவ்வறிப்பை ஒட்டி ஆணையத்தின் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. உரிமை வழக்குகளுக்குத் தேவைப்படும் உரிமைவழக்கு விசாரணைமுறைச் சட்டம், இந்திய ஒப்பந்தச் சட்டம் போன்ற சில சட்டங்களை இரவு பகல் பாராது கடுமையாக உழைத்து மிகக் குறுகிய காலத்திற்குள் தமிழாக்கம் செய்து அவற்றின் வெட்டச்சுப் படியங்களை உயர் நீதிமன்றத்தின் வாயிலாக நீதிமன்றங்களுக்கு இவ்வாணையம் அனுப்பிவைத்தது.

மாண்புமிகு முதலமைச்சராகத் திரு எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு, 'இந்திய அரசமைப்பின் தமிழாக்கம் வேண்டும்' எனக் கேட்டனுப்பினார். ஆணையத்தினால் உடனடியாக 'இதோ தமிழாக்கம்' எனத் தரமுடியவில்லை. அப்போது தமிழ், சிந்து, அசாம் மொழிகளைத் தவிர, ஏனைய இந்திய மொழிகள் அனைத்திலும் அரசமைப்பு மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இந்தி மொழி எட்டாம் பதிப்பை எட்டிப் பிடித்திருந்தது. ஆனால் 1966-இல் தோற்றுவிக்கப்பட்ட சட்ட ஆட்சி மொழி ஆணையம் அதுவரையில் அரசமைப்பின் தமிழாக்கத்தை வெளியிடாதிருந்தது மிகவும் வருந்துதற்குரியதாகும்.

முதல் ஆணைக்குழு தட்டச்சு வடிவில் செய்துவைத்திருந்த இந்திய அரசமைப்பின் தமிழாக்கத்தை உரியவாறு எளிமைப்படுத்தி வெளிக்கொணர்வதற்கு மாறாக, உயர் புலமைநடையில் உள்ளது என அதைப் புறந்தள்ளிவிட்டுத் தமது கொள்கையாகிய சர்ாசரித் தமிழனுக்கும் புரியும்வகையில் நீதியரசர் மகராசன் குழுவினர் அரசமைப்பின் தமிழாக்கத்தை விரைந்து மேற்கொண்டு அச்சு வடிவத்திலும் கொணர்ந்தனர். அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பிறந்த

நாளாகிய நவம்பர் 19 அன்று அவரைக் கொண்டே அரசமைப்பின் தமிழாக்கத்தை வெளியிடுவதற்கான நாளையும் குறித்ததுடன், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்தனர். நீதியரசர் மகராசன் ஒதுக்கித்தள்ளிய அரசமைப்புத் தமிழாக்கத்துடன் தொடர்பும் அதில் அக்கறையும் கொண்டவர்கள், 'புதிய தமிழாக்கத்தில் களையத்தக்க அயல்மொழிச் சொற்களும் பிழைகளும் உள்ளன' என்று அரசியல் சீர்வாய்ந்தாரிடம் ஓதினர். 'பிழையிருக்குமாயின், அடுத்த பதிப்பில் அதைக் களையலாம்' என்று சொல்வதற்கு மாறாக, அரசு அவர்களது செல்வாக்குக்கு ஆட்பட்டது. விளைவு, இந்திய அரசமைப்பின் ஆங்கிலப் பதிப்பு வெளியிட்டபின்பு, 31-ஆம் ஆண்டிலாவது வெளிவந்திருக்க வேண்டிய அதன் தமிழாக்கம் முடக்கிவைக்கப்பட்டது. நீதியரசர் மகராசன் தமது உடல்நலக்குறைவைக் காரணங்காட்டிப் பதவி விலகியதைத் தொடர்ந்து, சிலகாலம் பணியாற்றிய செயல் உறுப்பினர் நீதிபதி ஆ.சிதம்பரமும் விலகிக்கொண்டார். அத்துடன் இரண்டாம் காலப்பகுதி முடிவுற்றது.

மூன்றாம் காலப்பகுதி : தமிழ்நாடு சட்ட ஆட்சிமொழி ஆணையம்

நீதியரசர் மகராசன் பணிவிலகிய பின்னர், ஓர் இடைக்கால ஏற்பாடாக, அப்போதைய சட்டத்துறை ஆணையர்-செயலாளர் திரு சு.வடிவேலு ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். சட்டத்துறை இணைச் செயலாளர் திரு பிரான்சிஸ் சுந்தரராஜ் ஆணையத்தின் முழுநேர உறுப்பினராகப் பணியமர்த்தப்பட்டார்.

இந்திய அரசமைப்பின் தமிழாக்கம் இந்திய அரசுக்காகத் தமிழ்நாடு சட்ட ஆட்சிமொழி ஆணையத்தால் செய்யப்பட்டது. மைய அரசின் சட்டமியற்றுத்துறையின் தமிழறிந்த உயர் அலுவலரால் சரியாக உள்ளது என ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குரிய செலவையும் மைய அரசே ஏற்றுக்கொண்டது. அந்நிலையில் வெளியீட்டு விழா நிறுத்தப்பட்டமையால், 'தமிழாக்கத்தில் என்ன குறை' என விளக்கம் கேட்கப்பட்டது. உடனடியாக மறுமொழி அளிக்க இயலாத நிலையில் அரசு ஓர் உயர்நிலைக் கூர்ந்தாய்வுக் குழுவை அமைத்தது. நீதியரசர் மகராசன் செய்த இந்திய அரசமைப்பின் தமிழாக்கத்தைச் செம்மைசெய்து அச்சிட்டு வெளியிடத் தகுதிவாய்ந்ததாக ஆக்கும்பொருட்டு, அப்போதைய தலைமைச் செயலாளர் திரு கு. திரவியம் தலைமையில் ஓர் உயர்நிலைக் கூர்ந்தாய்வுக் குழுவை அரசு அமைத்தது. அக்குழு மூன்றாண்டுகளில் ஆமை வேகத்தில் நகர்ந்து ஏறத்தாழ 500 பக்கமுள்ள தமிழாக்கத்தின் முதல் 20 அச்சுப் பக்கங்களை மட்டுமே ஆய்வுசெய்து முடித்தது. அவருக்குப் பின்வந்த தலைமைச் செயலாளர் திரு சொக்கலிங்கம், ஒரே ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்கியதுடன் அக்குழுவும் இறுதி மூச்சுவிட்டது.

இக்காலப்பகுதியில் தமிழாக்கம் பற்றிய கொள்கை எதுவும் தொடக்கத்தில் இல்லை. முந்தைய ஆணையத்தின் செயற்பாடுகளே தொடர்ந்தன. இருப்பினும், நீதியரசர் மகராசன் செய்த அரசமைப்புத் தமிழாக்கத்தில் "களையத்தக்க அயல்மொழிச்சொற்கள் உள்ளன" என்னும் காரணங்காட்டி அதன் வெளியீட்டை நிறுத்தியமையால், புதிய திட்டத்தை வகுக்க வேண்டிய நிலை உருவானது. மேலும், அரசமைப்பின் தமிழாக்கத்திற்கு, அரசியல் வண்ணம் தீட்டப்பட்டது. எதிர்க் கட்சியினர் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் இது குறித்து அடிக்கடி வினாக் கணைகளைத் தொடுத்தனர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு, 'Tamil Version of the constitution - when will see the light?' என்று முதல் பக்கத்தில் நான்கு பத்தி அளவில் குறைகூறி எழுதியது; 'தினமணி கதிர்' இதழும் ஏளனம் செய்திருந்தது. எனவே, அரசமைப்பின் தமிழாக்கத்தைச் செம்மைசெய்து விரைவில் வெளியிடவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது; அத்துடன் புதிய கொள்கையையும் வகுக்க வேண்டியதாயிற்று.

ஆணையத்தின் சட்டச்சொல் அகராதியை மறுபடியும் பதிப்பிக்கும் தேவை எழுந்தபோது 1979-இல் வெளிவந்த நீதியரசர் மகராசனின் சட்டச்சொல்லகராதி புறக்கணிக்கப்பட்டது; 1968-இல் வெளிவந்த முதல் சட்டச்சொல்லகராதியின் மறுபதிப்பே வெளியிடப்பட்டது.

இந்திய அரசு அரசமைப்புத் 'தமிழாக்கம் என்னாயிற்று' எனத் தமிழக அரசை நேரடியாகவும் கடிதம் வழியும் துளைத்தெடுத்தது. நீதியரசர் மகராசன் காலத்திலும் அவருக்குப் பின்னரும் ஆணையத்தின் மொழிவல்லுநர் நிலையில் நான் இருந்தமையால், அப்போதைய சட்டத்துறைச் செயலாளரும் ஆணையத்தின் தலைவருமாகிய திரு சு.வடிவேலு இது குறித்து என்னிடம் கலந்துபேசினார். ஆணையத் தலைவர், மொழிவல்லுநர், சட்ட வல்லுநர் ஆகிய மூவர் அடங்கிய குழுவிடம் கூர்ந்தாய்வுப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்னும் கருத்தை முன் வைத்தேன். அரசு பல்வேறு வழிவகையையும் ஆராய்ந்த பின்பு, அயல்மொழிச் சொற்களைக் களைந்து நல்ல தமிழாக்கங்களை அமைத்துச் செம்மைசெய்ய வேண்டும் என்னும் ஆணையுடன் அரசமைப்புத் தமிழாக்கத்தின் கூர்ந்தாய்வுப் பணியை 1983-மே மாதத்தில் என்னிடம் ஒப்படைத்தது. நானும் இரவு பகல் பாராது அப்பணியில் மூழ்கி மூன்றே மாதத்தில் அனைவரும் வியந்து போற்றுமாறு கூர்ந்தாய்வு செய்து முடித்தேன். தில்லியிலிருந்து சட்டமியற்றும் துறையிலிருந்து சட்டத் துணைஆலோசகர் டாக்டர் த.சந்திரசேகரன் என்பவர் விரைந்து பணி முடிக்கும் ஆர்வத்துடன் சென்னைக்கு வந்து தங்கினார். மெய்வருத்தம் பாராது ஒரு திங்கள் அளவில் கடுமையான கலந்தாய்வுப் பணி நிறைவுற்று, அவரும் தமிழாக்கத்துக்கு ஒப்புதல் அளித்து அச்சுக்குக் கொடுக்கக்கூடிய கட்டத்தில் அது நிறுத்தப்பட்டது. மிகு ஆர்வத்துடன் வந்திருந்த உயர் அலுவலரும் மனம் நொந்து தில்லி திரும்பினார்.

அதன் பின்பு, அரசு அவ்வப்போது வழங்கிய அறிவுறுத்தங்களுக்கிணங்க நான் மும்முறை அரசமைப்பின் பழைய தமிழாக்கத்தைச் செம்மை செய்தும் நிறைவுகொள்ளாததால், இறுதியில் அரசமைப்புக்குப் புதியதொரு மறுவரைவையும் செய்து முடித்தேன். 1986-இல் சட்டத்துறைச் செயலாளர் தலைமையில் சட்டம், மொழி, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் அடங்கிய ஓர் உயர்நிலைக் கூர்ந்தாய்வுக் குழுவை அரசு அமைத்தது. இக்குழுவினர் ஏறத்தாழ 150 அமர்வுகளில் நான் செய்திருந்த அரசமைப்பின் தமிழாக்கத்தை வரிவரியாகக் கூர்ந்தாய்வு செய்தனர். பல்வேறு கோணங்களிலிருந்து வினாக் கணைகள் தொடுத்து என்னுடைய விளக்கங்களைப் பெற்றபின்பு அதற்கு ஒப்புதல் அளித்தனர்.

இவ்வகையில், தமிழில் சொல்லமுடியாது என்று சட்டத்துறையினர் சொல்லிக்கொண்டிருந்த ஏறத்தாழ 1300 சட்டச்சொற்களுக்கு நல்ல துல்லியமான தமிழாக்கங்களைச்செய்து அரசமைப்புக்கென ஓர் அகராதியை உருவாக்கினேன். அச்சொற்களைப் பின்வந்த அகராதியாளர்களும் கைக்கொண்டனர்; வானொலி, தொலைக்காட்சிச் செய்தியறிக்கைகளும் போற்றிக் கொண்டன.

இந்நிலையில் சட்டத்துறைச் செயலாளர் திரு வடிவேலு பணிஓய்வு பெற்றார். அவரை அடுத்து ஆணையத் தலைவராகப் பொறுப்பேற்ற சட்டத்துறைச் செயலாளர் திரு ஜெயசிங் பீட்டர், அரசமைப்பின் தமிழாக்கத்தை வெளியிட ஏற்பாடு செய்தார்.

இந்திய அரசமைப்பின் அதிகாரவுரிமைபெற்ற தமிழாக்கம் 1988 ஆகஸ்டுத் திங்கள் 13-ஆம் நாள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் அப்போதைய மைய அரசின் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சங்கரானந்து தலைமையில் மேதகு தமிழக ஆளுநர் திரு அலெக்சாந்தரால் வெளியிடப்பட்டது. ஏனைய இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் அரசமைப்பின் மொழிபெயர்ப்பு வெளிவந்து, மூன்று தலைமுறைகளாக அதற்குத் தமிழாக்கம் இல்லை என்னும் பெரும்பழி நீங்க எனது தமிழ்ப்பணி உதவிற்று.

நான்காம் காலப்பகுதி

1989-இல் தமிழக ஆட்சிமாற்றத்தை ஒட்டி, சட்ட ஆட்சிமொழி ஆணையம் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்றது. திரு மா.சண்முக சுப்பிரமணியம் ஆணையத்தின் தலைவராகவும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், வழக்குரைஞர் திரு அ.ர. சனகன், முன்னாள் தலைமைக் குற்றவியல் நடுவர் திரு சிவ. சிதம்பரம் ஆகியோர் பகுதிநேர உறுப்பினர்களாகவும், தமிழ்நாடு சட்டத்துறைச் செயலாளர் திரு ஜெயசிங் பீட்டர், மைய அரசின் கூடுதல் சட்ட ஆலோசகர் டாக்டர் த. சந்திரசேகரன் ஆகியோர் பதவிவழி உறுப்பினர்களாகவும், முன்னாள் மாவட்ட அமர்வு நீதிபதி தெ.பெ.சு. பழநிசுவாமி முழுநேர உறுப்பினராகவும் பணியமர்த்தப்பட்டனர்.

திரு மா.சண்முகசுப்பிரமணியம் ஆணையத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு, அரசினால் 1988-இல் வெளியிடப்பட்டுப் பலரின் பாராட்டையும் பெற்றிருந்த இந்திய அரசமைப்பின் அதிகாரவுரிமைத் தமிழாக்கத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என அரசுக்கு எழுதினார்; அரசு அதனை ஏற்கவில்லை.

இக்காலப்பகுதியில், இந்த ஆணையம் அரசமைப்புக்குத் தான் செய்த தமிழாக்கத்துடன் ஆங்கில மூலத்தையும் இணைத்து இருமொழிப் பதிப்பு ஒன்றை ஆக்கியுள்ளது. இடப்புறம் ஆங்கிலமும் வலப்புறம் தமிழுமாக இந்த அரசமைப்பு உள்ளது. ஆங்கிலத்துக்கு விளக்கம் தேவைப்பட்டால் தமிழாக்கத்தையும், தமிழாக்கத்தில் ஐயம் ஏற்பட்டால் ஆங்கிலத்தையும் படித்துப் பொருள்கொள்ள இது உதவுகிறது. இருப்பினும், முந்தைய அரசமைப்புத் தமிழாக்கத்தில் காணப்பட்ட நல்ல தமிழ்ச் சொற்கள் இதில் இடம்பெறவில்லை; மாறாகக் களையப்பட்ட அயல்மொழிச் சொற்கள் மீண்டும் உயிர் பெற்றுள்ளன. (எ-டு. ஒழிவிடம் - காலியிடம், சிக்கல் - பிரச்சினை, ஆணைப்பட்டயம் - சன்னது)

சட்டத் துறைச் சிறகம்

1991-இல் நிகழ்ந்த சில அரசுத்துறை மாற்றங்களைத் தொடர்ந்து, சட்ட ஆட்சிமொழி ஆணையம் கலைக்கப்பட்டுச் சட்டத்துறையின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் ஒரு சிறகமாக உருவாகி இயங்கிக்கொண்டிருக்கிறது.

3. சட்டத் தமிழாக்கக் கொள்கைகள்

சட்ட மொழியை உருவாக்குவதிலும் அதிகாரமுறைப்படியான சட்ட நூல்களை ஆக்குவதிலும் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்களைக் களைவதற்குப் பின்வரும் வழிகாட்டும் நெறிகளைப் போற்றிக் கொள்ளலாம்:

1. சட்டமொழி, பொதுவகை மனிதருக்குப் புரியும் வகையில் இருக்க வேண்டும்.
2. மூல நூலின் சொற்களையோ, பொருளையோ, உணர்ச்சியையோ ஒருபோதும் மீறிச் செல்லக்கூடாது.
3. ஒரு சொல்லைப் புகுத்தவோ மாற்றியமைக்கவோ கூடாது.
4. அறிமுகமான சொற்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.
5. புதிய கலைச்சொற்களைப் பயன்படுத்துவதற்குத் தடை கூடாது.
6. வழக்காற்றுச் சொற்பொருள், அகராதிச் சொற்பொருளைவிட மேலோங்கி நிற்கும்.

7. மொழிபெயர்ப்பு மிகவும் துல்லியமாகவும் மூலத்திற்கு உண்மையாகவும் இருக்க வேண்டும்.

8. நிறுத்தற் குறியீடுகளில் எப்போதும் கவனம் வேண்டும்.

சட்டத் தமிழாக்கத்தில் அடிப்படையாகப் போற்றிக் காக்கவேண்டிய ஒரு நெறி இருக்கிறது; அதாவது, சட்டமொழிபெயர்ப்பில் மூலமொழியில் (Source language) உள்ளதை உள்ளவாறே இலக்குமொழியில் (Target language) தெரிவிக்க வேண்டும்; கூட்டவோ குறைக்கவோ கூடாது.

> "சில சட்ட வாசகங்கள் இரு விதமாகப் பொருள்கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பாளர் அவ்வாசகங்களை ஈரடியாகப் பொருள் கொள்ளும் வகையில் மொழி பெயர்க்க வேண்டும். மூலத்தின் ஐயப்பாடுகளைத் தீர்ப்பது நீதிமன்றங்களின் வேலை, மொழிபெயர்ப்பாளரின் வேலை அன்று. ஆகவே, மூலம் தெளிவற்றதாக இருந்தால், அதன் தெளிவற்ற தன்மையையும் மொழிபெயர்ப்பில் வடித்துக் கொடுக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும்"

என்றும் கூறுவார் நீதியரசர் எஸ் மகராசன் (முன்னுரை, *சட்டச்சொல்லகராதி* 1979).

4. சட்டத் தமிழாக்கச் சிக்கல்கள்

சட்டத் தமிழாக்கச் சிக்கல்களில் இருவகை உண்டு; ஒன்று புறச்சிக்கல்; மற்றொன்று அகச்சிக்கல். புறச்சிக்கல் என்பது மொழிபெயர்ப்புக் கொள்கை பற்றியது; அகச்சிக்கல் என்பது மொழிபெயர்ப்பைப் பற்றியது.

புறச்சிக்கல்: சட்டமொழியாக்கக் கொள்கையர்

சட்டத்தமிழின் முதற்சிக்கலாக அமைபவர்கள் மொழியாக்கக் கொள்கையை உருவாக்குபவர்களே; ஆணையத்தின் ஒரு சட்டத் தலைவர் வகுத்துச் செயற்பட்ட கொள்கையை அடுத்து வரும் தலைவர் பின்பற்றுவதில்லை; அவருக்குப் பின்வருபவர் இரண்டாமவரின் கொள்கையை மதிப்பதில்லை.

> *"பாமர மக்களும், அதாவது சராசரித் தமிழனும் அறியும்படியான அளவுக்கு மிக எளிமையாகச் சட்டத்தமிழை ஆக்க வேண்டும்"*

என்பது நீதியரசர் மகராசனின் கொள்கையாகும். 'பாமரமக்கள் என்றால் யார்? அவரை அறிவதற்குரிய அளவுகோல் யாது?' என்னும் வினாக்களுக்கு விடைசொல்வது எளிமையானது அன்று.

> *"பாமரரால் அறியக்கூடிய எளிய மொழியில்தான் சட்டத்தின் தமிழாக்கம் அமையவேண்டும். அன்றேல் அது நேரான தமிழாக்கம் அன்று என்று வாதிப்பது சட்ட நூற்பண்பின்பினை அறியாமை ஆகும். எளிமையையும் இயன்ற அளவு கடைப்பிடிக்க வேண்டும்; ஆனால் எளிமையின் பொருட்டு நுட்பத்தின் நேர்மையைக் கைவிட்டு விடக்கூடாது"*

என்பது சட்ட ஆட்சிமொழி ஆணைக்குழுவின் முதல் தலைவராகிய நீதியரசர் அனந்தநாராயணனின் உறுதியான கருத்தாகும்.

பிற திராவிட மொழிகளில் சட்டமொழியாக்கத் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்களின் கூற்றுகளும் சிந்திக்கத் தக்கவை:

"நம்முடைய மொழிகள் பலவற்றைப் பொறுத்தமட்டில் முழுமையானவையாக இல்லை என்பதை நாங்கள் வேதனையுடன் உணர்கின்றோம். அத்தகைய மொழிகளில்தான் நாம் மொழி பெயர்க்க வேண்டியிருக்கிறது. இருப்பினும் நாம் அதை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது"

என்பது மலையாளச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தலைவர் திரு எம். பிரபா அவர்களின் கூற்றாகும் (*Problems of Translation of Laws in Malayalam*).

"தெலுங்கு மொழியைப் பொறுத்தவரை நாங்கள் உருது, பர்சியன், அராபியம், ஆங்கிலச் சொற்களைத் தன்வயமாக்கிக் கொள்கிறோம். அச்சொற்கள் எங்கள் அகராதிகளிலும்கூட இடம்பிடித்துள்ளன... இந்திய அரசமைப்பு மொழிபெயர்ப்பில் Claim, Notice முதலிய பல ஆங்கிலச் சொற்களை - தகுந்த நேரிணையான சொற்கள் தெலுங்கில் கிடைக்காமையால் அப்படியே பயன்படுத்தி இருக்கின்றோம்"

என்று சொல்லியிருப்பவர் தெலுங்குச் சட்ட ஆட்சிமொழிச் சிறகத்தின் உறுப்பினர் திரு. ஒய்.சீனிவாசராவ் ஆவார் (*Problems of Translation of Laws in Telugu*).

"சட்டமொழிபெயர்ப்பு மிகவும் நுட்பமானது. உயிர் நிலையானது. அது பொதுமக்களுக்குப் புரியும்படியாக இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் உடன்பாடு கொண்டாலும் நடைமுறையில் பொருந்தி வருவதில்லை. ஏனென்றால் இரண்டு தலைமுறைக்கும் மேலாக இம்மொழி பெயர்ப்புடன் தொடர்புடைய நாங்களே, மெக்காலே, மெயின், முல்லா ஆகியோரை மொழிபெயர்க்கச் சொன்னால் இருளில் தடுமாறுகின்றோம்"

என்று கூறியிருப்பவர் கன்னட மொழிவளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர் திரு காந்திராவ் ஆவார் (*Official Language Problems in Language of Law in Kannada, p.79*).

"கல்வியறிவு விழுக்காடு மிகுந்துள்ள நாடுகளில்கூட, முதுகலைப் பட்டம் பெற்றவர்களின் சொந்த மொழியிலேயே சட்டங்கள் முனைந்து உருவாக்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் அவற்றின் நுண்மைகளைப்புரிந்து கொள்வார்களா என்பது ஐயத்திற்குரியது. மேலைநாடுகளிலேயே இந்நிலை என்றால், பல்வேறு மொழிகளும், பல்வேறு இனப்பண்புகளும் கொண்டிருப்பதுடன், அயலவர் ஆட்சிக்கு நீண்டகாலம் அடிமைப்பட்டுக்கிடந்த நமது நாட்டின் நிலை என்ன?"

என்று ஆழ்ந்து சிந்திப்பதற்கான ஒரு வினாவை முன்வைத்துள்ளவர், இந்திய அரசின் முன்னாள் சட்ட இணை அமைச்சர் டாக்டர் வி.ஏ. சையதுமுகம்மது.

"தமிழ்நாட்டுச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திலுள்ள நாங்கள் Sessions, Will, Notary, Attorney முதலான ஆங்கிலச் சொற்களையும் முகலாயர் காலத்திலிருந்து பேச்சு முறையிலுள்ள ஜமீன், ஜப்தி, ஆஜர் போன்ற சொற்களையும் இருத்தி வைத்துக் கொண்டுள்ளோம்"

என்று கூறியிருப்பவர் தமிழ்நாட்டுச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் முன்னாள் தலைவர் நீதியரசர் மகராசன் (*Problems of Law Translation*).

இவர் கூற்றுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில், தமிழக அரசு,

> "மொழிபெயர்ப்புகள் அனைத்தும் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளவாறு தூய தமிழில் இருத்தல் வேண்டும். சட்ட நூல்கள், வழக்குரைஞர்களும் நீதித்துறையினரும் மட்டுமே பெரிதும் பயன்படுத்துவனவாக உள்ளதால், தூய தமிழ்ச் சொற்களை முழுதும் நுழைத்தல் சரியானதே"

என ஓர் ஆணையையே (தமிழ்நாடு சட்டத்துறைக் கடிதெண் 25284/ஓ.எல்.சி./8 தேதி 14-12-1982) பிறப்பித்தது.

சட்டமொழிபெயர்ப்பு அமைப்புகள்

சட்டமொழிபெயர்ப்பு அமைப்புகளுக்கிடையே தொடர்பு இல்லாதிருப்பது இரண்டாவது புறச்சிக்கலாகும். தமிழ்நாட்டில், (1) தமிழ்நாடு சட்டஆட்சிமொழி ஆணையம், (2) சட்டத்துறையிலுள்ள மொழிபெயர்ப்புப்பிரிவு, (3) பொதுத் துறையின் கீழ்வரும் மொழிபெயர்ப்புத்துறை, (4) தமிழ்வளர்ச்சி இயக்ககத்திலுள்ள மொழிபெயர்ப்புப் பிரிவு, (5) நீதிமன்றத் தீர்ப்புகளை வெளியிடும் தீர்ப்புத் திரட்டு போன்றவை அரசு சார்ந்த அமைப்புக்கள். இருப்பினும் இவற்றுக்கிடையே மொழிபெயர்ப்புத் தொடர்போ, ஒருங்கிணைப்போ இல்லை. ஒவ்வொரு துறையும் அது விரும்பியவாறே தமிழாக்கத்தைச் செய்கிறது.

சட்ட மொழிபெயர்ப்பாளர்கள்

அடுத்துவரும் சிக்கல் சட்ட மொழிபெயர்ப்பாளர்களைப் பற்றியது. தாய்மொழி தமிழ் என்பதாலேயே அதனைச் சிறப்பாகப் பயிலாமல் புலமை வந்துவிட முடியாது. சட்டம் படித்தவர்களால் மட்டுமே சட்டத்தமிழ் சிறப்பெய்தாது; அதே போன்று மொழிப்புலமை உள்ளவர்களால் மட்டுமே அதை முழுமையாக்க முடியாது. தாய்மொழியில் மட்டுமே புலமையுள்ளவர்கள் செய்யும் சட்டத் தமிழாக்கம் குருடு; அதேபோல் சட்டத்தில் மட்டுமே பட்டம் பெற்றவர்கள் செய்யும் தமிழாக்கம் நொண்டி..

மொழி பெயர்ப்பாளர் மூலமொழியையும் இலக்கு மொழியையும் சரிவரத் தெரிந்துகொண்டு மொழி மரபுகளைப் பேணிக் கொள்ளாததன் விளைவாக

> "மொழிபெயர்ப்பாளர் தமிழ்" என்னும் புதியதொரு தமிழ் இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் வாக்கிய அமைப்புகளுக்கு முரண்பட்டவை ஆங்கில வாக்கிய அமைப்புகள். ஆங்கிலவாக்கிய அமைப்புகளின் ஆதிக்கத்திலிருந்து மீளமுடியாமல் சில மொழிபெயர்ப்பாளர்கள், தமிழையே ஆங்கிலத்தைப்போல, பூட்ஸ் கால் கொண்டு நடக்கச் செய்வதோடு, தமிழை, தமிழ்முறை பிறழ்ந்து பேசச் செய்யவும் செய்கிறார்கள். இவ்வாறு விளைகிற மொழிபெயர்ப்பாளர்களுடைய தமிழை, தமிழ் மாத்திரமே கற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாது; ஆங்கிலம் கற்ற தமிழர்களும், இந்த மொழிபெயர்ப்புத் தமிழை நேரடியாகப் புரிந்து கொள்ள முடியாமல், அதை ஆங்கிலத்தில் மறு மொழிபெயர்ப்புச் செய்து, அதன் பொருள் என்னவாக இருக்கலாம் என்று ஊகம் செய்து கொள்கிறார்கள்"

என்பது நீதியரசர் மகராசனின் கணிப்பாகும் (முன்னுரை, *சட்டச்சொல் அகராதி,* 1979).

மூலமொழி, இலக்குமொழி, சட்டம் ஆகியவற்றில் அடிப்படை அறிவை மொழி பெயர்ப்பாளர்கள் பெற்றிருக்க வேண்டும். மொழிபெயர்க்கப்படும் பொருள்பற்றிய விரிந்த அறிவு, தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல், பொது அறிவு, துல்லியமாக மொழிபெயர்க்கும் திறன் போன்ற

பிற தகுதிகளையும் மொழிபெயர்ப்பாளர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். இவற்றுடன், முத்துகளை மாலையாகக் கோக்கப் பயன்படும் பொன்சரடுபோல மொழியுணர்வும் இழையோட வேண்டும். இத்தகைய ஆற்றல் அனைத்தையுமே ஒருங்கே பெற்றவர் கிடைத்தல் அரிது. சட்ட அறிவும், மொழிப்புலமையும் உள்ளவர்கள் இணைந்து பணியாற்றுவதன் வாயிலாகவே இச்சிக்கலைத் ர்க்க முடியும்.

அகச்சிக்கல்

சட்ட மொழிபெயர்ப்புக் கலைச்சொல்லாக்கத்தில் எந்த மொழிநடையைக் கொள்வது என்பதில் கொள்கையாளர்களுக்கிடையே கருத்து வேறுபாடுள்ளது.

'நல்ல தமிழைத்தான் கொள்ளவேண்டும்' என ஒரு சாராரும், 'கலப்புத் தமிழைத்தான் பயன்படுத்த வேண்டும்' என மற்றொரு சாராரும், தமிழில் நேரிணையான சொற்கள் இல்லை என்பதால் ஆங்கிலச் சொற்களை அப்படியே கையாளலாம் எனப் பிறிதொரு சாராரும் கூறிப் பூசலிடுகின்றனர்.

'நல்லதமிழைத்தான் கொள்ளவேண்டும்' என்பதில் ஐயமில்லை; கலப்புத் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமில்லை; ஆங்கிலச் சொற்களை மொழிமரபுக்கு ஒவ்வாத நிலையில் அப்படியே கொள்ளவேண்டும் என்பது ஏற்புடையதாக இல்லை.

பிற மாநிலங்களிலுள்ள சட்டமொழி ஆணையங்கள் அந்தந்த மாநில மொழிகளில் சட்டங்களை மொழிபெயர்க்கும் முறையை ஒரு புள்ளிவிவரம் சுட்டிக்காட்டியுள்ளது.

மலையாள மொழியில் 'Appeal, Award, Arrest, Act, Certificate, Judge, Magistrate, Notice, Parliament, Prosecutor, Process-served, Summons, Warrant, Vote,' போன்ற எண்ணிறந்த சொற்களை மொழிபெயர்க்காமல் அப்படியே ஒலிபெயர்த்துக் கொண்டுள்ளனர்.

கன்னட மொழிபெயர்ப்பில், 'Appeal, Civil, Claim, Decreet, Domination, Police, Stamp, Warrant,' முதலான 39 ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன எனப்பட்டியலிட்டுள்ளனர்.

மராத்தி மொழிபெயர்ப்பில், ' Appeal, Cheque, Notice, Railway, Telephone, Ticket, Warrant,' முதலான ஏழு ஆங்கிலச் சொற்களே இடம்பெறுகின்றன.

இந்தியில் ' Appeal, Consul, Decree, Fees, Magistrate, Nuisance, Pension, Quarantime, Summons, Warrant,' முதலான 19 சொற்கள் ஒலி பெயர்க்கப்பட்டுள்ளன.

5. சட்டச்சொல் அகராதிகள்

பொதுவகையில் அமைந்துள்ள ஆங்கிலம்-தமிழ் அகராதிகள் சட்டத்தமிழாக்கத்துக்கு உதவுவதில்லை என்னும் ஒரு கருத்து உண்டு.

> *"ஆங்கிலச் சட்டச் சொற்களுக்கு இணையாக வட்டாரச் சொற்களைத் தந்திருக்கும் வட்டாரமொழி அகராதியாளர்களை நம்புவது ஆபத்தானது என நான் எச்சரிக்க விரும்புகிறேன்"* என ஆணையத் தலைவர் நீதியரசர் மகராசனும் (*Some Problems of Law Translation*), *"அகராதிகள் பயன்படுவதில்லை: தெளிவற்ற பொருளைத் தருகின்றன; குழப்புகின்றன; அத்துடன் நுட்பமான பொருளைத் தருவதில்லை"*

என முழுநேர உறுப்பினர் நீதிபதி சிதம்பரமும் (*Problems of Translation in Legal Administration*) கூறியுள்ளனர்.

இக்கூற்றுகளை முற்றிலும் உண்மை என ஏற்கவோ பொய் என ஒதுக்கித் தள்ளவோ முடியாது. ஆங்கிலச் சொற்களுக்கு நேரிணையானவை எனக் கொடுக்கப்பட்டிருக்கும் அகராதிச் சொற்களிலிருந்து துல்லியமான சொல்லாக்கங்களைச் செய்துகொள்ள அகராதிகள் உதவுகின்றன. இவ்வகையில், தமிழியலில் முதன்முதலாக டாக்டர் பட்டம்பெற்ற பேராசிரியர் அ. சிதம்பரநாதச் செட்டியாரைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்த ஆங்கிலம்-தமிழ் அகராதி பெரிதும் உதவுகின்றது. இந்திய அரசமைப்பின் அதிகாரவுரிமை பெற்ற தமிழாக்கத்தை நான் செய்தபோது, சட்டக் கலைச்சொல்லாக்கங்களைச் செய்ய இது மிகவும் பயன்பட்டது.

சட்டச்சொல் அகராதிகளுள் பல வகை உண்டு; ஒன்று அரசினால் வெளியிடப்பட்ட அதிகாரமுறை அகராதிகள்; மற்றொன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சட்டத்தமிழ் அகராதி; பிறிதொன்று, சட்டத்துடன் தொடர்புடைய அறிஞர்களாலும் ஆர்வலர்களாலும் வெளியிடப்பட்ட தனியார் அகராதிகள்.

அரசுமுறை அகராதிகள்

சட்டச் சொல்லகராதி 1968

நீதியரசர் அனந்தநாராயணன் ஆணைக்குழுவினர் இந்திய மொழிகளிலே முதன்முதலாக ஒரு சட்டச்சொல் அகராதியை வெளியிட்டனர். இந்நூலின் தமிழாக்கங்கள் சொல்லுக்குச்சொல் என்பதைவிடச் சொற்பொருளுக்குச் சிறப்பிடம் தந்துள்ளது.

> *"இந்நூலில் ஆங்கிலச் சட்டச்சொற்கள் தமிழில் மொழிபெயர்ப்பு (Translation) செய்யப்பட்டுள்ளன என்பதைவிட, தமிழில் மொழியாக்கம் (Transcreation) செய்யப்பெற்றுள்ளன என்பதே பொருந்தும்,"*

என்று அதன் முன்னுரை தெரிவிக்கிறது. அதில் நல்ல தமிழாக்கங்கள் உள்ளன. (எ.கா.: Document - ஆவணம், Hearing - வழக்கெடுப்பு, Impartiality - ஒருபாற்கோடாமை, நடுவுநிலைமை, Litigant - வழக்காடி).

ஒரே சொல்லுக்கு மொழிபெயர்ப்பையோ ஆங்கில எழுத்துப் பெயர்ப்பையோ கொள்ளலாம் என்னும் கருத்தைத் தோற்றுவிக்கும் வகையில் அவ்வகராதியில் சில சொற்களுக்குத் தமிழாக்கங்களும் கூடவே ஆங்கிலச் சொற்களின் எழுத்துப்பெயர்ப்பும் உள்ளன. (எ-டு.: Advocate - வழக்கறிஞர், அட்வகேட்; Agent - முகவர்; ஏஜண்ட்; Deposit account - வைப்புக் கணக்கு, டெபாசிட் கணக்கு; Lottery - பகடைப் பரிசுமுறை; லாட்டரி; Receiver - (வழக்குறுசொத்துப்) பேணுநர், ரிசீவர்; Writ - நீதிப்பேராணை; ரிட்).

இலத்தீன் மொழியிலுள்ள சட்டத் தொடர்களுக்கு அழகான தமிழாக்கங்கள் இதில் உள்ளன. எ.டு.:

Actio pensonalis moritur cum persona - ஆள்நிலை வழக்கு ஆளுடன் மடியும்

Fiat justitia - நிலவுக நீதியே

Generalia specialibus non derogant - தனிவிதிக்கிசைந்தே பொதுவிதி இயங்கும்

Qui prior est tempore Potier est jure - காலத்தால் முந்துபவரே சட்டத்தால் நலம்பெறுவர்

Uli Jus, ibi remedium - உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு.

சட்டச் சொல்லகராதி 1979

நீதியரசர் மகராசனின் ஆட்சிமொழி ஆணையமும் ஒரு சட்டச்சொல் அகராதியை வெளியிட்டது. இது சொல்லுக்குச் சொல் தமிழாக்கத்தைக் கொண்டிருக்கிறது; இதில் பொருள் வரையறை எதுவும் இல்லை.

முதல் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட சட்ட அகராதி இருக்கும்போது மற்றுமொரு சட்ட அகராதியை உருவாக்கியமைக்கான காரணங்களை நீதியரசர் மகராசன் முன்வைத்தார்:

> "முதற் பகுதியிலுள்ள கலைச்சொற்களுக்கும் இரண்டாவது பகுதியிலுள்ள கலைச்சொற்களுக்கும் வேறுபாடுகள் சில இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேறுபாடுகள் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, சட்டங்களை மொழிபெயர்க்கும்போது ஏற்பட்ட விதவிதமான பிரச்சினைகளைக் கூட்டு முயற்சியினால் தீர்த்துப் பெற்ற நேரடி அனுபவத்தைப் பயன்படுத்தி இந்தப் பகுதி தொகுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, எளிமையாகவும் இயல்பாகவும் துல்லியமாகவும் தமிழாக்கம் இருந்தால்தான் நடைமுறையில் அது பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பகுதியிலுள்ள சொற்கள் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே முற்றிலும் பொருத்தமானவை என்று இந்த ஆணையம் அறுதியிட்டுக் கூறவில்லை. எதிர்கால அனுபவத்தின் அடிப்படையில் இப்பகுதியிலுள்ள சொற்களையும் மாற்ற வேண்டியிருக்கலாம். வேறு மாற்றங்கள் செய்யும்வரை இந்த இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே இந்த ஆணையம் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்ட சொற்களாக இருந்து வரும்" (முன்னுரை, *சட்ட அகராதி*, 1979).

கீழ்வரும் சில எடுத்துக்காட்டுகள் இரண்டு அகராதிகளின் நோக்கையும் போக்கையும் புலப்படுத்தவல்லன:

சட்டச்சொல் அகராதிகள்

சொல்	1968	1979
Attachment	பற்றுகை (ஜப்தி)	ஜப்தி
Appearance	முன்னிலையாதல் (ஆஜராதல்)	ஆஜராதல்
Notary Public	சான்றுறுதி அலுவலர் (நோட்டரி பப்ளிக்)	நோட்டரி
Sessions (Court)	அமர்வு நீதிமன்றம் (செஷன்ஸ் கோர்ட்)	செஷன்ஸ்
Summons	அழைப்பாணை (சம்மன்ஸ்)	ஆஜர் கட்டளை
Surety	பிணையாள்	(ஜாமீன்); ஜாமீன்தார்

Bonus - போனஸ், Dispute - தாவா; தகராறு, Estate duty - ஆஸ்திவரி, Picnic - வனபோஜனம், Proprietor - *சுவான்தார்*, Stability - ஸ்திரநிலை போன்ற பிறமொழிச் சொற்கள் இவ்வகராதியில் தமிழாக்கங்களாகக் கொள்ளப்பட்டன.

இருப்பினும், அருகிய நிலையில் நல்ல தமிழாக்கங்களும் உள்ளன:

Maritime jurisdiction - நெய்தலியல் அதிகாரவரம்பு

Tender years - பிஞ்சுப் பருவம்

Treasury - கருவூலம்

1968-ஆம் ஆண்டு அகராதி முதலில் நல்ல தமிழாக்கங்களைத் தந்து அதன் பின்னர் வழக்காற்றிலிருந்த சொற்களையும் தந்துள்ளது. ஆனால், 1979 - ஆம் ஆண்டு அகராதி நல்ல தமிழாக்கங்களை முற்றிலுமாக விட்டுவிட்டதுடன், பிறமொழிச் சொற்களையே போற்றிக் கொண்டது.

நீதியரசர் மகராசன் ஆணையத்தினர் பணியேற்ற நான்கு மாதங்களுக்குள் வெளியிட்ட மூன்று குற்றவியல் சட்டத்தொகுப்பில் எண்ணிறந்த பிறமொழிச் சொற்கள் இருந்தன. அவற்றைக் களையவேண்டும் என்னும் வேண்டுகோளைப் பலரும் முன்வைத்தனர். அதற்குப் பின்னர் இச் சட்டச்சொல் அகராதி வெளியிடப்பட்டது என்பதும் கருதத்தக்கது.

அரசமைப்பு அகராதி - 1988

மூன்றாம் காலப்பகுதியில், அரசமைப்பின் தமிழாக்கத்தை அரசு என்னிடம் ஒப்படைத்தபோது, முந்தைய தமிழாக்கத்தில் இருந்த எண்ணற்ற அயல்மொழிச் சொற்களை எல்லாம் அகற்றி, 'நல்ல தூய' தமிழ்ச் சொற்களையே ஆக்கிக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியது. அரசமைப்புக் கூர்ந்தாய்வுக் குழுவினருக்கு அதில் உடன்பாடில்லை. 'உரிய தமிழாக்கம் செய்ய இயலாது' எனக் கருத்துரைத்தனர். இறுதியில் அடிப்படையில் தமிழாகவே ஆகிவிட்ட சில சொற்களைத் தேவைகருதி ஏற்றுக் கொண்டாலும், 'ரத்து செய்தல், காலி செய்தல்' போன்ற சொற்களைக் களைந்து நல்ல சொற்களில் தமிழாக்கம் அமைய வேண்டும் என ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

ஒரே பொருளைத்தரும் பல சொற்கள் ஆங்கிலத்தில் உள்ளன. ஆனால் ஒவ்வொரு சொல்லுக்கும் தனிப்பொருட்கூறு உண்டு. அவற்றைத் தமிழிலே சொல்ல முடியாது என்று கூர்ந்தாய்வுக் குழுவில் சிலர் கூறினர். 'ரத்து செய்தல்' என்றால் எல்லோருக்கும் புரியும். இதை ஏன் தமிழாக்கம் செய்யவேண்டும் எனவும் சிலர் கருத்துரைத்தனர். அறிவாற்றலுக்கு முறையீடாகவும் அறைகூவலாகவும் அமைந்த அப்பெரும்பணியை நான் எதிரேற்றுக் கொண்டேன்; அதற்கென ஒரு கொள்கையை வகுத்தமைத்து, அதற்கேற்ப அடிப்படைக்கூறினைச் சொல் அலகாகக் கொண்டு அதனுடன் முன்னொட்டைச்சேர்த்து ஒவ்வொரு சொல்லின் நுட்பத்தையும் தமிழில் புலப்படுத்தமுடியும் என நான் நிறுவினேன். இயலாது என முதலில் கூறிய கூர்ந்தாய்வுக் குழுவினரே பின்னர் வியந்து பாராட்டினர்.

(எ.டு.) Abrogate, annul, cancel, repeal, rescind, revoke, set aside, supercede ஆகிய சொற்கள் எல்லாவற்றுக்கும் 'ரத்துசெய்' என்னும் ஒரு சொல்லையே தமிழாக்கத்தில் முந்தைய ஆணையத்தினர் பயன்படுத்தியுள்ளனர். எல்லாமே 'ரத்துசெய்தல்' தான்; எனினும், எப்படி ரத்து செய்யப்படுகிறது என்பது ஆங்கிலச்சொல்லில் பொதிந்துள்ளது; ஆனால் 'ரத்துசெய்' என்னும் ஒரே சொல்லை எல்லாச் சொற்களுக்கும் நேரிணையானது எனக்கொண்டால் பொருட்சிதைவு ஏற்படுகிறது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

வழக்காற்றிலுள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது சொற்செட்டு மிகவும் இன்றியமையாத ஒன்று; எழுத்துச் சிக்கனமும் வேண்டும்; ஒலிப்பும் ஏறக்குறைய அதை ஒத்திருத்தல் சிறப்பு. இம்முறையில் ஒரு பொருள் பல சொல்லாகிய 'ரத்துசெய்' என்னும் சொல்லுக்குரிய தமிழாக்கத்தை அமைத்தேன்.

'ரத்துசெய்' என்னும் சொல்லுக்கு 'அறவுசெய்' (அறுத்தல்) < அறவு+செய் என்பதை அடிப்படை அலகாகக் கொண்டு, முன்னொட்டுக்களைச் சேர்த்து ஒவ்வொன்றுக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தினேன்:

Abrogate	-	ஒழித்தறவுசெய்
Annul	-	செல்லறவுசெய்
Cancel	-	அறவுசெய்
Repeal	-	நீக்கறவுசெய்
Rescind	-	அழித்தறவுசெய்
Revoke	-	பின்னறவுசெய்
Set aside	-	ஒதுக்கறவுசெய்
Supercede	-	தள்ளறவுசெய்

பலவகையான ஊதியங்களுக்கும் சம்பளம், ஊதியம் என்னும் இரண்டு சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. ஊதியம் என்னும் சொல்லை அடிப்படை அலகாகக் கொண்டு அவற்றின் நுண்ணிய வேறுபாடு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

Consolidated pay	-	தொகுப்பூதியம்
Earnings	-	ஈட்டூதியம்
Emoluments	-	பதவியூதியம்
Honorarium	-	மதிப்பூதியம்
Pension	-	ஓய்வூதியம்
Pay	-	ஊதியம்
Remuneration	-	பணியூதியம்
Salary	-	வரையூதியம்
Wages	-	உழைப்பூதியம்

இந்த ஊதிய வேறுபாடுகளை விளக்குதற்கு ஆங்கில அகராதிகளோ தமிழ் அகராதிகளோ பெரிதும் உதவவில்லை. ஆனால் நீதிபதிகளின் தீர்ப்புரையில் சில இடங்களில் இத்தகைய நுட்பங்கள் காணக்கூடும். அந்தத் தீர்ப்புவழிச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு மேற்குறித்த ஊதிய வகைகளின் தமிழாக்கம் செய்யப்பெற்றது.

அதிகாரமுறை அரசமைப்பின் தமிழாக்கத்தில் ஏறத்தாழ 1300 சொற்கள் அடங்கிய அகராதி ஒன்று பின்னிணைப்பாக உள்ளது. இந்த அகராதியில் ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் மோதுவதில்லை; தமிழ்ச் சொல்லைச் சொன்ன அளவில் அதற்கு நேரிணையான ஆங்கிலச் சொல்லை உடனடியாகக் கூறமுடிவது இவ்வகராதியின் தனிச்சிறப்புகளுள் ஒன்றாகும்.

சட்ட ஆட்சிமொழிச் சொற்களஞ்சியம்

அரசுத் துறைகளால் வரையப்பெறும் சட்டகங்கள் (Bills) அனைத்தும் ஆங்கிலத்தில்தான் அமைந்துள்ளன. அவற்றை நேரடியாகத் தமிழிலே வரையும் நிலை இன்னும் வரவில்லை. அச்சட்டகங்கள் சட்டத்துறைக்கு அனுப்பப்பெற்று அங்கே கூர்ந்தாய்வு செய்யப்பட்டபின்பு, அவற்றுக்குரிய தமிழாக்கங்களுடன் சேர்த்துச் சட்டப்பேரவையில் வைக்கப்படுகின்றன. எனவே சட்டத்துறைத் தமிழாக்கம் என்பது சட்டச் சொற்களோடு மட்டும் அடங்கிவிடாமல், பிறதுறைச் சொற்களையும், தழுவிக் கொண்டிருக்கிறது என்பது புலனாகும். இக் கொள்கையின் அடிப்படையில், கடந்த இரண்டு தலைமுறைக்கும் மேலாகச் சட்டத்துறையில் பணியாற்றிய பட்டறிவினை அடித்தளமாகக் கொண்டு ஏறத்தாழ மூவாயிரம் தட்டச்சுப் பக்கங்கள் கொண்ட சட்ட ஆட்சிமொழிச் சொற்களஞ்சியம் என்னும் பேரகராதி ஒன்று என்னால் உருவாக்கப்பட்டுள்ளது.

இது, சட்டத்துறையினருக்கு ஒரு சட்டச்சொல்லகராதி. ஆட்சித் துறையினருக்கு ஓர் ஆட்சிச் சொல்லகராதி, நீதித்துறையினருக்கு ஒரு மேற்கோள் அகராதி; மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒரு மொழி அகராதி என இதன் எல்லை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை வெளிவந்த தமிழகராதிகளிலோ, இந்திய அரசு வெளியீடான ஆங்கிலம்-இந்திச் சட்டச் சொல்லகராதியிலேயோ இல்லாத ஒரு தனிச்சிறப்பு இவ்வகராதிக்கு உண்டு. நீதிமன்ற வழக்குகளில் நீதிபதிகளின் தீர்ப்புகளை மேற்கோளாகச் சுட்டிக்காட்டுவதுடன், தேவைப்படும் இடங்களிலெல்லாம் தீர்ப்பின் தமிழாக்கமும் கொடுக்கப்பட்டுச் சட்ட நுண்பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் இது ஒரு சட்டச் சொற்களஞ்சியமாக அமைந்துள்ளது.

புதுவை அரசின் சட்டத்துறையும் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இச்சொற்களஞ்சியத்தை வெளியிடும் முயற்சியில் முனைந்துள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சட்டத்தமிழ் அகராதி

1994-இல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மா. சண்முகசுப்பிரமணியம், புலமை வேங்கடாசலம் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு ஒரு சட்டத்தமிழ் அகராதியை வெளியிட்டது. அதன் முன்னுரை:

> *“சட்டத்தமிழ் அகராதியின் சொற்கள் ஒவ்வொன்றையும் உருவாக்க, நாங்கள் சாதாரண சட்டவல்லுநர்களாக மட்டுமல்ல தமிழ் முனிவர்களாகவே தவம் நோற்றிருக்கிறோம். நாங்கள் சொற்களை உருவாக்க வேண்டுமானால் எங்கள் மூளைகளைக் கசக்கிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் எங்களால் கண்டறியப்பட்ட சொற்கள் எவரின் மூளையையும் கசக்குபவையல்ல. எமது சொற்கள் அனைத்தும் தெள்ளிய நீரோடைகளைப் போன்றவை; தொல்காப்பியப் பேராசான் உரைப்பதுபோல் பொருள் பொதிந்ததும் காரணத்தின் அடிப்படையில் அமைந்தவைகளுமாகும்... சட்டத்தமிழ் அகராதி என்னும் இவ்வகராதி ஆங்கிலச் சொல்லொன்றிற்கு ஒன்றிரண்டு தமிழ்ச் சொற்கள் என்னும் தலைகளை மட்டும் காட்டி நிற்கும் சாதாரணநிலை அகராதியன்று; சட்டச் சொற்கள் ஒவ்வொன்றிற்கும் ஆழ்ந்த விளக்கங்களைக் காட்டிநிற்கும் ஓர் அற்புதக் களஞ்சியமாகும்”*

என இவ்வகராதியின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

இது, 1968-இல் ஆட்சிமொழி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அகராதியின் மறுபதிப்பு என்று கூறுமளவுக்கு அதை அடியொற்றிச் செல்கிறது. அந்த ஆணைக்குழுவில் செயல் உறுப்பினராக இருந்தவரே இந்த அகராதிப் பதிப்பாசிரியர் இருவருள் ஒருவர் என்பது காரணமாக இருக்கலாம். மூல அகராதியில் ஏதேனும் ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு நேரிணையான தமிழ்ச்சொல் கொடுக்கப்பட்டிருக்கும். அதன் அடிப்படையில் அச்சொல்லுடன் பொருந்திய தொடர்கள் பலவற்றையும் இவ்வகராதி எடுத்துக்கூறிச் சொற்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்தியிருக்கிறது. எ-டு.: மூல அகராதியில் ‘Official’ என்பதற்கு 3 தொடர்கள் உள்ளன; இந்த அகராதி Official act என்பது முதல் 35 தொடர்களை எடுத்துக்காட்டியிருக்கிறது. மேலும், ஆணையக் குழு அகராதியில் உள்ள தலைச்சொற்கள் பலவற்றுக்குச் சட்டப்பிரிவைச் சுட்டிக்காட்டுவதுடன், ‘Fact’ என்பதற்குப் பிறர் கூறாத ‘நிகழ்மை’ என்னும் ஒரு புதிய தமிழாக்கத்தையும் இதுபோன்று சில சொற்களையும் கொண்டுள்ளது.

தீர்ப்புத் திரட்டு

உச்ச, உயர் நீதிமன்றங்களின் இன்றியமையாத தீர்ப்புகளைத் தமிழாக்கம் செய்து 'தீர்ப்புத் திரட்டு' என்னும் பெயரில் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் காலமுறை இதழாக வெளியிட விரும்பிய நீதியரசர் மகராசனின் முயற்சிக்குச் சென்னை உயர்நீதிமன்றம் செயல் வடிவம் கொடுத்தது. தொடக்கத்தில் உரிய காலத்திலும், பின்னர் இடையறவுபட்டும் உயர்நீதிமன்றத்தின் வெளியீடாக வந்துகொண்டிருந்த தீர்ப்புத் திரட்டு இதழ்களில், அந்தந்த இதழுக்குரிய சொல்லகராதி ஒன்றும் காணப்பட்டது. தீர்ப்புத்திரட்டு மட்டுமன்றிச் 'சட்டக்கதிர்', 'சட்டப்பிரச்சினை' முதலிய இதழ்களும் சட்டத் தமிழாக்கத்தில் ஈடுபட்டிருந்தன.

தனியார் அகராதிகள்

யாழ்ப்பாணத்து நீதிபதி கு.கதிரைவேற்பிள்ளை தமிழில் ஓர் அகராதியை உருவாக்கினார். இத் தமிழ்ச்சொல்லகராதி 1910, 1912, 1923-ஆம் ஆண்டுகளில் மதுரைச் சங்கத்தால் மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்டது. இதில் சில சட்டத் தமிழாக்கங்கள் உள்ளன என்பர்.

கோவை வழக்குரைஞர் திரு பி. பி. இராஜப்பன் 1982இல் 81 பக்கமுள்ள தமது சட்ட அகராதியை வெளியிட்டார்.

> "சென்ற 1-2-1982 உரிமையியல் நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்மொழியில் நடைபெற வேண்டும் எனத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது வரவேற்கத்தக்கதாகும். அதற்கேற்ப, இவ்வகராதியினைத் தயாரித்து அதைத் தங்கள் முன்வைக்கிறோம்"

என்று நூலின் தேவையைப்பற்றி அதன் முகவுரை கூறுகிறது. இது 1979-இல் வெளிவந்த ஆணையத்தின் சட்டச்சொல் அகராதியைப் பெரிதும் தழுவியுள்ளது.

வழக்குரைஞர் சோ. சேசாசலம் **"சட்டத்துறைக் கலைச்சொல் களஞ்சியம்"** (1945) என்னும் அகராதியை ஆக்கியுள்ளார்.

சட்ட ஆட்சிமொழி ஆணையத்தில் பணியாற்றிப் பின்பு தமிழ்வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநராக ஓய்வுபெற்ற திரு இரா. நடராசன், 186 பக்கங்கள் கொண்ட **சட்டத்தமிழ்க் கலைச்சொற்கள்** (1999) என்னும் நூலை ஆக்கியுள்ளார்.

> "இன்று பல சட்டங்களை மாணவர்கள் ஆங்கிலத்தில் படித்துவிட்டுத் தேர்வுகளைத் தமிழில் எழுதும்போது, அவற்றை மொழிபெயர்த்து எழுதவேண்டியுள்ளது. வழக்குரைஞர்களும் நீதிமன்றங்களில் வாதிடுங்கால், பல சட்ட மேற்கோள்களுக்கு நேரிணையான தமிழாக்கத்தைக் கூறவேண்டியிருக்கிறது. தமிழில் தீர்ப்புகளை எழுதும் நீதிபதிகள், ஆங்கிலத்திலுள்ள சட்ட வாசகங்களை மேற்கோள் காட்டுகையில், தமிழிலேயே குறிப்பிட வேண்டியுள்ளது. அவர்களுக்கு உதவுகின்ற வகையில் இந்தச் சட்டச்சொல் அகராதி உருவாக்கப்பட்டுள்ளது"

என்று நூலின் தோற்றம்பற்றி முன்னுரை கூறுகிறது. நீண்டகால மொழிபெயர்ப்புப் பணியில் ஆசிரியர் பெற்ற பட்டறிவு அவரது தமிழாக்கங்களில் பளிச்சிடுகிறது.

தமிழ்ச் சட்டத்திரட்டு இதழை 1987-இல் தோற்றுவித்தவரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞருமாகிய திரு மு. அருள்செல்வத்தின் படைப்பில் 390 பக்கங்கள் கொண்ட **தமிழ்ச் சட்டப் பல்பொருள் விளக்கநூல்** (ஜூலை 2000) வெளிவந்தது.

"இந்நூலில் சட்டச் சொற்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் அச்சொற்களின் கருத்தோடு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்புகள் தமிழக அரசு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்நீதிமன்ற ஏற்பு இதழ்களில் வெளியிடப்பட்ட கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பல புதிய சட்டச் சொற்களையும் மற்றும் ஆட்சிச் சொற்களையும் சேர்த்துள்ளேன். சட்டச் சொற்கள் எந்தெந்தச் சட்டப் பிரிவுகளில், எந்தெந்த உச்ச, உயர்நீதி மன்றத் தீர்ப்புகளில் விளக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான சட்டப் பிரிவுகளையும், தீர்ப்புகளின் விவரங்களையும் கொடுத்துள்ளேன். இது நீதி மன்றங்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் அச்சொற்களைப் பற்றி பொருள் விளக்க (Interpret) உதவும்"

என முன்னுரையில் ஆசிரியர் குறித்துள்ளார்.

இந்நூலுள் சட்டம், மருத்துவச்சட்டம், கணினி ஆகியவற்றிற்குரிய சொற்களின் தமிழாக்கம் உள்ளது. தமிழில் வாதுரைகள், தீர்ப்புகள், ஆவணங்கள், வாக்குமூலங்கள் இவற்றைத் தமிழாக்கம் செய்யும் முறைகள் பின்னிணைப்பாக உள்ளன.

தமிழ்நாடு சட்டத்துறை மொழிபெயர்ப்புச் சிறகத்தின் இயக்குநர், முனைவர் வீ. சந்திரன், 300 பக்க அளவில் சட்ட நிருவாக அருஞ்சொல் திரட்டு (டிசம்பர் 2000) என்னும் நூலை ஆக்கியுள்ளார்.

"சட்ட நிருவாகச் சொற்கள் அடங்கலும் தொகுத்து ஒரு முழுமையான அகராதியை வெளியிட நான் நீண்ட நாட்களாக முயற்சித்து வருகின்றேன். இப்பணிக்காக நான் குருவிபோல் சிறுகச் சிறுகச் சொற்களைத் திரட்டினேன். தலைமைச் செயலக நிருவாகத் துறைகளிடமிருந்து குறைந்தது பத்துத் துறைகளாவது நாள்தோறும் சட்டத் தமிழ்ப் பிரிவில் சட்ட நிருவாக ஆங்கிலச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் நிகரிகளைத் தமிழில் கேட்கிறார்கள். இவ்வேளைகளில் நிருவாகத் துறையினர், அச்சொற்களுக்குச் சந்தைகளில் கிடைக்கும் அகராதிகளில் கொடுக்கப்பட்ட தமிழ்ப்பொருள் பொருத்தமாகத் தமிழ்ச்சொல்லாகக் கிடைக்கவில்லை என்னும்போது, அதற்குத் தமிழ் நிகரிகளை விரைந்து தேடுகின்றேன். இத்தகைய பல இக்கட்டான சூழ்நிலைகளில் திரட்டிய ஒருசில சொற்களைத்தான் இச்சிறு அகராதியில் கொடுத்துள்ளேன்"

என்று தமது நன்றியுரையில் நூலாக்கத்தின் காரணத்தை ஆசிரியர் தெரிவித்துள்ளார். சட்டத்துறை மொழிபெயர்ப்பில் எதிர்கொள்ளப்படும் சொற்களுக்கு ஏற்றவாறு தமிழாக்கம் உள்ளது. இவ்வகராதியில் சட்டச்சொற்களும், சட்டங்களில் பயிலப்பெறும் சொற்றொடர்களும் தனித்தனியே பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

சட்டக்கல்லூரிப் பேராசிரியர் ஆ. சந்திரசேகரனின் நூலாகிய சட்டச் சொற்களஞ்சியம் (2003) 385 பக்கங்களைக் கொண்டுள்ளது.

"உரிய சட்ட நுணுக்கச் சொற்கள் தமிழில் தமக்கு கிடைக்கப் பெறாமையால் சட்ட நூல்கள் எழுதப் பலரும் தயங்குகின்றனர். இத்தடைக்கல்லை நீக்கிட, ஆங்கிலத்திலுள்ள சட்டச் சொற்கள் ஒன்று திரட்டப்படவும், புதிய சொற்கள் உருவாக்கப்படவும், சீராக அவை பயன்படுத்தப்படவும் வேண்டும். இம்முயற்சியை மேற்கொள்ளும்போது, சட்டச்சொற்கள் சீராகத் தொடர்ந்து அனைவராலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் ஏற்கெனவே வழக்கில் இடம் பெற்றுள்ள பல சட்ட நுணுக்கச்

சொற்களை மாற்றம் ஏதும் செய்யாமல் ஏற்றுக் கொண்டுள்ளேன். காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய சொற்கள் பலவற்றை உருவாக்கியுள்ளேன். காலப்போக்கில் இதை விடச் சிறப்பான சொற்கள் வெளிவரின் வரவேற்கத்தக்கதே. புதிய சொற்கள் பல கொண்டு வந்து தமிழை வளமாக்குவோம். ஆங்கிலத்தில்தான் ஒரு கருத்தைச் சுருக்கமாகவும் துல்லியமாகவும் கூற முடியும் என்ற தவறான எண்ணத்தை நீக்கி, தமிழிலும் அவ்வாறே திறம்பட செம்மையாகவும் திண்மையாகவும் கூற முடியும் என்ற நிலையை உருவாக்குவோம்"

என நூலின் நோக்கையும் போக்கையும் ஆர்வத்தையும் முன்னுரையில் ஆசிரியர் கூறியுள்ளார்.

இந்நூலுள் சட்டம் பற்றிய கலைச்சொற்கள், அயல்நாட்டுச் சொற்கள், முதுமொழிகள், விவரவுரைகள், கோட்பாடுகள், பொன்மொழிகள் ஆகியவற்றின் ஆங்கில, இலத்தீன் சொற்கள், சொற்றொடர்கள், தொடர்கள் ஆகியவற்றுக்குத் தமிழாக்கங்கள் உள்ளன. பல்வேறு சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அடிப்படையாகவுள்ள 509 கருத்துரைகளைத் தொகுத்துக் கொடுத்திருப்பதும், 104 சட்டக் கோட்பாடுகளுக்கு விளக்கம் அளித்திருப்பதும் இந்நூலின் தனிச்சிறப்புகளாகும்.

சட்ட அகராதிகள் அனைத்திற்கும், சட்ட ஆட்சிமொழி ஆணையத்தினால் 1968, 1979ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இரண்டு அகராதிகளுமே அடிப்படையாக அமைந்துள்ளன எனில் அது மிகையன்று.

சட்ட நூலாசிரியர் மா. சண்முகசுப்பிரமணியம் சட்டத்தமிழ், சட்டவியல், தீங்கியல் சட்டம், குறள்கூறும் சட்டநெறி முதலிய சட்டத்தமிழ் நூல்களை எழுதியுள்ளார். முதல்நூல் 1962-ஆம் ஆண்டில் வெளியாயிற்று. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தினர் மாணவர்களுக்குப் பயன்படுமாறு பற்பல சட்ட நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். இவற்றுள் பல ஆங்கிலச் சட்டச் சொற்களுக்குத் தமிழாக்கங்கள் உள்ளன.

புத்தக வெளியீட்டாளர்களும் பொதுமக்களுக்கேற்றவாறு சட்டத்தமிழ் நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கின்றனர். இவை எல்லாமே நல்ல தமிழாக்கங்கள் என முற்றிலுமாகக் கொள்ளவும் முடியாது; தேவை இல்லை எனத் தள்ளிவிடவும் முடியாது.

உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ள நீதிமன்றங்களின் தீர்ப்புமொழி தமிழே எனச் சட்டம் இருப்பதால், தமிழில் தீர்ப்பு எழுதும் நீதிபதிகள், அதிகாரவுரிமை பெற்ற தமிழாக்கங்களையே தங்கள் தீர்ப்பில் பயன்படுத்த வேண்டும் என்பது எழுதாச் சட்டமாகும்.

6. இந்த அகராதியின் அமைப்பு முறை

பாவேந்தர் பாரதிதாசனின் தமிழியக்கம்

"மணக்கவரும் தென்றலிலே
குளிராயில் லைதோப்பில்
நிழலா இல்லை,
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை"

என்று தமிழ்நாட்டில் நிலவிய தமிழின் அன்றைய நிலையைத் தெரிவிக்கின்றது. ஆனால், இன்று எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எல்லாம் தமிழ் என்னும் கொள்கை முழக்கம் ஓங்கி ஒலிக்கின்றது. எனினும், ஆர்வம் இருக்கும் அளவுக்குச் செயல்விளைவு இல்லை.

நாட்டு விடுதலைக்குப் பின்னர் மொழிக்கொள்கையை வரையறுத்து 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், சட்டகங்கள் (Bills) ஆங்கிலத்தில்தான் வரையப்படுகின்றன; சட்டகைகளும் (Acts) ஆங்கிலத்தில்தான் உள்ளன. அவற்றை நேரடியாகத் தமிழில் வரையும் நிலை இன்னமும் வாய்க்கவில்லை. அந்த நிலை உருவாகும் வரையில், சட்டத்தமிழ் என்பது ஆங்கிலம் வழி அமையும் தமிழாக்கமே ஆகும்; அந்தத் தமிழாக்கத்திற்கு அடிப்படைச் சொல்லகராதி; "சட்டச் சொல்லகராதிகள்" என்னும் தலைப்பின் கீழே குறிப்பிடப்பட்டவாறு, பற்பல அகராதிகள் காலந்தோறும் வெளிவந்திருக்கின்றன; எனினும், வளரும் தமிழின் ஒரு புதியதுறை என்பதால் சட்ட அகராதியின் தேவைப்பாடு இன்னும் குறையவில்லை. அவ்வகையில், இந்த அகராதி பின்வரும் சில சிறப்பியல்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு பதிவும் அமைந்துள்ள முறை:

  (1) தலைச்சொல் (2) இலக்கணக் குறிப்பு (3) பொருள் வரையறை (4) மேற்கோள் (5) தேவையான இடங்களில் தீர்ப்பு வழிச்சட்டத்தின் விளக்கம் (6) நேரிணையான ஆங்கிலச்சொல் அல்லது சொற்றொடர்.

எ.டு.: **இயற்கை நீதி** *பெயர்*
நேர்மை தகைமை நன்மனச்சான்று ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த முறைமை.
* *இயற்றப்பட்ட சட்டத்தில் அடங்காத பகுதிகளில் மட்டுமே, நீதியைக் காப்புறுதி செய்வதற்கும் நீதிச் சிதைவைத் தடுப்பதற்கும் இந்த இயற்கை நீதி பயன்படுத்தப்பட்டுத் தீர்ப்புரைக்க உதவுகின்றது (ஏ.கே.கிரிபாக் எதிர் இந்திய ஒன்றியம்* (1970) 1 SCR 457);
Natural justice.

- இதுவரை வெளிவந்த அகராதிகள் ஆங்கிலச் சட்டச் சொற்களுக்குத் தமிழாக்கம் என்னும் முறையை மேற்கொண்டுள்ளன. இந்த அகராதி தமிழாக்கத்திற்கு நேரிணையான ஆங்கிலம் என்னும் முறையில் அமைந்துள்ளது.

- 1968 - ஆம் ஆண்டின் சட்ட ஆட்சிமொழி ஆணைய அகராதி ஆங்கிலச்சொல், பொருள் வரையறை ஆகியவற்றுக்குத் தமிழாக்கத்தையும் விளக்கத்தையும் கொண்டிருக்கிறது. இந்த அகராதி தமிழில் தலைச்சொல், அதற்குரிய பொருள்வரையறை; தலைச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல்லை அல்லது தொடரைக் கொண்டிருக்கிறது.

- சில அகராதிகள் தலைச்சொல் பயின்றுவரும் இடத்தைக் குறிக்கவில்லை:

  எ-டு.: Injunction - உறுத்துக்கட்டளை.

  சில அகராதிகள் மிகச்சில சொற்களுக்கே சட்டப்பிரிவைக் குறித்துள்ளன:

  எ-டு.: House trespass, Lurking (See S. 443 IPC) - ஒளிந்து வீட்டினில் அத்துமீறல்.

  இந்த அகராதி தலைச்சொல்லுக்குரிய ஆதாரத்தையோ சட்டப் பிரிவையோ சுட்டுவதுடன் தேவையான இடங்களில் சொல் பயின்றுள்ள மேற்கோளையும் எடுத்துக்காட்டுகிறது.

எ.டு.: பதுங்கி மனைஅத்துமீறல் *பெயர்*

எல்லைமீறி நுழைபவரைத் தடுக்கவோ வெளியேற்றவோ உரிமையுள்ள ஒருவரின் கண்ணில்படாமல் மறைவாக வீட்டுக்குள் நுழைதல். *கதிரவன் மறைந்த பின்பும், தோன்றும் முன்பும் பதுங்கி மனை அத்துமீறலைச் செய்பவர்* (பி.444, இ.த.தொ.ச.); Lurking house trespass.

- பல அகராதிகளில் தீர்ப்புவழிச் சட்டம் பற்றிய குறிப்பு எதுவுமில்லை; சில அகராதிகள் அருவழக்காகச் சுட்டுகை செய்கின்றன; அவற்றின் விவரம் வருமாறு:

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 480 பக்கங்கள் கொண்ட 'சட்டத்தமிழ் அகராதி' விரல்விட்டு எண்ணுமாறு சில இடங்களிலும் எ-டு.: Agrarian reform - வேளாண்மைச் சீர்திருத்தம்.. V. Narayanan Nair, V. State of Kerala, AIR 1971 Ker. 98),

திரு மு அருள்செல்வத்தின் 'தமிழ்ச் சட்டப் பல்பொருள் விளக்கநூல்', ஆங்காங்கே சில சொற்களுக்கும்

எ.டு.: Market value... நிலவர மதிப்பு (காண்க AIR 1987 SC 720),

பேராசிரியர் ஆ சந்திரசேகரனின் 'சட்டச் சொற்களஞ்சியம்', சட்டக் கோட்பாடு பற்றிய சில விளக்கங்களிலும்

எ.டு.: Alibi, plea of - வேற்றிடவாதம்... தூத்நாத்பாண்டு எதிர் உத்தர பிரதேச அரசு (AIR 1981 SC 911)

எனத் தீர்ப்புவழிச் சட்டத்தைச் சுட்டுகின்றன.

இந்த அகராதி தலைச்சொல் விளக்கம்பெற வேண்டிய இடங்களில் தீர்ப்புவழிச் சட்டத்திலிருந்து பொருள் வரையறையையோ மேற்கோளையோ உடுக்குறி (*) இட்டுச் சுட்டிக்காட்டியுள்ளது.

- இந்த அகராதி தலைச்சொல்லுக்குரிய சட்டப் பொருள்வரையறை நெகிழும் நிலையில் அதை வகுத்துரைத்த தீர்ப்புவழிச் சட்டத்தை எடுத்துரைக்கிறது. பிற அகராதிகள் இதில் கவனம் செலுத்தவில்லை.

எ.டு.: பொருட்பிணைப் பொறுப்பு - charge.

* பொருட்பிணைப் பொறுப்பு ரூ.100/- க்குக் குறைவாக இருந்தால் வாய்மொழியாக ஏற்படுத்தலாம் (விசுவநாதன் வழக்கு AIR 1939 சென்னை 203)

* பொருட்பிணைப் பொறுப்பை வாய்மொழியாக ஏற்படுத்த முடியாது; எழுதிப் பதிவுசெய்யப்படவேண்டும் (சத்தியநாதன் எதிர் வேங்கடராமன் 1955 (1) MLJ. 399)

- இந்த அகராதி, தலைச்சொல்லின் பொருள்வரையறையை எளிமைப்படுத்துவதுடன், விளக்கம் தேவைப்படும்போது தீர்ப்புவழிச் சட்டத்தைச் சுட்டிக்காட்டித் தீர்ப்புரையின் பகுதியையும் எடுத்துரைக்கிறது. பிற அகராதிகளில் இம்முறை காணப்படவில்லை.

எ.டு.: Part performance - பகுதி நிறைவேற்றம். இது சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் 53 ஆம் பிரிவில் அமைந்துள்ளது.

1968-ஆணையத்தின் சட்டச்சொல் அகராதி ஆங்கிலத்திலுள்ள இப்பிரிவின் வாசகங்களுள் சிலவற்றை ஏற்றும் சிலவற்றை ஒதுக்கியும் சுருக்கமாக்கி, அதற்குரிய தமிழாக்கத்தைப் பின்வருமாறு கொடுத்துள்ளது.

PART PERFORMANCE

Where a person contracts to transfer for consideration any immovable property by writing, signed by him, and the transferee has, in part performance of the contact, taken possession of the property or any part thereof, or the tranferee, being already in possession, continues in possession in part performance of the contract and has done some act in furtherance of the contract, and the transferee has performed or is willing to perform his part of the contract, then, though the document of the contract has not been registered or completed as required by the law, the transferor will have no right in respect of the property other than any right expressed in the contract (Section 53-A of the Tranfer of Property Act.)

பகுதி நிறைவேற்றம்

மறு பயன்பெற்று, ஒரு நிலச் சொத்தை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றிக் கொடுப்பதற்காகக் கையொப்பமிட்டு எழுத்து மூலம் ஒப்புக் கொள்கிறார். மாற்றிப்பெறுபவர், ஒப்பந்தத்தின் தமது பகுதிப்பங்காற்றமாக அச் சொத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உடைமையை எடுத்துக் கொள்ளுகிறார்; அல்லது ஏற்கெனவே அவர் அச்சொத்தின் உடைமையைக் கொண்டிருந்தால், அவ்வுடைமையில் நீடித்து ஒப்பந்தப்படி செய்ய வேண்டிய ஒன்றைச் செய்கிறார்; மேலும் அவர் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் தாம் செய்ய வேண்டியவற்றைச் செய்து விடுகிறார் அல்லது செய்வதற்குச் சித்தமாக இருக்கிறார். இந்நிலையில் சட்ட முறைப்படி அந்த ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யப்படாமல் அல்லது முடிவுறாமல் இருந்தாலும், கூட, மாற்றிக் கொடுப்பவருக்கு அந்த ஒப்பந்தத்தில் கண்ட உரிமைகள் தவிர, சொத்தைப் பொறுத்து வேறு உரிமைகள் கிடையா. (சொத்து மாற்றுச் சட்டம், 53-A பிரிவு).

1994-ஆம் ஆண்டு தமிழ்ப்பல்கலைக்கழகச் சட்டத்தமிழ் அகராதியும், 2000-ஆம் ஆண்டு தமிழ்ச் சட்டப் பல்பொருள் விளக்கநூலும், மேற்சொன்ன ஆணைய அகராதியின் வாசகங்களை அப்படியே வரி மாறாமல் எடுத்தாண்டுள்ளன. ஆணைய அகராதி "வேறு உரிமைகள் கிடையா" எனப் பிழையின்றிக் கொண்டே தொடரை, அடுத்துச் சுட்டிய அகராதிகள் "வேறு உரிமைகள் கிடையாது" என ஒருமை-பன்மை மயக்கத்துடன் கொண்டுள்ளன என்னும் ஒரே ஒரு வேறுபாடு உண்டு.

* இந்த அகராதி பகுதி நிறைவேற்றம் என்னும் அதே தலைச்சொல்லுக்குப் பொருள்வரையறையை எளிமைப்படுத்தித் தருவதுடன், தொடர்புடைய தீர்ப்புவழிச் சட்டத்தின் பகுதியையும் தமிழாக்கம் செய்துள்ளது.

பகுதி நிறைவேற்றம் *பெயர்*
அசையாச்சொத்தை மறுபயனுக்காக மாற்றல்செய்வதாக எழுதிக் கையொப்பமிட்டு ஒப்பந்தம் செய்துகொண்ட மாற்றல்செய்பவரின் சொத்தின் உடைமையை, மாற்றல்பெறுபவர் கைக்கொண்டு ஒப்பந்தப்படி தமது பங்கை நிறைவேற்றிய நிலையில், சட்டப்படி அந்த ஆவணம் பதிவுசெய்யப்படாமலோ முடிவுறாமலோ இருந்தாலும்கூட, மாற்றல்செய்தவருக்கு அந்த ஒப்பந்தத்தில் சொல்லியதைத் தவிர வேறு உரிமை எதுவும் இல்லை என்னும் கோட்பாடு.
* *ஓர் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தில் உரிமைமாற்றல்பெற்றவர் சொத்தின் உடைமையைக் கொண்டிருக்கவேண்டும் (இராமச்சந்திரையா வழக்கு, (1964) உ.நீ. 876);*
Part performance.

பிற அகராதிகள் இதுவரை கவனிக்காமல் விட்டிருந்த சில ஆங்கிலச் சட்டச் சொற்களின் நுட்பத்தையும் பொருட் சிறப்பையும் வெளிப்படுத்தும் வகையில், இந்த அகராதி புதிய கலைச்சொற்களை உருவாக்கியிருக்கிறது.

Bill, Act, Law என்னும் இம்மூன்று சொற்களும் சட்டத்தின் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலையைக் குறிப்பிடுகின்றன எனக் கொள்ளலாம். Bill என்பது எந்த வகைமுறைகள் எல்லாம் சட்டமாக ஆக்கப்பட வேண்டுமோ அந்த வகைமுறைகளைத் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. அந்த Bill-ஐச் சட்டப் பேரவையில் வைத்துக் கலந்தாய்வு நிகழ்த்தித் திருத்துகை மாற்றமைவு ஏதுமிருப்பின், அதை ஏற்று நிறைவேற்றுகையில் அது Act ஆகிறது; அந்த Act நடைமுறைப்படுத்தப்படும்போது Law எனப்படுகிறது. இந்த நுட்பத்தை இந்த அகராதியின் சொல்லாக்கம் வெளிப்படுத்துகிறது.

எ.டு.:	சொல்.	பிற அகராதிகள்	இந்த அகராதி
	Bill	சட்டமுன் வடிவு	சட்டகம்
	Act	சட்டம்	சட்டகை
	Law	சட்டம்	சட்டம்

- இந்த அகராதி நல்ல தமிழ்ச் சொற்களையே தலைச்சொற்களாகப் பயன்படுத்தியிருக்கிறது; இருப்பினும் பிற அகராதிகள் கொண்ட அயல்மொழிச் சொற்களைப் பிறைக்குறிக்குள் கொடுத்திருக்கிறது:

எ.டு.:	வழிமுறையுரிமை	Succession	(வாரிசுரிமை)
	முன்னிலையாதல்	Appearance	(ஆஜராதல்)

- சில அகராதிகள் தலைச்சொற்களுக்குப் பொருள்வரையறைகளைச் செய்யாமல் வெறும் சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பையே தந்திருக்கின்றன. இந்த அகராதி பொருள் வரையறையுடன், அதற்குரிய விளக்கத்தையும் கொடுக்கிறது.

எ.டு.: பிற அகராதிகள் :

Fundamental rights - அடிப்படை உரிமைகள்

இந்த அகராதி :

அடிப்படை உரிமைகள் *பெயர்*

குடிமக்கள் தன்னியல்புடன் துய்க்கும் வகையில் அரசமைப்பால் பொறுப்புறுதியளிக்கப்படும் குறிப்பிட்ட சில நலன்கள். *ஆளின் உயிருக்கும் தன்னுரிமைக்கும் காப்பளிப்பு, இந்தியக் குடிமக்கள் அமைதியாகக் கூடுதல், ஆட்சிப்பகுதி எங்கும் சென்றுவருதல், குடியிருத்தல், சங்கங்கள் அமைத்தல், விரும்பிய பணித்தொழில் பயிலுதல், பேச்சு, சமயம், பண்பாடு, கல்வி, சட்டத்தின்முன் சமநிலை, பிற்பட்ட வகுப்பினர் பட்டியல் குலத்தினர், பழங்குடியினர், பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கான சிறப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கான உரிமைப்பேறு (= சுதந்திரம்);*
சமயம், இனம், குலம், பாலினம், பிறப்பிடம் காரணமாக எவருக்கும் எதிராக வேற்றுமை காட்டுதல், பொது இடங்களில் நுழைந்து பயன்கொள்வதைத் தடுத்தல், தீண்டாமை, சுரண்டப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான காப்பளிப்பு உரிமைகள் (பகுதி III, *உறுப்.*12-30, *இ.அ.*); Fundamental rights.

இந்த அகராதி மேற்குறித்தவாறு பல சிறப்பியல்புகளையும் தனித்தன்மைகளையும் கொண்டு விளங்குவதையும், சட்ட ஆர்வலர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் உதவும் வகையில் அமைந்திருப்பதையும் இதைப் பார்வையிடுவோர் காணுதல் கூடும்.

இதுவரையில் தவழ்ந்து தளர்நடையிட்டிருந்த புதிய துறையாகிய சட்டத்தமிழ் இப்போது காலூன்றத் தொடங்கியுள்ளது; அது நிமிர்ந்து நடைபயில்வதற்கு இச்சட்டச்சொல் அகராதி பெரிதும் உதவும் எனவும், அவ்வகையில் இத்துறையைச் சார்ந்தோர் இதனை வரவேற்பர் எனவும் நான் நம்புகின்றேன்; இந்நூல் பற்றிய கருத்தாய்வுரையையும் எதிர்நோக்குகிறேன்.

நன்றியுரை

நற்றமிழ் நலங்கனிந்த பெருந்தகையும், இச் சேய் அகராதிக்குத் தாய் அகராதியாக அமையவிருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சீராய்வுத் தமிழ்ப்பேரகராதி விரைந்து வெளிவருவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவரும் ஆகிய மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச. ப. தியாகராஜன் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கிடையேயும் இவ்வகராதியைப் பார்வையிட்டுச் சீரியதோர் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு உளமார்ந்த எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

'சுடர்விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்' என்பர். அதுபோல் அகராதி ஆக்கத்தின்போது, கலந்துபேசியும் கருத்துரை வழங்கியும், நூலைப் பார்வையிட்டு அகராதியியலுக்குரியவாறு ஆக்குவித்தும், ஆய்வு முன்னுரை எழுதும்படி அறிவுறுத்தியதுடன் பதிப்புரை வழங்கி வெளியிடுவதற்கும் வழிகோலி உதவியவர், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறைத் தலைவரும் தமிழ்ப் பேரகராதிச் சீராய்வுத் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியரும் ஆகிய பேராசிரியர் முனைவர் வ ஜெயதேவன் அவர்கள்.

நூல் உருவாக்கத்தின்போது கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவியதுடன், கணினிப் படியத்தைப் பார்வையிட்டும் உதவியிருப்பவர் புலவர் ப. வெ. நாகராசனார்.

மேலும் கீழும் குறுக்கும் நெடுக்கும் அடித்தும் திருத்தியும் பக்கம் மாறிக் கிடந்த எனது கையெழுத்துக் குறிப்புகளைக் கவனமாகவும், பொறுமையாகவும் படித்து உரியவாறு கணினி அச்சுப்படுத்தி நூல் வடிவில் அமைத்துக் கொடுத்துள்ளவர் திருமதி ந. சுமதி.

ஒல்லும் வகையிலெல்லாம் உதவியிருப்பவர்கள் முனைவர் மு. பாலகிருஷ்ணன், முனைவர் கி. ஜெயகுமார், முனைவர் ந. இராணி, திரு வை. சிவநேசன், செல்வி ந. ஆனந்தி, திருமதி ஐ. ஜோசபின், திரு எல். கணேசன், செல்வி செல்லம்மாள் ஆகியோர்.

இவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சுநிறை நன்றி நவிலும் கடப்பாடுடையேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

கு. சிவமணி

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

சொற்கள்

இ.ப.	-	இணைப்புப் பட்டியல் Schedule
உறுப்.	-	உறுப்பு Article
எ-டு.	-	எடுத்துக்காட்டு Example
கட்.	-	கட்டளை Order
செ.ப.த.பே.	-	சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி Madras University Tamil Lexicon
பகு.	-	பகுதி Part
பி.	-	பிரிவு Section
பிற்.	-	பிற்சேர்க்கை Appendix
முகப்.	-	முகப்புரை Preamble
வரம்.	-	வரம்புரை Proviso
வி.	-	விதி Rule
விளக்.	-	விளக்கம் Explanation
வி.கா.	-	விளக்கக்காட்டு Illustration

சட்டகைகள்

அ.ஆ.வ.ச.	-	அலுவல்தொழில் ஆதாயங்கள் வரிச் சட்டகை Business Profits Act
அ.கொ.க.ச.	-	அறக் கொடைக்கட்டளைச் சட்டகை Charitable Endowment Act

அ.சொ.வ.ச. - அடைசொத்து வரிச் சட்டகை
Estate Duty Act

அ.நா.ஒ.ச. - அயல் நாணயமாற்று ஒழுங்குமுறைச் சட்டகை
Foreign Exchange Regulation Act

அ.மு.ப.ச. - அலிகார் முசுலீம் பல்கலைக்கழகச் சட்டகை
Aligar Muslim University Act

அ.வே.க.க.ச. - அரசு வேளாண் கடனுதவிக் கழகங்கள் சட்டகை
State Agricultural Credit Corporations Act

அ.வே.கை.ச. - அசையாச்சொத்து வேண்டுறுத்திக் கையகப்படுத்துகைச் சட்டகை
Requisitioning and Acquisition of Immovable Property Act

ஆ.கா.க.ச. - ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டகை
Life Insurance Corporation Act

ஆ.மே.வ.ச. - ஆதாயங்கள் மேல்வரிச் சட்டகை
Profit Surtax Act

ஆ.வ.வ.ச. - ஆசிய வளர்ச்சி வங்கிச் சட்டகை
Asian Development Bank Act

இ.அ. - இந்திய அரசமைப்பு
Constitution of India

இ.அ.ச. - இந்திய அஞ்சலகச் சட்டகை
Indian Post Office Act

இ.இ.கா.ச. - இந்து இளவர் - காப்பாளர் சட்டகை
Hindu Minority and Guardianship Act

இ.இ.ச. - இந்திய இருப்புப்பாதைச் சட்டகை
Indian Railways Act

இ.உ.வ.ச. - இந்திய அஞ்சல் உருப்படி வரிச் சட்டகை
Indian Postal Article Tax Act

இ.ஊ.ச. - இயக்கு ஊர்திகள் சட்டகை
Motor Vehicles Act

இ.ஒ.ச - இந்திய ஒப்பந்தச் சட்டகை
Indian Contract Act

இ.க.ஆ.ச. - இந்து கற்றல் ஆதாயங்கள் சட்டகை
Hindu Gains of Learning Act

இ.க.ப.கொ.ச. - இந்தியக் கடல்வழிப் பண்டங்கள் கொண்டுசெல்லுகைச் சட்டகை
Indian carriage of goods by sea Act

இ.கூ.ச. - இந்தியக் கூட்டாண்மைச் சட்டகை
Indian Partnership Act

இ.சா.ச. - இந்தியச் சான்றுச் சட்டகை
Indian Evidence Act

இ.சு.ச. - இந்தியச் சுங்கங்கள் சட்டம்
Indian Customs Act

இ.சே.வ.ச. - இந்தியச் சேமவங்கிச் சட்டகை
Reserve Bank of India Act

இ.த.தொ.ச. - இந்தியத் தண்டனைத் தொகுசட்டகை
Indian Peral code Act

இ.தி.ச. - இந்துத் திருமணச் சட்டகை
Hindu Marriage Act

இ.தி.மு.ச. - இந்தியத் திருமண முறிவுச் சட்டகை
Indian Divorce Act

இ.தி.வ.ச. - இந்தியத் திருமண வழக்குகள் சட்டகை
Indian Matrimonial causes (War marriage) Act

இ.(தீ.வெ.) ச. - இளைஞர்கள் (தீங்குவிளை வெளியீடுகள்) சட்டகை
Young persons (Harmful Publications) Act

இ.து.ச. - இந்தியத் துய்ப்புரிமைச் சட்டகை
Indian Easement Act

இ.பு.நி.ச. - இந்தியப் புள்ளிவிவர நிறுவனங்கள் சட்டகை
Indian Statistical Establishments Act

இ.பொ.க.ச. - இந்தியப் பொறுப்புக்கட்டளைச் சட்டகை
Indian Trust Act

இ.மு.ச. - இந்திய முத்திரைச் சட்டகை
Indian Stamp Act

இ.வ.உ.ச. - இந்திய வழிமுறைஉரிமைச் சட்டகை
Indian Succession Act

இ.வ.ச. - இறப்பு வரிச் சட்டகை
Death Tax Act

இ.வி.ம.ச. - இடர்விளை மருந்துப்பொருள் சட்டகை
Dangerous Drugs Act

உ.க.ச. - உணவுக் கழகச் சட்டகை
Food Corporation Act

உ.கொ.ச.	-	உழைப்பூதியம் கொடுத்தல் சட்டகை Payment of wages Act
உ.ந.தொ.ச.	-	உரிமையியல் நடைமுறைத் தொகுசட்டகை Civil Procedure Act
ஊ.அ.கா.ச.	-	ஊழியர் அரசுக் காப்பீட்டுச் சட்டகை Employee State Insurance Act
க.ப.ச.	-	கடற்படைச் சட்டகை Navy Act
கா.அ.ச.	-	கால்நடை அத்துமீறல் சட்டகை Cattle Trespas Act
கா.கா.ச.	-	காப்பாளர் - காப்புளார் சட்டகை Guardians and Wards Act
கா.ச.	-	காப்பீட்டுச் சட்டகை Insurance Act
கா.வ.ச.	-	கால வரம்பீட்டுச் சட்டகை Limitation Act
கு.ச.	-	குழந்தைகள் சட்டகை Children Act
கு.ந.தொ.ச.	-	குற்றவியல் நடைமுறைத் தொகுசட்டகை Criminal Procedure Code Act
கு.தீ.ச.	-	குறித்தவகைத் தீருதவிச் சட்டகை Specific Relief Act
கொ.வ.ச.	-	கொடை வரிச் சட்டகை Gift Tax Act
ச.ஆ.சொ.க.	-	சட்ட ஆட்சிமொழிச் சொற்களஞ்சியம் Glossary of Legal and Administrative Terms
ச.சொ. 1968	-	சட்டச் சொல்லகராதி 1968 Law Lexicon 1968
ச.சொ. 1979	-	சட்டச் சொல்லகராதி 1979 Law Lexicon 1979
ச.சொ.க. 1979	-	சட்டச் சொற் களஞ்சியம் 1979 . Law Lexicon 1979
ச.சொ. 1983	-	சட்டச் சொல்லகராதி 1983 Law Lexicon 1983

ச.மு.செ.(த)ச - சட்டமுரண் செய்கைப்பாடுகள் (தடுப்பு) சட்டகை
Unlawful Activities (Revention) Act

ச.வி.ச. - சரக்கு விற்பனைச் சட்டகை
Sale of goods Act

சு.ச. - சுங்கங்கள் சட்டகை
Customs Act

சு.தீ.ச. - சுங்கத் தீர்வைச் சட்டகை
Customs Tariff Act

சொ.மா.ச. - சொத்துரிமை மாற்றல் சட்டகை
Transfer of Property Act

த.கு.ச. - தமிழ்நாடு குழந்தைகள் சட்டகை
Tamil Nadu Children Act

த.நா.பொ.ந.ச. - தமிழ்நாடு பொது நலவாழ்வுச் சட்டகை
Tamil Nadu General Health Act

த.ம. வி.ச. - தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டகை
Tamil Nadu Prohibition Act

த.மு.வா.ச. - தவணைமுறை வாங்குகைச் சட்டகை
Hire purchase Act

தீ.பா.ப.(சி.நீ.)ச. - தீவிரவாதி பாதிப்புப்பகுதி (சிறப்பு நீதிமன்றங்கள்) சட்டகை
Terrorist Affected Area (Special Court) Act

தொ.நி.க.ச. - தொழில் நிதியுதவிக் கழகச் சட்டகை
Industrial Finance Corporation Act

து.தொ. (வேஒ) ச. - துறைமுகத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறை) சட்டகை
Dock workers (Regulation of Employment) Act

தூ.து.அ.ச. - தூது - துணைத்தூது அலுவலர்கள் (ஆணையுறுதி - கட்டணங்கள்) சட்டகை
Diplomatic and Consular Officers (Oaths and Fees) Act

தே.ச. - தேயிலைச் சட்டகை
Tea Act

தொ.பூ.ச. - தொழிற் பூசல் சட்டகை
Industrial Dispute Act

நி.ச. - நிறுமங்கள் சட்டகை

Companies Act

நி.(ஆ) மே.வ.ச. - நிறுமங்கள் (ஆதாயங்கள்) மேல்வரி சட்டகை
Companies (Profits) Surtax Act

நி.கை.ச. - நிலம் கையகப்படுத்துகைச் சட்டகை
Land Acquisition Act

நீ.அ.ச. - நீதிமன்ற அவமதிப்புச் சட்டகை
Contempt of Court Act

நீ.க.ச. - நீதிமன்றக் கட்டணம் சட்டகை
Court Fees Act

நு.கா.ச. - நுகர்வோர் காப்பளிப்புச் சட்டகை
Consumer Protection Act

ப.உ.ச. - பதிப்பு உரிமைச் சட்டகை
Copyright Act

ப.ச. - பதிவுகள் சட்டகை
Registration Act

ப.து.ச. - படைத்துறைச் சட்டகை
Military Act

ப.ப.ச. - பணிபழகுநர் சட்டகை
Apprentice Act

ப.மா.கு.ச. - பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டகை
University Grants Commission Act

ப.வி.ச. - பண்டங்கள் விற்பனைச் சட்டகை
Sale of goods Act

பு.ப.கு.கா.ச. - புதுச்சேரி பயிரிடும் குடிவாரர் காப்பளிப்புச் சட்டகை
Pondicherry Cultivation Tenents Protection Act

பொ.தீ.ச. - பொதுவர் தீர்வுச் சட்டகை
Arbitration Act

பொ.வ.ச. - பொது வகைமுறைகள் சட்டகை
General clauses Act

ம.ஒ.ச. - மருந்துப்பொருள் - ஒப்பனைப்பொருள் சட்டகை
Drugs and Cosmatics Act

ம.சா.ச. 1951 - மக்கள் சார்பாண்மைச் சட்டகை 1951
Representation of the People Act 1951

மா.சி.நீ.ம.ச.	-	மாகாணச் சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் சட்டகை Presidency small causes courts Act
மா.த.நா.ச.	-	மாகாணத் தலைநகர் நொடிப்புநிலைச் சட்டகை Presidency-towns Insolvancy Act
மா.நி.சீ.ச.	-	மாஹே நிலச்சீர்திருத்தங்கள் சட்டகை Mahe Land Reforms Act
மா.மு.ச.	-	மாற்று முறையாவணச் சட்டகை Negotiable Instrument Act
வக்.ச.	-	வக்புச் சட்டகை Wakf Act
வ.க.சா.ச.	-	வங்கியர் கணக்கேடு சான்றுச் சட்டகை Bankers Book Evidence Act
வ.ச.	-	வழக்குரைஞர்கள் சட்டகை Advocates Act
வ.தொ.நி.ச.	-	வங்கித்தொழில் நிறுமச் சட்டகை Banking Company Act
வா.ப.ச.	-	வான்படைச் சட்டகை Air Force Act
வா.வ.கு.ச.	-	வாணிக வர்த்தகக் குறிகள் சட்டகை Trade and Merchandise Marks Act
வ.வ.ச.	-	வருமான வரிச் சட்டகை Income Tax Act
வி.ச.	-	வித்துகள் சட்டகை Seeds Act
வெ.பொ.ச.	-	வெடி பொருள்கள் சட்டகை Explosives Act
வை.கா.க.ச.	-	வைப்புக் காப்பீட்டுக் கழகச் சட்டகை Deposit Insurance Corporation Act

***

அகநிலைச் சான்று *பெயர்*

வேறு ஆதாரத் தேவையின்றி ஓர் ஆவணத்தின் வாசகத்திலிருந்தே பெறப்படும் ஆதாரம் (*ச.சொ.* 1983); Intrinsic Evidence.

அச்சமூட்டும்வகையில் *வினையடை*

சட்டத்திற்கு முரணாகப் பேரச்சத்தை உண்டாக்கும் முறையில் (*ச.சொ.*1983); In terrorem.

அச்சாரம் *பெயர்*

ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் சார்பினர்கள் மெய்யான அக்கறையுள்ளவர்கள் என்பதற்கு அடையாளமாக, ஒப்பந்தம் பெறுபவர் ஒப்பந்தம் தருபவருக்குப் பெயரளவில் கொடுப்பதும், ஒப்பந்தம் பெறுபவர் செயலாற்றத் தவறுகையில் இழப்பதுமான தொகை. *வாங்குபவர் அச்சாரத்தை அல்லது சொத்தின் விலையை விற்பவரிடம் செலுத்துகிறார்* (*பி*.55(6) (ஆ), *சொ.மா.ச.*); Earnest money.

அச்சுறுத்தல் *பெயர்*

சட்டப்படி செய்யக் கட்டுப்பட்டிராததைச் செய்யும்படி அல்லது சட்டப்படி செய்யவேண்டியதைச் செய்யாதிருக்கும்படி ஒருவரைக் கட்டாயப்படுத்தும் நோக்கத்துடன், அவருடைய உடலுக்கோ புகழுக்கோ தீங்கு விளைவிப்பதாக மிரட்டுதல். *கேடு இழைப்பதான அச்சுறுத்தல்* (*பி*.503, *இ.த.தொ.ச.*); Intimidation.

அச்சுறுத்திப்பறித்தல் *பெயர்*

ஒருவருக்கு அல்லது அவர் அக்கறைகொண்டுள்ள மற்றொருவருக்குத் தீங்குசெய்வதாக மிரட்டுவதன்மூலம், ஒரு சொத்தையோ பெறுமதியாவணத்தையோ, பெறுமதியாவணமாக மாற்றக்கூடியதும் கையொப்பம் அல்லது முத்திரை இடப்பட்டதுமான வேறொன்றையோ மற்றொருவரிடம் ஒப்படைக்கும்படி நேர்மையற்ற முறையில் தூண்டுதல். *பணம் தரவில்லை என்றால் அவதூறான பழிப்புரையை வெளியிடுவதாகக் கூறும் 'அ', அச்சுறுத்திப்பறித்தலை செய்தவராகிறார்* (*பி*.383, *இ.த.தொ.ச.*); Extortion.

அசையாச் சொத்து *பெயர்*

நிலமும், வெட்டுமரம், பயிர், புல் நிலத்தில் பதிந்தும் அல்லது இணைந்தும் உள்ள பருப்பொருள் உடைமை (*பி*.3, *சொ.மா.ச.*); Immovable property.

அசையும் சொத்து *பெயர்*

நிலத்தையும், நிலத்தில் இணைந்தோ பிணைந்தோ உள்ள பொருள்களையும் தவிரப் பிறவகைப் பருப்பொருள் உடைமை. *அசையும் சொத்து ஒவ்வொரு வகைப் பருப்பொருளையும் உள்ளடக்கும்* (*பி*.22, *இ.த.தொ.ச.*); Movable property.

அசைவியல் சொத்து *பெயர்*

காண்க: அசையும் சொத்து.

அஞ்சல் அலுவலகம் *பெயர்*

அஞ்சல் நிலைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் வீடு, கட்டிடம், அறை, ஊர்தி அல்லது இடம் மற்றும் அஞ்சல் உருப்படிகளைப் பெறுவதற்காக வகைசெய்யப்பட்ட அஞ்சல் பெட்டி (*பி*.2 (ஏ) *இ.அ.ச.*); Post Office.

அஞ்சல் உருப்படி *பெயர்*

(அஞ்சலட்டையாகவோ பதிவுற்ற செய்தித்தாள் என அஞ்சல் வழி அனுப்பிவைக்கத்தக்கதாகவோ இல்லாமல்) அஞ்சல்வழி அனுப்பிவைக்கத்தக்கதாகவும் அனுப்பிவைப்பதற்காக அஞ்சல் கட்டணம் விதிக்கத்தக்கதாகவும் உள்ள கடிதம், கடித அட்டை, புத்தகம், மாதிரிப் படிவம், மாதிரிச் சிப்பக்கட்டு, சிப்பப் பொட்டலம், வேறுபொருள் அல்லது உருப்படி; பண அஞ்சல், தொலை ஒலிப்பதிவு, கம்பிச்செய்தி. (*பி*.2 (இ) இ.*உ.வ.ச*.); Postal article.

அஞ்சல் வில்லை *பெயர்*

அஞ்சல் உருப்படிகளைப் பொறுத்துச் செலுத்தத்தக்க அஞ்சல்கட்டணம், பிற கட்டணங்கள் அல்லது தொகைகளைக் குறிப்பதற்காக மைய அரசாங்கத்தால் வகை செய்யப்பட்டுள்ள அஞ்சல் முத்திரை; ஒட்டக்கூடிய அஞ்சல் தலைகள், அஞ்சல் உறை, மேலுறை, அஞ்சலட்டை அல்லது பிற உருப்படி மீது அச்சிட்ட, பொறித்த, பதிவுருவாக்கிய அல்லது பிறவாறு சுட்டிக்குறித்த அஞ்சல் தலைகள் (*பி*.2 (*எ*) இ.*அ.ச*.); Postal Stamp.

அஞ்சியொளி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீதியக்கட்டளையைத் தவிர்க்கவோ, சிறைப்படுவதிலிருந்து தப்பிக்கவோ, நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிலிருந்து மறைந்து கொள்ளுதல்; தலைமறைவாகுதல். *எச்சரிக்கைக் கடிதம் வந்தபின்பு 'அ' அஞ்சியொளிந்து கொண்டார்* (*பி*.8.*விளக்*. (*ஏ*), இ.*சா.ச*.); To abscond.

அஞ்சியொளிதல் *பெயர்*

* ஒருவர் தமது உறைவிடத்திலோ வெளியிடத்திலோ பதுங்கியிருத்தல் (AIR.1956 Raj. 126); Absconding, abscondence.

அஞ்சியொளியுநர் *பெயர்*

நீதிமன்றப் பிடியாணையின் நிறைவேற்றத்தைத் தவிர்க்கும் பொருட்டு மறைந்துவாழ்பவர். *அஞ்சியொளியுநர் பற்றிய வெளிப்படை அறிவிப்பு* (*பி*.82, *கு.ந.தொ.ச*.); Absconder.

அட்டவணை *பெயர்*

ஒரு குறித்தவகைக் கோப்புக்கு இணங்க, வரிசைப்படுத்தப்பெற்ற உண்மைவிவரங்கள், இலக்கங்கள் முதலியவற்றின் ஒழுங்குமுறைப் பட்டியல் (*பி.உ*.(*ஊஊ*), *ம.சா.ச*.1950); Table.

அடகு *பெயர்*

கடனை அடைப்பதற்கோ உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கோ பிணையமாகப் பண்டத்தை ஒப்படைக்கும் செயல் (*பி*.172, இ.*ஒ.ச*.); Pledge.

அடகு வாணிகர் *பெயர்*

பொருளை அடகு முறையில் பெற்றுக்கொண்டு வட்டிக்குப் பணததைக் கடன்கொடுப்பவர். *பொருளை ஒப்படையம் பெறுபவர் அடகு வாணிகர் எனப்படுவார்* (*பி*.172, இ.*ஒ.ச*.); Pawn broker.

அடிப்படை உரிமைகள் *பெயர்*

குடிமக்கள் தன்னியல்புடன் துய்க்கும் வகையில் அரசமைப்பால் பொறுப்புறுதியளிக்கப்படும் குறிப்பிட்ட சில நலன்கள். *ஆளின் உயிருக்கும் தன்னுரிமைக்கும் காப்பளிப்பு, இந்தியக் குடிமக்கள் அமைதியாகக் கூடுதல், ஆட்சிப்பகுதி எங்கும் சென்றுவருதல், குடியிருத்தல், சங்கங்கள் அமைத்தல், விரும்பிய பணித்தொழில் பயிலுதல், பேச்சு, சமயம், பண்பாடு,*

கல்வி, சட்டத்தின்முன் சமநிலை, பிற்பட்ட வகுப்பினர் பட்டியல் குலத்தினர், பழங்குடியினர், பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கான சிறப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கான உரிமைப்பேறு (= சுதந்திரம்); சமயம், இனம், குலம், பாலினம், பிறப்பிடம் காரணமாக எவருக்கும் எதிராக வேற்றுமை காட்டுதல், பொது இடங்களில் நுழைந்து பயன்கொள்வதைத் தடுத்தல், தீண்டாமை, சுரண்டப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான காப்பளிப்பு உரிமைகள் (பகுதி III, *உறுப்*.12-30, *இ.அ.*); Fundamental rights.

அடிப்படைக் கடமைகள் *பெயர்*

குடிமக்கள் போற்றி ஒழுகவேண்டும் என அரசமைப்பு வலியுறுத்தும் குறிப்பிட்ட சில கடப்பாடுகள். *இந்தியாவின் அரசமைப்பு, நாட்டுக்கொடி, நாட்டுப்பண், நாட்டுப்பாதுகாப்பு, விடுதலைப்போரின் உயர் குறிக்கோள்கள், இறையாண்மை, வேற்றுமையில் ஒற்றுமை, கூட்டுப் பண்பாட்டின் செழுமையான மரபுரிமை, நீர்நிலைகள், விலங்குகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல், உயிரினங்கள்பால் இரக்கம், அறிவியல் ஆராய்ச்சி, சீர்திருத்தமனப்பாங்கு, மனிதநேயக்கோட்பாடு, பொதுநலக்காப்பு, நாட்டு முன்னேற்றங்கருதிப் பாடுபடுதல், பங்குகொள்ளுதல், சமய, மொழி, வட்டார, இனப்பிரிவு வேற்றுமைகளைக் கடந்த ஒத்திசைவு, பொதுமை உடன்பிறப்பு உணர்வு ஆகியவற்றைப் போற்றிக்காத்து வளர்த்துப் பின்பற்றுதல். மேலும் பெண்களின் மாண்பினைக் குன்றச்செய்யும் பழக்கத்தையும், வன்முறையையும் அறவே விட்டொழித்தல் (உறுப்*.51 *அ*, *இ.அ.*); Fundamental duties.

அடிவரம்பு விலை *பெயர்*

ஏலத்தில் விற்பனையாக அமைவதற்கு வேண்டப்படும் கீழ்வரை விலைத்தொகை (*பி*.64(5), *ச. வி.ச.*); Upset price.

அடுத்த நண்பர் *பெயர்*

1. இளவர் அல்லது சட்டத்தகுதிறமற்றவர் நலனுக்காக நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட ஒருவர் (*ச.சொ*.1979); Next friend.

2. தமது காப்பளிப்பில் உள்ள குழந்தையின் அல்லது மனநலமற்றவரின் சார்பில் வழக்கையோ சட்ட நடவடிக்கையையோ தொடர்கிற முதிர்வர்; நெருங்கிய நண்பர் (*கட்*.32. *வி*.1, *உ.ந.தொ.ச.*); Next friend.

அடைகடன் *பெயர்*

இப்போதுள்ள கடன்பொறுப்புக் காரணமாக, உடனடியாகக் கொடுக்கவேண்டிய அல்லது எதிர்காலத்தில் கொடுக்கத்தக்கதான பணத்தொகை (Lindsay. L.J. in Webb V Stenton (1883) 11 E.B.D. 518); Debt.

அடைசொத்து *பெயர்*

1. * ஒருவர் பெறுவதற்குரிய பெருநிலக்கிழாரின் அல்லது நிலக்குடிவாரரின் உரிமையாகவோ இறையிலியாகவோ உள்ள பண்ணை நிலங்கள் (Lindsay. L.J. in Webb V Stenton (1883) 11 E.B.D. 518); Estate.

2. * பொதுநிலையில் ஒருவர் அடையக்கூடிய அனைத்து உடைமையைக் குறித்தாலும், சிறப்புநிலையில் சொத்தாட்சியரால், நிறைவேற்றாளரால் அல்லது நீதிமன்றத்தால் ஆட்சியம்செய்யப்படுகிற இறந்தவர், காப்பிலுள்ளவர் அல்லது மனநலமற்றவரின் சொத்துடைமை (*ஜால்கவுர் எதிர் பாலாசிங்* AIR 1961 Punj. 391); Estate.

அடைசொத்து வரி *பெயர்*

ஒருவரின் இறப்பின்மேல் இறங்குரிமையாகிற அனைத்துச்சொத்தின் மூலதனப் பெறுமானத்தின்மீது செலுத்தத்தக்க வரி (*பி*.2(7), *அ.சொ.வ.ச.*); Estate duty.

அடைதொகை *பெயர்*

விற்பனை; முதலீடு; கொள்முதல்; அலுவல்தொழில் போன்ற ஏதோ ஒன்றின்மூலம் பெறப்படும் வருமானம். *வரி அல்லது தீர்வையின் அடைதொகை* (*உறுப்*.274(2), *இ.அ.*); Proceeds.

அடைநிலம் *பெயர்*

கடல், ஆறு முதலியவற்றின் நீரோட்டம் மண்ணையும் மணலையும் அடித்துச்சென்று நிலத்தில் குவிப்பதால் உண்டாகும் சேர்மானம். *ஆற்றின் மாறுபட்ட போக்கினால் அடைநிலம் உண்டாகிறது* (*பி*.70. *விளக்*.(*அ*), *சொ.மா.ச.*); Alluvion.

அடைபயன் எதிருரிமை *பெயர்*

மேல்வாரம் இவ்வளவு என்பது பற்றிய ஒப்பந்தம் இல்லாநிலையில், நிலவுரிமையாளரின் இசைவுடன் நிலத்தின் நன்மையைத் துய்ப்பவரிடமிருந்து பெறத்தக்க தொகை குறித்த கோரிக்கை (*பி*.7(2), *பொ.வ.* (*அ.கு.வெ*)*ச.*); Claim for use and occupation.

அடைமான ஒப்பாவணம் *பெயர்*

பெற்ற கடனுக்காகப் பிணையம்வைத்த அசையாச் சொத்தின் நலனை, உரியவாறு மாற்றல்செய்யும் முறையாவணம். *நலனை மாற்றிக்கொடுக்கும் ஆவணம் அடைமான ஒப்பாவணம் என்று கூறப்படும்* (*பி*.58(*அ*), *சொ.மா.ச*); Mortgage deed.

அடைமானப் பங்களிப்பு *பெயர்*

ஓர் அடைமானச் சொத்து இருவருக்கோ மேற்பட்டவருக்கோ சொந்தமாக இருக்கையில் அடைமானம் வைத்த அன்று ஒவ்வொருவருக்கும் சொத்தில் உள்ள பங்கின் அளவுக்குக் கடனை அடைக்க வேண்டும் என்பதான கோட்பாடு (*பி*.82. *சொ.மா.ச.*); Contribution, (Doctrine of).

அடைமானப் பணம் *பெயர்*

குறித்தவகை அசையாச் சொத்தினைப் பிணையமாகவைத்துப் பெற்ற கடனுக்காக, அப்போதைக்கு வரவேண்டிய முதலும் வட்டியும் சேர்ந்த தொகை. *முதல் தொகை வட்டியுடன் சேர்த்து அடைமானப் பணம் எனப்படும்* (*பி*.58 (*அ*), *சொ.மா.ச.*); Mortgage money.

அடைமானம் *பெயர்*

கடனாகக் கொடுத்த அல்லது கொடுபடவேண்டிய பணத்தைத் திரும்பப்பெறவோ, இப்போதைய அல்லது எதிர்காலத்தைய அடைகடனுக்கோ, பணக்கடப்பாட்டினைத் தோற்றுவிக்கும் ஒரு பணிக்கடமையை நிறைவேற்றவோ காப்புறுதிப்பிணையமாகக் குறித்தவகை அசையாச்சொத்தின் நலனை மாற்றல்செய்யும் செயல். *அடைமானம் என்பது அசையாச்சொத்தின் நலனை மாற்றல்செய்வதாகும்* (*பி*.58 (*அ*), *சொ.மா.ச.*); Mortgage.

அடைமானம்பெறுநர் *பெயர்*

கடனடைக்கவோ பணிக்கடமை நிறைவேற்றவோ பிணையமாக வைக்கப்பட்ட சொத்தின் நலனை மாற்றல்பெறுபவர் (*பி*.58. (*அ*), *சொ.மா.ச.*); Mortgagee.

அடைமானம்வைக்குநர் *பெயர்*

கடனடைக்கவோ பணிக்கடமை நிறைவேற்றவோ பிணையமாகத் தமது சொத்தின் நலனை மற்றொருவருக்கு மாற்றல்செய்பவர் (*பி.*58 (*அ*), *சொ.மா.ச.*); Mortgagor.

அடைமான மீட்பு *பெயர்*

பொருள்மீது வாங்கிய கடன் தொகையை வட்டியுடன் செலுத்திச் சொத்தினைத் திரும்பப்பெறுகை. *அடைமான மீட்புச் செலவீடுகள்* (*உறுப்.* 112(3) (*இ*), *இ.அ.*); Redemption of mortgage.

அடைமான முன்னொட்டு *பெயர்*

மூன்றாவதான அல்லது அதற்கும் பிந்திய அடைமானத்தை முதல் அடைமானத்துடன் இணைப்பதன்மூலம் இடைஅடைமானங்கள்மீது முன்னுரிமை பெறுகை. *அடைமான முன்னொட்டுக் கோட்பாடு* (*பி.*93 (1), *சொ.மா.ச.*); Tacking.

அடைமான முன்னொட்டுத் தடை *பெயர்*

ஒரே சொத்து பல அடைமானங்களுக்கு உட்பட்டிருக்கும் நிலையில், பின் அடைமானம் பெற்றவர் இடை அடைமானத்தை விட்டுவிட்டு முன் அடைமானம் ஒன்றை மீட்டு அதன் உரிமையைப் பெற்றுப் பின்னுள்ளதை இணைத்தாலும், இடை அடைமானத்தைவிட முந்துரிமை பெறுவதைத் தடுக்கும் சட்டச்செயல். *முன்னொட்டுத் தடை* (*பி.*93, *சொ.மா.ச.*); Prohibition of tacking.

அடைமான வரிசையுரிமை *பெயர்*

ஒருவருக்கு இரண்டு சொத்துக்களின்மீதும், மற்றொருவருக்கு அந்த இரண்டில் ஒரு சொத்தின்மீதும் அடைமானப் பற்றுரிமை உள்ள நிலையில், முதலில் அடைமானம் பெற்றவர் தமது கடனைத் தண்டல்செய்யும் பொருட்டு வழக்கு நடவடிக்கை எடுக்க முற்படும்போது, இரண்டாம் நிலையில் அடைமானம் பெற்றவர் தம்மிடம் அடைமானம் வைக்கப்பட்ட சொத்தை விட்டுவிட்டு மற்ற சொத்தின்மீது நடவடிக்கை எடுக்கக் கோரும் உரிமை (*பி.*81, *சொ.மா.ச.*); Marshalling (of mortgatges).

அடையாள ஒப்படைப்பு *பெயர்*

ஒரு பொருளின் உடைமையை மாற்றல்செய்யாமல் அதற்கு அறிகுறியாக இலச்சினை ஒன்றை அளிப்பது (*ச.சொ.*1983); Symbolical delivery.

அடையாளங்காட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

குறிப்பிட்ட ஆளையோ, பொருளையோ சுட்டிக்காட்டி ஐயப்பாட்டை அகற்றுதல். *பண்டங்களை அடையாளங்காட்டுதல்* (*இ.ப.*1.*உறுப்.*III 3(*அ*), *இ.க.ப.கொ.ச.*); Identification.

அடைவு *பெயர்*

ஒருவரைச் சென்றுசேர்கிற அல்லது உறுத்தஞ்செய்கிற செயல், பொருளியம் அல்லது முறை. *தீர்வையின் அடைவு* (*பி.*19(1), *அ.சொ.தீ.ச.*); Incidence.

அணிவகுத்துநிறு-த்தல் *செயப்படுபொருள் குன்றாவினை*

தேவைப்படும் இடங்களில் படைவீரர்களைப் பரவலாக வரிசைப்படுத்தல் (*ச.சொ.* 1983); To deploy.

அணுக்கம் *பெயர்*

ஆண் பெண் உடலுறவு கொள்ளும் வாய்ப்பு. *திருமணச் சார்பினர் (= மணமக்கள்) தம்முள் அணுக்கம் கொள்ளவில்லை* (*பி.*112, *இ.ஒ.ச.*); Access.

அணுக்கமின்மை *பெயர்*

கணவன் மனைவியருக்கு இடையே மெய்யுறுபுணர்ச்சி (= உடலுறவு) நிகழும் வாய்ப்பு இல்லாநிலை (*ச.சொ.* 1983); Non-access.

அத்துமீறல் *பெயர்*

சட்டத்தின் வகைமுறைக்கு முரணான நடப்பதும், பிறருடைய எல்லைக்குள் அவரது இசைவின்றிப் புகுவதுமான செயல். *கால்நடை அத்துமீறல் தடுப்பு* (*இ.ப.* VII-II- 6, *இ.அ.*); Trespass.

அத்துமீறுபவர் *பெயர்*

ஓர் உடைமையாளருக்கு அச்சம், அவமதிப்பு, தொல்லை விளைவிக்கும் குற்றமனத்துடன் எல்லை கடந்து அவரது சொத்து எல்லைக்குள் நுழைபவர் அல்லது சட்டமுறைப்படி நுழைந்தாலும் குற்றமிழைக்கும் உட்கருத்துடன் முறைதவறி அங்கு நீடித்துத் தங்கியிருப்பவர். *கப்பலுக்குள் அத்துமீறுபவரை வெளியேற்றும் உரிமைபெற்றவர்* (*பி.*443, *இ.த.தொ.ச.*); Trespasser.

அதற்கென அமைந்த *பெயரடை*

தனித்துக் குறிப்பிடத்தக்க நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட, நிறுவப்பட்ட, செயலாற்றுகிற அல்லது அதனுடன் தொடர்புடைய. *நீதிபதிகளின் கோரெண் அமையவில்லை என்றால்... அதற்கென அமைந்த நீதிபதியாக வருகை தருமாறு வேண்டிக்கொள்ளலாம்* (*உறுப்.* 127(1), *இ.அ.*); Adhoc.

அதனினும் *வினையடை*

முடிவுசெய்தற்குரிய வலுவான காரணத்தினால் (*ச.சொ.* 1983); A Fortiori.

அதாவது *சொற்றொடர்*

விளக்கப்பட வேண்டிய அல்லது வரையறை செய்யப்பட வேண்டிய பொருளைத் தெளிவுபடுத்தவும் நிலையுறுத்தவும் விளக்கக் காட்டில் பயன்படுத்தப்படும் சொல்.

* ஐயப்பாட்டை அகற்றுவதற்கான ஒரு விதி என அமையாமல், பொருளை விளக்குவதற்காக எடுத்துக்காட்டில் பயன்படுத்தப்படும் சொல்லமைப்பு (*தமிழ்நாடு அரசு எதிர் பியாரிலால் மல்கோத்திரா* AIR 1976 SC 800); That is to say.

அதிகாரஅமைப்பு *பெயர்*

சட்டப்படி அதிகாரங்களைச் செலுத்தும் உரிமை கொண்டுள்ள ஓர் அலுவலர் அல்லது குழுமம். *பிற அதிகாரஅமைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கும்* (*உறுப்.* 12, *இ.அ.*); Authority.

அதிகாரஆயம் *பெயர்*

காண்க: அதிகார அமைப்பு.

அதிகாரத்திற்குட்பட்ட *பெயரடை*

சட்டத்தின் செயலுரிமைக்குள்ளாக அமைந்த (*ச.சொ.*1983); Intra vires.

அதிகாரப் போர்வைச் செயல் *பெயர்*

ஓர் அலுவலர் தமது பதவியின் பொய்த்தோற்றச் செயலுரிமையைப் பயன்படுத்திச் செய்த சட்டமுரண் செய்கை. *அதிகாரப் போர்வைச் செயல் எதையும் செய்பவர்* (*பி.*170, *இ.த.தொ.ச.*); Act done under colour of office.

அதிகாரப் போலிச்செயல் *பெயர்*

உள்ளபடியே தமக்கு இல்லாத செயலுரிமையை இருப்பது போல் உருவாக்கிப் பிறர் அதை நம்புமாறு நடந்துகொள்ளுதல் (*ச.சொ.*1983); Holding out.

அதிகாரம் *பெயர்*

ஒருவரின் உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள், சட்ட உறவுகள் முதலியவற்றை விதிமுறைப்படி மாற்றுகைசெய்வதற்காக அலுவலர் ஒருவருக்குச் சட்டம் வழங்கும் செயல்திறன். *அவைத்தலைவரின் கடமைகளைப் புரிவதற்கான அதிகாரம்* (*உறுப்*. 91, *இ.அ.*); Power.

அதிகாரமளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை.*

செயலாற்றுகிற, ஏவல் செய்கிற அல்லது சட்டமுறையான உரிமையை வழங்குதல். *தடுப்புக்காவல் சட்டம் மூன்று திங்களுக்குமேல் காவலில் வைக்க அதிகாரமளிக்கக் கூடாது* (*உறுப்*. 22(4), *இ.அ.*); To authorise.

அதிகாரமுறை *பெயரடை*

அரசு அலுவல்சார்ந்த. *அதிகாரமுறை அரசிதழ்* (*உறுப்*.366, *இ.அ.*); Official.

அதிகாரவரம்பிகந்து *வினையடை*

* சட்டம் அளிக்கும் செயலுரிமையின் எல்லையை மீறியும், சட்டமியற்றும் அதிகாரத்திற்கு மிகையாகவும் செய்து (*ஜனார்த்தனா எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1970 *மைசூர்* 171); Ultra Vires.

அதிகாரவரம்பு *பெயர்*

சட்டமுறைப்படி அமைந்த செயலுரிமையின் எல்லை. *அந்த மாநிலம் தொடர்பாக அதிகாரவரம்பு செலுத்தும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி* (*உறுப்*.159, *இ.அ.*); Jurisdiction.

அதிகாரவுரிமை *பெயர்*

அலுவல்முறை அல்லது நீதிமுறைக் கட்டளையால் வழங்கப்படும் ஆணை செலுத்துநிலை. *சட்டப்படியான அதிகாரவுரிமை* (*உறுப்*.40, *இ.அ.*); Authority.

அதிகாரி *பெயர்*

ஆணையுரிமை அளிக்கப்பெற்ற அலுவலர். *பொறுப்பிலுள்ள அதிகாரி* (*பி*.40(1), *இ. அ.பொ.ச.*); Authority.

அப்போதைக்கு *சொற்றொடர்*

வேறோர் ஏற்பாடு செய்யப்படும் வரையில்; தற்போதைக்கு. *அப்போதைக்குப் பகைவராக இருக்கும் ஒரு வெளிநாட்டவர்* (*உறுப்*. 22(3)(*அ*), *இ.அ.*); For the time being.

அமர்த்துக்கட்டணம் *பெயர்*

வழக்கைத் தொடுக்கவோ எதிர்வழக்காடவோ அறிவுரையளிக்கவோ வழக்குரைஞருக்குக் கொடுக்கப்படும் பணியூதியம் (*பி*.543(1) (*ஆ*), *நி.ச.*); Retainer.

அமர்த்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

காண்க : பணியமர்த்துதல்.

அமர்வு *பெயர்*

அதிகாரவுரிமைப்படி அலுவல்தொழிலை நடத்துவதற்காக வருகைதந்து தங்கள் இருக்கைகளில் உள்ள அலுவலர் குழுமம் அல்லது கூட்டம். *நீதிமன்ற அமர்வு* (*உறுப்*.127(1), இ.*அ*.); Sitting.

அமர்வுக்காலம் *பெயர்*

அரசின் தலைவர் அழைப்பாணையின்படி கூடும் சட்டமன்றத்தின் முதல் கூட்டம் தொடங்கி அதைக் கலைக்காது ஒத்திவைத்தல் அல்லது கலைத்துவிடுதல்வரை உள்ள காலஅளவு; Session (Legislature or Parliament).

அமர்வுநிலைத் தூதர் *பெயர்*

தனது நாட்டரசினால் தூதர் என அமர்த்தப்பட்டும் பணியேற்கும் நாட்டின் தலைவரால் இன்னும் வரவேற்கப்படாதவர் (*ச.சொ*.1983); Ambassador Designate.

அமர்வு நீதிமன்றம் *பெயர்*

பொதுவாகக் குற்றவியல் வழக்காய்வுக்கெனப் பணியமரும் நீதிமன்றம். ஒவ்வொரு *மாநிலத்திலும் குற்றவழக்கு நீதிமன்ற வகைகள் இருத்தல் வேண்டும். அதாவது* (i) *அமர்வு நீதிமன்றங்கள்* (*பி*.6, *கு.ந.தொ.ச*.); Sessions (court).

அமளி *பெயர்*

இருவரோ மேற்பட்டவரோ தமக்குள் பொதுவிடத்தில் சச்சரவிடுவதால் உண்டாகும் பொது அமைதிக்குலைவு. *அமளி, சச்சரவு ஒன்றை அடக்க முயற்சி செய்கையில் பொது ஊழியரைத் தாக்குதல்* (*பி*.152, *இ.த.தொ.ச*.); Affray.

அமீனா *பெயர்*

உரிமையியல் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையையோ பிடியாணையையோ நிறைவேற்றும் பொறுப்பு அலுவலர் (*ச.சொ*.1983); Amin.

அமைச்சகம் *பெயர்*

நாட்டு அலுவல் நடப்பை மேலாண்மைசெய்வதும், ஓர் அமைச்சரின் தலைமையின் கீழ் இயங்குவதுமான அரசு அலுவலகம். *சட்டம் மற்றும் நிதி அமைச்சகம்* (*முகப்பு*, இ.*அ*.); Ministry.

அமைச்சர் *பெயர்*

அரசு அலுவல் துறையின் பொறுப்புமிக்க தலைவர்; மந்திரி. *அமைச்சர்கள் குறித்த வகைமுறைகள்* (*உறுப்*.75, இ.*அ*.); Minister.

அமைச்சரவை *பெயர்*

ஒரு நாட்டு அரசின் தலைவருக்கு அறிவுரையளிக்கும் அமைச்சர்களின் குழு. *குடியரசுத்தலைவர் அமைச்சரவையின் அறிவுரைக்கு இணங்கச் செயலாற்ற வேண்டும்* (*உறுப்*.74(1), இ.*அ*.); Council of ministers.

அமைச்சராயம் *பெயர்*

தலைமை அமைச்சரும் கொள்கை முடிவுசெய்யும் முதுநிலை அமைச்சர்களும் அடங்கிய அமைச்சர்குழு. *ஒரு சாற்றாணை பிறப்பிப்பதற்கான அமைச்சராயத்தின் முடிபு குடியரசுத்தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது* (*உறுப்*.352(3), இ.*அ*.); Cabinet.

அமைதி *பெயர்*

பூசல், குழப்பம் நீங்கியநிலை. *பன்னாட்டிடையே அமைதியையும் ஏமக்காப்பையும் பேணிவளர்த்தல் (உறுப்.57, அ, இ.அ.)*; Peace.

அமைதிக்காப்பு நீதிபதி *பெயர்*

குறிப்பிட்ட அதிகாரவரம்புக்குள் பொது ஒழுங்கைப் பேணுவதற்கென அமர்த்தப்பட்ட நீதிநடுவர் (*பி*.117 (இ), *மா.த.நொ.ச.*); Justice of the peace.

அமைதிக் குலைவு *பெயர்*

சட்டத்தால் பொறுப்புறுதியளிக்கப்பெற்ற பூசலற்றநிலை, ஒழுங்குநிலவுகை, காப்புறுதி ஆகியவற்றை அழிக்கும் செய்கை. *ஒவ்வொருவரும் அமைதிக்குலைவைத் தடுக்கவோ ஒடுக்கவோ காவல் அலுவலருக்கு உதவுதல் வேண்டும் (பி.37 (ஆ), கு.ந.தொ.ச.)*; Breach of the peace.

அமைப்புமுறை *பெயர்*

உறுப்புகள், பகுதிகள், பொருளியங்கள் முதலியவற்றின் முறைப்படியான அல்லது ஒருங்கிணைந்த தொகுப்பு. *பொருளாதார அமைப்புமுறையின் செயற்பாடு (உறுப்.38, (இ), இ.அ.)*; System.

அமைவனம் *பெயர்*

ஓர் அலுவல்தொழில் அல்லது அரசுத்துறை போன்று குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்படும் மக்கள் அமைப்பு, ஒழுங்கமைவனம். *உழைப்பாளர்களுக்கு வேலை, உயிர்வாழ் ஊதியம் பண்பார்ந்த வாழ்க்கைத்தரம், ஓய்வு நுகர்ச்சி முதலிய வாய்ப்புகளைச் சட்டமியற்றுதல் அல்லது அமைவனம் வாயிலாகக் கிடைக்க அரசு பெருமுயற்சி செய்தல் வேண்டும் (உறுப். 43, இ.அ.)*; Organization.

அயல்துணைப்புணர்ச்சி *பெயர்*

* அயலவர் வாழ்க்கைத்துணையுடன் உடல் உறவு கொள்ளுதல் (AIR 1970 Mad.104); Adultry.

அயல் நாணயமாற்று *பெயர்*

அயல்நாட்டுச் செலாவணியில் உள்ள அனைத்துவகை வைப்பீடுகள், காசோலைகள், மாற்றுச்சீட்டுகள் முதலியவை உள்ளடங்கிய வெளிநாட்டுப் பணம் (*பி*.2 (*ஈ*), *அ.நா.ஒ.ச.*); Foreign exchange.

அயல்புணர்பவள் *பெயர்*

மற்றொருத்தியின் கணவனுடன், அவன் மனைவியின் இசைவின்றி உடலுறவு கொள்ளும் ஒருத்தி (*ச.ஆ.சொ.க.*); Adultress.

அயல்புணர்பவன் *பெயர்*

மற்றொருவனின் மனைவியுடன், அவள் கணவனின் இசைவின்றி உடலுறவு கொள்ளும் ஒருவன் (*பி*.4 (2) (*அ*), *சி.தி.ச.*); Adulterer.

அயல்நாட்டவர் *பெயர்*

ஒரு நாட்டுச் சட்டத்தின்கீழ் அந்த நாட்டுக் குடிமகனாக இல்லாத வெளிநாட்டுக்காரர் (இ.*ப*. VII-I-17, இ.*அ*.); Alien.

அயல்நாட்டிடம் ஒப்புவிப்பு *பெயர்*

குற்றம் புரிந்து தப்பிவந்த ஒருவரை அக்குற்றம் நிகழ்ந்த நாட்டிடம் வழக்காய்வுக்காகக் கையடைவு செய்வது (இ.*ப*. VII-i-18, இ.*அ*.); Extradition.

அயல் நாட்டுத் தீர்ப்பு *பெயர்*

ஓர் அயல்நாட்டு நீதிமன்றம் வழங்கிய முடிவு. *ஓர் அயல்தீர்ப்பு எப்போது அறுதியானதாக ஆகும்* (*பி*.13, *உ.ந.தொ.ச*.); Foreign judgement.

அயல் பகைவர் *பெயர்*

பகைகொண்ட நாட்டுரிமை பெற்றுள்ள அயலவர், அயல் நிறுமம் அல்லது கழகம். *அரசு இசைவளிப்பு இன்றி இந்தியாவில் குடியிருந்துவரும் ஓர் அயல்பகைவர் வழக்கிடுதல் இயலாது* (*பி*.83, *உ.ந.தொ.ச*.); Alien enemy.

அயலுரிமையாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு சொத்தையோ நலனையோ மற்றவரின் உடைமையுரிமைக்கு மாற்றல்செய்தல் (*பி*.64, *உ.ந.தொ.ச*.); To alienate.

அரசடைபொருள் *பெயர்*

ஒருவர் தமக்குரியதை உரியவாறு பயன்படுத்தாததால் அல்லது தவறாகப் பயன்படுத்தியதால், அவருக்கு அதிலுள்ள உரிமை, நலன் அல்லது சிறப்புரிமை அற்றுப் போவதுடன், அது அரசுக்குச் சொந்தமாதல் (*உறுப்*.296, இ.*அ*.); Lapse.

அரசமைப்பு *பெயர்*

வரையறுக்கப்பெற்ற சட்டதிட்டங்களுக்கு இணங்க ஒரு நாட்டு அரசினை நிறுவும் முறை. *இந்திய அரசமைப்பு* (*தலைப்பு*, இ.*அ*.); Constitution.

அரசமைப்புக்கு முரணான *பெயரடை*

உரிமைகளை வழங்காத, கடமைகளைச் சுமத்தாத, காப்பளிப்பைக் கொடுக்காத நிலையில் உள்ள

* *சட்டத்தின் சிந்தனையில் அரசமைப்புக்கு முரணான செய்சட்டம், ஒரு போதும் இயற்றப்படாதிருந்ததைப் போன்று, செயற்பாடு அற்றதாகக் கருதப்படுகிறது* (*அப்துல்காதர் எதிர் மைசூர் அரசு* AIR 1951 Mys. 72); Un constitutional.

அரசமைப்புச் சட்டம் *பெயர்*

அரசின் அனைத்துச் சட்டங்களுக்கும் அடிப்படையாகவும், சட்டமன்றச் சட்டத்தின் செல்லுந்தன்மையைத் தீர்மானிக்கும் வகைமுறைகளைக் கொண்டதாகவும் உள்ள தாய்ச்சட்டம் (*ச.சொ*.1938); Constitutional law.

அரசமைப்புத் தீர்வழி *பெயர்*

அரசமைப்பினால் வழங்கப்பெற்ற உரிமைகளுக்கு ஊறுநேர்கையில், உச்சநீதிமன்றம் ஏவுரைகளையோ, ஆணைகளையோ, 'ஆளைக்கொணர்க', 'செய்க', 'செய்யற்க', 'தகுதியாது', 'ஆவணமனுப்புக' என்பனவற்றுள் உரியதொரு நீதிப்பேராணையையோ பிறப்பித்து, அந்த உரிமைகளைச் செயற்படும்படி செய்விக்கும் குறைதீருதவி. *அரசமைப்புத் தீர்வழிகளுக்கான உரிமை* (*உறுப்*.32, இ.*அ*.); Constitutional remedy.

அரசமைப்புப் பேரவை *பெயர்*

இறையாண்மையுள்ள ஒரு நாட்டின் அரசு முறையை உருவாக்குவதற்கென அமைந்த சட்டமன்றம். *நம்முடைய அரசமைப்புப் பேரவையில் இந்த அரசமைப்பை ஏற்றுச் சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம் (முகப்புரை, இ.அ.)*; Constituent assembly.

அரசாங்கம் *பெயர்*

ஆட்சியம் சட்டமன்றம் ஆகியவை அல்லது ஆட்சியம் மட்டும் அடங்கியுள்ள நாட்டை ஆளும் அதிகாரஅமைப்பு (*ச.சொ.*1983); Government.

அரசிதழ் *பெயர்*

அரசின் அறிவிக்கைகள், சாற்றுகைகள், ஆணைகள், விதிகள், அலுவலர் பணியமர்த்தம் முதலியவற்றைக் கொண்ட அரசினர் வெளியீடு. *ஒரு மாநிலத்தின் அதிகாரமுறை அரசிதழில் உள்ள ஓர் அறிவிக்கை (உறுப்*. 366 (19), *இ.அ.*); Gazette.

அரசினர் *பெயர்*

அரசினுடைய செயலாட்சித் துறையின் தலைமை அலுவலர்கள் (*ச.சொ.*1983); Principal Executive Officers of a State.

அரசு *பெயர்*

ஒரு நாடு ஆளுகைசெய்யப்படுவதற்குரிய அடிப்படை விதிகளும் கொள்கைகளும் அரசாங்கமும் அடங்கிய அரசியல் அமைப்புமுறை. *அரசு என்பது இந்தியாவின் அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும் மாநில அரசாங்கத்தையும் சட்டமன்றத்தையும் உள்ளடக்கும்* (*உறுப்*.12, *இ.அ.*); State.

அரசுக் கணக்காய்வுத் தலைவர் *பெயர்*

அரசின் நிதிகளைப் பொறுத்தமட்டில் தணிக்கைசெய்யும் முதன்மை அலுவலர் (*ச.சொ.*1968); Accountant General.

அரசுச் செயல் *பெயர்*

* அரசின் அனைத்துச் செயல்களையும் குறிக்காமல், சட்டத்தால் உருவாக்கப்பட்ட தனிவிலக்குரிமைகள், தடைகள், வழக்காய்வு செய்யலாகாது என நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுறை விளம்புரைகள் ஆகிய சிலவற்றைச் சுட்டும் செய்கை (*சவுராஷ்டிரா அரசு எதிர் ஹாஜி இஸ்மாயில்* 1960 SCR 537); Act of State.

அரசுத் தலைமை வழக்குரைஞர் *பெயர்*

குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்படுபவரும், தமக்குச் சுட்டியனுப்பப்படும் சட்டப் பொருட்பாடுகள் குறித்து இந்திய அரசுக்குக் கருத்துரை வழங்குபவரும், சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுபவரும், இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் வாதாடும் உரிமை பெற்றிருப்பவரும் ஆகிய மைய அரசின் முதன்மைச் சட்ட அறிவுரைஞர். *அமைச்சரும் இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞரும்.... உரிமையுடையவர் ஆவர்* (*உறுப்*.88, *இ.அ.*); Attorney General (of India).

அரசுப் பணியாளர் *பெயர்*

அரசு அதிகாரத்தின்படி பணியில் தொடர்ந்து வைத்துக்கொள்ளப்படும், நியமிக்கப்படும் அல்லது அமர்த்தப்படும் அலுவலர் அல்லது ஊழியர் (*பி*.3(14), *இ.த.தொ.ச*); Public servant.

அரசுப்பேரதிகாரம் *பெயர்*

அரசின் தலைவருக்குச் சட்டம் வழங்கும் தனிச்சிறப்பான அதிகாரவுரிமை (*ச.சொ.*1983); Prerogative.

அரசு முதன்மை வழக்குரைஞர் *பெயர்*

(இந்தியாவில்) ஒரு மாநில அரசின் முதன்மைச் சட்ட அலுவலர், *மாநில முதன்மை வழக்குரைஞர்* (*பி.* 92(1), *உ.ந.தொ.ச.*); Advocate General.

அரசுறுத்துச் சட்டம் *பெயர்*

இயற்கைச் சட்டம் எனப்படும் அறநெறித் தொகுப்பிலிருந்து தனிவேறானதும், இறையாண்மை அரசினால் நடைமுறைப்படுத்தப்படுவதுமான சட்டம் (*ச.சொ.*1983); Positive law.

அரசுறுபொருள் *பெயர்*

விருப்பாவணம் (=உயில்) எழுதாமலோ, வழிமுறையுரிமையர் அல்லது உரிமைகோருநர் இல்லாமலோ ஒருவர் இறந்துவிட்ட நிலையில், அரசாங்கத்தைச் சென்றடையும் சொத்து. *வழிமுறையுரிமையர் இன்மையால் அரசுறுபொருளாகவோ அரசடைபொருளாகவோ உரிமையிலிப் பொருளாகவோ சேர்ந்தடையும் சொத்து* (*உறுப்.* 296, *இ.அ.*); Escheat.

அரசெதிர்ப்புக் குற்றம் *பெயர்*

வாய்மொழி, எழுத்து, சைகை, காட்சிப்பொருள் மூலமாகவோ பிறவாறாகவோ அரசுக்கு எதிராக வெறுப்பு, இழிவு, பகை ஆகிய உணர்வுகளை அல்லது பற்றுறுதியின்மையை உருவாக்கும் செயல் (*பி.*124.*அ*, *இ.த.தொ.ச.*); Sedition.

அலுவல் *பெயர்*

அரசு, வாணிகம், பணித்தொழில் அல்லது பொதுத்துறையில் மேற்கொள்ளப்படும் தொழில்முறை நடவடிக்கை (*பி.*44 (*ஈ*), *இ.கூ.ச.*); Affair.

அலுவல்தொழில் *பெயர்*

1. * ஆதாயம் பெறும் நோக்குடன் ஒருவருடைய நேரம் கவனம் உழைப்பு ஆகியவற்றை ஈர்த்துக்கொள்ளும் ஒரு வாழ்க்கைத்தொழில் (*ஆந்திரப்பிரதேச அரசு எதிர் அப்துல் பக்கி* AIR 1965 SC 531)

2. * இன்ப விழைவு என்பதிலிருந்து தனிவேறுபட்ட துணிவுமுயற்சி (*செயலாளர், சென்னை ஜிம்கானா எதிர் மேலாண்மை* AIR 1968 SC 554)

3. * ஒற்றைச் செயலாக அமையாமல் தொடர்ந்து செய்யப்படும் வாணிக நடவடிக்கை (*ராமி பிரசாத் எதிர் அரசு* AIR 1967 Ori. 29)

** குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன், உண்மையான, பொருட்படுத்தத்தக்க, அமைப்புமுறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட செய்கைப்பாடே அலுவல்தொழில் எனப்படும் (நாரின் சுதேசி ஆலை எதிர் மிகை ஆதாய வரி ஆணையர்* AIR 1955 SC 176); Business.

அலுவல்வழி *பெயரடை*

ஒரு பதவியை வகிக்கும் தகுதியினாலான. *அலுவல் வழித் தலைவர்* (*பி.*15, *பொ.வ.ச.*); Ex officio.

அலுவலர் *பெயர்*

* குறிப்பிட்ட ஓர் அலுவலைப்பொறுத்து, ஆணையிடும் அதிகாரப் பதவியை வகிப்பவர் (*மொகிந்தர்சிங் எதிர் அரியானா அரசு*, 1981, Lab. IC 1140) (*உறுப்*.46, *இ.அ.*); Officer.

அலுவலாற்றுகிற *பெயரடை*

* பணி உறுதிப்படுத்தப்படும் வரையில் நிலைபேறுள்ள பணியில் பற்றுரிமையை விடாதுவைத்திருக்கிற (*அருண்குமார் எதிர் தெ.கி. இருப்பூர்தி நிறுவனம்* AIR 1985 SC 482); Officiating.

அலுவலுரிமை *பெயர்*

பொதுத்துறையில் அல்லது தனியார் துறையில் வேலை செய்வதற்கான உரிமை (*ச.சொ.*1983); Right to office.

அலுவற்பணி *பெயர்*

துறை சார்ந்த, குறிப்பாகப் பதவிவகிக்கிற ஒருவருக்கு உரிய கடமை. *நீதித்துறை அலுவற்பணி* (*உறுப்*.260, *இ.அ.*); Function.

அலைக்கழிப்பு வழக்கீடு *பெயர்*

தொல்லைகொடுக்கும் அல்லது அடக்கியொடுக்கும் நோக்கத்திற்காக மட்டுமே தொடுக்கப்படும் வழக்கு நடவடிக்கை. *பொய்யான அல்லது அலைக்கழிப்புக் கோரிக்கைகள் அல்லது எதிர்வாதங்கள்* (*பி*.35*அ*, *உ.ந.தொ.ச.*); Vexatious litigation.

அவ்வப்போது *சொற்றொடர்*

* பொருந்தும் முறையிலும் பொருந்தும் நேரத்திலும் (Re. Von. Dembrinska (1954) 2 All. ER. 46); From time to time.

அவசரச்சட்டம் *பெயர்*

சட்ட மன்றம் அமர்வில் இல்லாதபோது உடனடித் தேவை கருதி அரசினால் பிறப்பிக்கப்படுவதும் பிந்திய கூட்டத்தொடரில் சட்டமன்றத்தால் ஏற்புறுதி செய்யப்படுவதுமான சட்டம். *குடியரசுத் தலைவராலோ ஒரு மாநில ஆளுநராலோ சாற்றுகை செய்யப்பட்ட அவசரச்சட்டம்* (*உறுப்*. 348(1) (ஆ) (ii), *இ.அ.*); Ordinance.

அவசரநிலை *பெயர்*

* ஒரு நிலைமை திடீரென்று தோன்றி உடனடிச் செயலைக் கோரும் நிலை (*அர்ஜூன்சிங் எதிர் பஞ்சாப் அரசு* AIR 1959 Punj. 538); Urgency.

அவதூறு *பெயர்*

காண்க : பழிப்பூறு.

அவன் *பெயர்*

மாறான விளம்புரை வெளிப்படையாக இருந்தாலன்றி, சட்டத்தின் நோக்கில் அவன் என்னும் ஆண்பால் சுட்டுப்பெயர் பெண்பாலையும், (வருவாய்ச் சட்டகையில்) நிறுமம், நிறுவகம், கழகம் அல்லது சங்கத்தையும் குறிப்பிடுகிறது (*ச.ஆ.சொ.க.*); He.

அவை *பெயர்*

ஒரு பொது நோக்கத்திற்காக ஓரிடத்தில் திரளும் மக்கள் கூட்டம் (*ச.சொ.*1983); Assembly.

அழித்தறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அலுவல்முறை, அதிகாரவுரிமை, அல்லது முறைமை சார்ந்த செய்கையின் மூலம், முன்னைய சட்டம் ஒன்றை வழக்கொழியச் செய்தல். *உரிமைகளை எந்த அளவு வரையறைப்படுத்த வேண்டும் அல்லது அழித்தறவுசெய்ய வேண்டும் என நாடாளுமன்றம் தீர்மானிக்கலாம்* (*உறுப்*.33, *இ.அ.*); To abrogate.

அழிம்பு *பெயர்*

பொதுமக்களுக்கோ தனியொருவருக்கோ முறையற்ற இழப்பையோ கேட்டையோ விளைவிக்கும் உட்கருத்துடன் அவருடைய சொத்தை அழிப்பது, அதன் மதிப்பையோ பயனையோ குன்றச்செய்வது அதற்கு ஊறுசெய்வது அல்லது அதில் மாற்றம் செய்வது. *'ஔ'-க்குச் சொந்தமான பெறுமதி ஆவணத்தை எரித்த 'அ' - அழிம்பு செய்தவராகிறார்* (*பி.*425, *வி.கா*, *இ.த.தொ.ச*); Mischief.

அழிமான சொத்துடைமை *பெயர்*

* காலம், பயன்படுத்தல் முதலிய காரணங்களால் பெறுமான மதிப்புக் குறைவுபடுவதோடு, இயற்கையாகவே வளங்குன்றி அழிவுறும் சொத்து (*எ.டு: சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள்*); Wast ing asset.

அழைப்பாணை *பெயர்*

குறித்துரைக்கப்பெற்ற ஒரு நோக்கத்திற்காக நீதிமன்றத்திற்கு நேரில் வரும்படி நீதிமன்ற அலுவலகத்திலிருந்து ஒருவருக்கு இடப்படும் கட்டளை (*பி.*172, *இ.த.தொ.ச.*); Summons.

அழைப்பாணை வழக்கு *பெயர்*

குற்றவழக்குகளில் பிடிகட்டளை வழக்காக அமையாத சிறு குற்றச்செயல் தொடர்பான வழக்கு. *அழைப்பாணை வழக்கு என்பது பிடிகட்டளை வழக்கு அல்லாத ஒரு குற்றவழக்கு எனப் பொருள்படும்* (*பி.* 2 (*அஓ*), *கு.ந.தொ.ச.*); Summons Case.

அழைப்பாணைவிடு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

குடியரசுத்தலைவர் நாடாளுமன்றத்தையோ, மாநில ஆளுநர் சட்டமன்றத்தையோ அலுவற்கடமை ஆற்றுவதற்காகத் தாம் குறித்திட்ட நாளில் கூடுமாறு அழைப்பு அனுப்புதல். *குடியரசுதலைவர் தாம் பொருத்தமெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடுமாறு நாடாளுமன்றத்திற்கு அழைப்பாணை விடுக்க வேண்டும்* (*உறுப்*.85(1), *இ.அ.*); To summon.

அளாவிநில்(ற்)-த(ற)ல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு பரப்பிடத்தையோ நோக்கத்தையோ பொருந்தியிருத்தல். *இச் சட்டகை ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்* (*பி.* 1(2), *இ.தி.ச.*); To extend.

அளவைத்திட்டம் *பெயர்*

பின்பற்றத்தக்க மாதிரியாகவோ எடுத்துக்காட்டாகவோ, அதிகாரவுரிமை, மரபுவழக்கம் அல்லது பொது இசைவு மூலம் நிறுவப்பட்ட ஒன்று; அளவைத்தரம். *எடைகளும் அளவுகளும் - அளவைத்திட்டங்களை நிறுவுதல் தவிர* (*இ.ப.*VII - III - 33, *அ*, *இ.அ.*); Standard.

அளிக்கமுனைதல் *பெயர்*

கடனை அல்லது கடமைப்பொறுப்பைத் தீர்க்கும் வகையில் பணத்தையோ பிறிதொன்றையோ கொடுக்க முற்படுதல். *விலையைப் பொறுத்து உரிய தொகையை அளிக்க முனைதல் (பி.55(ஈ), சொ.மா.ச.)*; Tender.

அளிப்படைவுச் சட்டவிதியாக்கம் *பெயர்*

காண்க : ஒப்படைச் சட்டவிதியாக்கம்.

அளிப்படைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

செயலாற்றும் அலுவல் உரிமையை மற்றொருவருக்கு மாற்றிக்கொடுத்தல். (1) *ஆம் உட்பிரிவினால் அளிப்படைவு செய்த அதிகாரங்கள் (பி.128(2), உ.ந.தொ.ச.)*; To delegate.

அற்றுப்போ-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீதிப்பேராணை, வழக்கு நடவடிக்கை முதலியன ஒழிந்துவிடுதல். *சாவு காரணமாக வழக்கு நடவடிக்கை அற்றுப்போதல் (கட்.22 விதி. 6, உ.ந.தொ.ச.)*; To abate.

அறங்கூறவையம் *பெயர்*

காண்க : நீதிமன்றம்.

அறவுசெய்கை *பெயர்*

நிலவிவரும் சட்டம், ஒழுங்குமுறைவிதி போன்றவற்றை நடைமுறையிலிருந்து நீக்கிவிடுகை. *பதிவு ஒன்றை அறவுசெய்கை (பி. 186(1), வ.வ.ச.)*; Cancellation.

அறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு முறையாவணத்தின் உள்ளடக்கம் எதனையும் அடித்துநீக்குதல் அல்லது அழித்துவிடுதல். *உரிமம் எதையும் முதிர்வுக்கு முன்னரே அறவுசெய்வதற்கு வகை செய்யும் சட்டம் (பி. 31 அ (உ), இ.அ.)*; To cancel.

அறிக்கை *பெயர்*

1. செய்திகளின் அறிவிப்பு; நீதிமன்றத்தின் கேட்புரை அல்லது போலமை-நீதிய ஆட்சி முகமையின் தீர்ப்புரை; கருத்துரை *(பி. 84, இ.சா.ச.)*;

2. ஆய்வுக்குழுக் கூட்ட அமர்வில் பேசிய பேச்சுரை; எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புரை; ஒரு செயற்குறிப்பை அதிகாரமுறையில் ஆராய்ந்து தனியொருவரோ குழுமமோ அளித்த முடிவுகள், பரிந்துரைகள்; புலனாய்வு செய்து அளிக்கப்படும் முறைப்படியான அல்லது அலுவல் முறையான விவரவுரை *(ச.சொ.க. 1979)*; *அரசுப்பணியாளர் தேர்வாணையங்களின் அறிக்கைகள் (உறுப்.323, இ.அ.)*; Report.

அறிவிக்கை *பெயர்*

அதிகாரமுறைப்படி அரசிதழில் வெளியிடப்படும் அரசு அறிவிப்பு. *பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம் (உறுப்.341(2), இ.அ.)*; Notification.

அறிவிப்பு *பெயர்*

பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய செய்தியை அதிகாரமுறையில் தெரிவிப்பது. *பதினான்கு நாட்களுக்கான அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது (உறுப்.61(2)(அ), இ.அ.)*; Notice.

அறிவிப்புப்பெறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் ஒரு நிகழ்வு பற்றிச் செய்திருக்கவேண்டிய உசாவுகை (=விசாரணை)யையும், தேடுகையையும் கவனக்கேட்டினால் செய்யாமலிருந்தாலும் அல்லது வேண்டுமென்றே செய்யாமல் விலகியிருந்தாலும், சட்ட நோக்கில் அவர் அதைப்பற்றித் தெரிந்திருக்கிறார் எனக் கொள்ளுதல். *கொள்நிலை அறிவிப்பு* (*பி*.3(5) (i), *சொ.மா.ச.*); To notice.

அறிவுரைவழங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தகுதிறமுள்ளவர்கள் ஒரு செய்கை குறித்துக் கருத்துத் தெரிவித்தல். *அமைச்சரவை குடியரசுத்தலைவருக்கு அறிவுரை வழங்குதல்* (*உறுப்*.74, *இ.அ.*); To advise.

அறுதிசெய் வாக்கு *பெயர்*

ஒரு வாக்கெடுப்பில் ஆதரவாகவும் எதிராகவும் உள்ள வாக்குகள் சரிசமமாக இருக்கும்போது அதற்கு முடிவுகட்டும் வகையில் அந்தக் கூட்டத்தின் தலைவர் பயன்படுத்தும் வாக்கு. *அவைத்தலைவர்... வாக்குகள் சமன்மை ஆகும்நேர்வில் ஓர் அறுதிசெய் வாக்கு உடையவர் ஆவார்* (*உறுப்*.100(1), *இ.அ.*); Casting vote.

அறுதிநிலைத் தீர்ப்பாணை *பெயர்*

ஓர் உரிமைவழக்கின் நடவடிக்கைகள் முழுவதும் முடிந்த நிலையில் இடப்படும் கட்டளை. *விற்பனைக்கான அறுதிநிலைத் தீர்ப்பாணை* (*இ.ப*.1 *பிற். ஈ. படி* 72, *உ.ந.தொ.ச.*); Final decree.

அறுதிமுடிவான சான்று *பெயர்*

ஐயத்திற்கு இடமின்றி ஒரு பொருளியத்தை நிலைநாட்ட உதவும் சட்ட வழிவகை (*பி*.6(3), *நி.கை.ச.*); Conclusive evidence.

அறுதிமுடிவான மெய்ப்பிப்பு *பெயர்*

ஒரு பொருளியம் மற்றொன்றிற்கு முடிவான சான்று எனச் சட்டம் விளம்பிய நிலையில், முதல் பொருளியத்தின் மெய்ப்பிப்பின் பேரில் மற்றைப் பொருளியமும் மெய்ப்பிக்கப்பட்டது என நீதிமன்றம் கொள்வதுடன், இதனைப் பொய்ப்பிக்கும் சான்றினை ஏற்றுக்கொள்ளாத நிலை (*பி*.4, *இ.சா.ச.*); Conclusive proof.

அறுதியாவணம் *பெயர்*

விருப்பாவணம் (=உயில்) தவிர்ந்த அசையும் சொத்திலோ அசையாச் சொத்திலோ அடுத்தடுத்துச் சென்றடையும் அல்லது இறங்குரிமைபெறும் நலன்களைத் தீர்வுசெய்கிற அல்லது தீர்வுசெய்ய ஒப்புகிற முறையாவணம் (*ச.சொ.* 1983); Settlement (Deed).

அறுதியாவணர் *பெயர்*

தமது சொத்தினைக் குறித்து ஒரு தீர்வேற்பாட்டை எழுதிவைப்பவர். *அறுதியாவணரின் இறப்பு* (*பி*.12 *வரம். அ.சொ.வ.ச.*); Settler.

அறுதியும் அறுதிமுடிவுமான *பெயரடை*

ஒரு மேல்முறையீடு அல்லது வேறு நடவடிக்கை மூலம் மறுத்துவாதிட இடமளிக்காத. (*சங்ராம்சிங் எதிர் தேர்தல் ஆணையம்* (1955) 2 SCR 7-8); Final and Conclusive.

அறுதியிட்ட *பெயரடை*

கொடுக்கவேண்டிய கடனை நிலையுறுதிசெய்கிற அல்லது நிறுவனத்தின் கடன்பொறுப்புகளை மதிப்பிட்டுக் கண்டறிகிற. *அறுதியிட்ட கோரிக்கை (பி* 1.28(2) *(ஊ)* (i), *உ.ந.தொ.ச.*); Liquidated.

அறுதியிட்ட இழப்பீடு *பெயர்*

ஒப்பந்தத்தில் இழப்புக்குரிய தொகை எவ்வளவு என முன்னதாகவே வரையறுத்து ஒப்புக்கொண்ட தொகை (*பி*.23(1), *கு.தீர்.ச.*); Liquidated damages.

அறுதியிடாத *பெயரடை*

இழப்பு நேரிட்டால் கொடுக்கப்படவேண்டிய தொகை பற்றி ஒப்பந்தத்தில் முன்னதாகவே குறித்துக்கூறாத (*ச.சொ*.1983); Unliquidated.

ஆ

ஆக்கிரமிப்பு *பெயர்*

மற்றொருவரின் உடைமையையோ உரிமையையோ சட்டமுரணாகக் கைப்பற்றுகை. *நில ஆக்கிரமிப்புப் பற்றிய அறிவிப்புக் கொடுத்தல் (பி*.108 *(ங)*, *சொ.மா.ச.*); Encroachment.

ஆங்கில அடைமானம் *பெயர்*

அடைமானம் வைப்பவர் குறித்த தேதியில் அடைமானச் சொத்துக் கடனைச் செலுத்துவதாகத் தம்மைக் கட்டுறுத்தியும், அவ்வாறு செய்கையில் அச்சொத்தைத் தமக்கு மறுமாற்றல் செய்துதரவேண்டும் என்னும் முன்வரைக்கட்டுடனும், அடைமானம் பெறுபவருக்கு அச்சொத்தை முற்றிலுமாக மாற்றல்செய்வது. *அந்த அடைமானம் ஆங்கில அடைமானம் எனப்படும் (பி*.58, *சொ.மா.ச.*); English mortgage.

ஆட்கடத்தல் *பெயர்*

மோசடிசெய்தோ ஏமாற்றியோ வன்முறை மூலமோ ஒருவரை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுமாறு தூண்டுதல் அல்லது செய்தல்.

* *ஆட்கடத்தலில் குற்றவாளியின் உட்கருத்து மிகவும் முக்கிய கூறு ஆகும்* (AIR 1953 Punj. 258); Abduction.

ஆட்சிக்குலைவு *பெயர்*

சட்டம், ஒழுங்கு, அரசாட்சி ஆகியவை இல்லாநிலை (*ச.சொ*.1983); Anarchy.

ஆட்சிப்பரப்பு *பெயர்*

இறையாண்மைமிக்க ஒரு நாட்டின் அரசியல் அதிகாரவரம்புக்குட்பட்ட பகுதி. *நாடாளுமன்றம் ஆட்சிப்பரப்பைப் பிரிப்பதன் அல்லது சேர்ப்பதன் வாயிலாகப் புதிய மாநிலத்தை உருவாக்கலாம் (உறுப்*.3*அ. இ.அ.*); Territory.

ஆட்சிப்பரப்பளிப்பு *பெயர்*

ஓர் இறையாண்மை நாடு தானே விரும்பி மற்றோர் இறையாண்மை நாட்டுக்குத் தனது ஆளும் பகுதியை மாற்றிக்கொடுப்பது (*பி*.2 *(ஆ)*, *ச.மு.செ.(த) ச.*); Cession.

ஆட்சிப்பரப்புக் கடல் *பெயர்*

ஒரு நாட்டின் கரையை ஒட்டிய கடலில், குறித்த தொலைவுவரை, அந்நாட்டின் இறையாண்மையும் தனிச்சிறப்பான அதிகாரவரம்பும் செலுத்தப்படும் கடற்பகுதி. *இந்திய ஆட்சிப்பரப்புக்கடலின் உள்ளே ஆழியின் அடியில் கிடக்கும் நிலங்கள், கனிமங்கள்... ஒன்றியத்திடம் உற்றடைதல் வேண்டும்* (*உறுப்*. 297, இ.*அ*.); Territorial waters.

ஆட்சி மொழி *பெயர்*

அலுவல்முறை நோக்கங்கள் அனைத்திற்குமோ, அவற்றுள் ஒன்று அல்லது பலவற்றிற்குமோ பயன்படுத்தப்படும் மொழி. *ஆட்சி மொழிக்காக ஓர் ஆணையத்தைக் குடியரசுத்தலைவர் அமைத்தல்* (*உறுப்*. 344 இ.*அ*.); Official Language.

ஆட்சியச் செய்கை *பெயர்*

அரசமைப்பின் 166(2)ஆம் உறுப்புக்கிணங்கத் தொடர்புடைய அலுவலர் உரியவாறு சான்றொப்பமிட்டு ஆளுநர் பெயரில் அறிவிக்கையைப் பிறப்பித்தல்.

* *செயலாட்சிச் செய்கை ஆளுநரைப் பொறுப்பாக்கக் கூடியது* (*பிகார் அரசு எதிர் சோமபதி குமாரி* AIR 1961 SC 22); Executive action.

ஆட்சியம் *பெயர்*

சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசின் உறுப்பு, (அரசின் பிற உறுப்புகள், நீதிமன்றம், சட்டமன்றம்) *அத்தகைய அரசாங்கத்திடம் உற்றடைந்துள்ள செயலாட்சித்துறை* (*உறுப்*. 260, இ.*அ*.); Executive.

ஆட்பதுக்கல் *பெயர்*

சட்டமுறைப்படி ஒருவர் தண்டனை பெறுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அவரை மோசடியாக ஒளித்துவைத்தல்; தஞ்சமளித்தல். *வழக்கமாகவே திருடர்களை ஆட்பதுக்கல் செய்பவர்* (*பி*.110 (இ), *கு.ந.தொ.ச*.); Harbouring.

ஆண் *பெயர்*

மானிட இனத்தைச் சேர்ந்தவனும் உரிமைவயது எய்தியவனுமாகிய ஓர் ஆண்மகன் (*பி*.10, இ.*த.தொ.ச*.); Man.

ஆண் சந்ததி *பெயர்*

1. * மரபுவழி வந்த ஆண்பிள்ளை நீங்கலாக ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண் பிள்ளை (*டி.குரூஸ் எதிர் நாகையாநாயுடு*, AIR 1929 Mad. 64); Aan cantati.

2. * சூழ்நிலை பிறவாறு குறிப்பிட்டால் தவிர, ஏற்பு மகன் (*பாலசுப்பிரமணியப்பிள்ளை எதிர் பச்சைப்பிள்ளை*, (AIR 1917 Mad. 837); Aan cantati.

ஆண்டுப்பட்டிகை *பெயர்*

ஓர் ஆண்டின் மாதம், தேதி, கிழமைகளைக் காட்டும் அட்டவணை (*ச.சொ*.1983); Calendar.

ஆண்டுப்பணம் *பெயர்*

பொதுவாக ஆண்டுதோறும் அளிக்கப்பெறும் குறிப்பிட்ட ஒரு தொகை. *ஆண்டுப்பணச் சான்றிதழ்* (*பி*.36, *சொ.மா.ச*.); Annuity.

ஆண்தன்மையற்றவர் *பெயர்*

பொதுவகையில் உடலுறவுத் தகுதிஉடையவராக இருந்தபோதிலும், குறிப்பிட்ட ஒரு பெண்ணுடன் பாலுறவு கொள்ளும்போது உரிய செயல்திறனற்ற ஆடவர். (*ஜகதீஸ்வால் எதிர் சியாமாமதன்* AIR 1966 All. 150); Impotent.

ஆண்வழிஉறவினர் *பெயர்*

ஒரு பொது ஆண் மூதாதையரின் குடிவழிவந்த ஆடவர் (*பி*.3(1), *இ.வ.ச.*); Agnate.

ஆணை *பெயர்*

வழக்கின் இறுதியில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணையாக அமையாமல், ஒரு வழக்கைப் பொறுத்து நீதிமன்றம் முறைப்படி அறிவிக்கும் முடிபு. *மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைவிளைவான ஆணை எதையும் பிறப்பிக்கலாம்* (*பி*.386 (*உ*), *கு.ந.தொ.ச.*); Order.

ஆணைப்பட்டயம் *பெயர்*

முகமதிய அரசு அல்லது பிற அதிகாரஅமைப்பு வழங்கிய மானியத்தின் உரிமை ஆவணம். *மேற்சொன்ன அதிகாரவரம்பு ஆணைப்பட்டயம் போன்ற முறையாவணத்தினின்று எழும் பூசலை அளாவக் கூடாது* (*உறுப்*. 131, *வரம்.*, *இ.அ.*); Sanad.

ஆணை ஒழிவாக்கல் *பெயர்*

நடப்பிலுள்ள ஒரு கட்டளையை நீதிமன்றம் தள்ளறவுசெய்தல் (*ச.சொ*.1983); Vacating an order.

ஆணையதிகாரம் *பெயர்*

ஒரு செயலைச் செய்யவோ அதிகாரத்தைச் செலுத்தவோ சட்டமுறைப்படி அளிக்கப்படும் கட்டளையுரிமை. *எவருக்கு ஆணையதிகாரம் பிறப்பிக்கப்பட வேண்டும் என்பது* (*பி*.285, *கு.ந.தொ.ச.*); Commission.

ஆணையம் *பெயர்*

குறித்தவகை அலுவற்பணி ஆற்றும்பொருட்டு அமர்த்தப்பட்ட தனியொருவர் அல்லது ஆட்களின் குழுமம். *அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம்* (*உறுப்*. 320, *இ.அ.*); Commission.

ஆதாயப் பதவி *பெயர்*

பண நலன்களை வழங்கக்கூடிய பணி. *ஓர் அமைச்சராக இருப்பவர் ஆதாயப்பதவி ஏற்றிருக்கிறார் எனக் கருதப்படுதல் ஆகாது* (*உறுப்*. 101(2), *இ.அ.*); Office of profit.

ஆணையாளர் *பெயர்*

நீதிமன்றத்தாலோ அரசினாலோ குறித்த ஒரு பணியைச் செய்துமுடிக்க அதிகாரமளித்து அமர்த்தப்படுபவர். *தேர்தல் ஆணையாளர்* (*உறுப்*.324, *இ.அ.*); Commissioner.

ஆணையிட்டுக்கூறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பதவி, பொறுப்பு அல்லது கடமையை மேற்கொள்ளும்போது சூளுரை செய்தல். *நான் கடவுளின் பெயரால் ஆணையிட்டுக் கூறுகிறேன்* (*உறுப்*.60, *இ.அ.*); To Swear.

ஆணையுறுதியாவணம் *பெயர்*

ஆணைமொழி செய்துவைக்கும் அதிகாரம்பெற்றவர் முன்பு, ஆணையுறுதியோ மெய்யுறுதியோ கூறிக் கையொப்பமிட்டுக் கொடுக்கின்ற சான்றாளர் எனப்படுபவரின் பெயரில் அளிக்கப்படும் எழுத்துருவிலான விவரவுரை (*பி.*295, *கு.ந.தொ.ச.*); *விடையளிக்கும் ஆணையுறுதியாவணத்தை முன்வைத்திடுதல்* (*கட்.* 11 *விதி* 8, *உ.ந.தொ.ச.*); Affidavit.

ஆதாயஈவு *பெயர்*

காண்க : ஆதாயப்பங்கு.

ஆதாயப்பங்கு *பெயர்*

ஒரு நிறுமத்தின் பங்குதாரர்களுக்கு ஆதாயத்திலிருந்து அளிக்கப்படும் ஈவுத்தொகை. *வருமானம் மீதான ஆதாயப்பங்கு* (*பி.*8, *வ.வ.ச.*); Dividend.

ஆதாயம் *பெயர்*

நடவடிக்கை எதிலும் பெறப்படும் ஆக்கம்; ஈட்டம்; இலாபம். *இந்தியக் குடிமகன் அல்லாத ஒருவர் ஆதாயம் தரும் பதவியை ஏற்றிருக்கிறார் என்றால்* (*உறுப்.*18(3), *இ.அ.*); Profit.

ஆய்வறிதிறன் *பெயர்*

ஆராய்ந்து உளத்தேர்வின்படி தீர்மானிக்கும் ஆற்றல் (*ச.ஆ.சொ.க.*); Judgement.

ஆய்வுக்காக ஏற்றுக்கொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. வழக்காய்வுக்காகப் பெற்றுக்கொண்டு கருதுகை செய்தல். (*நேப்ராம்சிங் எதிர் முத்தும் சானாசிங்* AIR 1955 Mani 39); To entertain.

2. எப்பொருள் பற்றியும் முதல் தடவையாக நீதிமன்றம் தனது கருத்தைச் செலுத்தல். (*பிரிமியர் காப்பீட்டுக் கழகம் எதிர் வித்யாவதி* AIR 1978 All. 264); To entertain.

ஆயத் தீர்வை *பெயர்*

உள்நாட்டில் ஆக்கம்செய்து பயன்கொள்ளப்படும் குறித்தசில பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி; நுகர்பொருள் வரி. *மனிதர் அருந்தும் மதுக்குடிவகை மீதான ஆயத்தீர்வைகள்* (*இ.ப.* VII - II-51, *இ.அ.*); Excise duty .

ஆயுள் காப்பீடு *பெயர்*

வாழ்நாள் காப்புறுதிபெற்ற ஒருவர் இறக்க நேர்ந்தால், குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக உறுதிசெய்யும் ஒப்பந்தம். *ஆயுள்காப்பீட்டு அலுவல்தொழில்* (*பி.*3 (எ), *வ.வ.ச.*); Life insurance.

ஆயுள் நலன் *பெயர்*

ஒருவருடைய வாழ்நாளின்போது தொடர்ந்திருப்பதும், அவர் இறக்கும்போது முடிவுறுகிறதும், விருப்பாவணக் கொடையாக அளிக்க முடியாததுமான பயனுரிமை. *'அ' ஆயுள் நலனுக்கு உரிமையுடையவர்* (*பி.* 46 *வி.கா.*(ஆ), *சொ.மா.ச.*); Life interest.

ஆவணச் சான்று *பெயர்*

சட்டப்படி நீதிமன்றம் சான்று எனக் கொள்ளத்தக்க எழுத்துரை. *நீதிமன்றத்தின் ஆய்வுக்காக முன்வைக்கப்படும் ஆவணங்கள் அனைத்தும் ஆவணச்சான்று என வழங்கப்படும்* (*பி.*3, *இ.சா.ச.*); Documentary evidence.

ஆவணச் சான்றுரைஞர் *பெயர்*

ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர் அதில் கையொப்பமிட்டதைக் கண்ட பின்போ, அந்தச் செயல்விளைவு குறித்து அவரின் ஒப்புகையைப் பெற்ற பின்போ அதற்குச் சான்றாக அந்த ஆவணத்தில் சான்றுக் கையொப்பம் இடுபவர். *அத்தகைய ஆவணச்சான்றுரைஞரைக் கண்டுபிடிக்க முடியவில்லை (பி.*69, *இ.சா.ச.*); Attesting witness.

ஆவணப் பிழைவாதம் *பெயர்*

ஓர் ஆவணத்தை ஆதாரமாகக் கொண்ட வழக்கில், அதன் தன்மையைப் பிறிதொன்றாகக் கருதியதால் தவறு நிகழ்ந்தது எனக் கூறும் எதிர் வாதுரை (*ச.சொ.*1983); Plea of non est factum.

ஆவணம் *பெயர்*

சான்றாகப் பயன்படும் வகையில் ஒரு பொருளின் மீது வரையப்படும் எழுத்துகள், எண்கள், குறிகள் ஆகியவற்றின் வழியே வெளிப்படுத்தப்படும் அல்லது விவரிக்கப்படும் பொருட்பாடு. *ஆவணங்களை முன்னிலைப்படுத்துதல் (இ.ப.*VII-II-39, *இ.அ.*); Document.

ஆவணமனுப்புக என்னும் நீதிப்பேராணை *பெயர்*

சட்டத்தையோ அதிகார வரம்பினையோ கடைப்பிடிப்பதில் தவறு ஏதேனுமிருப்பின் மறுஆய்வு செய்து அதைக் களைவதற்காக, அந்த வழக்கு நடவடிக்கை ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு கீழ் நீதிமன்றத்திற்கோ தீர்ப்பாயத்திற்கோ ஓர் உயர்நிலை நீதிமன்றம் இடும் கட்டளை. *ஆவணமனுப்புக என்னும் நீதிப்பேராணையைப் பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் அதிகாரம் உடையது (உறுப்.*32(2), *இ.அ.*); Writ of Cartiorari.

ஆவணமாற்றுகை *பெயர்*

ஒருவர் பெயரிலுள்ள கடனுறுதிச்சீட்டையோ, பணமாற்றுச்சீட்டையோ, காசோலையையோ மற்றொருவருக்கு மாற்றிக்கொடுத்து அதற்கு அவரை உடையவர் ஆகச்செய்வது (*பி.*48, *மா.மு.ச.*); Negotiation.

ஆவணயேடு *பெயர்*

நீதிமன்ற வழக்கு நடவடிக்கையின் அதிகாரமுறை அறிக்கை; நீதி மன்றத்தால் முடிவுசெய்யப்படவேண்டிய சட்டப் பொருட்கூறாக வழக்காளிக்கும் காப்பாளிக்கும் இடையே அமைகின்ற வாதக்கூறுகள், வாதுரைகள், வழக்கெழுவினாக்கள்; எழுத்துருவிலோ பிற நிலையான வடிவிலோ பேணிக்காக்கப்படும் உண்மை விவரம் அல்லது பொருளியம் பற்றிய விவரவுரை; சட்டப் பொருட்பாட்டுக்கு இன்றியமையாத சான்றாக உருவாக்கப்பட்ட ஆவணம்; பதிவிதழ், பதிவுக்கட்டு (*ச.சொ.*1979); Record.

ஆழ்கடல் *பெயர்*

பொதுவாகக் கடற்கரையிலிருந்து மூன்று கல் (=மைல்) தொலைவுக்கு அப்பாலுள்ள கடற்பகுதி. *ஆழ் கடலிலோ வானிலோ இழைக்கப்படும் கொள்ளைகளும் குற்றங்களும் (இ.ப.*VII-I-21, *இ.அ.*); High Seas.

ஆள் *பெயர்*

சட்டத்தால் இசைந்தேற்கப்படும் உரிமையும் கடமையும் கொண்டுள்ள ஒருவர் அல்லது ஓர் உள்பொருள்; ஆளர் (=நபர்). *ஆள் என்னும் சொல் வணிகநிறுவனம், சங்கம் அல்லது ஆட்களின் குழு எதையும் உள்ளடக்கும் (பி.*3(11), *இ.த.தொ.ச.*); Person.

ஆள்எதிர்த் தீர்ப்பாணை *பெயர்*

வாங்கிய கடனுக்காகக் குறித்தவகைச் சொத்து எதையும் பொறுப்புக்கு உட்படுத்தாமல், தீர்ப்புக் கடனாளிக்கு எதிராக மட்டுமே பிறப்பிக்கப்படும் கட்டளை (இ.*ப*.1 *பிற்.ஈ*, *படிவம்* 5, *உ.ந.தொ.ச.*); Personal decree.

ஆள்எதிர் வழக்கு *பெயர்*

ஓர் ஆளுக்கு எதிரான குறைதீர்வழியைச் செயலுறுத்தவேண்டி நீதிமன்றத்தில் கொணரப்படும் சட்ட நடவடிக்கை (*கட்*.39, *உ.ந.தொ.ச.*); Personal action.

ஆள்காட்டணி *பெயர்*

குற்றஞ்சுமத்தப்பட்டவரைச் சான்றுரைஞர் சுட்டிக்காட்ட முடியுமா என்பதைத் தெரிந்துகொள்வதற்காக நடத்தப்படும் அணிவகுப்பு (*ச.சொ*.1983); Identification Parade.

ஆள்சுட்டிய *பெயரடை*

ஒரு வழக்கு, நடவடிக்கை அல்லது செயலைப் பொறுத்துக் குறிப்பிட்ட ஒருவருக்குத் தொடர்பான அல்லது எதிரான (= நபர் சுட்டிய) (*ச.சொ*.1983); In personam.

ஆள்மாறாட்டம் *பெயர்*

ஒருவர் வேறு ஒருவரைப்போன்று நடித்துப் பாசாங்குசெய்தல், ஒருவரை மற்றொருவராகக் காட்டுதல், உண்மையில் தாமோ மற்றொருவரோ அல்லாத வேறொருவரைத் தாமே அல்லது வேறொருவரே என எடுத்துக்கூறுதல் ஆகிய மூன்று செயல்களுள் ஏதேனும் ஒன்று. *ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றுதல்* (*பி*.416, இ.*த.தொ.ச.*); Personation.

ஆளுகைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு நாட்டின் அமைவனத்தின் அல்லது மக்களின் கொள்கைகள், செய்கைகள், அலுவல்கள் ஆகியவற்றை அதிகாரவுரிமையுடன் நடத்துதல், வகுத்தியக்குதல் அத்தகைய உடன்பாடு... *அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டத்திற்கு உட்பட்டதாகவும் அதனால் ஆளுகைசெய்யப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.* (*உறுப்*. 260, இ.*அ*.); To govern.

ஆளுநர் *பெயர்*

இந்திய ஒன்றியத்தின் உறுப்பாகிய மாநிலம் ஒன்றின் செயலாட்சித் தலைவர் (*பகுதி*, VI, *ப.பி*.2, இ.*அ*.); Governor.

ஆளைக்கொணர்க என்னும் நீதிப்பேராணை *பெயர்*

தமது விருப்பத்திற்கு மாறாக அடைத்துவைக்கப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் அச்செய்கைக்கான காரணத்தைக் கூறுமாறும் அடைத்துவைத்தவருக்கு உயர்நீதிமன்றம் இடும் கட்டளை. *உரிமைகளில் எதனையும் செயலுறுத்துவதற்காக ஆளைக்கொணர்க... என்னும் நீதிப்பேராணையைப் பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் அதிகாரம் உடையது* (*உறுப்*.32(2), இ.*அ*.); Writ of Habeas corpus.

இ

இசுலாமிய அறக்கட்டளை *பெயர்*

புனிதம், சமயம் அல்லது அறம் சார்ந்தது என முகமதியச் சட்டத்தினால் இசைந்தேற்கப்படும் நோக்கங்களுக்காக, ஓர் இசுலாமியரால் நேர்ந்தளிக்கப்பெற்ற கொடையை மேலாண்மைசெய்யும் பொறுப்பமைப்பு (*பி*.3(1), வக். *ச*.); Wakf.

இசைவிணக்கம் *பெயர்*

உரிமைவழக்கின் சார்பினர் தமக்குள்ளேயே செய்துகொண்ட உடன்பாட்டின்வழி அமைந்த ஒத்திசைவு (=சமரசம்). *உரிமை வழக்கில் இசைவிணக்கம் (கட்.23 விதி, 3 உ.ந.தொ.ச)*; Compromise.

இசைவு *பெயர்*

ஒருவர் மற்றொருவரின் கருத்திற்கோ விருப்பத்திற்கோ தன்னார்வத்துடன் உடன்படுதல் அல்லது குறிப்பாக இணக்கம்தெரிவித்தல்.

* *ஓர் ஒப்பந்தம் அமைவதற்கான இசைவு* (AIR 1983 *அலகாபாத்* 9); Consent.

இசைவுக்குறிப்பளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அமைதியாகவோ, எதிர்ப்புத் தெரிவிக்காமலோ ஒரு செயலுக்கு உடன்பாடு தெரிவித்தல். *எதிராளிகள் இசைவுக்குறிப்பளித்திருக்கிறார்கள் என்றால் (பி.20(ஆ) உ.ந.தொ.ச.)*; To acquiesec.

இசைவுடன் உரிமை *பெயர்*

குற்றஞ்சாட்டப்பட்ட அத்துமீறல் வழக்கில், வழக்காளியின் ஒப்புதல்பெற்றே அந்த மீறல் நிகழ்ந்தது எனக்கூறும் தற்காப்புரை (= எதிர்வாதம்); ‘அனுமதியுடன்’ என்னும் வாதம் (*ச.சொ.* 1983); Leave and licence.

இசைவுத்தீர்வு *பெயர்*

நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்காமல் பூசல்களுக்குத் தாங்களே முடிவு காணுகை அல்லது முடிவு ஏற்படாநிலையில் பொதுவர் தீர்வுக்கு விடுகை. *இசைவுத்தீர்வு அலுவலர்கள் (பி.13 தொ.பூ.ச.)*; Conciliation.

இடர் முன் வழக்கு *பெயர்*

சொத்துக்கு எதிர்காலத்தில் பெரும்பாலும் கேடு விளையலாம் என்று அஞ்சிய நிலையில், அதைத் தடுப்பதற்காக இப்போதே எடுக்கப்படும் நடவடிக்கை (*ச.சொ.*1983); Quia timet action.

இடர்விளை படைக்கலன் *பெயர்*

இறப்பையோ உயிருக்குக் கெடுதியையோ செய்யக்கூடிய கொலைக்கருவி (*ச.சொ.*1983); Dangerous Weapon.

இடர்வு *பெயர்*

1. ஆள் ஒருவரின் குற்றம் காரணமாக அமையாமல், ஒரு தீங்கையோ இழப்பையோ உண்டாக்கும் நிகழ்ச்சி (= விபத்து). *கடலில் நிகழ்ந்த இடர்வு (பி. 82(1) இ.இ.ச.)*; Accident.
2. * எதிர்பாராது நிகழும் செயல் (*இந்திய ஒன்றியம் எதிர் சுனில்குமார்* AIR 1984 SC 1737); Accident.

இடைஆதாயம் *பெயர்*

வருமானத்திற்கும் கூடுதலாக ஒரு வேலையமைவில் கிடைக்கத்தக்க நன்மை (எ-டு. நிறுவனத்தின் சீருந்து அலுவலரால் பயன்படுத்தப்படுதல்) (*பி.* 17(1) (iv), *வ.வ.ச.*); Perquisite.

இடைக்கால ஆணை *பெயர்*

அப்பொழுதைக்கோ மறு கட்டளைவரையிலோ செயல்விளைவு கொள்ளும் ஆணை. *இடைக்கால ஆணைக்கான வாதுரை (உறுப்.* 226(3), *இ.அ.*); Interim Order.

இடைக்கால ஆதாயம் *பெயர்*

ஒரு சொத்தை முறைகேடாகத் தமது உடைமையில் இருத்திவைத்திருக்கும் ஒருவர், அச்சொத்தில் செய்த மேம்பாடு காரணமாகப் பெறும் நலன் நீங்கலாக, அச்சொத்திலிருந்து உள்ளபடியே அடைந்த அல்லது வழக்கமான கவனிப்பினால் அடையத்தக்க நலன். *தொகையும் அதற்கான வட்டித் தொகையும், இடைக்கால ஆதாயம் (பி. 2 (12), உ.ந.தொ.ச.)*; Mesne Profit.

இடைக்கோரிக்கை *பெயர்*

ஒரு வழக்கு நடைபெறுகையில் அதன் முன்னேற்றத்திற்கு இடைவிளைவான ஒன்றைச் செய்வதற்குரிய ஆணையை வேண்டி, நீதிமன்றத்தின்முன்பு செய்யப்படும் விண்ணப்பம். *உறுதிமொழியை ஆதாரமாகக் கொண்டுள்ள இடைக்கோரிக்கை (பி.407(3) கு.ந.தொ.ச.)*; Motion.

இடைத் தூதுஅலுவலர் *பெயர்*

சிறப்புநிலைத் தூதுவர்களுக்கும் துணைத்தூதுவர்களும் இடைநிலையில் உள்ள தூதுமுகவர் *(ச.சொ.1983)*; Minister Resident.

இடைமறைப்புக் கோட்பாடு *பெயர்*

* இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் முன்பு நிலவிவந்த சட்டத்துடன் இந்திய அரசமைப்பு அடிப்படை உரிமைகளைப் பொறுத்தமட்டில் முரண்படுகிறது என்றால், அச் சட்டத்தின் முரண்பாடுள்ள பகுதி செயலற்றுப்போகும் என்பதையும் அந்த முரண்பாடு அரசமைப்புச் சட்டத்தினால் திருத்தத்தின்மூலம் அகற்றப்படும்போது மீண்டும் செயல்விளைவு பெறும் என்பதையும் விளக்கும் விதிமுறை *(பிகாஜ் நாராயணன் எதிர் மத்திய பிரதேச அரசு*, AIR 1955 SC 781); Doctrine of eclipse.

இடைமுழு நாள்கள் *பெயர்*

முதல் நாளையும் கடைசி நாளையும் தவிர்த்து நடுவிலுள்ள முழுமையான நாள்கள் *(பி.9(ஆ), பொ.தீ.ச.)*; Clear days.

இடையுரிமை வழக்கு *பெயர்*

ஒருவர் கொடுக்கவேண்டிய கடனையோ பண்டத்தையோ குறித்து இருவரோ மேற்பட்டவரோ தங்களுக்குள் எதிர்உரிமை கொண்டாடும்போது, எவர் உரிமையுடையவர் என அவர்களுக்குள் வழக்கிடுமாறுசெய்து அதிலிருந்து அந்த ஒருவர் தம்மை விடுவித்துக்கொள்ளும் நடைமுறை. *இடையுரிமை வழக்கைப் பற்றிய வழக்கீடு (பி.88, உ.ந.தொ.ச.)*; Interpleader.

இடையேற்புச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மற்றவரின் கடமையை அல்லது அலுவலைத் தாற்காலிகமாக ஏற்றுச் செயற்படுதல்; செயலமர்தல். *மேலவை நடைமுறை விதியின்படி ஒருவர் இடையேற்புச்செய்தல் வேண்டும் (உறுப்* 184(2), *இ.அ.)*; To act.

இடைவழக்காளி *பெயர்*

ஒரு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் தாமாகவோ பொதுமக்கள் சார்பாகவோ வழக்காட அதில் நுழையும் வேறொருவர் *(ச.சொ.1983)*; Intervener.

இடை உறுத்துக்கட்டளை *பெயர்*

குறித்த ஒன்றைச் செய்ய அல்லது செய்யாதிருக்கவேண்டித் தொடர்ந்த வழக்கில், ஒரு சார்பினருக்கு நீதிமன்றம் வழங்கும் ஆணை அல்லது தீர்ப்பு (*ச.சொ.*1983); Interim injunction.

இணக்கத்தீர்வுகொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் குற்றம்புரிந்த மற்றொருவர்மீது வழக்குத் தொடுப்பதில்லை என்றோ, தொடுத்த வழக்கை மேற்கொண்டு நடத்துவதில்லை என்றோ உடன்பாடு செய்துகொள்ளல். *கடன்தருநருடன் இணக்கத்தீர்வுகொள்ளுதல் (பி.*279(2), *வ.வ.ச.*); To Compound.

இணக்கஒப்பந்தம் *பெயர்*

பன்முக இயல்புள்ளதும் பன்னாட்டு நிறுவனங்களால் பொதுவகையில் ஏற்கப்படுவதுமான உடன்படிக்கை (*ச.சொ.*1983); Convention.

இணங்கியொழுகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உறுதிமொழி, நீதிமன்ற ஆணை முதலியவற்றைப் போற்றிக் கடைப்பிடித்தல். *ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் அரசமைப்புக்கு இணங்கியொழுக வேண்டும் (உறுப்.*51 *அ, இ.அ.*); To abide (by).

இணைப்புப்பட்டியல் *பெயர்*

ஒரு முதன்மைச் சட்டத்துடன் இணைந்துள்ள பிற்சேர்க்கை; விவரஅட்டவணை. *முதலாம் இணைப்புப்பட்டியல்*

(i) *மாநிலங்கள்* (ii) *ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள்*, (*இ.அ.*); Schedule.

இணையுநர் *பெயர்*

ஒரு நடவடிக்கையில் அல்லது வழக்கில் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்தவர் அல்லது அக்கறை கொண்டவர். *தடை செய்யப்பட்ட உருப்படிப்பொருளை விற்பதில் இணையுநர் எனத் தோன்றுபவர் (பி.*94(1) (2) (*உ*), *கு.ந.தொ.ச.*); Privy.

இந்திய ஒன்றியம் *பெயர்*

இந்தியக் கூட்டுப் பேராட்சியில் அடங்கியுள்ள ஆட்சிப் பரப்புகளின் இணைப்பு.

* *அரசமைப்பின்* 226*ஆம் உறுப்பின்கீழ் நீதிப்பேராணையைப் பிறப்பிக்கும் அல்லது சார்வுசெய்யும் நோக்கத்தைப் பொறுத்து, இந்திய ஒன்றியம் என்பது அதன் அரசாங்கம் அமைந்திருக்கும் இடம் அல்லாத வேறு இடம் எதுவும் எனக் கூற முடியாது (ராம் கிருபால் எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1955 All. 468); Union of India.

இந்தியக் குடியரசுத்தலைவர் *பெயர்*

முப்பத்தைந்து வயது நிறைவு, மக்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதி ஆகியவற்றைக் கொண்டு ஓர் இந்தியக் குடிமகனாக இருப்பவரும் நாடாளுமன்ற ஈரவைகள், மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் குழாத்தால் தேர்ந்தெடுக்கப்படுபவரும், ஐந்தாண்டுப் பதவிக் காலம் உடையவரும், அரசமைப்பில் வகுத்துரைத்தவாறு அதிகாரங்களை நேரடியாகத் தாமோ, தமக்குக் கீழமைந்த அலுவலர் வழியாகவோ செலுத்துபவரும் ஆகிய இந்திய ஒன்றியத்தின் ஆட்சித்துறைத் தலைவர். *இந்தியாவுக்குக் குடியரசுத்தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும் (உறுப்.*52, *இ.அ.*); President of India.

இந்தியத் தேர்தல் ஆணையம் *பெயர்*

நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் தேர்தல்களுக்குரிய வாக்காளர் பட்டியலின் ஆக்கமைவு (=தயாரிப்பு), அத்தேர்தல்களை நடத்துகை, அரசமைப்பின்படி நடத்தப்பெறும் குடியரசுத்தலைவர், குடியரசுத்துணைத்தலைவர் பதவிகளுக்கான தேர்தல்கள் ஆகியவற்றின் கண்காணிப்பு, நெறிப்படுத்துகை, கட்டுப்பாடு ஆகிய அலுவற்பணிகளைக் கொண்டிருப்பதும், குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்படும் தலைமைத் தேர்தல் ஆணையரின் தலைமையில் செயலாற்றுவதுமான அதிகார அமைப்புக் குழு (*உறுப்*. 324, *இ.அ.*); Election Commission of India.

இந்துக் கூட்டுக் குடும்பம் *பெயர்*

பொது மூதாதையர் ஒருவரின் நேரடி ஆண் வழித்தோன்றல்கள், அவர்தம் மனைவியர், மணமாகாத பெண்மக்கள் அடங்கிய *சமூக அமைப்பு* (*ச.சொ.*1983); Hindu joint family.

இயக்குநர் *பெயர்*

1. ஒரு நிறுமத்தின் அலுவல்களை மேலாண்மைசெய்வதற்காகப் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் அல்லது பிறவாறாகப் பணியமர்த்தப்படுபவர் (*ச.சொ.*1968.); Director (of a company).

2. அரசு அல்லது பொதுத்துறையின் தலைமை அலுவலர். *பொது நலவாழ்வுத் துறை இயக்குநர்* (*பி.*4(1), *த.நா.பொ.ந.ச.*); Director (of a department)

இயம்பப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுதல்.

* *பொதுநலன், சமயம் அல்லது அறக்கொடைகளின் நேர்ந்தளிப்பு வாய்மொழியாக இருக்கிற காரணத்தினால், அது இயம்பப்படவில்லை எனச் சொல்லமுடியாது* (*தங்கசாமி செட்டி எதிர் வருமானவரி ஆணையர் சென்னை* AIR 1966 Mad. 103); Expressed.

இயல்புத் தீங்கு *பெயர்*

சட்டம் தடைசெய்வதால் மட்டுமே தீமை என அமையாமல், அறத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மாறானது என்பதால் இயற்கையிலேயே உள்ள தீமை (எ.டு: கொலை) (*ச.சொ.*1983.); Mala in se.

இயல் முரண் குற்றச்செயல் *பெயர்*

ஓர் ஆணுடனோ பெண்ணுடனோ விலங்குடனோ இயல்புக்கு முரணான வகையில் தன்விருப்பாக ஒருவர் கொள்ளும் உடலுறவு; (= காம விகார உடலுறவு). *இயற்கைக்குமாறான குற்றச்செயல்* (*பி.*377, *இ.த.தொ.ச.*); Unnatural offence.

இயல்விக்கும் சட்டம் *பெயர்*

முன்பு செய்யமுடியாதிருந்த செயலைப் பின்பு செய்யக்கூடியதாக ஆக்கும் பொருட்டு இயற்றப்படும் விதிமுறை (*ச.சொ.*1983.); Enabling statute.

இயலாமை *பெயர்*

குறிப்பிட்ட சில செயல்களைச் செய்யவோ சட்ட உரிமைகளைத் துய்க்கவோ சட்டப்படி தகுதிறம் பெற்றிராதநிலை, தகுதியின்மை. *குடிமகன் எவரும் சமயம், இனம் காரணமாக இயலாமை... எதற்கும் உட்படுத்தப்படுதல் ஆகாது* (*உறுப்*..15(2) *இ.அ.*); Disability.

இயற்கை ஆள் *பெயர்*

சட்டத்தால் இசைந்தேற்கப்படும் செயற்கை ஆளர் (=நபர்)களிடமிருந்து தனிவேறுபட்ட உண்மை மனிதர் (*பி*.2(19), *இ.சொ.தீ.ச.*); Natural person.

இயற்கைக் காப்பாளர் *பெயர்*

ஓர் இளவருக்கு இயல்பான முறையில் அமைந்த காப்பாளர்; தந்தை; தந்தை இறப்புக்குப்பின் தாய்; இருவரும் இல்லாநிலையில் வேறு ஒருவர் (*பி*.6, *இ.இ. - கா.ச.*); Natural guardian.

இயற்கைச் சட்டம் *பெயர்*

மனிதர் இயற்றிய சட்டத்தினின்றும் தனிவேறானதும், பகுத்தறிவுக்கோ இயற்கைக்கோ இயைந்ததாகவும், மனிதரால் ஆக்கப்படவில்லை என்றாலும் அவர் இயற்றிய சட்டத்திற்கு அடிப்படையாகவும் உள்ள விதிமுறை; அறநெறி (*ச.சொ*.1983); Natural law.

இயற்கை நீதி *பெயர்*

நேர்மை தகைமை நன்மனச்சான்று ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த முறைமை.

** இயற்றப்பட்ட சட்டத்தில் அடங்காத பகுதிகளில் மட்டுமே, நீதியைக் காப்புறுதி செய்வதற்கும் நீதிச் சிதைவைத் தடுப்பதற்கும் இந்த இயற்கை நீதி பயன்படுத்தப்பட்டுத் தீர்ப்புரைக்க உதவுகின்றது (ஏ.கே.கிரிபாக் எதிர் இந்திய ஒன்றியம்* (1970) 1 SCR 457); Natural justice.

இயற்கைமுரண் சேர்க்கை *பெயர்*

காண்க : இயற்கைக்குமாறான குற்றச்செயல்.

இயற்றாச் சட்டம் *பெயர்*

1. சட்டமன்றக் கருத்தின் வெளிப்படை விளம்புகை எதிலிருந்தும் தனது அதிகாரவுரிமையைப் பெற்றிராததும் அறநெறியின் அல்லது சட்டநெறியின் அடிப்படையில் தோன்றியதுமான எழுதப்பெறாத விதிமுறை (*ச.சொ*.1983); Common law.
2. இங்கிலாந்து நாட்டின் பழக்கவழக்க மரபுச்சட்டம் (*ச.சொ*.1979)); Common law.

இயற்றுச்சட்டம் *பெயர்*

நாடாளுமன்றமோ சட்டமன்றமோ நிறைவேற்றிய சட்டம் (*ச.சொ*.1983); Statute.

இயன்றளவுக் கோட்பாடு *பெயர்*

விருப்பாவணம் அல்லது கொடைஆவணம் எழுதியவரின் விருப்பத்தை எழுதியபடியே நிறைவேற்ற இயலாதநிலை, அவ்வாறு நிறைவேற்றுவது பகுத்தறிவுக்குப் பொருந்தாது அல்லது சட்டமுறைக்கு மீறுகையாகிறது ஆகிய நிலைகளில், சட்டநெறிக்கும் பகுத்தறிவுக்கும் நடைமுறைக்கும் அவரது உட்கருத்து எந்த அளவு பொருந்துமோ அந்த அளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டும் என நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு.

** பொதுவாக இயன்றளவுக் கோட்பாடு பொறுப்புக்கட்டளைக்குப் பொருந்தும் (ரத்திலால் எதிர் பம்பாய் அரசு* AIR 1954 SC 388); Doctrine of cypres.

இரட்டை இடுக்கண் *பெயர்*

ஒரு குற்றச்செயலுக்காக ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கையில் மறுபடியும் அதே குற்றத்திற்காக வழக்குத் தொடர்வது (*ச.சொ*.1983); Double jeopardy.

இரட்டையாட்சி *பெயர்*

ஒரு மாகாணத்தின் நில வருவாய், பாதுகாப்பு முதலிய ஒதுக்கீடுபெற்ற துறைகளை (ஆங்கிலேய) ஆளுநரின் ஆட்சிக் குழுவினரும், கல்வி, பொதுப்பணி முதலிய மாற்றல்பெற்ற துறைகளைத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைச்சர்களும் மேலாண்மை செய்யும் வகையில் இந்தியாவில் 1919-இல் நிலவிய ஆட்சிமுறை; Diarchy.

இருதலை ஒப்பந்தம் *பெயர்*

ஒருவருக்கொருவர் அளிக்கும் உறுதிமொழிகள் அடங்கிய உடன்பாடு (*ச.சொ.*1983); Bilateral contract.

இருதுணைமணம் *பெயர்*

கணவன் மனைவி இருவரும் உயிருடன் இருக்கும்போது அவருள் ஒருவர் வேறு ஒருவரோடு செய்துகொள்ளும் திருமணம். *'ஆ' வை இருதுணைமணம் செய்துகொண்டதற்காக 'இ' மீது வழக்குத் தொடுக்கப்படுகிறது (பி.43. எ.கா.(ஆ), இ.சா.ச)*; Bigamy.

இருப்புநிலை ஏடு *பெயர்*

காண்க : ஐந்தொகை.

இருமுனைக் குற்றவிதி *பெயர்*

புகலிடமளிக்கும் நாடு, வேண்டுகோள் விடுக்கும் நாடு ஆகிய இரு நாடுகளின் சட்டத்தின்படியும் குற்றம் தண்டிக்கத்தக்கதாக இருத்தல்வேண்டும் என்று அயலொப்படைப்பின்போது செய்துகொள்ளப்படும் பன்னாட்டுச் சட்ட வரைக்கட்டு (*ச.சொ.*1983); Rule of double criminality.

இருமைக் கொள்கை *பெயர்*

பன்னாட்டுச் சட்டமும் ஒரு நாட்டின் சட்டமும் இரண்டு தனிவேறுபட்ட முழுமையான சட்ட அமைப்புமுறைகள் என்னும் கோட்பாடு (*ச.சொ.*1983); Theory of dualism.

இல்லாதவர் *பெயர்*

வழக்கமாகத் தாம் தங்கிவாழுமிடத்தில் இல்லாத ஒருவர். *உறைவிடத்தில் இல்லாத நிலக்கிழார்* (*ச.சொ.*1968); Absentee.

இல்லாநிலையது *பெயர்*

பயனற்ற, சட்டத்தால் செயற்படுத்த முடியாத அல்லது விழலாகிற தன்மையுடையது. *சட்டமாக இயற்றத் தகுதிறம் அற்ற வகைமுறை இல்லாநிலையது ஆகும் (உறுப்.*123(3), *இ.அ.*); Void.

இல்லாநிலையில் *பெயரடை*

இருக்கவேண்டிய பணியில் அல்லது இடத்தில் இராத *தலைமை நீதிபதி இல்லாநிலையில் மிக்க முதுநிலை நீதிபதி முன்னிலையில் ஆணையுறுதி செய்யவேண்டும் (உறுப்.*60, *இ.அ.*); In the absence of.

இல்லாநிலையும் தவிர்தகுநிலையும் *பெயர்*

இல்லாநிலைச்செயல் இல்லாததாகவே கருதப்படுவதால் அதை உள்ளதாக்கி உறுதிப்படுத்த இயலாது; ஆனால், தவிர்க்கத்தக்க செயல் தவிர்க்கப்படலாம் அல்லது பின்னொரு செயலிலிருந்து எழும் பொருட்பாட்டினால் உறுதிப்படுத்தப்படலாம் (*ச.சொ.*1983); Void and voidable.

இலக்கணமுறைப் பொருள்கோள் *பெயர்*

செய்சட்டத்திலுள்ள சொற்றொடரின் போக்குத் தெளிவாகவும் மயக்கமின்றியும் ஒரே ஒரு பொருளைத் தருவதாகவும் இருப்பின், அதனை இயற்றிய சட்டமன்றத்தின் உட்கருத்தைப் புலப்படுத்தும் வகையில், சொல்லுக்குச்சொல் சட்டப்பொருளை மட்டுமே கொள்ளும் முறை (*ச.சொ.*2003); Grammatical interpretation.

இலச்சினை *பெயர்*

1. *காண்க* : முத்திரை.
2. கருத்து அல்லது பண்புக் குறியீடு (*ச.ஆ.சொ.க.*); Emblem.

இலஞ்சம் *பெயர்*

காண்க : கையூட்டு.

இழப்பீடு *பெயர்*

வழக்காளிக்கு ஏற்பட்ட தீங்குக்கு அல்லது இழப்புக்குச் சரியீடு கொடுப்பதற்காக நீதிமன்றம் எதிராளிக்கு விதிக்கும் தொகை. *ஒப்படைக்காமைக்கான இழப்பீடு* (*பி*.57, *ச.வி.ச.*); Damages.

இழப்பு *பெயர்*

பிறரது தவறான செய்கையினால் ஒருவருக்கு உண்டாக்கப்படும் கேடு அல்லது சேதம். *பற்றுகையால் விளைந்த இழப்பு* (*பி*.63, *மா.சி.நீ.ச.*); Damage.

இழிகடையான *பெயரடை*

ஒரு நூலைப் படித்தவரின் அல்லது படத்தைப் பார்த்தவரின் ஒழுக்கத்தைக் குலைக்கின்ற; *இளைஞர்களுக்கு இழிகடையான பொருள்களை விற்பனைசெய்தல்* (*பி*.293. *இ.த.தொ.ச.*); Obscene.

இளங் குற்றவாளி *பெயர்*

காண்க : குற்றச்சிறார்.

இளவர் *பெயர்*

சட்டப்படி உரிமைவயது எய்தாதவர். *இளவராக இருக்கும் வழக்காளி (= வாதி)* (*கட்*. 32. *வி*.12(1), *உ.ந.தொ.ச.*); Minor.

இறக்குந் தறுவாய்க் கொடை *பெயர்*

சாகும்நிலையில் இருப்பவர் மற்றொருவருக்கு அளிக்கும் நன்கொடை (*பி*.191, *இ.வ.ச.*); Gift mortis causa.

இறங்குரிமை *பெயர்*

காண்க : வழிமுறையுரிமை.

இறங்குரிமைக் கேடு *பெயர்*

மரபுரிமை முறையில் சொத்தை அடைவதற்கு ஏற்படும் தடை (*ச.சொ.*1983); Disinheritance.

இறங்குரிமைச்சொத்து வரி *பெயர்*

காண்க : அடைசொத்து வரி.

இறப்பாய்வு *பெயர்*

ஐயமுறும் சூழ்நிலையில் இறந்தவரின் சாவு பற்றிச் சட்டமுறைப்படி உசாவுகை; மரணவிசாரணை (*ச.சொ.*1983); Inquest.

இறப்பு *பெயர்*

(சூழ்நிலையிலிருந்து மாறானது தோன்றினால் அன்றி) சாவு; மரணம் (*பி.*46 *இ.த.தொ.ச.*); Death.

இறப்புத் தண்டனை *பெயர்*

சாகும்வரை தூக்கிலிடப்படவேண்டும் என்று கடுங்குற்றம் புரிந்தவருக்கு நீதிமன்றம் விதிக்கும் ஒறுப்பு. *இறப்புத் தண்டனையை அரசு வேறெந்தத் தண்டனையாகவும் மாற்றலாம்* (*பி.*54, *இ.த.தொ.ச.*); Sentence of death.

இறப்புத்தண்டனைக் குற்றம் *பெயர்*

சாவுத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்க பெருங்குற்றம். *இறப்புத் தண்டனைக்குரிய குற்றமாயின்.. ஏழாண்டு..., சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல்* (*பி.*214, *இ.த.தொ.ச.*); Capital offence.

இறப்புத் தீர்வை *பெயர்*

சொத்துரிமையர் இறந்தபின்பு அச்சொத்தினைப் பிறிதொருவர் அடையும்பொழுது விதிக்கப்படும் வரி *(ஆஸ்பார்ன்)* (*ச.சொ.*1983); Death duty.

இறப்புரை *பெயர்*

ஒருவர் இறக்கும் தறுவாயில் தமது இறப்புக்குக் காரணமான உடலூறுகள் (=காயங்கள்) ஏற்பட்டதைக் குறித்தோ அத்தகைய உடலூறுகள் ஏற்பட்ட சூழ்நிலைகள் குறித்தோ கூறும் வாக்குமூலம், மரணவாக்குமூலம் (*பி.*32(1), *இ.சா.ச*) ; Dying declaration.

இறுதிநிலைத் தீர்ப்பாணை *பெயர்*

காண்க : அறுதிநிலைத் தீர்ப்பாணை.

இறையாண்மை *பெயர்*

ஓர் அரசின் ஒப்புயர்வற்ற செயலாட்சி உரிமை; பேரரசாண்மை. *இந்தியாவை ஓர் இறையாண்மை மிக்க குடியரசாக அமைக்கவும்* (*முகப்புரை. இ.அ.*); Sovereignty.

இறையிலி *பெயர்*

தீர்வையின்றி நிலத்தையோ தீர்வையைத் தண்டல்செய்யும் உரிமையையோ மானியமாக அளிப்பது. *இறையிலி உரிமைய ஆவணங்கள்* (*பி.*90 (ஈ), *ப.ச.*); Inam.

இன்றியமையாச் சார்பினர் *பெயர்*

எந்த ஒருவரை வழக்கில் சார்பினராகச் சேர்க்காமல் ஓர் உரிமைக்கோரிக்கைக்கு நீதிமன்றத்தால் தீர்வுகாண முடியாதோ அந்த ஒருவர் (=அவசியமான தரப்பினர்). *நீதிமன்றம் அவர் ஓர் இன்றியமையாச் சார்பினர் அல்லர் என்று முடிவுசெய்தால் அவரை விடுவிக்கலாம்* (*கட்.*32 *வி.* 13(1), *உ.ந.தொ.ச.*); Necessary party.

இன்றியமையாத் துய்ப்புரிமை *பெயர்*

ஓங்கு சொத்தினை நுகர்வதற்குக் கட்டாயமாகத் தேவைப்படும் வசதிநலன் (*பி.*13, *இ.து.ச.*); Easement of necessity.

இனங்கொளல் விதி *பெயர்*

* குறித்தவகை இனங்கள் அடங்கிய பட்டியலுக்கு இறுதியில் பொதுவான சொற்றொடர் தொடருமானால், அச் சொற்றொடர் முன்பு குறித்த இனத்தில் அடங்கியுள்ள அதே வகையை அல்லது இயல்பைச் சுட்டும் என்பதான பொருள் விளக்க நெறி (*தனியார் அச்சக வரையம் எதிர் மிஸ்ரிலால்*, AIR 1970 *பஞ்சாப்* 1); Rule of ejusdem generis.

இனமுறைச் சட்டம் *பெயர்*

ஓர் இனத்தையோ வகுப்பையோ சேர்ந்தவர் என்னும் முறையில், வழிமுறையுரிமை, திருமணம் முதலியவை குறித்து அவரது தகுநிலை, உறவு அல்லது உரிமை பற்றிய விதிமுறை (*ச.சொ.*1968); Personal law.

இனாம் *பெயர்*

காண்க : இறையிலி.

ஈ

ஈட்டடைமானம் *பெயர்*

அடைமானம்வைப்பவர் அடைமானச் சொத்தின் உடைமையைத் தாமே வைத்துக்கொண்டு, ஒப்பந்தப்படி அடைமானத் தொகையை செலுத்தத் தவறுகையில், தமது சொத்தை அடைமானம்பெறுபவர் விற்று அவருக்குச் சேரவேண்டிய தொகையை எடுத்துக் கொள்ளலாம் எனத் தம்மைக் கட்டுறுத்திக்கொள்ளும் அடைமான வகை (*பி*.58 (*ஆ*), *சொ.மா.ச.*); Simple mortgage.

ஈட்டிய வருமானம் *பெயர்*

வரிக்கணிப்புறுநராகவுள்ள தனிப்பட்ட ஒருவர், பிரிவினையாகாத இந்து குடும்ப உறுப்பினர், வருமான வரிச்சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்டிராத ஒரு நிறுவகம், ஆட்களின் சங்கம் அல்லது தனிப்பட்டவரின் குடும்பம் பெறும் வருவாய். (*பி*.183,(*அ*), *வ.வ.ச.*); Earned income.

ஈட்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கொடை எனக் கொள்ளாமல், ஒருவர் தமது முயற்சியால் உழைத்து உடைமை கொள்ளுதல். *ஈட்டும் திறமை* (*பி*.51 (*ஆ*), *ஊ.அ.கா.ச.*); To earn.

ஈட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. * உடைமையாக ஒன்றைப் பெறுதல் (*இராதாபாய் எதிர் மகாராஷ்டிர அரசு* AIR 1939 PC 159); To acquire.
2. அயல்நாட்டு நாணயமாற்றை முயன்று பெறுதல் (*பி*.8(4), *அ.நா.ஒ.ச.*); To acquire.

ஈட்டுநர் *பெயர்*

உழைப்பினால் ஒன்றை உடைமை கொள்பவர் (*பி*.2 (*அ*) *இ.க.ஆ.ச.*); Acquirer.

ஈட்டுறுதிசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவர் ஒன்றைச் செய்வதாலோ செய்யத் தவறியதாலோ மற்றொருவருக்கு ஏற்படும் இழப்பைச் சரியீடுசெய்தல் (*பி*.244(2), *நி.ச.*); To indemnify.

ஈட்டூதியம் *பெயர்*

i. ஊழியர்கள் பொறுத்து ஈட்டங்கள் என்பது உழைப்புக் காலத்தின்போது பெற்ற பணத்தொகை;

ii. நிறுமத்தைப் பொறுத்து, ஆதாயத்தின்மீது நேரடி வரிவிதிப்பைக் கழித்தபின்னருள்ள ஆதாயம், ஈட்டங்கள்.

* *வேலையாள் வேலைதருநருக்குச் சொந்தமான வீட்டில் குடியிருக்க இடங்கொடுத்தல் வேலைதருநர் தந்த சீருடையைப் பயன்படுத்துதல் ஆகியவை, அவருடைய ஈட்டூதியங்களை மதிப்பிடும்போது கூடுதல் ஊதியங்களாகக் கருதப்படுதல் வேண்டும் (பெரிய வடக்கு இருப்புப்பாதை எதிர் டாவ்சன்* (1905) 1 KB 331); Earnings.

ஈரவைச் சட்டமன்றம் *பெயர்*

பேரவை மேலவை என இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமியற்றும் அவையம். *ஒருவர் நாடாளுமன்ற ஈரவைகளில் ஏதொன்றிலும் உறுப்பினராக இருக்கிறார் என்றால் (பி.*135 (*அ*) (i) (*அ*), *உ.ந.தொ.ச.*); Bicameral legislature.

உ

உச்சநிலையான *பெயரடை*

மிகவும் உயர்ந்த அதிகாரவரம்பு கொண்ட. *உச்சநிலையான மறுபயன் (பி.* 13(1), *இ.இ.கா.ச.*); Paramount.

உச்ச நீதிமன்றம் *பெயர்*

இந்திய ஒன்றியத்தின் (அனைத்து நீதிமன்றங்களுக்கும் தலைமையான) முதன்மை நீதிமன்றம். *இந்திய உச்ச நீதிமன்றம் என ஒன்று இருத்தல் வேண்டும் (உறுப்.* 124(1), *இ.அ.*); Supreme court.

உசாவுகை *பெயர்*

ஆணையுறுதி செய்த சான்றுரைஞரை வினாக்கள் கேட்டு உண்மை விளக்கம் பெறுகை (= விசாரணை)

* உசாவுகை முடியும்போது வழக்காய்வு தொடங்குகிறது (*கிங்கம் சவரண்ணா எதிர் அரசு* AIR 1957); Enquiry.

உசாவுகைக்குக் கொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டமுறைப்படி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முறையீட்டின் உள்ளடக்கத்தில் நீதிபதி தமது கருத்தைச் செலுத்துதல், விசாரணைக்குக் கொள்ளுதல்.

* முறையீட்டில் அமையாத நோக்கங்களில் நீதிபதி தமது கருத்தைச் செலுத்தியிருக்கிறவிடத்து, அவர் உசாவுகைக்குக் கொண்டிருக்கிறார் எனச் சொல்லமுடியாது (*கோபால்தாஸ் எதிர் அசாம் அரசு* 1961 SC 986); To take cognisance.

உசாவுகைக்கூண்டு *பெயர்*

குற்றஞ்சுமத்தப்பட்டவரை நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்காக நிறுத்திவைக்கும் இடம் (*ச.சொ.*1968); Bar.

உசாவுகை முடிவுறாநிலை *பெயர்*

வழக்கு நடவடிக்கை முடிவடையாமல் இருக்கும் நிலை (*ச.ஆ.சொ.க.*); Pending enquiry.

உட்கருத்து *பெயர்*

ஒரு செயல் செய்யப்படுவதன் நோக்கம் அல்லது எண்ணம். *மன்றத் தீர்மானத்தை முன்மொழியும் உட்கருத்து (உறுப். 90, இ.அ.)*; Intention.

உட்கிடை *பெயர்*

நேரடியாக விளம்புரை செய்யாதபோதும் செயல்கள் அல்லது சொற்களிலிருந்து கொள்ளத்தக்க ஊகம் (*ச.சொ.*1979); Implication.

உட்கிடையான ஒப்பந்தம் *பெயர்*

உள்ளமைவாகவோ தொடர்புடைய சார்பினர்களின் செயல்களிலிருந்து துணிபுகொள்ளும் வகையிலோ வரையீடுகள் அமைந்த உடன்பாடு. *நடைமுறை; வெளிப்படையான அல்லது உட்கிடையான ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழுகிறது (பி.*128 (2) (*ஊ*) (i), *உ.ந.தொ.ச.*); Implied contract.

உட்கை *பெயர்*

உடந்தை, ஆதரவு; (*ச.ஆ.சொ.க.*); Connivance.

உட்கையாயிரு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முறைகேடான செயல் நடைபெறுகின்றது என்பதை அறிந்திருந்தும், அதில் தலையிட்டுத் தடுக்கவேண்டிய கடமை இருந்தும் அதைக் கண்டுங்காணாதிருத்தல்; மறைமுக ஆதரவுதருதல். *சட்டமுரணான கும்பலில் உறுப்பினர் ஆவதற்கு... உட்கையாயிருக்கிற எவரொருவரும் (பி.*150, *இ.த.தொ.ச.*); To Connive.

உடந்தைக்குற்றம் *பெயர்*

ஒரு செயலைச் செய்யுமாறு மற்றவரைத் தூண்டிவிடுவது; சட்டமுரண்பாட்டை விளைவிக்கும் செயலைப் பிறருடன் கூடிச் சதிசெய்வது; ஒரு செய்கை அல்லது சட்டமுரணான விடுகைமூலம் வேண்டுமென்றே உதவிபுரிவது. *'இ'-யைச் சிறை செய்யத் தூண்டியதன்மூலம் 'ஆ' உடந்தைக் குற்றம் செய்தவராகிறார் (பி.*107, *வி.கா, இ.த.தொ.ச.*); Abetment.

உடந்தைக்குற்றவாளி *பெயர்*

சட்டமுரணான செயலுக்கு உதவிசெய்பவர். *கொலைசெய்யும் பொருட்டு 'ஆ'வுக்கு 'அ' உடந்தைக் குற்றவாளி ஆகிறார் (பி.*108, *வி.கா.(அ) இ.த.தொ.ச*); Abettor.

உடந்தையாயிரு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் குற்றம்செய்ய உதவுதல், தூண்டுதல் அல்லது ஊக்குவித்தல். *படைவீரர் கலகம் செய்வதற்கு உடந்தையாயிருக்கிற எவரொருவரும் (பி.*132, *இ.த.தொ.ச.*); To abet.

உடலூறு *பெயர்*

ஒருவரின் உடலுக்கு வலி, நோய், தளர்ச்சி (=இயலாமை)யை விளைவிப்பது *இருபதுநாள்... அலுவல்களைச் செய்ய இயலாதபடி செய்கிற உடலூறு (பி.* 320 *எட்டாவதாக, இ.த.தொ.ச.*); Hurt.

உடன்குற்றவாளி *பெயர்*

குற்றச்செயலில் பங்கேற்கும் கூட்டாளி; கூட்டுக் குற்றவாளி. *ஓர் உடன்குற்றவாளி எதிராளிக்கு எதிராகச் சான்றளிக்கத் தகுதிவாய்ந்தவராவார் (பி.*133, *இ.த.தொ.ச.*); Accomplice.

உடன்துரத்திப்பிடிக்கும்உரிமை *பெயர்*

தப்பிச்செல்லும் கப்பலையோ அதன் துணைப் படகுகளையோ உள்நாட்டுக் கடல் அல்லது ஆட்சிப்பரப்புக்கடலுக்குள் இருக்கும்போதே உடனடியாக விரட்டிச்சென்று, மற்ற நாட்டு ஆட்சிப்பரப்புக்கடல் பகுதிக்குள் நுழைவதற்கு முன்பு பிடித்துத் துறைமுகத்திற்குக் கொண்டுவந்து உசாவுகை (=விசாரணை) செய்யக் கரைநாட்டிற்குள்ள உரிமை (*ச.சொ.* 1968); Right of hot pursuit.

உடன்பங்குரிமையர் *பெயர்*

பிரிவினையாகாத இந்துக் குடும்பத்தினர் சொத்தில், பிறப்பினாலேயே பிரிவினை கோரும் உரிமைப்பாடுள்ளவர்; கூட்டுப்பங்காளி. *இந்துக் குடும்பத்தின் உடன்-பங்குரிமையர்* (*பி.* 2 (12) (iii) *அ.சொ.வ.ச.*); Coparcener.

உடன்படிக்கை *பெயர்*

இருவருக்கு அல்லது குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையே முறைப்படி செய்துகொள்ளப்படும் உடன்பாடு. *விற்பனைக்கான உடன்படிக்கை* (*பி.*299 *வி.கா.(அ), இ.ஒ.ச.*); Treaty.

உடன்பாடு *பெயர்*

செய்த அல்லது செய்யவிருக்கிற ஒரு செயல் குறித்து இருவரோ அதற்கு மேற்பட்டவரோ கொள்ளும் கருத்தொற்றுமை. *வெளிப்படை உடன்பாடு* (*பி.* 43, *இ.ஒ.ச.*); Agreement.

உடன்பிறப்புணர்வு *பெயர்*

ஒருதாய்வயிற்று மக்களைப் போன்ற மனநிலை. *நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் உடன்பிறப்புணர்வை வளர்த்தல்* (*முகப்.* *இ.அ.*); Fraternity.

உடனுறைவு *பெயர்*

திருமணமாகாத ஒருவனும் ஒருத்தியும் கணவன் மனைவியைப் போன்று கூடிவாழும் வாழ்க்கை. *ஒரு பெண்ணை வஞ்சித்துத் தம்முடன் உடனுறைவு அல்லது உடலுறவு கொள்ளச்செய்யும் ஆடவர்* (*பி.*493, *இ.த.தொ.ச.*); Cohabitation.

உடற்கட்டாயம் *பெயர்*

ஒப்பந்தத்தின் மற்றைச் சார்பினரின் இசைவைப் பெறும்பொருட்டு உடல் துன்பம் விளைவிப்பது, சிறைப்படுத்துவது அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்துவது (*பி.*19 (xvii) *நீ.க.ச.*); Duress.

உடைமை *பெயர்*

சிலரைத் தவிர அனைவருக்கும் எதிராக ஒரு பொருள்மீது நேரடியான கட்டுப்பாடு செலுத்துவதையும் அதை வெளிப்படுத்தும் உட்கருத்தையும் புலப்படுத்தும் நிலை.
** சொத்தின் உடைமை குறித்து மேல்முறையீடுநர் உசாவுகை எதுவும் செய்யவில்லை (பாபா ஷா எதிர் ஹாஜி முகமது*, 45 MLJ); Possession.

உடைமைமீட்பு *பெயர்*

அண்மையில் கைவிட்டுப்போன சொத்தினை மீண்டும் ஏற்றுக்கொள்ளுகை அல்லது எடுத்துக்கொள்ளுகை (*ச.சொ.*1968); Re-entry.

உடையவர் *பெயர்*

ஒரு பண மாற்றுச்சீட்டையோ கடனுறுதிச்சீட்டையோ தமது உடைமையில் கொண்டிருப்பவர் (*பி.* 9, *மா.மு.ச.*); Holder.

உடைமையுரிமை *பெயர்*

ஓர் உடன்பாட்டாலோ ஒப்பந்தத்தாலோ தடுக்கப்பட்டால் தவிர, நுண்பொருள் அல்லது பருப்பொருள் சொத்தைத் தம் விருப்பம்போல் துய்ப்பதற்கும், அதில் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்குமான தன்னுரிமை நிலை. *வளவாயில்களின் உடைமையுரிமை பொதுநலத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது* (*உறுப்.* 39 (ஆ), இ.ஆ.); Ownership.

உடைமையுரிமைப் பொருள் *பெயர்*

உரிமையாளராக மட்டுமன்றி உள்ளபடியே நேரடிக் கையுடைமைகொண்டு துய்க்கும் நிலையிலுள்ள அசையும் சொத்து; கையுரிமைப்பொருள் (*பி.* 130(1) *சொ.மா.ச.*); Chose in possession.

உணவு இல்லம் *பெயர்*

வாடிக்கையாளர்கள் ஒரு தடவையில் உணவு அல்லது உண்பொருள் பெறத்தக்க ஓர் உண்டிச்சாலை.

* *உணவை ஆக்குகிற, விற்கிற, சேமித்துவைக்கிற காட்சிக்கு வைக்கிற இடத்திலிருந்து அத்தகைய உணவு இல்லம் வேறுபடுத்தியறியத் தக்கது* (*சென் மாகசே எதிர் கல்கத்தா மாநகராட்சி மன்றம்* AIR 1966 Cal.203); Eating house.

உதவிஉடந்தையாயிரு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

குற்றத்தைச் செய்யுமாறு ஒருவர் மற்றொருவரைத் தூண்டுதல் அல்லது ஊக்குவித்தல் (*ச.சொ.*1968); To aid and abet.

உதவிமானியம் *பெயர்*

ஒரு துறையின் செயல்நிகழ்வுக்கோ அதன் உயர் தரத்தை உறுதிசெய்யவோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவோ, அரசு அதிகாரமுறையில் வழங்கும் பணம் (*ச.ஆ.சொ.க.*); Grant-in-aid.

உதவுதல் *பெயர்*

குற்றம்புரிய ஆதரவு அளித்தல் அல்லது துணைசெய்தல். *தப்பிக்க உதவுதல்* (*பி.* 166 *க.ச.*); Aiding.

உயர் நீதிமன்றம் *பெயர்*

குடியரசுத்தலைவர் அவ்வப்போது தேவையெனக் கருதுகிற எண்ணிக்கையுள்ள நீதிபதிகள் அடங்கியதாகவும், ஒரு தலைமை நீதிபதியை உடையதாகவும், தன்னை இகழ்ந்தவரைத் தண்டிக்கும் அதிகாரமுள்ள மாண்புறுத்து நீதிமன்றமாகவும் உள்ள ஒரு மாநிலத் தலைமை அறங்கூறவையம். *மாநிலம் ஒவ்வொன்றுக்கும் ஓர் உயர் நீதிமன்றம் இருத்தல் வேண்டும்* (*உறுப்.*214, இ.அ.); High Court.

உயிர் *பெயர்*

சூழ்நிலையிலிருந்து மாறானது தோன்றினால் அன்றி மனித உயிர்; ஆயுள் (*பி.*45, *இ.த.தொ.ச.*); Life.

உயில் *பெயர்*

காண்க : விருப்பாவணம்.

உரிமம் *பெயர்*

ஒரு செயலைச் சட்டப்படி செய்வதற்கான இசைவளிப்பு அல்லது அதிகாரவுரிமை. *உரிமத்தை அளிக்க... அதிகாரம் இருந்ததில்லை* (*பி*.117, *இ.சா.ச.*); Licence.

உரிமம்பெறுநர் *பெயர்*

உரிமம் வழங்கப்பெற்றவர். *உரிமம்பெறுநர் மறுப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது* (*பி*.117, *இ.சா.ச.*); Licensee. .

உரிமம்வழங்குநர் *பெயர்*

உரிமம் வழங்க அதிகாரவுரிமை பெற்றவர். *உரிமம்வழங்குநருக்கு அதிகாரம் இருந்ததில்லை என்பதை மறுத்தல்...* (*பி*.117, *இ.சா.ச.*); Licensor.

உரிமை *பெயர்*

1. சட்டப்படி காப்பளிக்கப்பட்ட ஒரு நலன்; Right.
2. குறித்துரைத்த முறையில் செயல்புரியவோ செய்வதிலிருந்து விலகியிருக்கவோ சட்டத்தால் காப்பளிக்கப்படும் தன்னுரிமை (*ச.சொ.*1983); Right.

உரிமை அறுநிலை *பெயர்*

ஓர் உரிமையோ நலனோ உளதாகும் நிலை அழிவுறுவது (*பி*.60, *சொ.மா.ச.*); Extinguishment of right.

உரிமைஇறக்கம் *பெயர்*

ஒருவர் இறந்ததும் அவரது சொத்தைப்பெறும் உரிமை மற்றவரைச் சென்றடையும் நிலை (*பி*.25, *இ.வ.மு.ச.*); Succession.

உரிமைக்கோரிக்கை *பெயர்*

குறைதீர்வழியைக் கண்டறியும் அல்லது உறுதிசெய்யும் உரிமை; கோருரிமை. *பூசலுக்குட்பட்ட சொத்தில் உரிமைக்கோரிக்கை எதையும் கொண்டாடுபவர்...* (*பி*.155, *இ.த.தெர.ச.*); Claim.

உரிமைகோருநர் *பெயர்*

ஒரு சொத்திலோ உரிமையியல் நடவடிக்கையிலோ சொந்தங் கொண்டாடுபவர் (= பாத்தியதார்). *ஆவணத்தின் வழியே உரிமைகோருநர்* (*பி*.55(5), *ப.ச.*); Claimant.

உரிமைத்தீங்கு *பெயர்*

ஒப்பந்த முறிவு என்னும் நிலையிலிருந்து வேறுபடுவதும், ஒருவரது நலனுக்கு மற்றொருவர் செய்யும் கேடு ஆவதும், அறுதியிடாத இழப்பீட்டைத் தீர்வழியாகப் பெறுவதுமாகிய தீமை (*பி*.2, (*க*) *கா.வ.ச.*); Tort.

உரிமை தபுநிலை *பெயர்*

ஒருவர் உயிருடன் இருந்தாலும் குடியியல் உரிமைகள் அனைத்தையும் இழந்தநிலையில் அவ்வுரிமைகளைப் பொறுத்தமட்டில் இறந்தவராகக் கருதப்படும் நிலை (*ச.சொ.*1983); Civil death.

உரிமைதுறப்பு *பெயர்*

தம்முடையது எனத் தாமறிந்த உரிமையை மனமாரவோ தன்விருப்பாகவோ விட்டுவிடுதல் அல்லது உரிய நேரத்தில் வற்புறுத்தாதிருத்தல். *வெளியேற்றுகைக்கான அறிவிப்பைக் குறித்த உரிமைதுறப்பு* (*பி*.113, *சொ.மா.ச.*); Wavier.

உரிமையம் *பெயர்*

சட்டப்படியான நலன் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமாக உள்ளதும், சொந்தக்காரரை உற்றடைவதற்குக் காரணமானதுமாகிய பொருளியம் அல்லது நிகழ்வு.

* *இந்த வழக்கில் உரிமையத்திற்கான உட்கிடை இணக்கஒப்பந்தம் உள்ளது (ஹில்லய்யா எதிர் நாராயணப்பா* 36, *பம்பாய்* 185); Title.

உரிமைய அடைமானம் *பெயர்*

தமக்குக் கடன்கொடுத்தவரிடம் காப்புறுதிப்பிணையமாகத் தம் சொத்தின் உரிமைமூல ஆவணங்களை அடைமானம்வைப்பவர் ஒப்படைக்கும் ஒரு வகை (*பி*.58(8), *சொ.மா.ச.*); Mortgage by deposit of title deeds; Equitable Mortgage.

உரிமையியல் *பெயர்*

குற்றவியலுக்கு அல்லது படைத்துறையியலுக்கு மாறான துறை; குடிமையியல். *அரசு ஒரு சீரான உரிமையியல் தொகுப்புச்சட்டத்தைக் குடிமக்களுக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்* (*உறுப்*.44, *இ.அ.*); Civil.

உரிமையியல் நீதிமன்றம் *பெயர்*

குடிமக்களின் தனி உரிமைகளைப் பொறுத்த வழக்கை ஆராய்ந்து உரிய குறைதீர்வழியை வழங்குவதற்கான அறங்கூறவையம். *முதலேற்பு அதிகாரவரம்புள்ள உரிமையியல் நீதிமன்றம்* (*பி*.34, *இ.பொ.க.ச.*); Civil court.

உரிமையிலிப் பொருள் *பெயர்*

சட்டமுறைப்படி உரிமைகோரும் சொந்தக்காரர் இல்லாத சொத்து; விருப்பாவணம் எழுதாமலோ வழித்தோன்றல்கள் இல்லாமலோ இறந்துபோனவரின் உடைமை (*உறுப்*.296, *இ.அ.*); Bona vacantia.

உரிமையூதியம் *பெயர்*

1. சுரங்க உரிமையாளருக்குச் செலுத்தவேண்டிய தொகை.

2. புனைவுரிமையைப் பயன்படுத்துவதற்காகவோ புத்தக விற்பனை மீதோ பதிப்பாளர் நூலாசிரியருக்குத் தரவேண்டிய தொகை (*ச.சொ.*1979); Royalty.

உரிமையூறு *பெயர்*

ஒருவருடைய உடலுக்கு, புகழுக்கு அல்லது சொத்துக்கு விளைவிக்கும் தீங்கு; கேடு. *உரிமையூறு என்னும்சொல் சட்டத்துக்கு மாறாகச் செய்யப்படும் தீங்கு எதையும் குறிக்கும்* (*பி*.44, *இ.த.தொ.ச.*); Injury.

உரிமைவயதினர் *பெயர்*

சட்டப்படி ஒரு செயலைத் தாமே செய்யும் தகுதிறம் கொண்டவர். *உரிமைவயதினர் இளவரின் காப்பாளராகச் செயற்படலாம்* (*கட்*.32 *வி*. 4(1), *உ.ந.தொ.ச.*); Major.

உரிமைவயதுஅடையாதவர் *பெயர்*

காண்க : இளவர்.

உரிமைவழக்கு *பெயர்*

ஒருவர் மற்றவர்மீது நீதிமன்றத்தில் கொணரும் குற்றவியல்பு அல்லாத சட்ட நடவடிக்கை. *உரிமை வழக்குகளும் நடவடிக்கைகளும்* (*உறுப்*.300, *இ.அ.*); Suit.

உரிமைவிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சட்டப்படி ஓர் நலனை முற்றிலுமாகவோ பகுதியாகவோ விட்டுவிடுகை. *தீர்ப்பாணை பெறுநருக்கு உடைமை மீதான உரிமை விடப்படுகிற வரையில் குத்தகைபற்றி உசாவுகை செய்ய ஆணையிடலாம்* (*கட்*.20, *வி*. 12, (1) (இ) (iii) *உ.ந.தொ.ச.*); To relinquish.

உரிமைவிரைவுக் கோட்பாடு *பெயர்*

ஒரே சொத்தில் அடுத்தடுத்து இருவர் உரிமைமாற்றல் பெறுபவர்களாக இருக்கும் நிலையில், முதலில் உரிமைமாற்றல் பெறுபவர் தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறினால், அடுத்துள்ளவரின் உரிமைமாற்றல் உரிய காலத்துக்கு முன்னதாகவே செயற்பாட்டுக்கு வந்துவிடும் என்பதான விதிமுறை (*பி*.27, *சொ.மா.ச.*); Doctrine of acceleration.

உரிய *பெயரடை*

பொருத்தமாகவும் சிறப்பாகவும் உள்ள. *உரிய அரசு* (*பி*.2 (*ஈ*), *ப.ப.ச.*); Appropriate.

உரிய சட்டமுறை *பெயர்*

அமெரிக்க நீதிமன்றங்களால் அமெரிக்க அரசமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதும், முறையான சட்ட நடவடிக்கை பின்பற்றப்படவேண்டும் என்பது மட்டுமல்லாமல் சட்டம் பகுத்தறிவுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்பதுமான கோட்பாடு (*பி*.6(3), *அ.வே.கை.ச.*); Due process of law.

உரியது *பெயர்*

சட்டப்படியும் நீதிப்படியும் கொடுக்கவோ செய்யவோ தகுந்தது (*ச.சொ*.1983); Due.

உரிய போக்கில் உடையவர் *பெயர்*

ஒரு மாற்றுச்சீட்டிலுள்ள குறைபாட்டை அறியாமல் காலக்கெடு முடியுமுன் உரிய தொகை கொடுத்து நல்லெண்ணத்தில் அதைப் பெற்றிருப்பவர் (*பி*. 9. *மா.மு.ச.*); Holder in due course.

உரியரிலாநிலை *பெயர்*

உரிமைகோருநர் இல்லாத சொத்தின் நிலை (*ச.சொ*.1983); Abeyance.

உரைச்சான்று *பெயர்*

நீதிமன்றத்திலோ தீர்ப்பாயத்திலோ சான்றுரைஞர் அளிக்கும் வாய்மொழிக் கூற்று. *சான்றுரைஞரின் உரைச்சான்றுக்கு உறுதியூட்டும்பொருட்டு* (*பி*.157, *இ.சா.ச.*); Testimony.

உரையாளி *பெயர்*

ஒரு மனு அல்லது மேல்முறையீட்டுக்கு மறுமொழியளிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளவர் (= எதிர் மனுதாரர்) (*கட்*. *வி*.11, *உ.ந.தொ.ச.*); Respondent.

உழைக்கும் கூட்டாளி *பெயர்*

ஒரு கூட்டாண்மை நிறுவகத்தின் அலுவல்தொழிலில் பெருமளவு தமது முழு நேரத்தையும் ஈடுபடுத்திச் செயல்புரியும் ஒருவர் (*பி*. 2(18) *அ.ஆ.வ.ச.*); Working partner.

உழைப்பூதியம் *பெயர்*

செய்த வேலைக்கு மறுபயனாக ஊழியர், தொழிலாளி அல்லது வேலையாளுக்குக் கொடுக்கத்தக்க பணம்; கூலி. *உழைப்பூதியத்தின் கால அளவு* (*பி*.1(6), *உ.கொ.ச.*); Wages.

உள்நாட்டுச் சட்டம் *பெயர்*

பன்னாட்டுச் சட்டம் போலன்றி (அதற்கு எதிர்நிலையில்) ஒரு நாட்டின் குடிமக்களுக்கு மட்டுமே தொடர்புடைய சட்டம் (*ச.சொ.*1979); Municipal law.

உள்நோக்கம் *பெயர்*

ஒரு செயல் புரிவதன் முடிவான உட்கருத்து. *தாம் செய்ய உள்நோக்கம் கொண்டிருந்த ஒன்று* (*பி*.161, *இ.த.தொ.ச.*); Motive.

உள்ளநிலை *பெயர்*

ஏதொன்றும் இதுவரையில் இருந்த நிலை (*ச.சொ.*1983); Status quo.

உள்ளபடியான *பெயரடை*

மெய்யாகவே இருந்துவருகிற. *உள்ளபடியான இழப்பு* (*பி*.74, *இ.ஒ.ச.*); Actual.

உள்ளுறை குறைபாடு *பெயர்*

மேற்போக்கான ஆய்வின்மூலம் எளிதில் வெளிப்படையாகப் புலப்படாத பிழை (*பி*.73 (*ஏ*), *இ.இ.ச.*); Latent defect.

உள்ளுறை பொருள்மயக்கம் *பெயர்*

ஆவணவாசகத்தில் வெளிப்படத் தோன்றாத நிலையில் இரு பொருள்தரும் சொல்லமைப்பு (*ச.சொ.*1983); Latent ambiguity.

உளத்தேர்வு *பெயர்*

எல்லா நேர்வுகளிலும் ஆளுகைசெய்யும் குறிப்பிட்ட சில விதிகளைப் பின்பற்றுவதற்கு எதிர்நிலையில், குறிப்பிட்ட ஒரு சூழலில் மிகச் சிறந்தது எது எனத் தீர்மானிக்கும் சொந்த முடிவு. *உச்சநீதிமன்றம் தன் உளத்தேர்வுப்படி சிறப்பு இசைவாணை வழங்கலாம்* (*உறுப்*.136(1), *இ.அ.*); Discretion.

உளமை *பெயர்*

ஒருபொருள் இருக்கின்றது என்னும் உண்மைவிவரம் அல்லது நிலை. *பொதுமக்களுக்கான உரிமையின் உளமை* (*பி*. 137(1), *கு.ந.தொ.ச.*); Existence.

உற்றடை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

* முழுமையாக உடைமையுரிமையையோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உடைமையை மட்டுமோ கொண்டிருத்தல் அல்லது வேறு ஒருவரின் அல்லது அதிகாரஅமைப்பின் முகவராகச் செயற்படுவதற்கான அதிகாரவுரிமை பொருந்தியிருத்தல், மேவி நிற்றல் (*காய்கனி வணிகர் சங்கம் எதிர் டில்லி மேம்பாட்டுப் பொறுப்புக்கட்டளை* AIR 1957 SC 344); To vest.

உற்றடை நலன் *பெயர்*

ஒரு சொத்து மாற்றலின்போது எழும் நலன் செயல்விளைவுகொள்வது எப்போது எனக் குறித்துரைக்கப்படாத நிலையிலும், உடனடியாகச் செயல்விளைவு கொள்ளவேண்டிய அல்லது நிகழவேண்டிய ஒன்று நிகழ்ந்தபின்பு எனக் குறித்துரைக்கப்படுகிற நிலையிலும், ஆள் ஒருவரின் சார்பாக உருவாக்கப்படும் உரிமை (*பி*.19, *சொ.மா.ச.*); Vested interest.

உறவுவழியர் *பெயர்*

குருதித் தொடர்பினாலோ மகவேற்பு வழியினாலோ முற்றிலும் ஆண்கள் ஊடாக அல்லாமல் ஆண் பெண் ஆகிய இருவர்வழியிலும் உள்ள சொந்தக்காரர் (*பி*.3Cognate(1), இ.*வ.ச.*); Cognate.

உறுத்தம்செய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றின்மீது செயல்விளைவு உண்டாக்குதல்; பாதித்தல். *உட்கூறிலுள்ள எதுவும் நிலவிவரும் சட்டத்தின் செயற்பாட்டை உறுத்தம்செய்தல் ஆகாது* (*உறுப்*. 19(2), இ.*அ.*); To affect.

உறுத்துக்கட்டளை *பெயர்*

ஒரு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யவோ செய்யாதிருக்கவோ, வழக்காடும் சார்பினருக்கு நீதிமன்றம் இடும் ஆணை. *நீதிமன்றம் தற்காலிக உறுத்துக்கட்டளையைப் பிறப்பிக்கலாம்* (*கட்*. 39 *வி*. 1, *உ.ந.தொ.ச.*); Injunction.

உறுதிச்சான்றளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உண்மை என ஒப்புறுதி செய்தல் *வரியின் அடைதொகை தணிக்கைத் தலைவரால் உறுதிச்சான்றளிக்கப்படுதல் வேண்டும்* (*உறுப்*. 279(1), இ.*அ.*); To certify.

உறுதிச்சான்று *பெயர்*

காண்க : சான்றிதழ்.

உறுதிமரபுரிமையர் *பெயர்*

மூதாதையருக்குப் பின்னும் வாழ்ந்து வழிமுறையுரிமை பெறுபவர் (*பி*.6(*அ*), *சொ.மா.ச.*); Heir apparent.

உறுதிமொழி *பெயர்*

பொதுஅலுவலர் முன்னிலையிலோ, நீதிமன்றத்திலோ ஒன்றை மெய்யென்று சட்டப்படியும் வினைமுறை (=சடங்கு) யுடனும் கூறும் உறுதியுரை அல்லது விளம்புரை; வாக்குறுதி (*பி*.51, இ.*த.தொ.ச.*); Promise.

உறுதிமொழிதருநர் *பெயர்*

ஒன்றைச் செய்யும் அல்லது தவிர்க்கும் தம் விருப்பத்தைத் தெரிவிப்பவர். *உறுதிமொழிதருநர் மன்னிக்கப்படுகிறார்* (*பி*.67, இ.*ஒ.ச.*); Promisor.

உறுதிமொழிபெறுநர் *பெயர்*

மற்றவர் செய்யும் உறுதிமொழியை ஏற்றுக்கொள்ளுபவர் (*பி*.2, (x) (இ), இ.*ஒ.ச.*); Promisee.

உறுதியுரை *பெயர்*

ஆணையிட்டுக் கூறும் சூளுரைபோல் அல்லாமல் மனச்சான்றுக்கு ஏற்பக் கூறும் விளம்புரை; மெய்யுறுதி. *குடியரசுத் தலைவரின்... உறுதியுரை* (*உறுப்*.60, இ.*அ.*); Affirmation.

உறுதியொப்பமிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஆவணயேடு உரிய சட்டமுறையையும் சட்டப்படி செல்லுநிலையையும் உடையது என்று அதிகாரம்பெற்ற அலுவலர் சான்றிதழ் அளித்தல். *குடியரசுத்தலைவர் பெயரில் இடப்படும் ஆணைகள்... உறுதியொப்பமிடப்பட* வேண்டும் (*உறுப்*.77(2), இ.*அ.*); To authenticate.

உறுப்பினர் *பெயர்*

அவை, குழு அல்லது சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர். *சட்டமன்ற உறுப்பினரின் ஆணையுறுதி* (*உறுப்*.188, *இ.அ.*); Member.

உறுப்பு *பெயர்*

ஓர் ஆவணத்தின் அல்லது சட்டத்தின் தனிச்சிறப்பான கூறு, வாசகம் அல்லது பத்தி; விதிமுறை *சட்டத்தின் செயற்பாட்டை இந்த உறுப்பிலுள்ள எதுவும் உறுத்தஞ்செய்தல் ஆகாது* (*உறுப்*.16(5), *இ.அ.*); Article.

உறையுள் *பெயர்*

ஒருவர் தம் குடும்பத்துடன் வாழ்கின்ற, இரவில் உறங்குகின்ற, சிலநேர்வில் வேலைசெய்கிற இடம் (*பி*.52, (*ஆ*) (*இ*), *வரம். ம.வி.ச.*); Abode.

ஊ

ஊகக்குறிப்பு *பெயர்*

செயல்கள் அல்லது சொற்களிலிருந்து நேரடியாகப் புலப்படாவிட்டாலும் அவற்றிலிருந்து உய்த்துணரத்தக்க துணிபு (*ச.சொ*.1968); Implication.

ஊதியம் *பெயர்*

பணியைப் பொறுத்து ஒருவருக்குக் கொடுக்கப்படும் படித்தொகை அல்லாத பணத்தொகை. *ஆண்கள் பெண்கள் இரு சாராருக்கும் ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியம் உண்டு என்பதை அரசின் கொள்கை நெறிப்படுத்த வேண்டும்* (*உறுப்*. 39, (*ஈ*), *இ.அ.*); Pay.

ஊர்தியர் *பெயர்*

பணம் பெற்றுக்கொண்டு மற்றவருடைய பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுசெல்பவர் (*முகப். இ.க.ப.கொ.ச.*); Carrier.

ஊழல் *பெயர்*

கையூட்டு அல்லது அது போன்றதன்மூலம் நேர்மை தவறுகை. *ஊழல் அல்லது சட்டமுரணான வழிகள்* (*பி*.162, *இ.த.தொ.ச.*); Corruption.

ஊறுபாடின்றி *வினையடை*

இயல்புக்கு, உரிமைக்கு அல்லது தீர்வழிக்குக் கேடில்லாமல். *முன் சென்ற வகைமுறையின் பொதுப்பாங்கிற்கு ஊறுபாடின்றி* (*உறுப்*.53(2), *இ.அ.*); Without prejudice to.

எ

எச்சரிக்கை இழப்பீடு *பெயர்*

வேண்டுமென்றோ வன்முறையாகவோ கொடுந் தீங்கு இழைத்ததற்கு வழங்கப்படவேண்டிய சரியீட்டுக்கும் மிகுதியாகத் தீர்ப்பளிக்கப்படும் தொகை (*ச.சொ*. 1983); Exemplary damages.

எச்சரிப்பொலி *பெயர்*

உடனடி இடர்வை அறிவித்துக் கவனத்தை ஈர்க்கும் அழைப்பு ஒலி அல்லது அடையாளக்குறி. (= *அபாய அறிவிப்பு*) (*பி*.503, *இ.தொ.ச.*); Alarm.

எஞ்சுரிமை *பெயர்*

ஒரு சொத்துரிமை உருவாக்கப்பட்ட அக்காலத்திலேயே, அது முடிவடைந்தபின் மற்றொருவர் அதைப் பெற்றுத் துய்க்கவேண்டும் என்னும் முறையிலுள்ள நலன் (இ.ப.1, *பிற். அ. படி*.15, *உ.ந.தொ.ச.*); Estate in remainder.

எஞ்சுநருரிமை *பெயர்*

ஒரு சொத்தின் நலன் துய்க்கும் உரிமையுள்ளவர்களுள் ஒருவர் இறந்த பின்பு, உயிருடனுள்ள மற்றொருவர் அச்சொத்துரிமையை அடைவது (*பி*.60(1) (*க*), *உ.ந.தொ.ச.*); Survivorship.

எண் *பெயர்*

சட்டத்தில் சூழ்நிலையிலிருந்து மாறானது தோன்றினால் அன்றி, ஒருமைச் சொற்கள் பன்மையையும், பன்மைச் சொற்கள் ஒருமையையும் உள்ளடக்கும் (*பி*.9, இ.*த.தொ.ச.*); Number.

எண்பிப்பு *பெயர்*

வழக்குத் தொடர்புடைய செயலை எதிராளி ஏன் செய்தார் எனத் தமது எதிருரையில் காட்டும் போதிய காரணம். 'இ' *மெய்யென்று சொன்ன வாதத்தை எண்பிக்கத் தவறியிருக்கிறார்* (*பி*.43, *விகா.* (*அ*) இ.*சா.ச.*); Justification.

எதிர் *பெயரடை*

ஒருவருடன் மற்றொருவர் முரண்படுகிற; எதிரெதிரான (*ச.சொ.* 1983); Versus.

எதிர் ஆணையுறுதியாவணம் *பெயர்*

ஓர் ஆணையுறுதியாவணத்திற்கு எதிராக, மறுமொழியளிக்கும்பொருட்டு முன்னிடப்படும் மற்றோர் ஆணையுறுதியாவணம் (*ச.சொ.*1983); Counter affidavit.

எதிர் உரிமைக்கோரிக்கை *பெயர்*

வழக்காளியின்மீது தனியே வழக்கிட்டுப் பெறத்தக்க உரிமைக்கோரிக்கை எதிராளிக்கு இருக்குமானால், தமது கோரிக்கைக்கு அடிப்படையான விவரங்களை அப்போது நடந்து கொண்டிருக்கும் வழக்கிலேயே தமது தற்காப்புரையில் சேர்ப்பதன்மூலம், எதிராளி முன்வைக்கும் வேண்டுகோள் (*பி*.128(2) (இ), *உ.ந.தொ.ச.*); Counter claim.

எதிர்நிலை உடைமை *பெயர்*

தமக்குச் சொந்தமில்லாத சொத்தைச் சொந்தக்காரர்போல் (மற்றவர் உரிமையை மறுக்கும் வகையில்) இடையீடின்றிப் பயன்படுத்திக்கொள்வது (= எதிர் அனுபோகம்) (*பி*.53(2), இ.*வ.ச.*); Adverse possession.

எதிர்நோக்கு இறங்குரிமை *பெயர்*

உற்றடை உரிமையினின்றும் தனிவேறான, எதிர்பார்த்திருக்கும் வழிமுறையுரிமை. *உயிருடனுள்ளவரின் சொத்தில் அவருடைய வழிமுறையுரிமையருக்கு எதிர்நோக்கு இறங்குரிமை தவிர வேறு உரிமை கிடையாது* (இன் *ரீ பார்சன்* (1890) 4 Ch.D. 51); Spes successionis.

எதிர்நோக்குப் பிணையம் *பெயர்*

தாம் சிறைப்படலாம் என அஞ்சும் ஒருவர் அதைத் தடுத்து நிறுத்த நீதிமன்றத்தில் முன்னதாகவே பெறும் கட்டளை (*பி*.438, *கு.ந.தொ.ச.*); Anticipatory bail.

எதிர்ப்படியம் *பெயர்*

ஓர் ஆவணத்தின் பல்வேறு பகுதிகள் பற்பல சார்பினர்களால் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் எழுதப்பட்டிருக்கும்போது, எழுதிக்கொடுத்த மூலப் படியத்தைத் தவிர, எஞ்சியுள்ள ஆவணம் (= எதிர்ப் பிரதி). *ஒவ்வோர் எதிர்ப்படியமும் அதை எழுதிக்கொடுத்தவருக்கு எதிரான முதல்நிலைச் சான்றாகும்* (*பி*.62, *விளக்*.1, *இ.சா.ச.*); Counterpart.

எதிர் மறுப்புரை *பெயர்*

ஒரு மேன்முறையீட்டில் உரையாளி தமக்கு உறுத்தம் (=பாதகம்) செய்யும் தீர்ப்பாணையைத் தெரிவிக்கும் எதிர்ப்புரை (*ச.சொ*.1979); Cross objection.

எதிர்மாறாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

முதலில் வழங்கிய ஒரு தீர்ப்பினை மறுஆய்வு செய்து அதற்கு எதிரான தீர்ப்பினை வழங்குதல்
** சட்டப்பிழை காரணமாக ஒரு தீர்ப்பு அழித்தறவு செய்யப்படுகிறபோது, அது எதிர்மாறாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது (கிரிதாரிலால் எதிர் பிரதாப் மேத்தா* (1990) crimes 205); To reverse.

எதிர் மேல்முறையீடு *பெயர்*

வழக்கின் தீர்ப்புரையில் மனநிறைவு கொள்ளாமல், தனித்தனியே சார்பினர் இருவரும் செய்யும் மேற்நிலை வழக்கீடு (*ச.சொ*.1983); Cross-appeal.

எதிர் வழக்காளி *பெயர்*

காண்க : எதிராளி.

எதிர் வழக்கு *பெயர்*

வழக்காளி ஓர் உரிமை குறித்து எதிராளிமீது வழக்குத் தொடுத்திருக்கையில், அதே உரிமைபற்றி எதிராளியும் வழக்காளிமீது கொண்டுவரும் வழக்கு (*ச.சொ*.1983); Cross action.

எதிர்வழக்குரை *பெயர்*

எதிராளி, உரையாளி அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், தமக்கெதிராகக் கொணரப்பட்ட வழக்கில் தம்மீது நடவடிக்கை எடுக்க ஆதாரம் ஏதுமில்லை எனக் காட்டும் காரணம்; தற்காப்புரை; எதிர்வாதம். *எதிர்வழக்குரை பொய்யானது அல்லது அலைக்கழிக்கும் தன்மையது* (*பி*.35 *அ* (1), *உ.ந.தொ.ச.*); Defence.

எதிரவரிலா *பெயரடை*

எதிர்ச் சார்பினர் முன்னிலையாகாத நிலையில், ஒருவரால் செய்யப்படுகிற அல்லது கூறப்படுகிற. *நெருக்கடி நிலைகளில் கட்டளை எதிரவரிலா நிலையில் பிறப்பிக்கப்படலாம்* (*பி*.144(2), *கு.ந.தொ.ச.*); Ex-parte.

எதிரவரிலாத் தீர்ப்பாணை *பெயர்*

உரிமைவழக்கில் சார்பினர் முன்னிலையாகாதிருந்தால் மட்டுமே பிறப்பிக்கப்படும் தீர்ப்புரை, எதிரிலித் தீர்ப்பாணை.
** வழக்குச் சார்பினர் முதல்நாள் முன்னிலையாகி இருந்து, அடுத்தநாள் நிறைவேற்றப்படும் தீர்ப்பாணை ஓர் எதிரவரிலாத் தீர்ப்பாணை எனக் கூறமுடியாது (பந்தரா மாபையா எதிர் அடப்ப கோபால்ராவ்* 1974); Exparte decree.

எதிராளி *பெயர்*

எவருக்கு எதிராக உரிமையியல் வழக்கு இடப்படுகிறதோ அவர்; காப்பாளி; எதிர்வாதி. *எதிராளியோ அவர் சார்பாக ஒருவரோ வைத்திருக்கும் அசையாச் சொத்து (பி.16, வரம். உ.ந.தொ.ச.)*; Defendant.

எதிரிடை வாதம் *பெயர்*

வழக்காளி பணம் கோருவதை எதிராளி தகவானது (= நியாயமானது) என ஒப்புக்கொண்டாலும், அதைப் பகுதியாகவோ முழுமையாகவோ சரிக்கட்டும் வகையில் எதிர்க்கோரிக்கை ஒன்றை முன்வைத்துக் கூறும் வாதுரை; எதிர்க்கட்டு (*ச.சொ.*1983); Set-off.

எதிரிலையேல் *வினையடை*

தீங்குற்றவர் குறித்த காலத்திற்குள் எதிர்க்காரணம் காட்டவில்லை என்றால். (*உறுதியாகும் தீர்ப்பாணை*) (*ச.சொ.*1983); Nisi.

எதிருரை *பெயர்*

வழக்காளியின் விளம்புரைக்கு எதிராளி அளிக்கும் மறுமொழி; எதிர்வாதம். *எதிருரை ஏதும் செய்கிறாரா என அவரைக் கேட்க வேண்டும் (பி.*246(2), *கு.ந.தொ.ச.*); Plea.

எழுத்தர் பிழை *பெயர்*

* ஆவணத்தை எழுதியபோதோ படியெடுக்கும்போதோ நேரிட்டதாகக் கருதப்படும் வழுக்கு அல்லது தவறு (*ரோசம்மா எதிர் பாலகிருஷ்ணா* AIR 1958 Ker 154); Clerical error.

எழுத்து *பெயர்*

கண்ணுக்குப் புலனாகும் வடிவத்தில் அமைந்த அச்சு, பதிவச்சு, ஒளிப்படம், பிறவாறு எடுத்துரைக்கும் வகை ஆகியவற்றின் மூலம் சுட்டப்படும் உருவங்கள். *அத்தகையவரை எழுத்துகளை அல்லது எண்களை எழுதுமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம் (பி.*73, *இ.சா.ச.*); Writing.

எழுத்துப்பணியர் *பெயர்*

உடல் உழைப்பின்றி அறிவுக்குத் தொடர்புடைய வேலைசெய்பவர் (*எ.டு. : அலுவலக எழுத்தர்*) (*ச.ஆ.சொ.க.*); White collar, Worker.

எழுதிநிறைவேற்றல் *பெயர்*

ஓர் ஆவணத்திற்குச் சட்டச் செயல்விளைவு அளிக்கும்பொருட்டு அதில் முறைப்படி கையொப்பமும் முத்திரையும் இட்டு முற்றுவித்தல். *ஆவணத்தை எழுதி நிறைவேற்றுவதற்கான தீர்ப்பாணை (கட்.*21 *வி.* 34(1), *உ.ந.தொ.ச.*); Execution.

எழுத்துரை *பெயர்*

ஓர் உரிமைவழக்கில் வழக்காளி தற்காப்புக்கான காரணங்களை எழுத்துருவில் முன்வைக்கும் வாதுரை. *எழுத்துரையை முன்னிடுமாறு கட்டளையை இடவேண்டும் (பி.*145(1), *கு.ந.தொ.ச.*); Written statement.

எழுவினா *பெயர்*

ஒரு வழக்கின் வழக்காளி, எதிராளி ஆகிய இருவரின் சாட்டுரைகளின்றும் முடிவுவேண்டி எழுப்பப்படும் கேள்வி, வழக்கெழுவினா. *எழுவினாவை முடிபுசெய்கிற ஆணையை உள்ளடக்கும் (உறுப்.*132(3), *இ.அ.*); Issue.

ஏ

ஏட்டு மதிப்பு *பெயர்*

ஓர் அலுவல்தொழில் கணக்கேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள சொத்துடைமையின் அல்லது கடன்பொறுப்பின் பெறுமானம் (*ச.சொ.*1979); Book value.

ஏமம் *பெயர்*

ஒரு பொதுவிதியிலிருந்து சட்டம் அளிக்கும் தனி விலக்குரிமை. *இடையேற்புச் செய்பவர் குடியரசுத் தலைவரின் அனைத்து அதிகாரங்களையும் ஏமங்களையும் உடையவர் ஆவார்* (*உறுப்.*65(3) *இ.அ.*); Immunity.

ஏமாற்றுதல் *பெயர்*

ஒருவர் ஒரு சொத்தை வஞ்சித்தோ மோசடியாகவோ கள்ளமனத்துடனோ மற்றொருவருக்குக் கொடுக்கும்படி தூண்டிவிடுதல் அல்லது இருத்திவைத்துக்கொள்ளும்படி பிறரை இசையச்செய்தல்; அல்லது அவருடைய உடல், உள்ளம், நற்பெயர் சொத்து ஆகியவற்றுக்குத் தீங்கு நேருமாறு ஒன்றைச் செய்வித்தல் அல்லது செய்யாதிருத்தல் (*பி.*415, *இ.த.தொ.*); cheating.

ஏலம் *பெயர்*

ஒரு பொருளை வாங்கும் போட்டியில் உயர்விலை கொடுப்பவருக்கு அப்பொருளை வழங்குகிற பொதுவிற்பனை முறை. *ஏலம் வாங்குநர்* (*கட்.*21, *விதி* 92(4), *உ.ந.ச.*); Auction.

ஏவுகட்டளை *பெயர்*

காண்க : உறுத்துக் கட்டளை.

ஏற்கத்தக்க *பெயரடை*

(நீதிமுறையில் மெய்ச்சான்று எனக்) கொள்ளக்கூடிய. *நீதிமெய்யுறுதியில் ஏற்கத்தக்க* (*பி.*197, *இ.த.தொ.ச.*); Admissible.

ஏற்கத்தகாத *பெயரடை*

(நீதிமுறையில் மெய்ச்சான்று எனக்) கொள்ளமுடியாத (*ச.சொ.* 1983); Inadmissible.

ஏற்குநர் *பெயர்*

மாற்றுச்சீட்டு எவர்பெயரில் எழுதப்பெற்றதோ அவர் தமது இசைவைத் தெரிவித்து அதில் கையொப்பமிட்டபின்பு, அதைப் பெற்றுக்கொண்டு பணம்தருபவர். *மதிப்பளிக்க ஏற்குநர்* (*பி.*7 *மா.மு.ச.*); Acceptor.

ஏற்பிசைவு *பெயர்*

1. (பொதுநிலையில்) ஒரு செயலுக்கு அதிகாரமுறையிலோ நீதிய முறையிலோ முறைப்படியாகவோ வழங்கப்பெறும் இசைவு (*ச.ஆ.சொ.ச.*); Assent.

2. (சிறப்புநிலையில்) நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டகத்திற்குக் குடியரசுத்தலைவரோ, சட்டமன்றச் சட்டகத்திற்கு ஆளுநரோ அளிக்கும் ஒப்புதல். *சட்டகங்களுக்கு ஏற்பிசைவு* (*உறுப்.*111, *இ.அ.*); Assent.

ஏற்பு *பெயர்*

ஒருவர் ஒன்றைக் கொடுக்க முற்படும்போது அதனை இசைந்து ஏற்றுக்கொள்ளுதலாகிய செயல் அல்லது உண்மைவிவரம்; *வாக்குறுதி ஏற்பு* (*பி.*9, *இ.ஒ.ச.*); Acceptance.

ஏற்புத் தந்தை *பெயர்*

ஒரு குழந்தையைப் பிள்ளையாகச் சட்டமுறைப்படி தத்து எடுத்துக்கொண்டவர் (*பி*.3(20), *பொ.வ.ச.*); Adoptive father.

ஏற்புநிறுவனம் *பெயர்*

அரசினரால் அல்லது தனியார் துறையினால் ஆளுகை, கட்டுப்பாடு அல்லது மேலாண்மை கொள்ளப்படும் ஓர் அமைவனம்.

* *வளரும் நிறுவனத்தின் முழு அலுவல்தொழிலையும் 'ஏற்புநிறுவனம்' என்னும் சொல்லமைப்புத் தழுவுகின்றது (ரஸ்தம் ஜீ கூப்பர் எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1970 SC 564); Undertaking.

ஏற்புரை *பெயர்*

1. வழக்கில் வாதப்பொருளாகவோ தொடர்புறுவதாகவோ உள்ள பொருளியம் பற்றிய ஊகம் எதனையும் குறிப்பால் உணர்த்துவதும், சான்றுச் சட்டத்தின் 17ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள ஆட்களால் குறிப்பிட்ட சூழ்நிலையில் வாய்மொழியாகவோ வரைமொழியாகவோ அளிக்கப்படுவதுமான உரை (*பி*.17, *இ.சா.ச.*); Admission.

2. ஒப்பந்தத்தின் முனைவுரைக்கு இசைவுதருதல். *ஏற்புரை முற்றாக இருத்தல் வேண்டும்* (பி.7, இ.ஒ.ச.); Acceptance.

ஏற்றுக்கொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இசைந்த மனத்துடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது ஒப்புக்கொள்ளுதல். *நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்* (*பி*. 3, *இ.பொ.க.ச.*); To acccept.

ஏற்றுறுதிசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

முதல்நிலையில் முறையாகவோ அதிகாரமளிப்போ இல்லாமல் செய்த ஒன்றைப் பின்னர் இசைவு, ஒப்பளிப்பு அல்லது ஒப்புதலளிப்பு மூலம் உறுதிசெய்தல்; ஏற்புறுதிசெய்தல் (*பி*.196, *இ.ஒ.ப.*); To ratify.

ஏறுகுடியினர் *பெயர்*

குருதிஉறவுமூலம் ஏறுவரிசைமுறையில் உறவுள்ளவர்; குடிவழிமுன்னோர் (*பி*.31, (ஊ) (ii) *இ.தி.ச.*); Ascendant.

ஏறுமுறை உறவினர் *பெயர்*

காண்க : மரபுவழி முன்னோர்; Ascendant.

ஐ

ஐந்தொகை *பெயர்*

வாணிக நிறுவனத்தின் சொத்துடைமைகளையும் கடன்பொறுப்புகளையும் காட்டும் விவரஅறிக்கை; இருப்புநிலை ஏடு (*ச.சொ*.1983); Balance sheet.

ஐயுறு பலன் *பெயர்*

* தகவான ஐயப்பாட்டுக்கு அப்பால் குற்றம் மெய்ப்பிக்கப்படாத நிலையில், குற்றஞ்சுமத்தப்பட்டவர் விடுதலைத்தீர்ப்பைப் பெற உரிமைப்பாடுடையவர் என்னும் சட்டவியல் கொள்கை; ஐயப்பாட்டின் பலன் (=சந்தேகத்தின் பலன்). (*ரிஷிபால் எதிர் அரசு* AIR 1962 All. 13); Benefit of doubt.

ஒ

ஒட்டுறவு *பெயர்*

ஆள், நாடு அல்லது கட்சியுடன் உள்ள பிணைப்பு. *அயல்நாட்டு அரசிடம் ஒட்டுறவு இருப்பதை ஒப்புகைசெய்கிறார்* (*உறுப்*. 102(1) (*ஈ*), *இ.அ.*); Adherence.

ஒடுங்கு சொத்து *பெயர்*

ஒருவருடைய நுகர்வுரிமைக்கு உட்பட்டிருக்கும் வேறொருவரின் சொத்து (*பி*.4, *இ.வ.ச.*); Servient heritage.

ஒத்திசைவுப் பொருள்கோள் *பெயர்*

ஓர் இயற்றுச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லமைப்புகள் சட்டம், சட்டமன்றம் ஆகியவற்றின் குறிக்கோளுக்குப் பொருந்தும் வகையில் பொருள் கொள்ளப்படுதல் மிகவும் பொருந்தும் நிலையில் கொள்ளப்படுதல்.

* *சட்டச் சொல்லமைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கோளுக்கு இடமளிக்கையில் சட்டமன்றக் குறிக்கோளை நிறைவேற்றக்கூடியதையே ஏற்க வேண்டும்* (*நியூ இந்தியா சர்க்கரை ஆலை எதிர் விற்பனை வரி ஆணையர்* AIR 1963 SC 1207); Harmonious construction.

ஒத்திவை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தீர்ப்பு, கூட்டம், குழு முதலியவற்றின் நடவடிக்கையை வேறொரு நாளுக்குத் தள்ளிவைத்தல். *கேட்பு நல்குவதை ஒத்திவைத்தல்* (*பி*.62 (1), *இ.வ.ச.*); To adjourn.

ஒதுக்கீட்டு மூலதனம் *பெயர்*

பகிர்மானம் செய்யப்படாமலும் ஆதாய-இழப்புக் கணக்கில் காட்டப்படாமலும் தனித்து வைக்கப்படும் தொகை (*இ.ப.* IV *பகுதி* III *இனம்* 7(1), (*இ*), *நி.ச.*); Reserve capital.

ஒப்படைப்பு *பெயர்*

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு உடைமையை மாற்றல்செய்வது. *சரக்குகளின் ஒப்படைப்பு* (*பி*.137, *விளக். சொ.மா.ச.*); Delivery.

ஒப்படைவு *பெயர்*

ஒருவர் தமக்குரிய செயல்அதிகாரத்தை மற்றொருவருக்கு ஒப்படைப்பது; அளிப்படைவு (*ச.சொ*.1979); Delegation.

ஒப்படைவுச் சட்டவிதியாக்கம் *பெயர்*

பல்வேறு சட்டங்களால் வெளிப்படையாக அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி செய்யப்பட்ட ஆணை, கட்டளை, விதிமுறைகள் அளிப்படைவுச் சட்டவிதியாக்கம் (*ச.சொ*.1979); Delegated legislation.

ஒப்பந்த இறுத்தம் *பெயர்*

ஒப்பந்தச் சார்பினர்கள் அல்லது அவர்களில் ஒருவர் ஒப்பந்தத்தை முறித்து (= இறுத்து) விடுகை (*ச.சொ*.1983); Rescission of contract.

ஒப்பந்தக்காரர் *பெயர்*

குறித்தவகை வேலைகளை மற்றவர்களுக்காகச் செய்துகொடுப்பவரும், அவ்வகையில் மற்றவரின் கட்டுப்பாட்டுக்கு உட்படாதவருமான தன்னுரிமைத் தொழிலர் (*ச.சொ*.1979); Contractor.

ஒப்பந்தச் சார்புறவு *பெயர்*

ஓர் உடன்பாட்டின் சார்பினர்களுக்கு இடையே எந்தப் பிணைப்பு இல்லையென்றால் வழக்குத் தொடரமுடியாதோ அந்தப் பிணைப்பு நிலை (*ச.சொ.*1983); Privity of contract.

ஒப்பந்தச் சாரம் *பெயர்*

கண்டிப்பாக இணங்கிநடக்க வேண்டும் என ஒப்பந்தத்தில் காணப்படும் வரைக்கட்டு (*பி*.55, *இ.ஒ.ச.*); Essence of contract.

ஒப்பந்த நிலைகுலைவு *பெயர்*

உடன்பாட்டில் கண்டுள்ள கருப்பொருளோ அடிப்படைப் பொதுநோக்கமோ அழிந்து முறிவோ தடையோ ஏற்படும் நிலையில், உடன்பாட்டை எதிர்பாராமல் நிறைவேற்றாமை மன்னிக்கப்படும் என்பதான கோட்பாடு (*பி*.56, *இ.ஒ.ச.*); (Doctrine of) frustration.

ஒப்பந்தப் போல்வு *பெயர்*

கருத்தொன்றிச் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் இயல்பைக் கொண்டிராவிட்டாலும், ஓர் ஒப்பந்தம் போன்றே கடமைப்பொறுப்பைத் தோற்றுவிக்கும் செயல் அல்லது நிகழ்ச்சி, போலமை ஒப்பந்தம் (*ச.சொ.*1983); Quasi contract.

ஒப்பந்தம் *பெயர்*

சட்டத்தால் நடைமுறைப்படுத்தத்தக்க உடன்பாடு (*பி*.2(*எ*), *இ.ஒ.ச.*); Contract.

ஒப்பாவணம் *பெயர்*

தொடர்புடையவர்கள் முறைப்படி கையெழுத்திட்டு ஒப்படைக்கும் (கையால் எழுதிய அல்லது அச்சடித்த) உரிமைப் பத்திரம். *ஒப்பாவணம் பொய்ப்புனைவு செய்யப்பட்டதா இல்லையா* (*பி*.21 *வி.கா* (*அ*), *இ.சா.ச.*); Deed.

ஒப்பிசைவும் உளநிறைவும் *பெயர்*

ஒருவருக்கு எதிராக மற்றொருவர் கொண்டுள்ள உரிமைக்கு அல்லது கோருரிமைக்குத் தீர்வாக, ஏதோ ஒன்றைக் கொடுப்பதும் கொள்வதுமான செயலாகவும், பின்னர் அச் செயலுக்கு உரிமைகோரி வழக்கிடுவது தடைசெய்யப்படும் நிலையிலும் உள்ள ஓர் உடன்பாடு;

* *இதில், ஒப்பிசைவு உடன்பாடு; உளநிறைவு மறுபயன்* (*இந்திய ஒன்றியம் எதிர் கிஷோர்லால்* AIR 1959 SC 1362); Accord and satisfaction.

ஒப்பிய கணக்கு *பெயர்*

பொதுவான கணக்கை இருசார்பினரும் சரி என்று ஏற்றுக்கொண்ட விவரவுரை (*ச.சொ.*1983); Account settled.

ஒப்புகை *பெயர்*

தகுதிறமுள்ள அலுவலரின் அல்லது நீதிமன்றத்தின் முன்னிலையில், ஒப்பாவணத்தையோ முறையாவணத்தையோ நிறைவேற்றுவதாகச் செய்யும் விளம்புரை. *(ஜில்மர்)*; Acknowledgement.

ஒப்புகைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கோருரிமையை அல்லது கடமைப்பொறுப்பை உண்மை என ஏற்றுக் கொள்ளுதல். *பற்றுறுதியோ ஒட்டுறவோ இருப்பதை அவர் ஒப்புகைசெய்திருக்கிறார்* (*உறுப்*. 102 (1) (*ஈ*), *இ.அ.*); To acknowledge.

ஒப்புதலளிப்பு *பெயர்*

கருதிய நோக்கத்திற்குத் தக்கது என அதிகாரமுறையில் செய்யப்படும் உறுதிப்பாடு (*உறுப்*.145 (1), இ.*அ*.); Approval.

ஒப்புதலுரை *பெயர்*

குற்றஞ்சாட்டப்பட்டவர் தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வகையிலோ உய்த்துணரும் வகையிலோ அளிக்கும் வாக்குமூலம். *குற்றச்சாட்டுரை உண்மை என ஏற்கையில் ஒப்புதலுரை ஆகிறது (ஜோவிட்)*; Confession.

ஒப்புரைஞர் *பெயர்*

குற்றச்செயல் தொடர்பாகத் தாம் அறிந்த அனைத்தையும் முழுமையாகவும் உண்மையாகவும் சான்றுரைக்க வேண்டும் என்னும் வரைக்கட்டு (=நிபந்தனை) மீது, அதிகாரம்பெற்ற நீதிநடுவரால் மன்னிப்பு அளிக்கப்படும் கூட்டுக் குற்றவாளி; குற்றமேற்ற சாட்சி; Approver.

* *ஒப்புரைஞரின் உள்நோக்கம் மன்னிப்பைப் பெறுவதே; கழுவாய் தேடுவது அன்று (ஆந்திரப்பிரதேச அரசு எதிர் சி.ஜி.ராவ்* (1964) 3 SCR 297).

ஒப்புவித்தல் *பெயர்*

தமது உடைமையில் அல்லது அதிகாரத்தில் உள்ள ஒன்றை மற்றவருக்காக விட்டுக்கொடுத்தல் (*பி*.115(1), *விகா,சொ.மா.ச*.); Surrender.

ஒப்புறுதி *பெயர்*

ஒரு சான்றுரைஞரின் சான்று வேறு ஒரு சான்றின்மூலம் உறுதி செய்யப்படுவது. *ஒப்புறுதிச் சான்று* (*பி*.8, *விளக்*.(ஒ). இ.*சா.ச*.); Corroboration.

ஒப்பேற்பு *பெயர்*

முறைமணத்தில் பிறக்காத குழந்தையை வளர்க்கும்பொருட்டுத் தந்தை இன்னார் எனச் சட்டமுறைப்படி குறிப்பிடுகை; (*ச.சொ*.1983); Affliation.

ஒப்பேற்புச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவரை உறுப்பினராகவோ ஒன்றை உறுப்பாகவோ இசைந்து சேர்த்துக்கொள்ளுதல் (*பி*.23(2), *ப.ப.ச*.); To affiliate.

ஒருகுற்ற இருவழக்கு *பெயர்*

காண்க : இரட்டை இருக்கண்.

ஒருங்காட்சி *பெயர்*

ஒரு குறிப்பிட்ட ஆட்சிப்பரப்பில் இரண்டு அல்லது மேற்பட்ட அரசுகள் கூட்டாக ஆட்சி செய்வது (*ச.சொ*.1983); Condominium

ஒருங்கியல் பட்டி *பெயர்*

மையஅரசும் மாநிலஅரசும் சட்டமியற்றும் அதிகாரம் கொண்டுள்ள பொதுப்பொருள்களின் தலைப்புகள் பற்றியதும் அரசமைப்பில் பின்னிணைப்பாக உள்ளதுமான அதிகாரப் பட்டியல்; பொதுவியல் பட்டி (இ.*ப*.VII-I, இ.*அ*.); Concurrent list.

ஒருதலை ஒப்பந்தம் *பெயர்*

ஒப்பந்தத்தின் ஒருசார்பினர் மட்டுமே உறுதியுரை அளித்திருப்பதும், மறுசார்பினர் முன்னரே மறுபயனை நிறைவேற்றியிருப்பதுமான உடன்பாடு (*ச.சொ.*1983); unilateral contract.

ஒருதனியுரிமை *பெயர்*

ஒன்றை வாங்கவோ விற்கவோ, ஆக்கவோ செயற்படுத்தவோ, பயன்படுத்தவோ தனிப்பட்ட ஒருவருக்கு அல்லது குழுமத்திற்கு மட்டுமே சட்டத்தால் வழங்கப்படும் பிறிதுவிலக்கிய தனிமுழுவுரிமை; (= ஏகபோகவுரிமை). *அரசின் ஒரு தனியுரிமைக்கு வகைசெய்யும் சட்டங்களுக்குக் காப்புரை* (*உறுப்*.305, இ.*அ*.); Monopoly.

ஒருதுணைமணம் *பெயர்*

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நிலையில் கணவன்-மனைவியாகத் திருமணம் புரிந்து வாழும் முறை (*ச.சொ.*1983); Monogamy.

ஒருபாற்கோடாமை *பெயர்*

காண்க : நடுவுநிலைமை.

ஒருபொருள் பல்வழக்கு *பெயர்*

ஒரே நுவல்பொருள் குறித்துக் கொணரப்படும் பற்பல வழக்குகள் (*ச.சொ.*1983); Multiplicity of suits.

ஒருமைப்பாடு *பெயர்*

பலவாகப் பிரிந்துள்ள கூறுகள் எல்லாவற்றையும் இணைத்து முழுமையாக்குகை. *நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் உடன்பிறப்புணர்வை வளர்க்கவும்* (*முகப்*. இ.*அ*.); Integration.

ஒருவழிக் குருதியுறவு *பெயர்*

பெற்றோர் அல்லது மூதாதையர் இருவருள் ஒருவர் வழியாக மட்டுமே உள்ள சொந்தம் (*பி*.3(1)(2), இ.*வ.ச*.); Half blood.

ஒருவழியுறவு *பெயர்*

காண்க : ஒருவழிக் குருதியுறவு.

ஒழி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அடியோடு இல்லாமல் அழித்துவிடுதல். *தீண்டாமை ஒழிக்கப்படுகிறது* (*உறுப்*.17, இ.*அ*.); To abolish.

ஒழிவிடம் *பெயர்*

ஒரு பதவியில் அல்லது இடத்தில் எவரும் இல்லாமல் வெறுமையாக இருக்கும் நிலை (= காலியிடம்). *பதவியில் ஒழிவிடம்* (*பி*.69, *அ*.(2), *சொ.மா.ச*.); Vacancy.

ஒழிவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இருக்கும் ஒன்றை இல்லாமல் ஆக்குதல். (=காலிசெய்தல்). *தமது பதவியிடத்தை ஒழிவுசெய்திருக்கிறார்* (*உறுப்*.59(1), இ.*அ*.); To vacate.

ஒழுக்கமுரண் ஒப்பந்தம் *பெயர்*

நன்னடத்தை நெறிகளுக்கு முரணான மறுபயன் கருதிச் செய்துகொள்ளும் உடன்பாடு (*ச.சொ.*1979); Immoral contract.

ஒழுங்கமைவனம் *பெயர்*

காண்க : அமைவனம்.

ஒழுங்குமுறைவிதி *பெயர்*

சட்டமன்றம் இயற்றிய சட்டங்களால் அளிக்கப்பெறும் அதிகாரவுரிமையின்படி அரசுத் துறையினர் ஆக்கிக்கொள்ளும் விதிமுறை. *ஒழுங்குமுறைவிதிகள் வாயிலாகப் பணி வரைக்கட்டுகளைத் தீர்மானிக்கலாம்* (*உறுப்*.318, *இ.அ.*); Regulation.

ஒழுங்கு வினா *பெயர்*

அவை நடவடிக்கையின்போது உறுப்பினர் ஒருவரின் விதிமீறல் குறித்து அவைத்தலைவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக மற்றோர் உறுப்பினர் செய்யும் முறையீடு, ஒழுங்குப் பிரச்சினை (*விதி* 376(1), *மக்களவை விதிகள்*); Point of order.

ஒற்றாடல் *பெயர்*

(அயல்நாடுகளில்) வேவுபார்த்தல் (*ச.சொ.*1983); Espionage.

ஒற்றி *பெயர்*

அடைமானம்பெறுபவர் அடைமானச் சொத்தைத் தமது உடைமையில் வைத்துக்கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் வாடகையை அல்லது ஆதாயத்தைக் கடன்தொகை, வட்டி அல்லது இவ்விரண்டில் ஒரு பகுதிக்காக எடுத்துக்கொள்ளும் அடைமான வகை: *பயன்நுகர்வு அடைமானம்.* (=சுவாதீன அடைமானம்) (*பி*.58 (*ஈ*), *சொ.மா.ச.*); Usufructuary mortgage

ஒற்றுக்கேட்டல் *பெயர்*

சட்டமுறை அதிகாரவுரிமையின்றித் தனிமுறை உரையாடலைக் கள்ளத்தனமாக வீட்டின் சுவர், பலகணி அல்லது மறைவிடத்திலிருந்து ஒட்டுக்கேட்பது. (*ச.சொ.*1979); Eaves dropping.

ஒறுப்பிழப்பு *பெயர்*

ஒன்றைச் செய்ததற்கோ செய்யத் தவறியமைக்கோ தண்டமாகச் சொத்து, உரிமை, சிறப்புரிமை அல்லது நன்மையை இழக்கும்படி செய்வது; தண்டயிழப்பு, *குத்தகையை ஏற்பதன் மூலம் ஒறுப்பிழப்புக் கைவிடப்படுகிறது* (*பி*.112(1), *சொ.மா.ச.*); Forefeiture.

ஒறுப்புச் சட்டம் *பெயர்*

தடைசெய்த செயலைச் செய்தால் தண்டிக்கும் விதிமுறை (*ச.சொ.*1979); Penal law.

ஒறுப்புத்தொகை *பெயர்*

காண்க : பணத்தண்டம்.

ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு *பெயர்*

(இந்திய) அரசமைப்பு வகுத்துரைத்தபடி உள்ள ஆட்சிப்பகுதி. *ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஒவ்வொன்றையும் குடியரசுத்தலைவர் தாம் குறித்துரைக்கும் ஆட்சியாளர் (= துணைநிலை ஆளுநர்) வழியே ஆட்சியம் செய்வார்* (*உறுப்*.239, *இ.அ.*); Union territory (of India).

ஒன்றிய பொருளியம் *பெயர்*

வாதத்திலுள்ள பொருளியத்தைச் சேர்ந்துள்ள, விளக்குகிற அல்லது அதனோடு அமைந்திருப்பதாகக் கருதப்படுகிற செயல், விளம்புரை, நிகழ்வு (*ச.சொ.*1983); Res gastae.

ஒன்றியம் *பெயர்*

மாநிலங்களில் தனி அரசும் மையத்தில் கூட்டரசும் கொண்ட நாடு. *இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களின் ஒன்றியமாக இருத்தல் வேண்டும்* (*உறுப்.*1, *இ.அ.*); Union.

ஓ

ஓங்குசொத்து *பெயர்*

ஒருவர் தமது சொத்தைப் பயனுள்ளவகையில் துய்க்கும்பொருட்டு மற்றொருவர் சொத்தின்மீது உருவாகும் வசதியுரிமை (*பி.*4, *வ.ச.*); Dominent heritage.

ஓய்வூதியம் *பெயர்*

* கடந்தகாலப் பணிக்காகவோ கோருரிமையை அல்லது பதவியூதியத்தைக் கைவிட்டமைக்காகவோ மறுபயனாக அரசாங்கத்தால், நிறுமத்தால் அல்லது பணித்தலைவரால், பணியிலிருந்து ஓய்வுபெற்றவருக்குக் காலமுறையாகக் கொடுக்கப்படும் தொகை (*பேக்மிர்சா எதிர் மாநில அரசு* AIR 1959 All. 769); Pension.

ஓரவஞ்சக முன்னுரிமை *பெயர்*

முழுக் கடனையும் அடைக்கமுடியாத ஒருவர், தமக்குக் கடன்கொடுத்த பலருள்ளும் சிலருக்கே வரிசை முறையில் பணம் கொடுப்பது.

* *ஒரு குறிப்பிட்ட கடன்தருநருக்குச் செய்த பணச்செலுத்தம் ஓரவஞ்சக முன்னுரிமையா அன்றா என்பது பொருளியம் பற்றிய வினாவாகும்* (*வி.வி.அய்யர் எதிர் சொத்தாட்சியர்* (1955) 2 Mad. L.J. 380); Fradulent preference.

ஓரவைச் சட்டமன்றம் *பெயர்*

(மேலவை, பேரவை என்னும்) ஈரவைகளுள் பேரவை மட்டுமே உடைய சட்டமன்றம் (*பி.*135*அ* (1) (*அ*), *உ.ந.தொ.ச.*); Unicameral legislature.

க

கட்சிக்காரர் *பெயர்*

வழக்குரைஞரிடம் அறிவுரை நாடுபவர் அல்லது அவரிடம் தமது வழக்கை நடத்தும் பொறுப்பை விட்டுவிடுபவர். *கட்சிக்காரர் செய்த விற்பனை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதா* (*பி.*111, *வி.கா.*(*அ*), *இ.சா.ச.*); Client.

கட்சிப்பிளவு *பெயர்*

கருத்துவேறுபாடு, உட்குழுப் பூசல் அல்லது தன்னலம் காரணமாக ஓர் அரசியல் கட்சியில் ஏற்படும் பிரிவினை. *கட்சிமாறுவதால் ஏற்படும் தகுதிக்கேடு கட்சிப்பிளவு ஏற்படும் நேர்வில் பொருந்தாது* (*இ.ப.*10(3), *இ.அ.*); Split.

கட்சிமாறுதல் *பெயர்*

ஒரு கட்சியின்பால் கொண்டிருந்த கொள்கைப் பிடிப்பையும் பற்றுறுதியையும் விலக்கிக்கொண்டு வேறொரு கட்சியில் சேர்தல். *கட்சிமாறுதல் காரணமாக ஏற்படும் தகுதிக்கேடுகள்* (*இ.ப.*10(2), *இ.அ.*); Defection.

கட்டளைச்சொத்தைப் பின்தொடர்தல் *பெயர்*

ஒரு பொறுப்புரிமைச் சொத்தானது பொருட்பிணைப்பொறுப்பாகவோ ஒதுக்கிக் கொடுக்கப்பட்டோ இருந்தபோதிலும் முதன்முதலாகக் கையகப்படுத்தப்பட்ட நிலையில் அது அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும் என்பதற்கு உட்பட்டு, ஒரு பயனாளி அதன் உரிமையைக் கோருவதற்கு இடம் கொடுக்கும் சட்டக் கோட்பாடு. (*பி*. 63, *இ.பொ.க.ச.*); Following the trust property.

கட்டளைநிறைவேற்றுநர் *பெயர்*

மாநிலத் தலைநகரில் சிறை (= கைது செய்யும்) அல்லது பற்றுகைசெய்யும் உரிமையியல் நீதிமன்ற அலுவலர் (*பி*.170, *இ.ஒ.ச.*); Bailiff.

கட்டாய ஓய்வுறுகை *பெயர்*

இயல்பாக அகவைமுதிர்ந்து ஓய்வுபெறும் முன்னரே பணியிலிருந்து ஒருவருக்கு ஓய்வு கொடுப்பது.

* *நடத்தைக்கேடு அல்லது திறமையின்மை என்னும் களங்கத்தையோ கருத்துப்பொருளையோ கட்டாய ஓய்வுறுகை என்னும் சொல்லமைப்புக் கொண்டிருக்கவில்லை (சியாம்லால் எதிர் உ.பி. அரசு* (1955)1 SCR 26); Compulsory retirement.

கட்டுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சட்டம் அல்லது ஒப்பந்தம் மூலம் கட்டுப்பாட்டை விதித்தல். *உச்சநீதிமன்றச் சட்டகை அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுறுத்துதல் வேண்டும்* (*உறுப்*.141, *இ.அ.*); To bind.

கடப்பாடு *பெயர்*

சட்டப்படி செயலுறுத்தத்தக்க கடமைக்கு உள்ளாகும் நிலை. *குடிமகன் எவரும் சமயம் குலம் காரணமாகக் கொண்டு... கடப்பாடு எதற்கும் உட்படுத்தப்படுதல் ஆகாது* (*உறுப்*.15(2), *இ.அ.*); Liability.

கடமை *பெயர்*

அறநெறி அல்லது சட்டப் பொறுப்புடன் இணைந்ததும் ஒருவரால் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியதுமான அலுவற்பணி. *குடியரசுத்தலைவர் தம் கடமைகளை மீண்டும் மேற்கொள்ளும் தேதி வரையில் அவருடைய பணிகளைக் குடியரசுத் துணைத்தலைவர் ஆற்ற வேண்டும்* (*உறுப்*.65(2), *இ.அ.*); Duty.

கடமையைத் தொடரத் தவறுதல் *தொடர்*

ஒருவர் தன்விருப்புடன் வேண்டுமென்றே தனது செய்கையினாலோ விடுகையினாலோ பணிக்கு வராமலும் அதுபற்றி அறிவிக்காமலும் இருத்தல்.

* *தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணத்தினால் தடுக்கப்பட்ட ஒருவர், தமது கடமையைத் தொடரத் தவறுகிறார் எனக்கூறுதல் பொருந்தாது (பல்வந்த் ராஜ் எதிர் இந்தியஅரசு* AIR 1968 All. 14); Failure to resume duty.

கடல்கவர்பொருள் ஆயம் *பெயர்*

போர்க்காலத்தில் கடலில் கைப்பற்றப்பட்டவற்றுக்குத் தீர்வமைவு செய்வதற்காகத் தனிச்சிறப்பாணையின்படி உருவாக்கப்படும் தீர்ப்புமன்றம். (=தீர்ப்பாயம்). *இதில் அடங்கிய எதுவும் கவர்பொருள் ஆயங்களின் கட்டளைகளுக்குப் பொருந்தாது* (*பி*.112(2), *உ.ந.தொ.ச.*); Prize court.

கடலாண்மை *பெயர்*

நீதி ஆட்சிமுறையில் அமைந்த நெய்தலியல் (சட்டப்) பிரிவு (இ.*ப*.VII-1-95, இ.*அ*.); Admiralty.

கடலாண்மைச் சட்டகை *பெயர்*

துறைமுகங்கள், கப்பல்கள், மாலுமிகள் தொடர்புடைய சட்டம் (*ச.சொ*.1968); Maritime law.

கடலிடர்க்காப்பு *பெயர்*

கடல் கொந்தளிப்பு, நெருப்பு, கொள்ளையர்கள் அல்லது எதிரிகள் போன்ற இடர்வுகளிலிருந்து கப்பலையோ பண்டங்களையோ காப்பாற்றுகை; அழிவு மீட்பு (*பி*.140(1), *உ.ந.தொ.ச.*); Salvage.

கடலிடர்க்காப்புக் கட்டணம் *பெயர்*

கப்பலை அழிவிலிருந்து காப்பாற்றியவர்களுக்குக் கடலாண்மைச் சட்டப்படி அளிக்கப்படும் உதவித்தொகை அல்லது சரியீடு (*பி*.140(2), *உ.ந.தொ.ச.*); Salvage charge.

கடலியல் அதிகாரவரம்பு *பெயர்*

கடலில் கப்பல் மோதுவதால் ஏற்படும் இழப்பையும், கடல் தொடர்புள்ள பிற வழக்குகளையும் ஆராய்வதற்கான ஆட்சி எல்லை. *தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றம் கடலியல் அதிகாரவரம்பைச் செலுத்துங்கால்* (*பி*.41, இ.*சா.ச.*); Admiralty Jurisdiction.

கடலியல் கோட்டம் *பெயர்*

கடல் தொடர்பான வழக்குகளை ஆராய்வதற்காக அமைக்கப்பெற்ற உயர்நீதிமன்றப் பிரிவு (*ச.சொ*.1968); Admiralty Division.

கடவுச்சீட்டு *பெயர்*

வெளிநாடுசெல்லும் பயணிகளை அடையாளம்காட்டி அங்கு அவரது காப்பளிப்புக்குப் பரிந்துரை செய்யும் அரசு ஆவணம் (இ.*ப* VII-I-19, இ.*அ*.); Passport.

கடவுள் செயல் *பெயர்*

மனிதரால் எதிர்நோக்கவோ தடுக்கவோ இயலாத நிகழ்ச்சி (*பி*.73 (*அ*), இ.இ.*ச*.); Act of God.

கடன்தருநர் *பெயர்*

தமது பணத்தை மற்றவருக்குக் கடனாகக் கொடுப்பவர். *பணம் கடன்தருநர்களால் தண்டல்செய்யப்படலாகும் மேல்வரை வட்டி* (இ.*ப*.VI, 10 (2) (*ஆ*), இ.*அ*.); Creditor.

கடன்தீர்வு உடன்பாடு *பெயர்*

கடனாளியிடமிருந்து தமக்கு வரவேண்டிய கடன்தொகையைத் தீர்க்கும் வகையில் கடன்கொடுத்தவர் குறித்த ஒருதொகையைப் பெற்றுக்கொள்ள இசைவுதெரிவிக்கும் ஒப்பந்தம் (*பி*.267 (*ஆ*), *நி.ச.*); Composition.

கடன்தீர்வு நீட்டம் *பெயர்*

கடனைக் காலந்தாழ்த்திச் செலுத்துவதற்கான சட்ட இணக்கம்; கடன் தீர்ப்பு நிறுத்திவைப்பு (*ச.சொ.*1968); Moratorium.

கடன்முதல் *பெயர்*

கடனாக வாங்கிய தொகை. (=அசல் தொகை) (*ச.சொ.*1968); Principal.

கடனடைப்பு நிதியம் *பெயர்*

நாடு, நகராட்சி அல்லது நிறுமம் பெற்ற கடனின் முதல் தொகையைச் செலுத்துவதற்காகக் காலந்தோறும் வருவாயில் ஒரு பகுதியை வைப்புத் தொகையாக ஒதுக்கி அதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையின் சேர்மானம். *இந்திய அரசாங்கம் கடப்பாடு கொண்டிருக்கிற கடனடைப்பு நிதியச் செலவீடுகள் (உறுப்.*102(3), *இ. இ.அ.*); Sinking fund.

கடனாளி *பெயர்*

பணம் கடன் வாங்கிய ஆள், நிறுவனம் அல்லது நாடு *கடனாளி நொடிப்புநிலையர் என மறுமுறையும் தீர்ப்பளிக்கப்பட்டார் (பி.*103 *அ* (1), *மா.த.தொ.ச.*); Debtor.

கடனீட்டாவணம் *பெயர்*

ஒரு நிறுமம் தான் வாங்கிய கடனை ஒப்புகைசெய்து, பணத்தை வட்டியோடு திருப்பிக்கொடுக்கப் பொறுப்புறுதியளிப்பதான ஆவணம் அல்லது சான்றிதழ். *கடனீட்டாவண மூலதனப் பங்கு (பி.*2(19), *உ.ந.தொ.ச.*); Debenture.

கடனுதவி மாற்றுச்சீட்டு *பெயர்*

எழுதுநரின் வசதி கருதி ஏற்குநரால் வழங்கப்படும் பணமாற்றுச் சீட்டு.

* *கடனுறுதி மாற்றுச்சீட்டில் சிக்கல் எழுந்தால் ஏற்குநர்மேல் வழக்கிடும் உரிமை எழுதுநருக்கு இல்லை (நந்தாராம் எதிர் சித்லபிரசாத்* 5 All 484); Accommodation bill.

கடனுறுதிச் சீட்டு *பெயர்*

குறிப்பிட்ட ஒருவருக்கோ அவரது ஆணைபெற்றவருக்கோ முறைப்படி அதைக் கொணர்பவருக்கோ அவர் கோரும்போது வாங்கிய கடன் தொகையைத் திருப்பிக் கொடுப்பதாக வரைக்கட்டு (=நிபந்தனை) எதுவுமின்றிப் பொறுப்பேற்பவர் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்கும் ஆவணம். *வேண்டியபோது பணம் கொடுபட வேண்டியதான ஒரு கடனுறுதிச் சீட்டை 'ஆ'வும் 'இ'யும் எழுதி 'அ' விடம் ஒப்படைக்கிறார்கள் (பி.*20. *வி.கா.(ஆ). உ.ந.தொ.ச.*); Promissory note.

கடனொப்புகை *பெயர்*

அடைகடனோ நிறைவேற்றவேண்டிய கடமைப்பொறுப்போ இன்னும் நிலவுகிறது என எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளுகை (*இ.ப.*I, *இனம்* 1 *இ.மு.ச.*); Acknowledgement of debt.

கடிந்துரை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. தண்டனை எதுவும் விதிப்பதற்கு மாற்றாக நீதிபதி குற்றத்தீர்ப்பாளியை வெளிப்படையாகக் கண்டித்தல்; To reprimand.
2. தண்டிப்பதற்கு மாற்றாக உயர்அலுவலர் ஒருவர் தவறு செய்த தம் கீழ் அலுவலரை வெளிப்படையாகக் குறைகூறுகை (*பி.*71(i), *ப.ச.*); To reprimand.

கடுங் கடப்பாடு *பெயர்*

குற்றமனம் அல்லது கவனமின்மை இல்லாமலேயே ஒருவரைக் கடுமையான பொறுப்புக்கு ஆளாக்கும் நிலை (*ச.சொ.*1979); Absolute or strict liability.

கடுங் கவனமின்மை *பெயர்*

மற்றவரின் உரிமைகளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாதிருத்தல் அல்லது ஒரு செயலின் விளைவைப்பற்றி முற்றிலுமாகக் கருதாமை (*பி.*3, *சொ.மா.ச.*); Gross negligence.

கடுஞ் சிறைத்தண்டனை *பெயர்*

கடும் உழைப்புடன்கூடிய சிறைஒறுப்பு; *கடுங்காவல் தண்டனை* (*பி.*53, *நான்காவதாக* (1) *இ.த.தொ.ச.*); Rigorous imprisonment.

கடும் உடலூறு *பெயர்*

ஆண்மை, ஒரு கண் பார்வை, ஒரு காது, உடலுறுப்பு, எலும்புமூட்டு இவற்றில் ஏதொன்றின் திறனை இழக்கச்செய்வது; உடலுறுப்பு, எலும்புமூட்டு, தலை, முகம், பல் இவற்றில் ஒன்றைச் சிதைப்பது; உயிருக்கு இடர்வு, உடலுக்கு 20நாள் தொடர்வேதனை, வேலை செய்யமுடியாதநிலை உண்டாக்குவது (*பி.*320, *இ.த.தொ.ச.*); Grievous hurt.

கடுமையாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

குற்றத்தை மேலும் கேடாக்குதல் அல்லது அதன் தன்மையை மிகுவித்தல் (*பி.*61, *க.ச.*); To aggravate.

கடுவட்டி *பெயர்*

கொடுத்த கடனுக்கு வரம்புமீறி வாங்கும் வட்டித்தொகை (*ச.சொ.*1968); Usury.

கடைசி முந்தைய *பெயரடை*

சட்டத்திலுள்ள ஒரு பிரிவை ஒட்டி முன்னுள்ள. *கடைசி முந்தைய மக்கள் கணக்கெடுப்பில் தொடர்புற்ற எண்வடிவுகள்* (*உறுப்.*81, *இ.அ.*); Last preceding.

கண்டத்து அமிழ்திட்டு *பெயர்*

ஒரு நாட்டின் ஆட்சிப்பகுதிக் கடலின் நீர்ப்பரப்புக்கு அடியிலுள்ள மணல்மேடு... *ஆட்சிப்பரப்புக்கடலுள் அல்லது கண்டத்து அமிழ்திட்டினுள் கிடைக்கும் மதிப்புமிகு பொருள்கள்* (*உறுப்.*297, *இ.அ.*); Continental shelf.

கண்ட நிலையிலே *வினையடை*

சலுகை நாளின்றிப் மாற்றுச்சீட்டைக் காட்டிக் கேட்டவுடனேயே... *தொகை கொடுக்கவேண்டும் என்னும் குறிப்பு* (*பி.*21, *மா.மு.ச.*); At sight.

கண்டனக்குறிப்பு *பெயர்*

அதிகார மேலிடத்திலிருந்து தெரிவிக்கப்பெறும் குறைகாண்புரை; கண்டிப்புரை (*பி.*5(4) *அ.மு.ப.ச.*); Censure.

கண்டித்துவிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நீதிமன்றத்தில் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்ட ஒருவருக்குப் பணத்தண்டமோ சிறைத்தண்டனையோ விதிக்காமல் கடும் எச்சரிக்கை செய்து அனுப்புதல். *நீதிமன்றம் தண்டனையளிப்பதற்குப் பதிலாக அவரைக் கண்டித்து விட்டுவிடலாம்* (*பி.*360(3), *கு.ந.தொ.ச.*); To admonish.

கண்டுபிடிக்கப்பட்ட பொருளியம் *பெயர்*

எந்த இடத்திலிருந்து பொருள் கொண்டுவரப்பட்டதோ அந்த இடத்தையும், அது குறித்துக் குற்றஞ்சுமத்தப்பட்டவர் அறிந்துள்ள செய்தியைப் பற்றிய உண்மை விவரம்.

* *சான்றுச்சட்டத்தின் 27ஆம் பிரிவில் சுட்டுகைசெய்யப்பட்டுள்ள கண்டுபிடிக்கப்பட்ட பொருளியம் முன்னிலையாக்கப்பட்ட பொருளுக்குச் சமமானதாகப் பாவிக்கப்பட முடியாது (பக்ஷி முகுந்தா நியோபுதா எதிர் பம்பாய் அரசு* AIR 1960 Bom. 263); Fact discovered.

கணக்காய்வு-தணிக்கைத் துறைத் தலைவர் *பெயர்*

அரசின் நிதிநிலைக் கணக்குகளைத் தணிக்கைசெய்யும் அதிகாரம்பெற்ற முதன்மை அலுவலர் (*உறுப்*.148(1) *இ.அ.*); Comptroller and Auditor General.

கணக்குத் தீர்வமைவு *பெயர்*

இருவருக்கிடையே கணக்கு நிலவரத்தை உறுதிசெய்து இருப்புநிலையை ஏற்றுக்கொள்ள வழிவகுக்கும் ஒப்பந்த நிலை; கணக்கு நிலை ஒப்பு; சுட்டிய கணக்கு ஒப்பு (*ச.சொ.*1968); Settlement of accounts.

கணக்குப்பொறுப்பு *பெயர்*

பற்றுவரவுக் கணக்கு விவரங்களைக் காட்டும் கடமை (*பி*.143, *வி.கா.(அ). இ.ஒ.ச.*); Accountability.

கணக்கு வழக்கு *பெயர்*

* ஒப்பந்தத்தின் அடிப்படையில் அல்லது நம்பக உறவுநிலை காரணமாகக் கணக்கைக் கொடுக்கவேண்டிய ஒருவர்மீது கணக்கைப் பெறுவதற்குரியவர் நீதிமன்றத்தில் தொடுக்கும் உரிமையியல் வழக்கீடு (*பன்னாலால் எதிர் ஓம்ராமால்* AIR 1953 cal.244); Account suit.

கணிக்குநர் *பெயர்*

செலுத்தவேண்டிய வரித்தொகையை அல்லது வேறு பணத்தொகையைக் கண்டறிவதற்கோ நிலையுறுத்துவதற்கோ பணியமர்த்தப்படும் அலுவலர்; கணிப்பாளர்; மதிப்பிடுநர். *கப்பல் சேத வழக்கில் இரண்டு தகுதிவாய்ந்த கணிக்குநர்களை முன்னிலையாகுமாறு நீதிமன்றம், ஆணையிடலாம்* (*பி*.140 *உ.ந.தொ.ச.*); Assessor.

கணிப்பீடுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வரித்தொகை, சொத்தின் பெறுமதி அல்லது இழப்பீட்டுத் தொகை முதலியவற்றை முடிவுசெய்தல். *மாவட்டமன்றம் நிலத்தின் வருவாயைக் கணிப்பீடுசெய்ய அதிகாரம் உடையதாகும்* (*இ.ப.*VI 8(1), *இ.அ.*); To assess.

கணிப்புறுநர் *பெயர்*

வரித்தொகையோ வேறு பணத்தொகையோ விதிக்கப்படுபவர் (*பி*. 2(7), *வ.வ.ச.*); Assessee.

கதம்ப அடைமானம் *பெயர்*

ஆங்கில அடைமானம், ஈட்டடைமானம், உடைமை அடைமானம், மூலஆவண அடைமானம், விற்பனை அடைமானம் ஆகிய ஐவகையிலும் சேராத ஒன்று (*பி*.58, (எ) *சொ.ம.ச.*); Anomalous mortgage.

கதவடைப்பு *பெயர்*

வேலைசெய்யும் இடத்தை மூடுவது. வேலையை இடைநிறுத்திவைப்பது அல்லது வேலையாட்களுள் ஒருபகுதியினரைத் தொடர்ந்து வேலைக்கு வைத்துக்கொள்ள மறுப்பது (*பி.* 2 (ஔ), *தொ.பூ.ச.*); Lockout.

கப்பல்இடர்க்காப்பு *பெயர்*

காண்க : கடலிடர்க் காப்பு

கப்பல்சரக்கு *பெயர்*

கப்பல் மூலம் அனுப்பப்படும் சரக்குகள், வாணிகப் பண்டங்கள் முதலானவை (*பி.* 2, (*அஅ*) *து.தொ.*(*வே.ஒ.*)*ச.*); Cargo.

கப்பல் சரக்குப்பட்டி *பெயர்*

கப்பலில் ஏற்றிச்செல்வதற்கென்று ஒப்படைக்கப்பட்ட பண்டங்களைப் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டு (*இ.ப.* VII - 1-91, *இ.அ.*); Bill of lading.

கமுக்கமான *பெயரடை*

(நம்பிக்கைப் பொறுப்புடன்) மறைவடக்கமான. *கமுக்கமான செய்தித்தொடர்பு* (*ச.சொ.* 1979); Confidential

கருச்சிதைவு *பெயர்*

கருப்பையில் கரு வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு முன்னரே கலைந்து விடுகை. *கருச்சிதைவு விளைவிப்பதானது. . எதன் சார்புமின்றி அதுவே ஒரு தனிக் குற்றமாகும்* (*பி.* 91, *வி-கா*, *இ.த.தொ.ச.*); Abortion.

கருணையான *பெயரடை*

சட்டத் தேவையாக அல்லாமல், அன்பு, அருள் அல்லது ஆதரவு காரணமாக வழங்குகிற (*ச.சொ.* 1979); Exgratia

கருத்தாய்வுரை *பெயர்*

ஆய்வுப்பொருள் பற்றிய கருத்தை அல்லது மனப்பாங்கை வெளிப்படுத்தும் நுண்ணோக்குரை அல்லது குறிப்புரை (*பி.*3, *இ.த.தொ.ச.*), Comment.

கருத்துரை *பெயர்*

ஒன்றைப்பற்றி ஒருவர் கொண்டுள்ள எண்ணம், நம்பிக்கை அல்லது தீர்மானம். *நாடாளுமன்றம் அறிவுரை வாரியத்தின் கருத்துரையைப் பெறாமலேயே காலநீட்டிப்புக்கு வகைசெய்யலாம்* (*உறுப்.*22(7), *இ.அ.*), Opinion

கருத்துறு செயல் *பெயர்*

ஒன்றைச் செய்யக் கருதுபவரின் மனத்திலுள்ள எண்ணத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும் புறச்செயல் (*ச.சொ.*1968), Overt act.

கருத்தொற்றுமை *பெயர்*

ஒரு பொருட்பாடு குறித்துத் தொடர்புடைய அனைவரும் மனம் ஒன்றுபடுகை (*ச.சொ.*1968); Consensus.

கருதாப்பிழை *பெயர்*

ஒருவரது நடத்தை அல்லது அதன் விளைவுகள் பொறுத்துப் போதிய அக்கறைகொள்ளாத மனநிலை; புறக்கணிப்பு; அசட்டை (*ச.சொ.*1968); Negligence.

கருப்பொருள் மாற்றுகை *பெயர்*

ஓர் ஆவணத்தில் அக்கறையுள்ளவர்களின் நலனுக்கு உறுத்தம் (பாதிப்பு) உண்டாக்கக்கூடிய திருத்தங்களைச் செய்வது; கருநிலைத் திருத்தம் (*ச.சொ.*1968); Material alteration.

கருவழி உறவு *பெயர்*

வெவ்வேறு கணவர் மூலம் பெண் மூதாதை ஒருவருக்குப் பிறந்தவர்களிடையே நிலவும் சொந்தம் (*பி.*3, (1-2), *இ.வ.உ.ச.*); Utrine blood.

கருவழிப்பு *பெயர்*

தாயின் கருப்பையிலிருக்கும்போதே முழு வளர்ச்சியடையாத கருவைக் கொன்றுவிடுவது (*ச.சொ.*1979); Aborticide.

கருவியக்கமுற்ற *பெயரடை*

தன் உடலுள் கரு உயிருடன் இருப்பதை ஒரு பெண் உணரும் நிலையில் (*ச.சொ.* 1968), Quick with child.

கரைநிலம்சார்ந்த *பெயர்*

ஆற்றின் அல்லது நீரோட்டத்தின் கரையுடன் தொடர்புடைய அல்லது இணைவுடைய (*ச.சொ.* 1968); Riparian.

கலகம் *பெயர்*

சட்டமுரணான கூட்டத்தினரோ அவர்களுள் ஒருவரோ அக்கூட்டத்தின் பொதுக்குறிக்கோளை அடையப் பயன்படுத்தும் வன்முறை அல்லது வன்தாக்கு. *கலகம் விளைவித்தலுக்குத் தண்டனை* (*பி.*146. *இ.த.தொ.ச.*); Riot.

கலந்தறி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூடிப் பேசி முடிவுசெய்தல். *சிறை செய்யப்பட்டுள்ளவர் ஒரு சட்டத் தொழிலாற்றுநரைக் கலந்தறியவும் அவர் மூலம் வழக்காடுவதற்குமான உரிமை* (*உறுப்.* 22(1). *இ.அ.*); To consult.

கலந்தாய்வுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைப் பற்றிய செய்திகளையும் எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ளுதல்; விவாதம் செய்தல்; *பொதுமை நலன்குறித்த பொருள்பற்றிப் புலனாய்வுசெய்தல் மற்றும் கலந்தாய்வுசெய்தல்* (*உறுப்.*263, *இ.அ.*); To discuss.

கலந்தாராய்தல் *பெயர்*

மேற்கொள்ளப்படவேண்டிய செயலுக்குச் சார்பாகவும் எதிராகவும் மன்ற உறுப்பினர்கள் கவனமாகக் கருதுகை செய்தல். *சட்டகம் பற்றிக் கலந்தாராயும் நோக்கம்* (*உறுப்.*108, *இ.அ.*); To deliberate.

கலப்படம் *பெயர்*

மிகு ஆதாயம்பெறும் நோக்கத்துடன் விற்பனை செய்யும் பொருளில் உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும் பொருளையோ அந்தப் பொருளின் இயற்கைத் தன்மையை மாற்றுகிற வேறு பொருளையோ சேர்ப்பது. *விற்பனைசெய்யக் கருதியுள்ள உணவில் அல்லது பானத்தில் கலப்படம் செய்தல்* (*பி*.272, இ.*த*.*தொ*.*ச*.); Adulteration.

கலம் *பெயர்*

நீர்வழியாக மனிதரையோ பொருளையோ கொண்டுசெல்வதற்கான ஊர்தி (*பி*.48, இ.*த*.*தொ*.*ச*.); Vessel.

கலைக்காதுதள்ளிவை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டமன்றக் கூட்டத்தொடரின் நடப்புக்காலத்தை இறுதிசெய்தல். *குடியரசுத்தலைவர் அவைகளைக் கலைக்காது தள்ளிவைக்கலாம்* (*உறுப்*. 85, இ.*அ*.); To prorogue.

கலைத்தணிக்கையாளர் *பெயர்*

நாடகம், திரைப்படம் போன்றவற்றில் ஒழுக்கநெறிக்கும் பண்பாட்டுக்கும் பொருந்தாதவை எனக் கருதப்படும் பகுதிகளை நீக்கவோ மாற்றியமைக்கவோ அதிகாரம் பெற்றவர் (*ச*.*சொ*.1968); Censor.

கலைப்புறுத்தம் *பெயர்*

கணக்கு வழக்குகளை ஆராய்ந்தபின்பு நொடித்துப்போன வணிக நிறுவனத்தை மூடிவிடுகை (*பி*.143, இ.*ஒ*.*ச*.); Liquidation.

கலைப்புறுத்துநர் *பெயர்*

நொடித்துப்போன நிறுமங்களைக் கலைத்துவிடும்பொருட்டு அரசினாலோ தகுதிறம்வாய்ந்த நீதிமன்றத்தாலோ அதற்கென அமர்த்தப்படும் அலுவலர்; நிறுமக் கலைப்பு அதிகாரி. *அதிகாரமுறையில் அமைந்த கலைப்புறுத்துநர்* (*பி*. 3(2) (*அ*) (iii) *கா*.*ச*.); Official liquidator.

கவனம் *பெயர்*

மனத்தை ஒருமுகப்படுத்துகை (*ச*.*சொ*.1979); Attention.

கவனமாகப்படி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

* விவரங்கள் ஒவ்வொன்றையும் கருத்துடன் படித்து நுணுக்கமாகப் பகுத்தாராய்தல் (*கோகன்முஷார் எதிர் கைலாஷ் சிங்* AIR 1962 Pat. 249); To peruse.

கவர்ந்துகடத்தல் *பெயர்*

ஒருவரை அவருடைய இசைவோ, அவரது சார்பில் சட்டப்படி இசைவளிக்க அதிகாரம் கொண்டவரின் இசைவோ இல்லாமல் இந்திய நாட்டின் எல்லைக்கு அப்பால் கொண்டுசெல்லல் (*பி*.360, இ.*த*.*தொ*.*ச*.); Kidnapping (from India).

கவர்ந்துசெல்லல் *பெயர்*

சட்டப்படியான காப்பாளரின் இசைவின்றி அவரது காப்பாண்மையிலுள்ள வயது வராதவரையோ (18வயதுக்குட்பட்ட ஆணையோ, 16 வயதுக்குட்பட்ட பெண்ணையோ) மனநிலை திரிந்தவரையோ கூட்டிச் செல்லுதல் அல்லது ஆசைகாட்டி அழைத்துச் செல்லல் (*ச*.*சொ*.1968); Kidnapping from lawful guardianship.

கவனமின்மை *பெயர்*

கவனத்துடன் இருக்கவேண்டிய ஒருவர் தமது சட்டமுறையான கடமையில் தவறிய நிலையில், அவர் விரும்பாமலேயே மற்றவருக்கு ஏற்படுத்திய தனிப்பட்ட தீங்கு. *நீராவிக்கலத்தின் தலைவர் தம்பால் எந்தக் கவனமின்மையும் இல்லை என்பதை உணர்கிறார்* (*பி*.81, *வி.கா*.(*அ*), *இ.த.தொ.ச*.); Negligence.

கழகக் குழுமம் *பெயர்*

ஒரே நேரத்தில் பற்பல உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஆட்களின் தொகுதி; கூட்டுருக் குழுமம்; கூட்டிணையக் குழுமம். எ-டு: மாநகராட்சி மன்றம் (*ச.சொ*.1983); Corporation aggregate.

கழகத் தனிமம் *பெயர்*

ஒரு நேரத்தில் ஒற்றை உறுப்பினரை மட்டுமே கொண்டிருப்பதும், அவ்வரை அடுத்துப் பதவிக்கு வருபவர் மூலம் நிறுமத்தின் தன்மை பேணப்படுவதுமான அமைப்பு; கூட்டுருத் தனிமம்; கூட்டிணையத் தனிமம்; எ-டு: குடியரசுத்தலைவர், ஆளுநர், துணைவேந்தர் (*பி*. 2(3)(7) (*அ*), *நி.ச*.); Corporation sole.

கழகம் *பெயர்*

தனிப்பட்டவர்களின் தொகுதியாகவோ தொடர்வரிசையாகவோ அமைவதும், சட்டத்தின்நோக்கில் தனிப்பட்டவர்களினின்றும் தனிவேறான நிலவுகை (=உளமை), உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைக் கொண்டதுமான ஆட்களின் குழுமம்; கூட்டுரு; கூட்டிணையம். *வாணிகக் கழகம்* (*இ.ப*. VII-1-43, *இ.அ*.); Corporation.

கழிமானம் *பெயர்*

செலுத்தவேண்டிய தொகையில் குறைப்பு; தள்ளுபடி (*ச.சொ*.1968); Rebate.

கள்ளக்கடத்தற்பொருள் *பெயர்*

ஒரு நாட்டின் சட்டங்களுக்கு எதிராக இறக்குமதியோ ஏற்றுமதியோ செய்யப்படும் பண்டங்கள். *கள்ளக்கடத்தற்பொருள் வாணிகம்* (*முகப்புரை*, *இ.போ.ச*.); Contraband.

கள்ளக்கடப்புவாணிகம் *பெயர்*

சட்டம் தடைசெய்த சரக்குகளை ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்தல் அல்லது சுங்கத்தீர்வை செலுத்தாது ஏற்றுமதி இறக்குமதி செய்தல்; Smuggling.

கள்ளப்பொருள் *பெயர்*

திருட்டு, அச்சுறுத்திப்பறித்தல், கொள்ளை, நம்பிக்கைமோசடி அல்லது கையாடல் செய்வதன்மூலம் கைமாறிய சொத்து (*ச.சொ*.1968); Stolen property.

கள்ளப்போலி *பெயர்*

அதிகாரவுரிமை இன்றியும் மோசடிசெய்யும் நோக்குடனும் மற்றொரு பொருளைப்போலத் தோன்றும்படியும் செய்யப்படும் பொருள். *கள்ளப்போலி நாணயத்தாள்* (*பி*.94(2) (*இ*) *கு.ந.தொ.ச*.); Counterfeit.

கற்றும் வேலையில்லா இளைஞர் *பெயர்*

கல்வியை முடித்தபின்பு வேலைவாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும் குடிமக்களுள் ஒரு வகையினர்.

* *பல்கலைக் கழகத்தில் இன்னும் தனது படிப்பினைத் தொடருகின்ற ஒருவர் கற்றும் வேலையில்லா இளைஞர் ஆகார் (விஷ்ணுராம் எதிர் பராக் சைகியா* AIR 1984 SC 898); Educated unemployed youth.

கன்னமிடுதல் *பெயர்*

சுவரில் துளையிடுதல், சுவர் அல்லது கட்டடம்மீது ஏறிக்குதித்தல், பலகணி அல்லது அடைத்த கதவு திறத்தல், கதவுத்துளை வழியே கம்பி விட்டுத் தாழ்ப்பாளை அகற்றுதல், வீட்டுக்காரர் தொலைத்துவிட்ட சாவியினால் பூட்டைத் திறத்தல், அவரை அடித்துத் தள்ளுதல், வாயிற் காவலரை அச்சுறுத்தி எதிர்க்காமல் செய்தல் ஆகியவற்றின் மூலம் வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் (*பி*.445, *இ.த.தொ.ச.*); House breaking.

கா

காசோலை *பெயர்*

குறித்துரைக்கப்பெற்ற வங்கியருக்கு வரையப்படுவதும், காட்டிக்கேட்கும்போது அந்த வங்கியரால் பணம் கொடுக்கப்படுவதுமான மாற்றுச்சீட்டு (*பி*.6, *மா.மு.ச.*); Cheque.

காட்டிய கணக்கு *பெயர்*

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கொடுபடவேண்டியதைத் தெரிவிப்பதும் தொகை கொடுப்பதற்கான உறுதிமொழி, கணக்கின் நேரிய சரிதன்மை ஆகியவை தொடர்புடையவர்களால் வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ ஒப்புகை செய்யப்படுவதுமான பற்றுவரவு விவரம்.

* *ஒப்பந்தம் அல்லது நம்பக உறவுநிலையில் காட்டிய கணக்கு அமைகிறது (பன்னலால் எதிர் உம்ராமோல்* AIR 1953 cal. 244); Account stated.

காண்புரைஞர் *பெயர்*

தாமே நேரில் கண்ட உண்மை நிகழ்வுகளைப்பற்றிச் சான்றுகூறுபவர்; நேரில் கண்ட சாட்சி; காட்சிச் சான்றுரையர் (*ச.சொ.*1968); Eye witness.

காப்பகம் *பெயர்*

துயருறுபவர், ஆதரவற்றவர், திக்கற்றவர் முதலிய வகையினருக்கு உண்டி உறையுள் முதலியன அளித்துப் பாதுகாக்கும் நிலையம்; குறிப்பாகப் பித்தர் காப்பகம் (*ச.சொ.*1983); Asylum.

காப்படைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைக் கவனமாகப் பேணிக்காக்கும் பொருட்டு, நம்பிக்கையுடன் மற்றவரின் பொறுப்புக்கு உட்படுத்தல். *மாநில ஆட்சிய அலுவற்பணியை இந்திய அரசு இசைவுடன் அதன் அலுவலர்களிடம் மாநில ஆளுநர் காப்படைவு செய்யலாம் (உறுப்.*258 *அ, இ.அ.*); To entrust.

காப்பளிப்பு *பெயர்*

1. தீங்கு விளைவிக்கும் இடர்விலிருந்து காப்பாற்றுதல். *குற்றத்தீர்ப்பைப் பொறுத்துக் காப்பளிப்பு (உறுப்.*20(1), *இ.அ.*), Protection.

2. அதிகாரமுறைக் கடமைகளை ஆற்றும் பொதுஅலுவலர் போன்ற சில வகையினர்மீது சட்டநடவடிக்கை தொடர்வதற்கு எதிராக அளிக்கப்படும் விலக்குரிமை. *குடியரசுத் தலைவர், ஆளுநர்கள், இராஜப்பிரமுக்கள் ஆகியோருக்குக் காப்பளிப்பு* (*உறுப்*.361, இ.*அ*.); Protection.

காப்பாயம் *பெயர்*

உரிமைத் தகுதி பெறாதவரின் உடலையும் உடைமையையும் பேணிக்காத்துக் கண்காணிப்பதற்கான அமைப்பு (*பி*.3, இ.*உ.வ.ச*.); Court of wards.

காப்பாளர் *பெயர்*

தம்மைத் தாமே காத்துக்கொள்ள இயலாத உரிமைவயது எய்தாதவரை அல்லது மனநலமற்றவரைத் தமது பொறுப்பிலோ காப்படைவிலோ கொண்டுள்ளவர் (*பி*.2(ஒ), கு.*ச*.); Guardian.

காப்பாளி *பெயர்*

காண்க : எதிர்வழக்காளி.

காப்பீடு *பெயர்*

காப்பீட்டு முனைமத்தொகை பெறுவதற்கு மறுபயனாக, குறித்தஒரு நிகழ்ச்சி நேர்ந்தால் ஒரு தொகை கொடுப்பது என்றோ, நினையாநிகழ்வான இழப்பு நேர்ந்தால் ஈடு அளிப்பது என்றோ ஒருவர் மற்றொருவரிடம் செய்து கொள்ளும் ஒப்பந்தம் (*பி*.115, இ.*சா.ச*.); Insurance.

காப்பீடுஅளிக்குநர் *பெயர்*

நேரிடலாகும் இழப்புக்கு எதிராகக் காப்புறுதி கொடுப்பவர் (*பி*.2 (16), ஆ.*கா.க.ச*.); Insurer.

காப்பீடுகணிக்குநர் *பெயர்*

ஒருவரின் வாழ்நாள், காப்பு நலன்கள், காப்புறுதி ஆவணங்கள் முதலியவற்றைக் கணித்து மதிப்பிடும் வல்லுநர் (*பி*.2(1), ஆ.*கா.ச*.); Actuary.

காப்பீடுபெறுநர் *பெயர்*

நேரிடலாகும் இழப்புக்கு எதிராகக் காப்புறுதி பெறுபவர் (*பி*.49, *சொ.மா.ச*.); Insured.

காப்புரை *பெயர்*

சட்டத்தில் அல்லது ஒழுங்குமுறை விதியில் சொல்லப்பட்டுள்ள பொதுவானமுறையிலிருந்து சிறப்பான ஒன்றுக்கு விலக்களிக்கும் பிரிவுக்கூறு (*பி*.137, *சொ.ம.ச*.); Saving.

காப்புளார் *பெயர்*

காப்பாளரின் பாதுகாப்பில் உள்ளவர் (*பி*.4(3), *கா.கா.ச*.); Ward.

காப்புறு கடன்தருநர் *பெயர்*

தாம்கொடுத்த கடன்தொகைக்குப் பிணையமாகக் கடனாளியின் சொத்துமீது அடைமானம், பொருட்பிணைப்பொறுப்பு அல்லது பற்றுரிமை கொண்டிருப்பவர். *பிணைக் கடனாளர்* (*ச.சொ*.1968); Secured creditor.

காப்புறுதி *பெயர்*

இடர்விலிருந்து பாதுகாக்கப்படும் நிலை (*ச.சொ*.1979); Security.

காப்புறுதிஆவணம் *பெயர்*

கடன் தருபவரால் பொறுப்புறுதியாகக் கொள்ளப்படும் எழுத்து வடிவிலான உறுதிமொழி. *'காப்புறுதி ஆவணங்கள்' என்பது பங்கு முதல் தொகையையும் உள்ளடக்கும்* (*உறுப்*.366(26), இ.*அ*.); Security.

காப்புறுதி நடவடிக்கை *பெயர்*

ஒருவரின் நன்னடத்தையையோ அமைதிகாக்கும் தன்மையையோ உறுதிசெய்யும்பொருட்டுக் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் செயல்முறைகள் (*ச.சொ*. 1979); Security Proceedings.

காப்புறுதிப்பிணையம் *பெயர்*

ஓர் உரிமையின் துய்மானத்தையோ நிறைவேற்றத்தையோ உறுதிசெய்யும்பொருட்டு, வைப்பீடு செய்யப்பட்ட அல்லது கைமாற்றிக் கொடுக்கப்பட்ட சொத்து, பிணைமுறியம் அல்லது கடப்பாட்டாவணம் (*ச.சொ*.1979); Security.

காமவிகாரப் புணர்ச்சி *பெயர்*

காண்க : இயல்முரண் குற்றச்செயல்.

காரணம் *பெயர்*

உரிமை, எண்ணம் அல்லது நம்பிக்கையை மெய்ப்பிக்கவோ பொய்ப்பிக்கவோ, ஒரு செயலைச் சரியென நிறுவவோ கண்டனம் செய்யவோ வாதமாகப் பயன்படுத்தப்படும் உண்மைவிவரக்கூற்று (*ச.சொ*. 1979); Reason.

காரணம் காட்டுக *தொடர்*

குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் தமது குற்றத்தை மறுப்பதற்கும், அதுபற்றித் தாம் அறியவில்லை என்பதை நிறுவுதற்கும், கருதப்பட்டுள்ள தண்டனை தமக்கு விதிக்கப்படக்கூடாது எனச் சார்பாண்மை செய்வதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில், உயர் அலுவலரால் அவருக்கு அளிக்கப்படும் குறிப்பாணை

* *தகுதிவாய்ந்த அலுவலர், பணியாளர்களுக்குக் காரணம் காட்டுக என்னும் தகவான வாய்ப்பளித்து உசாவுகை செய்த பின்பே தண்டனை விதிக்க முற்படவேண்டும்* (*ஹூக்கும்சந்த் எதிர் இந்திய ஒன்றியம்* 1959 SCA 346); Show cause.

காரணவூகம் *பெயர்*

காரியத்திலிருந்து காரணத்திற்குச் செல்லும் வாதமுறை (*ச.சொ*. 1968); A Posteriori.

காரியவூகம் *பெயர்*

காரணத்திலிருந்து காரியத்தை உய்த்து அறிகை (*ச.சொ*. 1983); A Priori.

காலடிப் பதிவுச் சான்று *பெயர்*

* ஒரு வழக்கு நடவடிக்கையில் சூழ்நிலைச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும் காலடித் தடம் (*மயில்சாமி வழக்கு* (1938) சென்னை 262); Foot print evidence.

காலவரம்பீடு *பெயர்*

சட்டம் குறித்துரைக்கும் காலஅளவுக்குள் உரிமைகோரும் வழக்கைத் தொடரவேண்டும் எனவும், காலம் முடிந்தபின்பு வழக்கை நீதிமன்றம் ஏற்கக் கூடாது எனவும் குறிப்பிடும் சட்டமுறைக் கோட்பாடு (இ.*ப*.VII-iii-13, இ.*அ*.); Limitation.

காலவரம்பு கடந்தது *தொடர்*

குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் ஒரு செய்கை நிறைவேற்றப்படவில்லை என்பதால் காலவரம்புச் சட்டகையின்படி ஓர் உரிமையை இழந்துவிடுதல்.

* காலவரம்பு கடந்தது என்னும் கருத்துரு நீதிமன்றத்துக்கு வெளியேயுள்ள நடவடிக்கைக்குப் பொருந்தாது (*அரிராஜ்சிங் எதிர் சஞ்சலாக் பஞ்சாயத்து ராஜ்* AIR 1968 All. 246); Time barred.

காவல்துறை அதிகாரம் *பெயர்*

1. * ஒரு சமூகத்தின் உடல்நலம் ஒழுக்கநெறி, காப்புநிலை இவற்றைக் கடந்து, அரசமைப்பு வரம்பீடுகளுக்குள் அதன் நல்வாழ்வு நிலையையும் அமைதி நிலையையும் பேணும் அதிகாரவுரிமை. (*கோவேஸ் எதிர் கூப்பர்* 336 US 77 (1949), *அமெரிக்க உச்சநீதிமன்றம்*); Police power.

2. * இந்திய அரசமைப்பு 31(1)ஆம் உறுப்பில் காவல்துறை அதிகாரமும் சுட்டுகை செய்யப்பட்டிருக்கிறது (*சரஞ்சித்லால் எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1951 SC 41); Police power.

3. * அரசமைப்பு 31(1)ஆம் உறுப்பு, சமுதாய மற்றும் பொதுமை நல்வாழ்வு நலன்கருதி அலுவற்பணியாற்ற அரசை இயல்விப்பதைத் தவிரக் காவல்துறை அதிகாரத்தைச் சுட்டவில்லை (*கொச்சுண்ணி எதிர் சென்னை அரசு* AIR 1960 SC 1080); Police power.

கி

கிலி *பெயர்*

உடனடி இடர்வு (=அபாய) உணர்வால் உந்தப்படும் பேரச்சம்; பீதி (153 *அ*(இ), *இ.த.தொ.ச.*); Alarm.

கிளர்ச்சி *பெயர்*

ஆட்சியையோ அதிகாரத்தையோ எதிர்த்துச் செய்யப்படும் கலகம் (*ச.சொ* 1968); Rebellion.

கிளைவழி இறக்கம் *பெயர்*

தந்தை-மகன் என்னும் நேர்வழி மரபுமுறையிலிருந்து தனிவேறுபட்டு அண்ணன்-தம்பி போன்று அமைகின்ற பக்கவழி உறவுமுறை (*ச.சொ.*1968); Collateral descent.

கிளைவழிப் பங்கு *பெயர்*

நேர்முக வழிமுறையினராக இல்லாமல், அந்தந்த முன்னோர்களின் சார்பாளர்கள் (=பிரதிநிதி) என்னும் முறையில் சொத்தில் பெறும் பங்கு (*ச.சொ.*1968); Per stripes.

கீ

கீழ் அடைமானம் *பெயர்*

ஒரு சொத்தை அடைமானம்பெற்றவர் தமது அடைமான உரிமையை மற்றொருவரிடம் அடைமானம் வைப்பது (இ.*ப.*1.*பிற்.ஈ, படி*.11 *உ.ந.தொ.ச.*); Sub-mortgage.

கீழ்க் குத்தகை *பெயர்*

வேறொருவரின் சொத்தைக் குத்தகைக்கு எடுத்த ஒருவர் அதைப் பிறிதொருவரிடம் **குத்தகைக்குவிடுவது** (*பி*.108 (ஒ), *சொ.ம.ச.*); Sub-lease.

கீழ்நிலை நீதிமன்றம் *பெயர்*

* செயல் எல்லை, பணவரம்பு, நுதல்பொருள் பற்றி இயற்றுச்சட்ட வரம்பீடுகளால் எல்லைகோலப்பட்டுள்ள முறைமன்றம். *ஈஸ்வர்தாஸ் லல்லா எதிர் ஹரி* AIR 1962 Mad. 458); Inferior court.

கீழ்வரை *பெயர்*

இயன்றஅளவு மிகவும் குறைந்த அடிப்படை அளவு அல்லது எண்ணிக்கை; குறுமம். *கீழ்வரை எண்ணிக்கை* (*உறுப்*.145(3), *இ.அ.*); Minimum.

கீழமை *பெயரடை*

படிநிலை, தரம், வகுப்பு அல்லது வரிசையில் தாழ்நிலையிலுள்ள (*உறுப்*.134 (1*ஆ*), *இ.ஆ.*); Subordinate.

கு

குடிபெயர்ந்தவர் *பெயர்*

வாழும் இடத்தையோ நாட்டையோ விட்டு வேறிடத்திற்கு அல்லது நாட்டிற்குச் செல்பவர். *பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தவர்* (*உறுப்*.7, *இ.அ.*); Migrant.

குடிபெயர்ந்துபோதல் *பெயர்*

நிலையாகத் தங்கிவாழும்பொருட்டு ஒரு நாட்டைவிட்டு மற்றொரு நாட்டிற்குச் செல்லுதல்; வலசைபோதல் (*இ.ப.* VII-I-19, *இ.அ.*); Emigration.

குடிபெயர்ந்துவருதல் *பெயர்*

நிலையாகத் தங்கிவாழும்பொருட்டு ஒரு நாட்டைவிட்டு மற்றொரு நாட்டிற்கு வருதல், வலாசைவருதல் (*ச.சொ.*1979); Immigration.

குடிமகன் *பெயர்*

அயல்நாட்டவர் என்பதனின்றும் வேறு பிரித்தறியக்கூடிய வகையில், ஒரு நாட்டின் அரசமைப்பு உரிமைகளைத் துய்க்கவும் கடமையாற்றவும் போற்றிஒழுகவும் சட்டப்படி உரிமையுள்ளவர். *இந்திய ஆட்சிப்பரப்பில் தாமோ பெற்றோரில் ஒருவரோ பிறந்தவராக அல்லது அரசமைப்பின் தொடக்கத்தை ஒட்டி முந்திய ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் இந்தியப் பகுதியில் வழக்கமாகக் குடியிருந்திருக்கிறவராக உள்ள ஒருவர்* (*உறுப்*.5, *இ.அ.*); Citizen.

குடிமை *பெயர்*

ஒரு நாட்டின் முழுமையான அரசியல் உரிமைகளும் ஆளின் தன்னுரிமைகளும் கொண்டுள்ள ஒருவரின் நிலை *இந்த அரசமைப்பின் தொடக்கத்தில் குடிமை* (*உறுப்*. 5, *இ.அ.*); Citizenship.

குடிமைதுறப்பு *பெயர்*

அயல்நாட்டுக் குடிமகனாக அங்கேயே நிலையாக வாழும் உட்கருத்துடன் தனது நாட்டின்பால் உள்ள பற்றுறுதியைக் கைவிடுகை (*ச.சொ.*1968); Expatriation.

குடிமையாக்கம் *பெயர்*

அயல்நாட்டார் ஒருவரை மற்றொரு நாட்டின் குடிமகனாகச் செய்யும் சட்ட நடைமுறை (*இ.ப.*VII - I-17, *இ.அ.*); Naturalisation.

குடியேற்றம் *பெயர்*

ஆட்கள் குழுக்களாகச் சென்று குடியமர்வதற்கும் அங்குள்ள அரசியல், சமுதாயக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்ளவும் வாய்ப்பளிக்கும் ஒரு புதிய நாடு அல்லது பரப்பிடம் (*இ.அ.* VII-11-18, *இ.அ.*); Colonization.

குடிவழி *பெயர்*

பிறப்பு வழிமுறையின்படி வரிசைப்படுத்தப்பட்ட மரபுரிமையரின் கணக்கெடுப்பு (*உறுப்*.16(2), *இ.அ.*); Pedigree.

குடிவழிமுன்னவர் *பெயர்*

ஒரு பரம்பரையின் வழிமுறை எவரிடமிருந்து தொடங்கப்படுகிறதோ அவர் (*ச.சொ.*1968); Propositus.

குடிவாரம் *பெயர்*

பயிர்விளைச்சலில் குடியானவருக்குரிய பங்காகவும் நிலக்கிழாருக்குரிய மேல்வாரம் என்பதனின்று தனிவேறாகவும் உள்ள ஆதாய விழுக்காடு. *குடிவாரத் தீர்வுமுறையின்கீழ்க் கைக்கொண்டுள்ள நிலம்* (*உறுப்*. 31 *அ*.(2)(ii), *இ.அ.*); Kudivaram.

குடும்பம் *பெயர்*

பெற்றோர்கள் அவர்களுடைய மக்கள்; ஒரு பொதுமூதாதையரின் வழித்தோன்றல்கள், ஒரு வீட்டில் வாழும் வேலையாள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்குழு. (*பி.*2(10) *மா.நி.சீ.ச.*)

* *இச்சட்டகையின்படி குடும்பம் என்னும் சொல் கணவன், மனைவி அவர்களுடைய உரிமைவயது எய்தாத ஆண்மக்கள், திருமணமாகாத பெண்மக்கள் முதலியவர்களின் உறவுமுறையைக் குறிப்பிடுமேதவிர அவர்களின் கூட்டு வாழ்க்கையையோ கூட்டுச் சொத்துரிமையையோ குறிப்பிடவில்லை (வேங்கடாசலம் பிள்ளை எதிர் புதுவை ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு அரசு* AIR 1985 SC 571); Family.

குத்தகை *பெயர்*

பணமாகவோ, பண்டமாகவோ, பணியாகவோ, பெறுமதியுள்ள வேறு பொருளாகவோ, குறித்த காலத்திற்கு அல்லது காலவரம்பின்றிக் குத்தகைக்குஎடுத்தவர் கொடுப்பதைக் குத்தகைக்குவிட்டவர் பெற்றுக்கொண்டு, ஓர் அசையாச்சொத்தைத் துய்க்கும் உரிமையை மாற்றல்செய்துகொடுப்பது (*பி.*105, *சொ.மா.ச.*); Lease.

குத்தகைக்காரர் *பெயர்*

சொத்து ஒன்றைக் குத்தகைக்கு எடுப்பவர் (*பி.*105, *சொ.மா.ச.*); Lessee.

குத்தகைச் சார்புறவு *பெயர்*

நிலக்கிழாருக்கும் குடிவாரருக்கும் அல்லது குத்தகைவிடுபவருக்கும் குத்தகைகொடுப்பவருக்கும் இடையே நிலவும் உறவு (*ச.சொ.*1968); Privity of tenure.

குத்தகையாளர் *பெயர்*

சொத்தைக் குத்தகைக்கு விடுபவர் (*பி.*109, *சொ.மா.ச.*); Lessor.

குருதியுறவு *பெயர்*

திருமணம் மூலமாக உறவு என்பதற்கு எதிர்நிலையில் அமையும் இரத்தவழித் தொடர்பு. *நேர் மரபுவழிக் குருதியுறவு* (*பி*.25, இ.*வ.ச*.); Consanguinity.

குலம் *பெயர்*

(ஆதியில்) தொழிலின் அடிப்படையில் சமூகப் பிரிவாகவும் இப்போது இனப்பிரிவாகவும் அமைந்துள்ள சாதி. *பட்டியல் குலம்* (*உறுப்*.15(1), இ.*அ*.); Caste.

குழந்தை *பெயர்*

* பொதுநிலையில் சிறுவன் அல்லது சிறுமி; பெற்றோர் நிலையைச் சுட்டுகையில் நேர்வழி மகன் அல்லது மகள்; சட்டநிலையில் உரிமை வயது அடையாதவர் (*நானக்சந்த் எதிர் சந்திரகிஷோர்* AIR 1970 SC 446); Child.

குழு *பெயர்*

குறிப்பிட்ட பணிபுரிவதற்காக, அரசு, சட்டமன்றம், கழகம் அல்லது சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட ஆட்கள் (*பி*.135*அ*.(1) (*அ*), *உ.ந.தொ.ச*.); Committee.

குற்றஅறிக்கை *பெயர்*

புலனாய்வுக்குப்பின்பு காவல்அலுவலரால் அவ்வழக்கை ஆய்வுசெய்யும் அதிகாரவரம்புடைய நீதிநடுவருக்கு அனுப்பப்படுவதும், குற்றம்சுமத்தப்பட்டோர், சான்றுரைஞர்கள் ஆகியோரின் பெயர், விவரம், குற்றச்செயலின் சுருக்கம் ஆகியவை அடங்கியதுமான பதிவுக்குறிப்பு (*பி*.173, *கு.ந.தொ.ச*.); Charge sheet.

குற்றஆய்வியல் *பெயர்*

குற்றங்கள், அவற்றின் தன்மை, காரணங்கள், அவற்றைக் கண்டுபிடித்தல், தடுத்தல் ஆகியவை பற்றிய ஆராய்ச்சி (*பி*.173, *கு.ந.தொ.ச*.); Criminology.

குற்றஇளைஞர் *பெயர்*

சிறைத்தண்டனை விதிக்கத்தக்க குற்றம்புரிந்தமைக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபோது பதினெட்டு வயதுக்கும் குறைந்துள்ள ஒருவர்; இளவயதுக் குற்றவாளி. *குற்ற இளைஞர்களைப் பொறுத்த அதிகாரவரம்பு* (*பி*.27, *கு.ந.தொ.ச*.); Youthful offender.

குற்றஎண்ணம் *பெயர்*

குற்றம் செய்யும் உட்கருத்து. (*ச.சொ*.1968); Guilty mind.

குற்றக்குமரர் *பெயர்*

குமரப்பருவக் குற்றவாளி; சிறைத்தண்டனை விதிக்கத்தக்க குற்றம் புரிந்து அதற்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவராகவோ, நன்னடத்தைக் காப்புறுதிப்பிணையம் தருமாறு ஆணையிடப்பட்டவராகவோ 16-க்குக் குறையாமலும் 21-க்கு மேற்படாமலும் வயதுடையவராகவோ உள்ள இளமைப் பருவத்தினர், வளரிளைஞர் (*ச.சொ*.1968); Adolescent offender.

குற்றக்குமரர் பள்ளி *பெயர்*

வளரிளமைப் பருவத்திலுள்ள குற்றவாளிகளைத் திருத்துவதற்காக அரசினர் நடத்தும் சிறைப்பள்ளி. (*பி*.45(2) (*ஆ*), *கு.ச.*); Borstal school.

குற்றக்கூறுகளின் தொகுதி *பெயர்*

ஒரு குற்றச்செயலாக அமையும் பொருளியங்களின் தொகுப்பு (*ச.சொ.*1968); Corpus delecti.

குற்றச் சமநிலையில் *வினையடை*

இரு சார்பினரும் ஒரே குற்றநிலையில் இருக்கும்போது (*ச.சொ.*1983); In pari delicto.

குற்றச்சாட்டு *பெயர்*

நீதிமுறைப்படி தண்டிக்கத்தக்க ஒரு செயலைச் செய்திருப்பதாகக் குற்றஞ்சுமத்துகை. *குற்றச்சாட்டைக் கொணரவிருப்பதற்கான செயற்குறிப்பு* (*உறுப்*.61(2), (*அ*), *இ.அ.*); Charge.

குற்றச்சார்த்தான *பெயரடை*

ஒரு குற்றம் செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிற (*ச.சொ.*1968); Incriminatory.

குற்றச் சிறார் *பெயர்*

சட்டமுறைப்படி குற்றஞ்சாட்டத்தக்க 16 வயதுக்குட்பட்டவர் (*ச.சொ.*1979); Juvenile offender.

குற்றச்சிறார் நீதிமன்றம் *பெயர்*

உரிமைவயது எய்தாத குழந்தைகள், குமரர்கள், இளைஞர்கள் ஆகியோர் செய்த குற்றங்களை ஆய்ந்து தீர்ப்பளிக்கும் முறைமன்றம் (*பகு.*IV. *த.கு.ச.*); Juvenile court.

குற்றச்செயல் *பெயர்*

சட்டப்படி தண்டனை விதிக்கத்தக்க செய்கை அல்லது விடுகை. *குற்றச்செயல்களுக்கான குற்றத்தீர்ப்பைப் பொறுத்தமட்டில் காப்பளிப்பு* (*உறுப்*.20, *இ.அ.*); Offence.

குற்றஞ்சுமத்தப்படுநர் *பெயர்*

குற்றம்புரிந்தவர் எனச் சாட்டுரைசெய்யப்பட்ட ஒருவர். *குற்றஞ்சுமத்தப்படுநர் காவலிலிருந்து தப்பிவிடுகிறபோது* (*பி*.216, *இ.த.தொ.ச.*); Accused.

குற்றஞ்சுமத்துகை *பெயர்*

சட்டப்படி நடவடிக்கை எடுக்கத்தக்க தீங்கையோ குற்றத்தையோ ஒருவர் செய்திருக்கிறார் என்று தொடர்புடைய அலுவலரிடம் முறைப்படி செய்யப்படும் சாட்டுரை. *குற்றஞ்சுமத்துவதாகப் பயமுறுத்துகிற எவரொருவரும்* (*பி*.388, *இ.த.தொ.ச.*); Accusation.

குற்றஞ்சுமத்துநர் *பெயர்*

குற்றம்புரிந்தார் என மற்றொருவர்மீது சாட்டுரைசெய்யும் ஒருவர் (*ச.சொ.*1968); Accuser.

குற்றத்தீர்ப்பாளி *பெயர்*

குற்றம்புரிந்தவர் என்று நீதிமன்றத்தால் தீர்ப்புக் கூறப்பட்டவர்; தீர்ப்புக்குற்றவாளி; தண்டனைக்குற்றவாளி. *குற்றத்தீர்ப்பாளியின் தண்டனையை இடைநிறுத்திவைக்கும் அதிகாரம்* (*உறுப்*.161, *இ.அ.*); Convict.

குற்றத்தீர்ப்பு *பெயர்*

ஒருவர் குற்றம்புரிந்திருக்கிறார் என நீதிமன்றம் விதிக்கும் தண்டனைத் தீர்ப்பு. *குற்றத்தீர்ப்பைப் பொறுத்தமட்டில் காப்பளிப்பு* (*உறுப்*.20, *இ.அ.*); Conviction.

குற்றத்தீர்ப்புறுநிலை *பெயர்*

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் குற்றத்தீர்ப்பளிப்புக்கு ஆளாகும் இடர்வுநிலை (*ச.சொ.*1968); Jeopardy.

குற்றத்துணைவர் *பெயர்*

குற்றம் செய்வதற்கு உதவியோ ஒப்புதலோ அளிப்பவரும் குற்றம் நிகழும்போது இல்லையென்றாலும் அக்குற்றம் செய்யப்படுவதற்கு முன்னரோ பின்னரோ தொடர்புடையவருமாகிய மற்றொருவர் (*பி.*6, *வெ.பொ.ச.*); Accessory.

குற்ற நடவடிக்கை *பெயர்*

குற்றவாளியைத் தண்டிக்க நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குமீது மேற்கொள்ளப்படும் நடைமுறை (*உறுப்.*361, *இ.அ.*); Criminal proceedings.

குற்றம் *பெயர்*

சட்டம் தடைசெய்துள்ளதைச் செய்வது அல்லது விதித்துள்ளதைச் செய்யாதிருப்பது என்னும் தண்டனைக்குரிய செயல் (*பி.*40, *இ.த.தொ.ச.*) *ஆழ்கடலிலோ வானிலோ இழைக்கப்படும் குற்றங்கள்* (*இ.ப.*VII-I-21, *இ.அ.*); Crime.

குற்ற மன்னிப்பு *பெயர்*

ஓர் அமர்வு நீதிமன்றத்தால் அல்லது இதற்கெனப் பணி அமர்த்தப்பட்ட ஒரு சிறப்பு நீதிபதியால் தனித்த நிலையில் வழக்காய்வு செய்யத்தக்கதும், ஏழு ஆண்டுகளோ அதற்குமேலுமோ கடுந் தண்டனை விதித்துத் தண்டிக்கத்தக்க குற்றச்செயலைப் பொறுத்தமட்டில் ஓர் உடந்தையாளுக்கு வழங்கப்படுவதுமாகிய மன்னிப்பு.

* *குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டவரைக் குற்றமன்னிப்பு ஒரு புதுமனிதனாக்கி அவருக்குப் புதிய செல்வாக்கையும் தகுதிறத்தையும் அளிக்கிறது* (*கே.எம். நானாவதி எதிர் பம்பாய் அரசு* 1961 SCR 497); Pardon.

குற்றமனம் *பெயர்*

குற்றம் செய்வதற்குத் தூண்டுகிற ஒரு மனவுணர்வு (*ச.சொ.*1968); Mens rea.

குற்றமிலி வாதுரை *பெயர்*

தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அனைத்திற்கும் எதிராளி எடுத்துரைக்கும் மறுப்புரை (*ச.சொ.*1983); Plea of not guilty.

குற்றமிழைத்த *பெயரடை*

தண்டிக்கத்தக்க செயலைச் செய்திருக்கிற. *அவர் நடத்தைக்கேடு என்னும் குற்றமிழைத்த உறுப்பினராகக் கருதப்படுவார்* (*உறுப்.*317(4), *இ.அ.*); Guilty.

குற்ற முயற்சி *பெயர்*

குற்றச்செயல் எனக் குறிப்பிடும் தொகுப்பின் ஒரு பகுதியாகவும், தடுக்கப்படவில்லை என்றால் குற்றமாக அமைவதுமான செயலைக் குற்றமனத்துடன் செய்வது. *வன்புணர்ச்சிக்கான அல்லது கற்பழிப்புக்கான குற்ற முயற்சி* (*பி.*155(4) *இ.சா.ச.*); Attempt (to commit a crime).

குற்றமேற்ற சாட்சி *பெயர்*

காண்க : ஒப்புரைஞர்.

குற்றவரலாற்றுக் குறிப்பு *பெயர்*

குற்றவாளியின் நடத்தை பொறுத்துக் காவல்துறையினால் வைத்துவரப்படும் ஒரு பதிவுப் புத்தகம் * *வழக்கமான குற்றவாளியாகவோ உடந்தையாளாகவோ உள்ள ஒரு குடிமகனுக்காக மட்டுமே குற்ற வரலாற்றுக் குறிப்பானது தொடங்கப்படவேண்டும். (இராமேஸ்வர் பிரசாத் எதிர் காவல்துறைக் கண்காணிப்பாளர்* AIR 1963 All. 408); History Sheet.

குற்றவழக்கு *பெயர்*

தடைசெய்யப்பட்ட செயலைச் செய்த ஒருவரைச் சட்டம் விதிக்கும் பணத்தண்டத்திற்கோ தண்டனைக்கோ உட்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை (*ச.சொ.*1968); Criminal action.

குற்றவழக்குத்தொடர்வு *பெயர்*

ஒரு குற்றவாளியை வழக்காய்வுக்குள் கொணர்வதற்காகக் குற்றவியல் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் நடவடிக்கை (*பி.* 32(3), *இ.சா.ச.*); Prosecution.

குற்றவழக்குநடத்துநர் *பெயர்*

நீதிமன்றத்தில், குறிப்பாகக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கை நடத்துபவர் (*ச.சொ.*1968); Prosecutor.

குற்றவழக்குப்பட்டிகை *பெயர்*

குற்றவழக்குகளில் வழக்காளி, எதிராளி, சான்றுரைஞர் ஆகியோரின் பெயர், வழக்கு முடிந்தநாள் முதலிய விவரங்களைக் குறித்துவைப்பதற்காக வகுத்துரைக்கப்பெற்ற படிவம் (*ச.சொ.*1983); Calender.

குற்றவாளி *பெயர்*

ஒரு குற்றச்செயலைச் செய்திருப்பவர்; சட்ட மீறுபவர் Criminal (*பி.*114 *வி.கா*- (*ஆ*), *இ.சா.ச.*); Offender.

குற்றவிடுதலை *பெயர்*

வழக்காய்வுக்குப்பின் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் குற்றமற்றவர் என விடுவிப்பது; விடுதலைத்தீர்ப்பு (*ச.சொ.*1968); Acquaittal.

குற்றவியல் அதிகாரவரம்பு *பெயர்*

குற்றவழக்குகளை உசாவுகைசெய்து தண்டித்தற்குரிய அதிகார எல்லை (*பி.*112(2), *உ.ந.தொ.ச.*); Criminal Jurisdiction.

குற்றவியல் சட்டம் *பெயர்*

குற்றமும் தண்டனையும்பற்றிக் கையாளும் சட்டப்பகுதி (*ச.சொ.*1983); Criminal law.

குற்றவெழுத்துரை *பெயர்*

ஒருவரோ பலரோ ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக நீதிமன்றத்தில் எழுத்துமூலம் தெரிவிக்கும் சாட்டுரை (*ச.சொ.*1968); Indictment.

குறித்தவகைச் செயலாக்கம் *பெயர்*

ஒப்பந்த முறிவுக்கான சரியீடு போதாத நிலையில், ஒப்பந்தக்காரர் ஒப்பியதை ஒப்பியவாறே செய்யவேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் சட்ட நெறி (*பி.*28, *விதி வி.*1, *இ.ஒ.ச.*); Specific performance.

குறித்தவகைத் தீர்வழி *பெயர்*

சரியீடு பெறுவதிலிருந்து தனிவேறானதும், முதல்நிலையிலேயே ஒருவர் பெறுவதற்குரிய தீர்வாகவும் உள்ள சட்டமுறை உதவி (*ச.சொ.*1979); Specific relief.

குறித்தொதுக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பங்கையோ உரிமையையோ நலனையோ மற்றொருவருக்கு மாற்றல்செய்தல் (*ச.சொ.*1968); To assign.

குறிப்பேடு *பெயர்*

ஒரு நாளில் நடக்கும் வாணிக நடவடிக்கைகள் எல்லாவற்றையும் பதிந்துவைக்க உதவும் சுவடி (*பி.*3, *வ.க.சா.ச.*); Day book.

குறுக்கு உசாவுகை *பெயர்*

முதல் உசாவுகைச் செய்தியின் உண்மையை ஆய்ந்தறியும் பொருட்டுச் சான்றுரைஞரை எதிர்ச்சார்பினர் கேள்விகேட்பது; குறுக்கு விசாரணை (*பி.*137, *இ.சா.ச.*); Cross examination.

குறுகு நடைமுறை *பெயர்*

குறிப்பிட்ட உரிமைவழக்குகளில் பின்பற்றப்படும் சுருக்கமான வழக்காய்வுமுறை (*பி.*421 (2) *கு.ந.தொ.ச.*); Summary procedure.

குறுந் தலைப்பு *பெயர்*

அ[illegible]ாரமுறையில் அமைந்த ஒரு சட்டகையின் சுருக்கப் பெயர்க் குறிப்பீடு *குறுந்தலைப்பு, தொடக்கம்.... நீ[illegible]த்தறவுகள்* (*பகு.*XXII. *தலைப். இ.அ.*); Short title.

குறையுறுநர்

கேடு அல்லது தீங்கினாலோ சட்டத்தின் செயற்பாட்டினாலோ துன்பத்திற்கு ஆளாகியவர். *முதல்நிலைத் தீர்ப்பாணையினால் குறையுறுநர் எவரும்* (*பி.*97, *உ.ந.தொ.ச.*); Aggrieved person.

குன்றச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சிறப்பை, தரத்தை அல்லது பண்பைக் குறையச்செய்தல் *முன்சென்ற வகைமுறை நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் குன்றச்செய்தல் ஆகாது* (*உறுப்.*11, *இ.அ.*); To derogate.

கூ

கூட்டாண்மை *பெயர்*

அனைவருமோ அனைவர் சார்பில் ஒருவரோ நடத்தும் அலுவல்தொழிலில் கிடைக்கும் ஆதாயத்தைத் தம்முள் பங்கிட்டுக்கொள்வது என உடன்பாடு செய்துகொண்டவர்கள் இடையே எழும் உறவு *விருப்ப முடிவுக் கூட்டாண்மை* (*பி.*7, *இ.கூ.ச.*); Partnership.

கூட்டாண்மையர் *பெயர்*

வாணிகத்தை அல்லது அலுவல்தொழிலை இணைந்து நடத்துவோர்; கூட்டாளர்; கூட்டாளி.
* *கூட்டாண்மையர் என்பவர் அலுவல் தொழிலில் பங்கேற்று நடத்துபவர்* (*அப்துல்பாட்சா எதிர் செஞ்சுரி மரத் தொழிலகம்*, AIR 1954 Mys.33); Partner.

கூட்டிணையம் *பெயர்*

காண்க : கழகம்.

கூட்டுக் குடும்பம் *பெயர்*

தகுதிநிலைப் பகுப்போ பாகப்பிரிவினையோ செய்யப்படாத குடும்பம்.

* *உணவு, வழிபாடு, வாழும்வீடு அல்லது சொத்து தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிராதது கூட்டுக் குடும்பம் ஆகும் (இராமசாமி எதிர் சுப்பிரமணியப் பிள்ளை,* AIR, 1967 Mad. 156); Undivided family.

கூட்டுக்கொள்ளை *பெயர்*

கொள்ளையிடுபவர், முயலுபவர், உடனிருந்து உதவுபவர் என்னும் நிலையிலோ பிறவாறாகவோ ஐவர் அல்லது மேற்பட்டவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சூறையாடுவது அல்லது சூறையாட முயல்வது. *அவ்வாறு செய்கிற, முயல்கிற அல்லது உதவுகிற ஒவ்வொருவரும் கூட்டுக்கொள்ளை அடித்ததாகச் சொல்லப்படுவார் (பி.391.இ.த.தொ.ச.)*; Decoity.

கூட்டு-தனிக் கடப்பாடு *பெயர்*

எல்லோரும் ஒருங்கிணைந்த நிலையிலும், தனித்தனியாக ஒவ்வொருவரும் ஏற்கவேண்டிய பொறுப்பு (*ச.சொ.*1979); Joint and several liability.

கூட்டு நிலக்குடிவாரம் *பெயர்*

ஒரு பண்ணைச்சொத்தை இருவர் அல்லது மேற்பட்டவர் தம் வாழ்நாளில் சமஉரிமையுடன் துய்ப்பதும், அவர்களில் ஒருவரின் இறப்புக்குப்பின்பு எஞ்சுநர்உரிமையின்படி மற்றவரிடம் சென்றடைவதுமான உரிமை.

* *கூட்டுநிலக்குடிவார உரிமையில் நிலத்தின் உடைமையும் உரிமையமும் ஒன்றியிருக்கும் (புத்தென் எதிர் ஷீல் அகர்வால்* 1977 All. 553); Joint tenancy.

கூட்டுப் பேரம் *பெயர்*

வேலைதருநர்களும் வேலைபெறுநர்களும் ஒழுங்கமைவான சங்கத்தின்வழியே வேலையமைவுபற்றிய வரையீடுகளையும் வரைக்கட்டுகளையும் நிலையுறுதிசெய்யும் முறை (*ச.சொ.*1968); Collective bargaining.

கூட்டுறவு *பெயர்*

ஒருங்கிணைந்து செயலாற்றும் நிலை *கூட்டுறவுப் பண்ணை வங்கி (பி.2 (ஏ). அ.வே.க.க.ச.)*; Cooperation.

கூறு *பெயர்*

முறையாவணத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று; Clause.

கெ

கெடுகடந்த *பெயரடை*

உரிய காலம் கழிந்துவிட்ட (*ச.சொ.*1968); Overdue.

கே

கேட்பு *பெயர்*

நீதிமன்ற வழக்காய்வின்போது வாதுரை, சான்றுரை, வாதங்கள் ஆகியவற்றை நீதிபதி கேட்பது (*பி.* 164 (3), *கு.ந.தொ.ச.*); Hearing.

கேடு *பெயர்*

ஒருவரின் உடலுக்கோ உள்ளத்திற்கோ பெயருக்கோ உடைமைக்கோ சட்டத்திற்கு மாறாகச் செய்யப்படும் தீங்கு (*பி*. 44, *இ.த.தொ.ச.*); Injury.

கேள்விநிலைச் சான்று *பெயர்*

சான்றுரைஞர் நேரடியாகத் தாமே அறிந்திராமல் மற்றவர் சொல்வதைத் தெரிவிக்கும் கூற்று (*ச.சொ.*1979); Hearsay evidence.

கேள்விப்பட்டது *பெயர்*

1. * ஒருவர் சொல்வதைக் கேட்பது;

2. பிறர் சொல்லியதைக் கேட்டு ஒருவர் கூறும் கூற்று. (*ஜே.டி. ஜெயின் எதிர் எஸ். பி.ஐ.* AIR 1982 SC 673); Hearsay.

கை

கைக்கூலி *பெயர்*

பொதுஅலுவலர் தமது கடமையைச் செய்வதற்கோ செய்யாமலிருப்பதற்கோ ஒருவர் பெறுகிற அல்லது கொடுக்கிற கையூட்டு. (=இலஞ்சம்.) *தமக்காகவோ வேறு எவருக்காகவுமோ சன்மானமாகக் கைக்கூலி பெற்றுக்கொள்கிற எவரொருவரும்* (*பி*. 171ஆ(1), *இ.த.தொ.ச.*); Bribery.

கைச்சாத்து *பெயர்*

வழங்கிய பண்டம் அல்லது செய்த வேலையைப் பொறுத்துப் பணம் கொடுக்கவேண்டியவருக்குப் பணம்பெறவேண்டியவர் அனுப்பும் விவரச்சீட்டு (*ச.சொ.* 1979); Bill.

கைதுசெய்தல் *பெயர்*

நீதிமன்றக் கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு கட்டாயப்படுத்தவோ, குற்றம்புரிவதைத் தடுக்கவோ, குற்றஞ்சாட்டப்பட்டவரை அல்லது ஐயுறப்பட்டவரை நீதிமன்றத்திற்கு வந்து மறுமொழி அளிக்கச் செய்யவோ, ஒருவரது உடல் தன்னுரிமையை உரிய அதிகாரமுள்ளவர் கட்டுப்படுத்துதல்; சிறை செய்கை. *கைது செய்தற்குரிய குற்றம்* (*பி*.2, (இ), *கு.ந.தொ.ச.*); Arrest.

கைப்பற்றுகை *பெயர்*

நீதிப்பேராணைமூலம் சொத்தைப் பற்றிக்கொள்கை. *கைப்பற்றுகை மூலமாகச் சொத்து பற்றுகை செய்யப்படவேண்டும்* (*பி*.83(3) (அ), *கு.ந.தொ.ச.*); Seizure.

கையகப்படுத்துகை *பெயர்*

பொதுநலன் கருதி ஒருவரது சொத்தினை அரசு எடுத்துக்கொள்ளல். *நிலத்தைக் கட்டாயமாகக் கையகப்படுத்துகை* (*உறுப்*.30(1அ), *இ.அ.*); Acquisition.

கையடைவு *பெயர்*

சட்டச் செயல்முறையின் அல்லது அதிகாரவுரிமையின் பயன்திறனால், ஓர் ஆளை இருத்திவைப்பது (*பி*.167(2), *கு.ந.தொ.ச.*); Custody.

கையாடல் *பெயர்*

பணித்தலைவரின் சார்பாகத் தாம்பெற்ற பணத்தையோ வேறு சொத்தையோ எழுத்தர் அல்லது பணியாள் நேர்மைக்கேடாகத் தம் சொந்த நலனுக்குப் பயன்படுத்துகை. *கையாடல் குற்றஞ்செய்த 'அ' என்பவர் தமக்காக வழக்குரைஞரை அமர்த்திக் கொள்கிறார்* (*பி*.126, *வி.கா*.(*இ*), *இ.சா.ச*); Embezzlement.

கையுடைமை *பெயர்*

ஒருவர் நிலத்தையோ வேறு அசையும் சொத்தையோ தமது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது. *நிலத்தின் ஒதுக்கீடு, கையுடைமை அல்லது பயன்பாடு* (*இ.ப*.VI, 3(1), *இ.அ*.); Occupation.

கையுடைமைகொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

குறிப்பாக ஓர் இடத்தையோ நிலத்தையோ தன்வசத்தில் அல்லது உடைமையில் வைத்திருத்தல்; *வேளாண் தொழிலாளர்களின் கையுடைமையிலுள்ள நிலம்* (*உறுப்*.31 *அ* (2) iii, *இ.அ*.); To occupy.

கையூட்டு *பெயர்*

பொதுஅலுவலர் சட்டப்படி கேட்கக்கூடாத அல்லது அரசு இசைவளிக்காத கைம்மாறு பெறுகை (*ச.சொ*.1968); Illegal gratification.

கையொப்பம் *பெயர்*

ஓர் ஆவணத்தில் அடங்கிய வாசகத்திற்குக் கட்டுப்படுவதைத் தெரிவிக்கும்வகையில் ஒருவர் ஓர் அடையாளக்குறி மூலம் அல்லது தமது பெயரையோ தலைப்பெழுத்தையோ எழுதுவதன்மூலம் செய்யும் சுட்டுக்குறிப்பு. *பொதுஅலுவலரின் பெயர், பதவி, கையொப்பம் முதலியவற்றை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்* (*பி*.57(7), *இ.சா.ச*.); Signature.

கையொப்பத்தொகை *பெயர்*

காண்க : தொகையளிப்பு.

கையொப்பத்தொகையளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

காண்க : தொகையளிப்புச்செய்தல்.

கையொப்பளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நிதியம், நிறுமம் அல்லது சங்கத்திற்குப் பங்குத் தொகையளித்தல் (*ச.சொ*.1979); To subscribe.
2. பணம் செலுத்துவதாக எழுதிக் கையொப்பமிட்டு உறுதிமொழி செய்தல் (*ச.சொ*.1979); To subscribe.
3. வாங்குநர் என ஒருவரின் பெயரை எழுதி ஒப்பமிடுதல் (*ச.சொ*.1979); To subscribe.

கைரேகைவல்லுநர் *பெயர்*

கையிலுள்ள கோடுகளின் தடங்களை ஒப்பிட்டு அறிவதில் சிறப்பு அறிவு பெற்றவர் (*ச.சொ*.1968); Finger print expert.

கைவிட்டுவிடுகை *பெயர்*

1. சட்டப்படியாகத் தமக்குள்ள உரிமையை, குறிப்பாக ஒரு சொத்திலுள்ள உடைமையுரிமையை வேண்டாமென்று விட்டு விலகிக்கொள்ளுதல். *பொருள்வகையில் கைவிட்டுவிடுகை*. (*உறுப்*.39(ஊ), இ.அ.); Abandonment.

2. ஓர் உரிமையைத் தமக்கு வழங்கவேண்டும் என ஒருவர் தொடர்ந்த வழக்கில், அந்த உரிமைக்கோரிக்கையை முழுவதுமாகவோ, பகுதியாகவோ விட்டுக்கொடுத்தல். *பயிரிடும் குத்தகைக்காரர் உரிமையைக் கைவிட்டுவிடுகை* (*பி*.13, (*பு.ப.கு.கா.ச.*); Abandonment.

3. பன்னிரண்டு வயதுக்குக் கீழுள்ள குழந்தையை அதன் பெற்றோர் அல்லது காப்பாளர் அந்தக் குழந்தையைவிட்டு முற்றிலுமாக விலகிச்செல்லவேண்டும் என்னும் கருத்துடன் ஓரிடத்தில் விட்டுச்செல்லுகை அல்லது பாதுகாப்பின்றி விடுதல். *குழந்தையைக் கைவிட்டுவிடுகை* (*பி*.317, *இ.த.தொ.ச.*); Abandonment.

கைவிடப்பட்ட *பெயரடை*

* சொந்தங்கள் இருந்தும் கவனிக்காமல் விட்டுவிட்ட (*கன்வார்சிங் எதிர் தில்லி ஆட்சியம்* AIR 1965 SC 871); Abandoned.

கொ

கொடிய உடலூறு *பெயர்*

கடுமையான உடற் காயம் (*பி*.320, *இ.த.தொ.ச.*); Grievous hurt.

கொடுவெறியர் *பெயர்*

பொதுமக்களை அஞ்சிநடுங்கவைத்தல் அல்லது வெவ்வேறு சமய, இன, மொழி வட்டாரம் சார்ந்த குழுவினர், சாதியினர், சமூகத்தினர் இடையே நிலவும் ஒத்திசைவைக் குலைத்தல், சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள அரசுக்குப் பேரச்சம் விளைவித்து வலுக்கட்டாயப்படுத்தல். அரசின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இடர்சூழ்தல் என்னும் நோக்கத்துடன் வேண்டுமென்றே ஆட்களைக் கொல்லுவதில், வன்செயலில் இறங்குவதில், சமுதாயத்திற்கு இன்றியமையாத செய்தித்தொடர்பு ஊடகங்களைச் சீர்குலைப்பதில், சொத்தினைச் சேதப்படுத்துவதில் ஈடுபடுகின்ற ஒருவர், தீவிரவாதி (*பி*.2 (ஏ) *தீ.பா.ப.* (*சி.நீ.*) *ச.*); Terrorist.

கொடை *பெயர்*

தன் விருப்பாகவும் மறுபயன் இன்றியும் ஒருவரால் கொடுக்கப்பட்டு மற்றொருவரால் ஏற்கப்படுகிற அசையும் அல்லது அசையாச் சொத்து.

* *அன்பு, பற்று, ஆன்ம நன்மை போன்ற நோக்கங்களுக்காக அளிக்கப்படும் கொடைகள் மறுபயன்களைக் கொண்டிருந்தாலும், சட்டநோக்கில் அவற்றை மறுபயன்களாக ஏற்க முடியாது (சோமியா பாட்டியா எதிர் உ.பி. அரசு* 1981. All. L.J. 467 (SC); Gift.

கொடைக்கட்டளைக் காப்பீடு *பெயர்*

நிலையுறுதிசெய்த ஒரு காலஅளவு முடிவுற்றதும் காப்பீடுபெறுபவருக்குக் குறிப்பிட்ட தொகையை அளிக்கவோ, அக்காலம் முடியுமுன்பு அவர் இறந்துவிட்டால் அவர் குறிப்பிட்டுள்ள மற்றவருக்கு அத்தொகையைக் கொடுக்கவோ உறுதிசெய்யும் காப்புறுதி ஒப்பந்தம். *கொடைக்கட்டளைக் காப்பீட்டு ஆவணம்* (*பி*.9(5), *அ.நா.ஒ.ச.*); Endowment insurance.

கொடைதருநர் *பெயர்*

நன்கொடையைக் கொடுப்பவர் (*ச.சொ.*1968); Donor.

கொடைபெறுநர் *பெயர்*

நன்கொடையைப் பெற்றுக்கொள்பவர் (*ச.சொ.*1968); Donee.

கொணர்பவர் *பெயர்*

காசோலை, வரைவோலை அல்லது 'கொணர்பவருக்குக் கொடுத்திடுக' எனக் குறிக்கப்பட்ட பணம் வழங்கு ஆணையை வங்கியில் முன்னிடும் ஒருவர் (*ச.சொ.*1983); Bearer.

கொலை *பெயர்*

சாவை ஏற்படுத்தும் கருத்துடனோ, உடற்காயம் சாவை உண்டாக்கும் என அறிந்தோ, இயல்பான நோக்கில் உடற்காயத்தை உண்டாக்கியோ இன்னலை விளைவித்தோ ஒருவருக்கு இறப்பை விளைவிக்கும் செயல் (*பி.*300, *இ.த.தொ.ச.*); Murder.

கொலையாகாக் குற்றம் *பெயர்*

1. திடீரெனக் கடுஞ்சீற்றத்திற்கு ஆட்பட்டு அதற்குக் காரணமானவரின் சாவினை அல்லது தவறுதலாகவோ எதிர்பாராதநிலையிலோ வேறொருவரின் சாவினை விளைவிப்பது; Culpable homicide not amounting to murder.

2. திட்டமிடாமலும், தேவையைவிட மிகுதியான தீங்குசெய்யக் கருதாமலும், உடலின் அல்லது சொத்தின் தற்காப்புரிமையைக் காத்துக்கொள்ள நல்லெண்ணத்துடன் செயலாற்றுகையில் சட்டப்படி தமக்குள்ள அதிகாரத்தைமீறி ஒருவர் விளைவிக்கும் சாவு; Culpable homicide not amounting to murder.

3. பொதுநீதியை நிலைநாட்டும்பொருட்டுச் செயலாற்றும் ஒரு பொதுப்பணியாளரோ அவருக்கு உதவுபவரோ, சட்டப்படியாகவும் தமது கடமையை உரியவாறு ஆற்றத் தேவையாகவும் உள்ளதென நல்லெண்ணத்துடன் நம்பி ஒரு செயலைச் செய்கையில், சட்டப்படி தமக்குள்ள அதிகாரத்தை மிஞ்சிய பகையுணர்வு ஏதுமின்றி ஒருவருக்கு உண்டாக்கும் சாவு; Culpable homicide not amounting to murder.

4. திடீரெனத் தோன்றிய சச்சரவின்போது உணர்ச்சிக் கொந்தளிப்பில் விளைந்த திடீர்ச் சண்டையைக் குற்றவாளி தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தாமலும், கொடுமையான அல்லது இயல்புக்குமீறிய வகையில் செயற்படாமலும் முன்திட்டம் ஏதுமின்றி ஒருவருக்கு உண்டாக்கிய சாவு; Culpable homicide not amounting to murder.

5. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரின் சொந்த இசைவுடன் அவருக்கு விளைவிக்கப்படும் சாவு (*பி.*304-*இ.த.தொ.ச.*); Culpable homicide not amounting to murder.

கொலையாகு குற்றம் *பெயர்*

சாவையோ சாவை விளைவிக்கும் உடற்காயத்தையோ உண்டாக்கும் உட்கருத்துடன் ஒரு செயலைச் செய்து மற்றவரைச் சாகடிப்பது (*பி.*299, *இ.த.தொ.ச.*); Culpable homicide.

கொள்நிலை *பெயரடை*

ஒரு செயலோ பொருளோ நிலவுகையில் (=உளமையில்) இல்லை என்றபோதிலும், குறித்த சில சட்ட நோக்கங்களின் பொருட்டு அது உளது எனக் கொள்கிற. *கொள்நிலை உடைமை* (*பி.*3 (இ), *சொ.ம.ச.*); Constructive.

கொள்நிலை அறிவிப்பு *பெயர்*

ஒருவர் ஒரு பொருளியம் பற்றி அறிந்திருக்கவேண்டும் என வழக்கின் சூழ்நிலைகளிலிருந்து ஊகித்தறியும் நிலை (*பி.*3, *சொ.மா.ச.*); Constructive notice.

கொள்நிலைப் பொறுப்புக்கட்டளை *பெயர்*

வெளிப்படையாக அமைவுறாமல், சட்டத்தின் பொருள்கோளினால் அல்லது செயற்பாட்டினால் எழும் பொறுப்புரிமை அமைப்பு (*பி*.94, இ.*பொ.க.ச.*); Constructive Trust.

கொள்ளை *பெயர்*

திருடுகையிலோ திருடியபொருளை எடுத்துச்செல்கையிலோ ஒருவருக்கு இறப்பு, உடற்காயம் அல்லது முறைகேடான தடையை விளைவிக்கிற, விளைவிக்க முயலுகிற அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகிற சூழ்நிலையில் அமையும் திருட்டு. *எல்லாவகைக் கொள்ளையிலும் திருட்டு அல்லது அச்சுறுத்தல் உள்ளது* (*பி*.390, இ.*த.தொ.ச.*); Robbery.

கோ

கோரிக்கை *பெயர்*

சட்ட உரிமைப்படி அல்லது அதிகாரவுரிமைப்படி ஒன்றைக் கேட்டுப்பெறுகை (*ச.சொ*.1979); Demand.

கோரியவுடனே *வினையடை*

(மாற்றுமுறையாவணத்தில் வழங்கப்படுவதாகிய) கேட்ட அப்பொழுதே (*ச.சொ*.1968); On demand.

கோருரிமை *பெயர்*

நீதிமன்றத்தின் அல்லது அதிகாரஅமைப்பின்வாயிலாகக் குறைதீர்வழியை நாடும் உரிமை; உரிமைக் கோரிக்கை. *வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும் என்னும் கோருரிமை* (*உறுப்*.325, இ.*அ*.); Claim.

கோருரிமையர் *பெயர்*

உரிமைவழக்கு நடவடிக்கைமூலம் தமக்குரிய நலனை நிலைநாட்ட நீதிமன்றத்தை நாடுபவர், உரிமை கோருபவர் (*பி*.3(இ), *சொ.மா.ச.*); Claimant.

கோரெண் *பெயர்*

போதிய உறுப்பினர்கள் வருகை தராத நிலையில் ஒரு கூட்டத்தைச் சட்டமுறைப்படி நடத்தத் தேவைப்படும் உறுப்பினர்களின் கீழ்வரை எண்ணிக்கை. *நீதிபதிகளின் கோரெண் கிடைப்பதாக இல்லை என்றால்* (*உறுப்*. 127(1), இ.*அ*.); Quorum.

ச

சங்க அமைப்பாவணம் *பெயர்*

ஒரு நிறுமத்தின் அல்லது சங்கத்தின் குறிக்கோள்களையும் செயற்பாட்டு எல்லைகளையும் வரையறுக்கும் ஆவணம்; அமைப்பு முறையேடு (*பி*.2 (ஆ), இ.*பு.நி.ச.*); Memorandum of association.

சங்க அலுவல்விதிகள் *பெயர்*

பதிவுபெற்ற நிறுமத்தின் அலுவல்தொழிலையும் அதன் உட்கட்டமைப்புகளையும் ஆளுகைசெய்யும் ஒழுங்கு வரையறைகள்; செயல்முறை விதிகள் (*பி*.2 (2), *நி.ச.*); Articles of association.

சட்ட ஆதாரங்கள் *பெயர்*

சட்டம் என்றால் என்ன என்பதைக் கண்டறியும் பொருட்டு, இசைந்தேற்கப்படும் சட்டமுறையிலும் இசைந்தேற்கப்படாத வரலாற்று முறையிலும், வழக்குரைஞர்கள் குறிப்பாக நீதிபதிகள் நோக்குகின்ற நான்கு வகைச் சட்டவிதிக் களஞ்சியம்; சட்ட மூலங்கள்: (அ) சட்டமன்றச் செய் சட்டம், (ஆ) தீர்ப்புவழிச் சட்டம், (இ) மரபுவழக்குச் சட்டம், (ஈ) இணக்கஒப்பந்தச் சட்டம் (*ச.ஆ.சொ.க.*); Sources of law.

சட்ட ஆளர் *பெயர்*

உரிமைகளும் கடமைகளும் கொண்டதாகச் சட்டம் இசைந்தேற்கின்ற ஆட்களின் குழுமம், கழகம், கூட்டாண்மை நிறுவகம், சட்டப்படியான நிறுமம் (*ச.சொ.*1979); Juristic person.

சட்ட ஆற்றல் *பெயர்*

* (கண்டிப்பான பொருளில்) விதிகள், அறிவிக்கைகள் முதலியவை சட்டம் என வழங்கப்படாதபோதிலும், அவை நீதிமன்றத்தில் செயலுறுத்தப்படுவதால் சட்ட ஆற்றலைக் கொண்டுள்ளன (*சி.சிவப்பா எதிர் முருகப்பா* AIR 1958 Mys. 184); Force of law.

சட்டஇசைவாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டமுரணான செயலைச் சட்டத்திற்குப் பொருந்துமாறு செய்தல் (*பி.*30, *இ.ஒ.ப*); To legalise.

சட்டக் கடமைப்பொறுப்பு *பெயர்*

இருவரை அல்லது மேற்பட்டவர்களைச் சட்டத்தின் தேவை கருதி ஒன்றாக இணைப்பது; சட்டப்பிணைப்பு (*ச.சொ.*1983); Obligation (Legal).

சட்டக் காப்படைவில் *பெயரடை*

சட்டத்தின் முறையான பாதுகாப்பில் உள்ள (*ச.சொ.*1983); In custodia legis.

சட்டக் கோட்பாடு *பெயர்*

சட்டநெறிக் கொள்கை (*ச.சொ.*1983); Doctrine (of law).

சட்டக் கையடைவில்வை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைக் கைப்பற்றிச் சட்டத்தின் உடைமையில் வைத்துக்கொள்ளல். *நீதிமன்றம் ஆவணத்தைக் கைப்பற்றிச் சட்டப் பாதுகாப்பில் வைக்க ஆணையிடலாம்* (*பி.*30, *உ.ந.தொ.ச.*); To impound.

சட்டகம் *பெயர்*

சட்டமாக ஆக்கப்படும் பொருட்டுச் சட்டமன்றத்தின் கருதுகைக்காக வைக்கப்படும் சட்டமுன்வரைவு. *நிதிஒதுக்குச் சட்டகங்கள்* (*உறுப்.*204, *இ.அ.*); Bill.

சட்டகை *பெயர்*

தகுதிறம்வாய்ந்த சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படுகிற சட்டம். *நாடாளுமன்றம் சட்டகையின் வாயிலாக... ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம்* (*உறுப்.*3 (*அ*), *இ.அ.*); Act.

சட்டச்சிக்கல் *பெயர்*

காண்க : சட்ட வினா

சட்டச்செய்கை *பெயர்*

ஓர் உரிமையைச் செயலுறுத்தவோ காப்பாற்றவோ, ஒரு தீங்கை அல்லது குற்றத் தண்டனையைத் தவிர்க்கவோ தடுக்கவோ அதிகாரமுறையில் ஆராய்ந்து எடுக்கப்படும் நடவடிக்கை (*பி*.146 (இ), *ம.சா.ச.* 1951); Action.

சட்டச் செல்லுறுத்தம் *பெயர்*

சட்டத்திற்குக் கீழ்ப்படிவதை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வகைசெய்யப்பட்டுள்ள பணத்தண்டம் அல்லது தண்டனை (*ச.சொ*.1983); Sanction of law.

சட்டச் செலாவணி *பெயர்*

சட்டத்தால் வகுத்துரைக்கப்பட்டு ஒரு நாட்டின் வழக்காற்றிலுள்ள பணத்தொகை (*பி*.2 (ஈ), *இ.சே.வ.ச.*); Legal tender.

சட்டத்தில் சமக் காப்பளிப்பு *பெயர்*

ஒரேவகையான நிலைமையிலும் சூழ்நிலையிலும் எவரொருவரும் சட்டத்தின் முன் ஒரேபடித்தான பாதுகாப்பைப்பெறும் உரிமை. *அரசு சட்டச் சமக் காப்பளிப்பை மறுத்தல் ஆகாது* (*ச.சொ*.1983); Equal protection of the law.

சட்டத் தவறு *பெயர்*

சட்டத்தின் பொதுவிதியைத் தவறாகக் கொள்ளுகை. *சட்டத்தவறு காரணமாக அல்லாமல்* (*பி*.76, *கு.ந.தொ.ச.*); Mistake of law.

சட்டத்திற்கிணங்க *வினையடை*

சட்டம் விதிக்கும் நெறிமுறைகளுக்கு இசைந்த வகையில். *நீதிபதி... சட்டத்திற்கிணங்கத்... தீர்ப்புத்தண்டனையைப் பிறப்பித்தல் வேண்டும்* (*பி*.235 (2), *கு.ந.தொ.ச.*); According to law.

சட்டத்திற்கு மாறான *பெயரடை*

ஒரு குற்றமாகவோ, சட்டத்தால் தடைசெய்யப்பட்டதாகவோ, ஓர் உரிமை வழக்கில் ஆதாரமாகவோ உள்ள ஒவ்வொன்றிற்கும் பொருந்துகிற (*பி*.43, *இ.த.தொ.ச.*); Contrary to law.

சட்டத் திறன் *பெயர்*

தம்முடைய அல்லது பிறருடைய உரிமைகளை, கடமைகளை, கடப்பாடுகளை அல்லது சட்ட உறவுகளை ஒருவர் விரும்பியவாறு மாற்றுகைசெய்யச் சட்டம் வழங்கும் ஆற்றல், அதிகாரம் (*ச.சொ*.1983); Power (of law).

சட்டத்தின் முன் சமன்மை *பெயர்*

எல்லா வகுப்பினரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர், தனிப்பட்ட எவரொருவருக்கும் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது என்னும் கோட்பாடு. *அரசு இந்திய ஆட்சிப்பரப்பிற்குள் உள்ள எவருக்கும் சட்டத்தின் முன் சமன்மையை மறுத்தல் ஆகாது* (*உறுப்*.14 *இ.அ.*); Equality before law.

சட்டத்தொகுப்பாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டமுறைக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் திரட்டி ஒரே சட்டமாக இயற்றுதல் (*முகப். இ.தி.ச.*); To codify.

சட்டத் தொழிலாற்றுநர் *பெயர்*

சட்டம் கற்றுத் தொழில்நடத்துபவர், வழக்குரைஞர். *கைதான எவருக்கும் ஒரு சட்டத்தொழிலாற்றுநரைக் கலந்தறிவதற்கான உரிமை மறுக்கப்படுதல் ஆகாது* (*உறுப்*.22(1), இ.*அ*.); Legal practioner.

சட்டநிலையில் *பெயரடை*

நடப்பில் உள்ள நிலை வேறாயினும் சட்டப்படி அமைந்த (*ச.சொ*.1979); De jure.

சட்டநெறி *பெயர்*

சட்டக்கொள்கை அல்லது விதிகள் பற்றிய கோட்பாடு (*ச.சொ*.1979); Canon.

சட்டநோக்கு *பெயர்*

ஒரு சட்டத்தின் குறிக்கோள் அல்லது நோக்கம் (*ச.சொ*.1983); Mischief.

சட்டப்படி கட்டுப்பட்ட *பெயரடை*

எதைச் செய்யாது விடுத்தால் சட்டத்திற்கு மாறானதாக அமையுமோ அதைச் செய்யவேண்டும் எனக் கட்டாயமாக்குகிற (*பி*.43, இ.*த.தொ.ச*.); Bound by law.

சட்டப்படி நிறுவியநடைமுறை *பெயர்*

தன்முனைப்பான, நிலைமாறுகிற நம்பமுடியாப் புனைவான எதனையும் விதிமுறைப்படி விலக்கவிட்டு பகுத்தறிவுக்கொத்த வினாவுக்கு விடையறுக்கத் தக்கவாறு மேற்கொள்ளப்படும் நெறிமுறை. *சட்டமுறைப்படி நிறுவிய நடைமுறை என்பது உறுதியாகத் தீர்வேற்பாடு செய்யப்பட்டது எனப் பொருள்படுகிறது* (*மேனகாகாந்தி இந்திய ஒன்றியம்* AIR 1978 SC 597); Procedure established by law.

சட்டப்பிரச்சினை *பெயர்*

காண்க : சட்ட வினா

சட்டப்புறம்பான *பெயரடை*

சட்டநெறிக்கு மீறுகையான, முறைமையற்ற. *சட்டப்புறம்பான உடலுறவு கொள்ளும்படி* **வல்லந்த***ப்படுத்துதல்* (*பி*.366, இ.*த.தொ.ச*.); Illicit.

சட்டப் புனைவு *பெயர்*

ஒன்றின் தன்மை மெய்யா பொய்யா என்று ஆராயாமலேயே நீதிக்கு ஒவ்வும் வகையில் அதை மெய்யெனக் கொள்ளும் துணிபு (*ச.சொ*.1983); Fiction of law.

சட்டம் *பெயர்*

அரசியல் ஒழுங்கமைவுள்ள சமுதாயத்தில் நீதியச் செய்கைக்கும் ஆட்சிய நடவடிக்கைக்கும் அடிப்படையாகவோ வழிகாட்டியாகவோ அதிகாரமுறையில் அமைந்த நெறிமுறை.

"சட்டம்" என்பது, இந்திய ஆட்சிப்பரப்பில் சட்டத்தின் செயலாற்றலை உடைய அவசரச்சட்டம், ஆணை, துணைவிதி, விதி, ஒழுங்குமுறைவிதி, அறிவிக்கை, மரபுவழக்கம் அல்லது வழக்காறு எதனையும் உள்ளடக்கும். (*உறுப்*.13(2) இ.*அ*.); Law.

சட்டம்-ஒழுங்கு *பெயர்*

சட்டத்தை மதித்துப் போற்றும் சமுதாயத்தில் நிலவும் அமைதிநிலை. *நாகலாந்து மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு பொறுத்தவரை ஆளுநர் பொறுப்புடையவர்* (*உறுப்*.371 *அ*. (ஆ) *உரம்*. இ.*அ*.); Law and order.

சட்டமற்ற *பெயரடை*

சட்டத்தால் ஒப்பளிக்கப்படாத அல்லது சரியென நிறுவப்படாத (*ச.சொ.*1983); Lawless.

சட்டமன்றம் *பெயர்*

ஒரு நாட்டின் சட்டங்களை இயற்றும் அதிகாரவுரிமைபெற்ற அவையம். *மாநிலச் சட்டமன்றப் பேரவை* (*உறுப்.*333, *இ.அ.*); Legislature.

சட்டமுறைக் குழுமம் *பெயர்*

அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள கழகம், குழு, ஆணையம், மன்றம், வாரியம் அல்லது ஆட்களின் குழு.

* *சட்டமுறைப்படி அமைக்கப்படாத நிறுவனம் சட்ட வகைமுறைகளைத் தழுவக் கொண்டாலும் அது சட்டமுறைக் குழுமம் ஆகாது (வைஸ் பட்டக் கல்லூரி எதிர் இலட்சுமி நாராயண்* AIR 1976 SC 888); Statutory body.

சட்டமியற்றுகிற *பெயரடை*

சட்டமன்றத்தில் சட்டத்தை ஆக்குகிற, சட்டமாக்குகிற. *சட்டமியற்றுகிற அதிகாரம்* (*உறுப்.*123, *இ.அ.*); Legislative.

சட்டமியற்றுகை *பெயர்*

நெறிமுறைகளைச் சட்டமாக ஆக்குகை, சட்டஆக்கம். *ஒன்றியத்து அலுவல்கள்பற்றிச் சட்டமியற்றுவதற்கான செயற்குறிப்புகள்* (*உறுப்.*78, *இ.அ.*); Legislation.

சட்டமியற்றும் அதிகாரம் *பெயர்*

சட்டத்தை ஆக்கும் செயலுரிமை. *நாடாளுமன்றமும், ஒரு மாநிலச் சட்டமன்றமும் பொதுவியல் பட்டிப் பொருட்பாடுகள் பொறுத்துச் சட்டமிற்றும் அதிகாரம் உடையன* (*உறுப்.*123, *இ.அ.*); Legislative power.

சட்டமுகவர் *பெயர்*

முறைப்படியான தகுதிநிலையும் பயிற்சியும் பெற்று நீதிமன்றத்தில் பிறருக்காக வழக்காடுதற்கு இசைவளிக்கப்பட்டவர் (*பி.*32, *வி.கா.* (இ), *இ.சொ.ச.*); Solicitor.

சட்டமுரண்பாடு *பெயர்*

இரண்டு சட்டங்களுக்கு அல்லது சட்ட வகைமுறைகளுக்கு இடையே நிலவும் வேற்றுமை (*ச.சொ.*1983); Antinomy.

சட்டமுரணான *பெயரடை*

சட்டத்தால் நேரடியாகத் தடைசெய்யப்பட்ட. *ஊழலான அல்லது சட்டமுரணான பழக்கம்* (*உறுப்.* 326, *இ.அ.*); Illegal.

சட்டமுறைக்குப் புறத்தான *பெயரடை*

சட்ட நடைமுறையின் வழக்கமான போக்கிற்கு வெளியே (*ச.சொ.*1983); Extra judicial.

சட்டமுறைக்குழுமம் *பெயர்*

அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள கழகம், குழு, ஆணையம், மன்றம், வாரியம் அல்லது ஆட்களின் குழு.

* *சட்டமுறைப்படி அமைக்கப்படாத நிறுவனம் சட்ட வகைமுறைகளைத் தழுவிக் கொண்டாலும் அது சட்டமுறைக் குழுமம் ஆகாது (வைஸ் பட்டக் கல்லூரி எதிர் இலட்சுமி நாராயணன்* AIR 1976 SC 888); Statutory body.

சட்டமுறைச் சார்பாளர் *பெயர்*

இறந்தவரின் சொத்திற்கு உரியவர் எனச் சட்டத்தால் கருதப்படுபவர் அல்லது இறந்தவரது சொத்தில் குறுக்கிடும் எவரேனும் ஒருவர் (*பி.*2(11), *உ.ந.தொ.ச.*); Legal representative.

சட்டமுறைப்படியான *பெயரடை*

சட்டம் இசைவளிக்கிற அல்லது சரியென நிறுவுகிற. *சட்டமுறைப்படியான காவலில் வைக்கப்பட்டுள்ளவர்* (*பி.*225, *இ.த.தொ.ச.*); Lawful.

சட்டமுறையான *பெயரடை*

சட்டத்திற்கு இணங்கிய முறையில், சட்டப் பாங்குள்ள. *குறித்தளிக்கப்படும் சட்டமுறையான பிற கடமைகளைப் புரிவது* (*உறுப்.*165(2) *இ.அ.*); Legal.

சட்டமுன்வடிவு *பெயர்*

காண்க : சட்டகம்

சட்டவியல் *பெயர்*

சட்டம் பற்றிய உயர் ஆய்வு (*ச.சொ.*1983); Jurisprudence.

சட்டவியல்அறிஞர் *பெயர்*

சட்டத் துறையில் புலமை பெற்றவர்; சட்டநூற் கோட்பாட்டாளர். *சட்டநூற் புலவர்* (*ச.சொ.*1983); Jurist.

சட்ட விளைவுச்செயல் *பெயர்*

தொடர்புடையவரின் இசைவின்றிச் சட்டம் தானே செயற்படுவதன் மூலம் ஓர் உரிமை உருவாகுகிற, அழிவுறுகிற அல்லது மாற்றல்பெறுகிற நிலை (*ச.சொ.*1983); Act of law.

சட்ட வினா *பெயர்*

நீதிமன்றத்தால் முடிவுசெய்யப்படவேண்டியதும் சட்டம் தொடர்பாக எழுவதுமாகிய சிக்கல், சட்டச் சிக்கல் (= சட்டப் பிரச்சினை). *ஒரு சட்டவினா எழுந்திருக்கிறது* (*உறுப்.*143, *இ.அ.*); Question of law.

சதி *பெயர்*

சட்டமுரணான செயலை அல்லது சட்டமுரணற்ற செயலைச் சட்டமுரணான வழியிலோ செய்வது அல்லது செய்விப்பது என்று இருவரோ மேற்பட்டவரோ இணைந்து செய்யும் செயல். *குற்றமாக அமைகிற சதியில் அவர் ஈடுபட்டிருந்தால் அதுவே போதுமானது* (*பி.*108, *விளக்.*5, *இ.த.தொ.ச.*); Conspiracy.

சதிகாரர் *பெயர்*

மற்றவருக்குத் தீங்கோ இழப்போ விளைவிக்கும் உட்கருத்துடன் சட்டமுரணான செயலை மேற்கொள்ளும் சார்பினருள் ஒருவர் (*ச.சொ.*1983); Conspirator.

சந்ததி *பெயர்*

1. * *அகராதி மக்கள் எனப்பொருள் தந்தாலும் குறிப்பிட்ட தறுவாயில் சட்டம் சுட்டுவது)* ஆண்மக்கள் (*கே.என்.சுந்தரமையர் எதிர் கே.என். சரோஜினி* AIR 1984 Mad. 227); Santati.
2. * மகவேற்பு மகன் (*வேங்கடசுப்பாராவ் எதிர் கிருஷ்ணமூர்த்தி* AIR 1958 AP 447); Santati.

3. மணமுறையில் பிறந்த மக்கள்; மணமுறையில் பிறக்கவில்லை என்னும் நேர்வில் மரபுரிமையராக உள்ள மகன் (*வேங்கடகிரி மகாராஜா எதிர் இராஜேஸ்வரராவ்* AIR 1939 Mad. 614); Santati.

சம்பளம் *பெயர்*

காண்க : ஊதியம்.

சம அணுகுகை *பெயர்*

சமயம், இனம், குலம், பாலினம் அல்லது பிறப்பிடம் காரணமாக வேற்றுமைகாட்டாமல், கடைகள், அருந்தகங்கள், உணவகங்கள் போன்ற பொதுவிடங்களில் நுழைவதற்கு அனைவருக்குமுள்ள உரிமை (*உறுப்*.15(2), *இ.அ.*); Equal access.

சமமதிப்பு *பெயர்*

ஒன்று மற்றொன்றுடன் அமைந்திருக்கும் சரிஒப்புநிலை (*ச.சொ.*1983); Par.

சமயச்சார்பற்ற *பெயரடை*

சமயம் அல்லது சமயம் சாராமை எதையும் பற்றி நிற்காத. *பிற சமயச்சார்பற்ற செய்கைப்பாட்டை முறைப்படுத்தும் சட்டம்* (*உறுப்*.25(2)(ஆ), *இ.அ.*); Secular.

சமயம் *பெயர்*

நம்பிக்கையும் வழிபாடும் கொண்டுள்ள ஓர் ஆன்ம அமைப்புமுறை. *தங்குதடையின்றிச் சமயத்தை வெளிப்பட மேற்கொள்ளுதல்* (*உறுப்*.25(1), *இ.அ.*); Religion.

சமன்மை *பெயர்*

ஏற்றத் தாழ்வின்றி ஒரே தகுநிலையுடைமை. *சட்டத்தின் முன்னிலையில் சமன்மை* (*உறுப்*.14, *இ.அ.*); Equality.

சரக்கடைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

விற்பனையாகவோ காப்படைவாகவோ கப்பல், இருப்பூர்தி முதலியவற்றின் மூலம் பண்டங்களை ஒப்படைத்தல் அல்லது ஏற்றி அனுப்புதல் (*ச.சொ.*1979); To consign.

சரக்கனுப்புநர் *பெயர்*

பண்டங்களை ஒப்படைப்பவர் அல்லது அனுப்பி வைப்பவர் (*ச.சொ.*1979); Consignor.

சரக்குகள் *பெயர்*

காண்க : பண்டங்கள்.

சரக்குக்கட்டணம் *பெயர்*

பண்டங்களையோ வாணிகப்பொருள்களையோ ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றிச்செல்வதற்கான வாடகை (*இ.ப.*VII-I-89. *இ.அ.*); Freight.

சரக்குப்பெறுநர் *பெயர்*

ஒப்படைக்கப்படுகிற அல்லது அனுப்பப்படுகிற பண்டங்களைப் பெற்றுக்கொள்பவர் (*ச.சொ.*1979); Consignee.

சரியமைவு *பெயர்*

ஒன்றை மற்றொன்றுடன் இசையுமாறு ஒழுங்குபடுத்துகை; சரிக்கட்டுகை. *ஓய்வூதியங்கள் பொறுத்தமட்டில் சரியமைவு* (*உறுப்*. 290, *இ.அ.*); Adjustment.

சரியீடு *பெயர்*

விளைத்த தீங்கினாலோ ஒப்பந்த முறிவினாலோ ஏற்படும் இழப்புக்கு அளிக்கப்படும் தொகை அல்லது பொதுநோக்கத்தின் பொருட்டுக் கையகப்படுத்திய சொத்திற்கு மறுபயனாகக் கொடுக்கப்படும் தொகை. *நிகர விலைக்குக் குறைவுபடாத ஒரு விழுக்காட்டில் சரியீடு கொடுக்க வகைசெய்கிறது (உறுப்.31. வரம். இ.அ.)*; Compensation.

சா

சாக்கீடு *பெயர்*

பொய்த் தோற்றம், தலைக்கீடு. *பதவியைச் சாக்கிட்டுச் செயல் எதனையும் செய்தல் (பி.170, இ.த.தொ.ச.)*; Colour.

சாட்டுரைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வழக்கிலோ வேறு நடவடிக்கையிலோ சார்பினராக உள்ள ஒருவர் தாம் மெய்ப்பிப்பதாகப் பொறுப்பேற்றுக்கொள்ளுதல். *சாட்டுரைசெய்த பொருளியங்கள் (பி.8, வி.கா.(ஆ), இ.சா.ச.)*; To allege.

சார்த்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பணப்பொறுப்பைச் சுமத்துதல் (*உறுப்.311, இ.அ.*); To charge.

சார்ந்திரு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆதரவுக்காக மற்றொன்றைப் பற்றிநிற்றல் (*பி.9, உ.ந.தொ.ச.*); To depend.

சார்நிலைச் சான்று *பெயர்*

தலைநிலைச் சான்று இல்லாநிலையில் நீதிமன்றத்தால் ஏற்கப்படும் துணைச்சான்று, இரண்டாம்தரச் சான்று. (எ-டு.) ஓர் ஆவணத்தின் படியம். *ஆவணத்தின் உள்ளடக்கத்தை முதல்நிலை அல்லது சார்நிலைச் சான்றால் மெய்ப்பிக்கலாம் (பி.61, இ.சா.ச)*; Secondary evidence.

சார்பாளர் *பெயர்*

அயலரசு அலுவலர், முகவர், பேராளர், மாற்றாளர், வழிமுறையுரிமையர், மரபுரிமையர், நாடாளுமன்ற, சட்டமன்ற அல்லது ஆட்சிக்குழு உறுப்பினர் என்னும் நிலையில் உள்ள ஒருவர். ** சட்ட முறைப்படி மட்டுமின்றி அக்கறை கொண்டுள்ள எவரும் சார்பாளர் ஆவார் (சான்ஸ்கவுர் எதிர் தேஜாசிங்* AIR 1946 Lah. 142); Representative.

சார்பினர் பிணைப்பு *பெயர்*

வழக்கில் குறைதீருதவி பெற உரிமையுடையவர் அல்லது, வழக்குப்பொருளில் அக்கறையுடையவர் எனக்கருதப்படுபவரை அல்லது நீதிமுறைத்தீர்ப்புக்குத் தேவைப்படுபவர் என நீதிமன்றம் கொள்பவரை, வழக்காளியாகவோ காப்பாளியாகவோ வழக்கில் இணைப்பது; சார்பினர்களை இணைத்தல் (*கட்.1.வி.6, உ.ந.தொ.ச.*); Joinder of parties.

சார்புறுதி *பெயர்*

ஓர் ஒப்பந்தத்தின் முதன்மை நோக்கத்திற்குப் பக்கச்சார்பாக உள்ள வரைக்கட்டு (= நிபந்தனை) (*பி.12(3), ப.வி.ச.*); Warranty.

சார் முகவர் *பெயர்*

முகமைத் தொழிலில் முகவரால் பணியமர்த்தப்பட்டு அவரது கட்டுப்பாட்டின்கீழ்ப் பணிபுரிபவர் (*பி.190, இ.ஒ.ச.*); Sub agent.

சார்வுசெய்தல் *பெயர்*

வழக்கு நடவடிக்கையில் அல்லது உரிமை வழக்கில் தொடர்புடையவர்களிடம் அழைப்பாணையையோ அறிவிப்பையோ ஒப்படைத்தல். *கோரிக்கை அறிவிப்பைச் சார்வுசெய்தல் (பி.65, வ.வ.ச.)*; Service of process.

சார்வுசெய்பவர் *பெயர்*

சட்டம் வகுத்துரைத்த முறையில், நீதிமன்றம் பிறப்பித்த அழைப்பாணையையோ அறிவிப்பையோ உரியவரிடம் சேர்ப்பிப்பவர் (*இ.ப. பிற்சே. படி. ஆ.எ.11, உ.ந.தொ.ச.*); Process server.

சாருமிடம் *பெயர்*

வழக்கமாகவும். அடிக்கடியும் போய்வரும் இடம் (*உறுப்.15, இ.அ.*); Resort.

சாற்றாணை *பெயர்*

புதிய கோரிக்கை, அவசரகாலச் சட்டம் முதலியவற்றை அதிகாரமுறையில் வெளிப்படுத்துகை. *ஒரு நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலிருக்கும் போது (உறுப்.359(1) இ.அ.)*; Proclamation.

சாற்றாணைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அதிகாரமுறையில் அறிவிப்பை வெளிப்படுத்துதல் (*உறுப்.359, இ.அ.*); To proclaim.

சாற்றுகை *பெயர்*

பரவலாக அறியுமாறு வெளிப்படுத்துகை (*உறுப்.123 இ.அ.*); Promulgation.

சாற்றுகைக் குற்றவாளி *பெயர்*

குறித்துரைக்கப்பட்ட இடத்திலும், நேரத்திலும் முன்னிலையாக வேண்டும் எனத் தகுதிறம் வாய்ந்த நீதிமன்றம் ஆணையிட்ட நிலையில், ஏற்கெனவே, பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தலைமறைவாக இருக்கும் ஒருவர்; விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளி. *சாற்றுகைக் குற்றவாளி எனத் தாம் அறிந்திருக்கிற எவரொருவரும் அந்தக் கிராமத்திற்கு வந்துபோகிறார் (பி.40(1) (ஆ), கு.ந.தொ.ச.)*; Proclaimed offender.

சாற்றுகைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொது அறிவிப்பு ஒன்றை அதிகாரமுறையிலும் முறைப்படியாகவும் வெளியிடுதல். *ஆட்சியாளர் அவசரச் சட்டங்களைச் சாற்றுகை செய்யலாம் (உறுப்.239 ஆ(1) இ.அ.)*; To promulgate.

சான்றாயம் *பெயர்*

வழக்கில் முன்வைத்த சான்றுகளை ஆராய்ந்து நீதிபதியின் தீர்ப்புக்கு உதவும் வகையில் முடிவு கூறுவோர் குழு. *சான்றாயத்தில் பணியாற்றுகிற ஒருவர் (பி.229, இ.த.தொ.ச.)*; Jury.

சான்றாயர் *பெயர்*

சான்றுகளை ஆய்ந்து முடிவுகூறும் குழுவிலுள்ள ஒருவர். *சான்றாயராகத் தேர்ந்தெடுக்கப்பட உரிமையில்லை (பி.229, இ.த.தொ.ச.)*; Juror.

சான்றாவணம் *பெயர்*

ஒரு வழக்கின் தீர்ப்புக்கு உதவும் வகையில் நீதிமன்றத்தில் முன்னிடப்படும் ஆவணம்.
* *ஆவணயேட்டின் பகுதியாக அமைவதற்கும், ஒரு வழக்கில் முடிவு எடுப்பதற்குரிய செய்தியளிப்பதற்குமாக நீதிமன்றத்தில் சான்றாவணம் வைக்கப்படுகிறது (ராக்கல்தாஸ் பிரமானிக் எதிர் சாந்திலதா* AIR 1956 cal. 619); Exhibit.

சான்றிதழ் *பெயர்*

பொதுப்பணி அல்லது அலுவல் தகுநிலை கொண்டிருக்கும் ஒருவர் தாம் அறிந்த அல்லது தமது அதிகாரவுரிமைக்கு உட்பட்ட ஒன்றைப் பற்றி எழுத்துருவில் அளிக்கும் உறுதிச்சான்று. *ஆட்சியச் சான்றிதழ் (பி.51 கா.கா.ச.)*; Certificate.

சான்று *பெயர்*

நீதிமுறைப் புலனாய்வில் ஒரு பொருளியத்தை மெய்ப்பிக்கவோ பொய்ப்பிக்கவோ உதவும் சட்ட வழிவகை. *சான்று பொருள்தந்து உள்ளடக்குவதாவது (பி 3, இ சொ ச.)*; Evidence.

சான்றுப் பொருள் *பெயர்*

மெய்ப்பிக்கப்பட்ட ஆவணங்களாக அல்லாமல், ஒரு வழக்காய்வில் அல்லது நடவடிக்கையில் அடையாளம் காட்டப்பட்டுத் தீர்ப்புக்கு உதவும் பருப்பொருள் *(பி 11(3) (ஆ) தொ பூ.ச)*; Material object.

சான்றுரை *பெயர்*

நீதிமன்றச் சான்றுக் கூண்டிலிருந்து சொல்லும் சான்றுமொழி *ஒரு சான்றுரைஞரின் சான்றுரை (கட் 26 வி.6 உ.ந.தொ.ச.)*; Deposition.

சான்றுரைஞர் *பெயர்*

நேரடிப் பட்டறிவின் மூலம் ஒன்றை அறிந்திருப்பவர், ஒரு வழக்கில் சான்றுகூறுபவர், சாட்சி *ஒரு சான்றுரைஞரை அழைத்த சார்பினர் (பி 137, இ.சா ச)*, Witness

சான்றுரைஞரைஆராய்கை *பெயர்*

சாட்சியை அழைத்த சார்பினர் முதற்படியாக அவரை உசாவுகை (=விசாரணை) செய்கை, சாட்சி விசாரணை *(ச.சொ.1968)*; Examination (of witness)

சான்றுரை வல்லுநர் *பெயர்*

தாம் சிறப்பறிவு பெற்றுள்ள துறை சார்ந்த பொருள்பற்றிச் சான்றளிக்குமாறு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பெற்ற திறனாளர் வல்லுநச் சான்றுரையர் *(ச சொ 1968)*, Expert witness

சான்றுறுதி *பெயர்*

ஒரு பொருளியம் அல்லது நுவல்பொருள் மெய் அல்லது பொய் என நேராகவோ சுற்றாகவோ மனங்கொள்ளச்செய்யும் ஏதேனும் ஒன்று *மெய்யுறுதி (= நிருபணம்) (பி.51, இ.த.தொ.ச)*, Proof.

சான்றுறுதி அலுவலர் *பெயர்*

ஆவணம் உண்மையானது என உறுதியொப்பமிடுவதற்குப் பொதும அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர். *சான்றுறுதி அலுவலரின் இலச்சினை (பி.57(6), இ சா.ச)*, Notary Public

சான்றொப்பம் *பெயர்*

நிறைவேற்றுநர் ஒப்பாவணத்தில் கையொப்பம் இட்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டுச் சான்றாளர் தமது பெயரைக் கையொப்பமாக இடுவது *(பி 69, இ சா ச)*, Attestation.

சான்றொப்பமிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஓர் உண்மையான ஆவணம் எனச் சட்டச் செல்லுந்தன்மை அளிக்கும் பொருட்டுச் சான்றுரைஞராக அதில் கையொப்பமிடுதல் *(பி.3, சொ மா.ச)*; To attest

சான்றொப்பமிடுநர் *பெயர்*

ஓர் ஆவணத்தில் கையொப்பமிட்ட சான்றுரைஞர். *சான்றொப்பமிடுபவர் (பி.69, இ.சா.ச.)*; Attester, attesting witness.

சி

சிதையாதுகா-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இழப்பு, தீங்கு, பாழ்படுத்துகை, தேய்வுறுகை முதலியவற்றினால் அழியாது காப்பாற்றுதல். *நீர்வள ஆதாரங்களைச் சிதையாது காத்தல் (பி.5(1), சொ.வ.ச.)*; To conserve.

சிதைவுறு வழக்கு *பெயர்*

வழக்குச் சார்பினரின் முறையற்ற செய்கை அல்லது நடத்தை எதுவும் இல்லாமலேயே, தீர்வு எதுவும் எட்டப்படாத வழக்காய்வு (*இ.அ.ச.சொ.*1979); Abortive trial.

சிந்தனை *பெயர்*

மனத்தில் உருவாகும் எண்ணம். *சிந்தனையில் தன்னுரிமை (முகப். இ.அ.)*; Thought.

சிப்பங்கட்டுதல் *பெயர்*

(தொழிற்சாலைச் சட்டத்தின்படி) விற்பதற்காகவோ வாடிக்கையாளர்களுக்கு விற்பனைசெய்ய எடுத்துச் செல்வதற்காகவோ செய்துமுடித்த பொருளைப் பொதியாகக் கட்டுதல்.
* *தொழிற்சாலைக்குக் கச்சா மூலப்பொருட்களை ஒப்படைப்பதற்காகச் சிப்பங்கட்டுதல் இங்கே கருதப்படவில்லை (ஸ்ரீ கோபால் காகித ஆலை எதிர் தொழிற்சாலை ஆய்வாளர்* AIR 1959, All.547); Packing.

சிறப்பு இழப்பீடு *பெயர்*

வழக்கின் தனிச் சூழ்நிலைகளில், காப்பாளியால் மெய்ப்பிக்கப்பட்டு இழப்புக்கு ஈடாகக் கோரப்படும் தொகை (*பி.*91(1), *உ.ந.தொ.ச*); Special damages.

சிறப்புச் சட்டகை *பெயர்*

குறித்தவகைப் பொருட்பாட்டுக்கு மட்டுமே பொருந்துகிற விதிமுறை (*பி.*41, *இ.த.தொ.ச.*); Special Act.

சிறப்புரிமை *பெயர்*

தனிவகையில் அமைந்த நலன், நன்மை அல்லது சலுகை என வழங்கப்படும் உரிமை அல்லது தனிவிலக்குரிமை. *நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளும் ஏமங்களும் (உறுப்.* 105, *தலைப்.* இ.*அ.*); Privilege.

சிறப்புரிமைச் செய்திகள் *பெயர்*

முகநிலையில் பழிப்புரையாக இருந்தாலும், சொல்லப்பட்ட சூழ்நிலை காரணமாக நடவடிக்கை எடுப்பதிலிருந்து காப்பளிக்கப்படும் கூற்று (*ச.சொ.*1968); Privileged communications.

சிறுபான்மையினர் *பெயர்*

பிறந்த இனம், பேசும்மொழி, தழுவிய சமயம் அல்லது மக்கள் எண்ணிக்கையில் ஒரு சமூகத்தினராக அமைபவர். *சமய அடிப்படையிலோ மொழி அடிப்படையிலோ சிறுபான்மையினராக உள்ள அனைவரும் (உறுப்.*30(1), இ.*அ.*); Minorities

சிறு வழக்கு நீதிமன்றம் *பெயர்*

உரிமைவழக்குகளைச் சுருக்கமுறையில் வழக்காய்வுசெய்யும் அதிகாரவரம்புள்ள முறைமன்றம் *சிறுவழக்கு நீதிமன்றத்தின் அதிகாரவரம்பைச் செலுத்துகின்ற நீதிமன்றங்கள் (கட். 50 வி.1 (அ)(i), உ.ந.தொ ச.)*; Small cause court.

சிறைஞர் *பெயர்*

நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர் *(பி.130, இ.த.தொ.ச)*; Prisoner

சிறைசெய்தல் *பெயர்*

காண்க கைது

சிறையிலிடுதல் *பெயர்*

ஒருவரின் தன்னுரிமைக்குத் தளையிடுதல் அல்லது தண்டனை வகையில் குற்றவாளியைச் சிறைக்கூடத்தில் அடைத்து வைத்தல் *குடியரசுத்தலைவரின் அல்லது ஆளுநரின் பதவிக்காலத்தின்போது சிறையிலிடுவதற்கான நீதிமுறைக்கட்டளை... பிறப்பிக்கப்படுதல் ஆகாது (உறுப் 361(3) இ.அ.)*; Imprisonment.

சீ

சீராய்வு *பெயர்*

கீழமை நீதிமன்றம் ஒன்று தனது அதிகாரவரம்பை முறைதவறி அல்லது முறையின்றிச் செலுத்தியதாலோ செலுத்தாமையாலோ நேர்ந்த குறைபாட்டை அகற்றித் தீருதவி அளிக்கும் பொருட்டு, அதன் தீர்ப்பு, ஆணை அல்லது நடவடிக்கை எதையும் குறித்து மேலமை நீதிமன்றம் செய்யும் மறுஆய்வு *சீராய்வுக்காக விண்ணப்பித்த சார்பினர் (பி 115, உ ந தொ ச)*; Revision

சு

சுங்கத் தீர்வை *பெயர்*

இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள்மீது விதிக்கப்படும் வரி *சுங்கத்தீர்வை ஆட்சியர் (பி.3, (ர) தே ச.)*; Customs duty.

சுங்கவரி *பெயர்*

பாலம், சாலை, படகுத்துறை, இருப்புப்பாதை, அங்காடி, துறைமுகம் முதலியவற்றைக் கடந்து செல்லவோ பயன்படுத்தவோ செலுத்தவேண்டிய வரி

** பொதுவகையில் மற்றொருவர் சொத்தினைப் பயன்படுத்துவதன்மூலம் பெறும் நன்மையை அல்லது பணிச்சேவையைப் பொறுத்துச் செலுத்தப்பெறுவது சுங்கவரி ஆகும் (மாதேபிரசாத் எதிர் தேர்தல் அலுவலர்* AIR 1971 M P. 136). Toll

சுட்டியனுப்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

செயல்தொடர்புகொள்ளல், முடிபுசெய்தல், உதவிபெறுதல், மருத்துவம்பார்த்தல் முதலியவற்றுக்காக ஒருவரை அல்லது ஒன்றை அனுப்புதல் அல்லது கையளித்தல் *(ச சொ 1979)*; To refer.

சுட்டுக்குறிப்பு *பெயர்*

குறித்துக்கூறப்பட்ட ஒரு பொருள் அல்லது ஒருவர், சுட்டுரை, சுட்டுகை. *ஆளுநர் என்னும் சுட்டுக்குறிப்பு (உறுப் 230(2), இ அ)*; Reference.

சுட்டுகை *பெயர்*

காண்க : சுட்டுக்குறிப்பு.

சுட்டுகை ஏடு *பெயர்*

மெய்ப்பிக்கப்படாமலேயே நீதிமன்றம் கவனத்தில் கொள்ளக்கூடிய ஆவணங்கள்: கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், வெவ்வேறு பொருள் பற்றிய அதிகாரமுறை நூல்கள் அல்லது ஆவணங்கள் (*பி*.57(13), *இ.சா.ச.*); Book or document of reference.

சுட்டுகைமீது நடவடிக்கையெடு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

* ஒரு நீதிப்பொதுவர் தமக்குச் சுட்டியனுப்பப்பட்ட வழக்கை ஏற்றுக்கொண்ட பின்பு, அவர் தமது மனத்தைச் செலுத்திப் பொதுவர்தீர்ப்புப் பணியை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொண்டும் சில செயல்களை மேற்கொள்ளுதல் (*சோனியால் தாக்கூர் எதிர் இலட்சுமிநாராயண் தாக்கூர்* AIR 1957 Pat. 395); To enter on reference.

சுரண்டுதல் *பெயர்*

தன்னலத்துக்காகப் பிறர் நலத்தை இழிவான அல்லது நேர்மையற்ற முறையில் கொள்ளையடித்தல். *அனைத்துவகையான சுரண்டல்களிலிருந்தும் நலிந்த பிரிவினருக்குக் காப்பளித்தல்* (*உறுப்*.46, *இ.அ.*); Exploitation.

சுருக்கக்குறிப்பு *பெயர்*

ஓர் ஆவணத்தின் மூலத்தைச் சிதைக்காமல், சில பகுதிகளை நீக்கி அளவில் சிறியதாக ஆக்குகை. *முறையாவணத்தின் சுருக்கக் குறிப்பு* (*பி*.31(2), *இ.மு.ச.*); Abridgement.

சுருக்கமுறைத் தீர்வு *செயப்படுபொருள் குன்றா வினை*

சில வகை உரிமைவழக்குகளில் குறுகு நடைமுறையைப் பின்பற்றி அளிக்கப்படும் தீர்முடிவு. *சுருக்கமுறைத் தீர்வுக்கு வகைசெய்யும் விதிகள்* (*உறுப்*.145(1)(ஐ), *இ.அ.*); Summary disposal.

சுருக்கிக்குறை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

உரிமை, நலன், அதிகாரம் போன்றவற்றின் வீச்செல்லையைக் குறைத்து ஒரு வரம்புக்குள் அடக்குதல். *உரிமைகளில் எதனையும் சுருக்கிக்குறைக்கிறது* (*உறுப்*.31, *அ.இ.அ.*); To abridge.

சுழி நேரம் *பெயர்*

ஒரு செயலைத் தொடங்கவோ தாக்குதலைத் தொடுக்கவோ (மணி விநாடி நொடி என்று) திட்டமிடப்பட்ட துல்லியமான காலக்கூறு (*ச.ஆ.சொ.க.*); Zero hour.

செ

செய்க என்னும் நீதிப்பேராணை *பெயர்*

சட்டப்படியோ பொதுமக் கடமை இயல்புக்கு ஏற்பவோ ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அரசாங்கத்திற்கு, நீதிமன்றத்திற்கு, கூட்டிணையத்திற்கு அல்லது பொது அதிகாரமுள்ளவருக்கு உச்ச நீதிமன்றமோ உயர் நீதிமன்றமோ இடும் ஆணை (*உறுப்*.32(2), *இ.அ.*); Writ of mandamus.

செய்கை *பெயர்*

1. செய்யப்பட்ட செயல் (*பி*.145 *வி.கா.*(ஆ), *இ.ஒ.ச.*)
2. உரிமையைச் செயலுறுத்தவோ காப்பளிக்கவோ தீங்கினை அல்லது தண்டனையைத் தடுக்கவோ அதற்குத் தீருதவிபெறவோ மேற்கொள்ளப்படும் வழக்கு நடவடிக்கை (*பி*.146 (இ), *மா.சா.ச.*1951); Action.

செய்கைப்பாடு *பெயர்*

1. ஒன்றை நிகழ்விக்கவோ ஒரு நிலைமையைக் கையாளவோ ஒருவர் மேற்கொள்ளும் செயல்முறை. *சமயம் பயிலுதலோடு இணைந்திருக்கும் அரசியல், பொருளாதார, நிதிச் செய்கைப்பாடு* (*உறுப்*.25 (2), இ.*அ*.); Activity.

2. நலனுக்காகவோ மகிழ்ச்சிக்காகவோ குறிப்பிட்ட நோக்கத்தை எய்துவதற்காகவோ செய்யப்படும் செயல் (*பி*.153, *அ* (இ), இ.*த*.*தொ*.*ச*.); Activity.

செய்சட்டம் *பெயர்*

சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டகை அல்லது அச்சட்டகையின் பகுதி. *அந்தச் சட்டத்தைத் திருத்துகை செய்யும் செய்சட்டம் எதுவும்* (*உறுப்*.147, இ.*அ*.); Enactment.

செய்சட்டமும் சட்டகையும் *பெயர்*

* ஒரு சட்டகையின் ஒரு பிரிவு அல்லது பிரிவின் பகுதி ஒரு செய்சட்டம் என்றும் சட்டகை முழுவதும் சட்டகை என்றும் பொருள்படும் (*அப்துல் அஜீஸ் எதிர் உ.பி.அரசு* AIR 1958 All. 109); Enactment and Act.

செய்தி *பெயர்*

ஒருவருக்கு தெரியவேண்டிய அல்லது கூறவேண்டிய தகவல். *ஆளுநருக்குச் செய்தி அளிப்பதைப் பொறுத்து முதலமைச்சரின் கடமைகள்* (*உறுப்*.167, இ.*அ*.); Information.

செய்திஅமைவனம் *பெயர்*

பொதுமக்கள் அறிவதற்காகச் செய்தியையும் புள்ளிவிவரங்களையும் திரட்டித்தரும் அலுவலகம். *செய்தி அமைவனத்தின் அல்லது ஒழுங்கமைவனத்தின் நோக்கங்களுக்காக நிறுவியமைக்கப்பட்ட தொலைச்செய்தித் தொடர்புமுறை*, (*உறுப்*.33(*ஈ*), இ.*அ*.); Bureau.

செய்தித்தாள் *பெயர்*

பொது மக்களுக்கான செய்திகளையும் கருத்தாய்வுரைகளையும் தாங்கிவரும் அச்சிட்ட காலமுறை வெளியீடு; செய்தியிதழ்; பத்திரிகை.

* *அண்மைக்கால நிகழ்ச்சி பற்றிய அறிக்கையைக் கொண்டிருந்தால்தான் அது செய்தித்தாள் ஆகும்* (*விற்பனை வரி ஆணையர் எதிர் எக்ஸ்பிரஸ் அச்சகத்தார்* AIR 1983 Bom. 198); Newspaper.

செய்தொழில் *பெயர்*

ஒருவர் விரும்பிச் செய்யும் பணி. *காவல் அலுவலர்கள் பயிற்சி உள்ளடங்கலாகப் பணித்தொழில், செய்தொழில் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி* (இ.*ப*.VII-I-65(*அ*), இ.*அ*.); Vocation.

செய்யத்தவறுகை *பெயர்*

செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுகை (*ச*.*சொ*.1979); Default.

செய்யற்க என்னும் நீதிப்பேராணை *பெயர்*

ஒரு குறிப்பிட்ட பொருட்பாட்டில் தனது அதிகார வரம்புக்கு மிகையாகவோ, நாட்டின் பொதுச் சட்டத்தின் மரபுமுறைக்கு மீறுகையாகவோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் எனக் கீழ்நிலை நீதிமன்றத்திற்கு ஓர் உயர்நிலை நீதிமன்றம் இடும் ஆணை (*உறுப்*.32(2), இ.*அ*.); **Writ of Prohibition.**

செய்யாதுதவிர்-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு நடவடிக்கையில் பங்கேற்பதிலிருந்து அல்லது ஒரு செயலைச் செய்வதிலிருந்து விலகியிருத்தல். *அத்தகைய குற்றச்செயலைச் செய்யாது தவிர்த்திருத்தல் (பி.52 அ (1)* TN Pr. A); To abstain.

செய்யாப்பிழை *பெயர்*

செய்யவேண்டியதைச் செய்யாமை (*ச.சொ*.1983); Non-feasance.

செயல் *பெயர்*

ஒருவரால் செய்யப்படும் நிகழ்வு. *உடந்தைச் செயல் (பி*.113, *இ.த.தொ.ச.*) Act.

செயல் உறுத்துக்கட்டளை *பெயர்*

ஒரு செயலைச் செய்யும்படி நீதிமன்றம் இடும் ஆணை (*பி*. 39, *கு.தீ.ச.*); Mandatory injunction.

செயல்படாக் கடப்பாடு *பெயர்*

சட்டத்தால் செயல்படுத்தமுடியாத அறநெறிக் கடமை (*ச.சொ*.1983); Imperfect obligation.

செயலகம் *பெயர்*

செயலாளரின் அலுவலகம், சிறப்பாக அரசுத் தலைமைச் செயலகம். *நாடாளுமன்றத்தின் செயலகம் (உறுப்*.98, *இ.அ.*); Secretariat.

செயலாக்கம் *பெயர்*

ஒப்பந்தத்தின் அல்லது வரைக்கட்டின்படி ஒன்றைச் செய்துமுடிப்பது; ஒப்பந்த நிறைவேற்றம் (*ச.சொ*.1983); Performance.

செயலாட்சிய *பெயரடை*

சட்டமியற்றுகை, நீதித்துறை இவற்றிலிருந்து தனிவேறான ஆட்சித்துறைக்குத் தொடர்புடைய; செயலாட்சித்துறை சார்ந்த (*பி*.124 *அ.விளக்*.3, *இ.த.தொ.ச.*); Administrative.

செயலாட்சிய அதிகாரம் *பெயர்*

ஒரு துறையை, மாநிலத்தை அல்லது நாட்டை ஆளுகைசெய்வதற்குரிய செயலுரிமை. *மாநிலத்தின் செயலாட்சிய அதிகாரம் ஆளுநரிடம் உற்றடைதல் வேண்டும் (உறுப்*. 154(1), *இ.அ.*); Administrative power.

செயலாட்சியச் சட்டம் *பெயர்*

நீதிமன்றங்கள் அல்லாத பிற சட்ட செயலாட்சிய முகமைகள் செலுத்தும் சட்டமுறைக் கட்டுப்பாடுகளையும், அவற்றை நீதிமன்றங்கள் கண்காணிப்பதையும் உள்ளடக்கிய சட்டம் (*ச.சொ*. 1983); Administrative Law.

செயலாட்சியத் தீர்ப்பாயம் *பெயர்*

* நீதிமன்றத்திற்குப் புறத்தே பணியாளர்களின் குறையைக்கேட்டு நீதிவழங்குவதற்காக அரசினால் அமர்த்தப்படுவதும், நீதிமன்றம் செலுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருந்தபோதிலும் நீதிப்பிரிவைச் சார்ந்திராமல் செயலாட்சித்துறையுடன் நெருங்கிய தொடர்புடையதுமான அரசுக் குழுமம் (*பாரத் வங்கி வரையம் எதிர் தொழிலாளர்கள்* AIR 1950 SC 108); Administrative Tribunal.

செயலாட்சியம் *பெயர்*

அலுவலகம், வேலையமைவு அல்லது நிறுவனம் ஒன்றையோ, பொது அலுவலர்கள், அரசின் ஆட்சியப் பகுதி ஆகியவற்றையோ மேலாண்மைசெய்யும் அல்லது நடத்தும் முறை; நிருவாகம். *மாநில அலுவல்களின் ஆட்சியம் பற்றிய செயற்குறிப்புகள் (உறுப். 167 (அ), இ.அ.)*; Administration.

செயலாட்சியம்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அரசு, நீதி, நிறுவனம், சொத்து முதலியவற்றின் அலுவல்களை மேலாண்மை புரிதல். *குடியரசுத்தலைவர் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பைத் தாம் அமர்த்தும், ஆட்சியாளர் வழியே செயலாட்சியம் செய்தல் வேண்டும் (உறுப். 239, இ.அ.)*; To administer.

செயலாட்சியாளர் *பெயர்*

ஒன்றியத்து ஆட்சிப்பரப்பைத் தம் சார்பில் ஆளுகைசெய்வதற்குக் குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படும் தலைவர், துணைநிலை ஆளுநர் (*உறுப்*.239, *இ.அ.*); Administrator.

செயலாளர் *பெயர்*

சங்கம், கழகம், தனியார் அல்லது பொதுத்துறை சார்பாகக் கடிதத்தொடர்பு கொள்ளவும் அலுவல் தொழிலை நடத்தவும் அமர்த்தப்படுபவர். *கூட்டிணையங்களின் செயலாளர்கள் (உறுப்.31அ(1)(ஈ), இ.அ.)*; Secretary.

செயலுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நடைமுறைப்படுத்துதல் (= அமல்படுத்துதல்). *உச்ச நீதிமன்றத் தீர்ப்பாணைகளைச் செயலுறுத்துதல் குறித்த ஆணைகள் (உறுப்.142(1), இ.அ.)*; To implement.

செயற்குறிப்பு *பெயர்*

கருதுகைக்காகவோ ஏற்புக்காகவோ முன்னிடப்படும் கருத்துரை (*உறுப்*.108(4), *இ.அ.*); Proposal.

செயற்கையான *பெயரடை*

மனிதரின் கைவண்ணத்தால் அல்லது சட்டத்தால் உருவாக்கப்பட்ட, புனைவான. *செயற்கையான ஆளர் (பி.2(3) (vii) வ.வ.ச.)*; Artificial.

செயற்படி *பெயர்*

ஒரு நடவடிக்கையில் மேற்கொள்ளப்படும் செயல், செயல்முயற்சி (*இ.ப*.VI, 15(1), *இ.அ.*); Step.

செயற்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நடவடிக்கையை மேற்கொண்டிருத்தல். *அவையின் கலைப்பாகச் செயற்படுதல் வேண்டும் (உறுப்.83, இ.அ.)*; To operate.

செயற்பாட்டுப் பகுதி *பெயர்*

ஆவணத்தின் தலையாய நோக்கத்தை வெளிப்படுத்தும் பாகம் (*ச.சொ*.1983); Operative part.

செயற்பாடு *பெயர்*

செயலாற்றலில் உள்ள நிலை. *சட்டத்தின் செயற்பாட்டை உறுத்தம்செய்தல் ஆகாது (உறுப்.305, இ.அ.)*; Operation.

செல்திறம் *பெயர்*

கடன் முழுவதையும் தீர்க்கும் திறன் (*பி*.133, *சொ.மா.ச.*); Solvency.

செல்திறலர் *பெயர்*

கடன்கள் அனைத்தையும் அடைக்கப் போதிய பணவசதி உடையவர், செல்லும்புள்ளி (*பி*.14 *வி.கா.(ஊ)*, *சொ.மா.ச.*); Solvent.

செல்மதிப்பு *பெயர்*

பணம் செலுத்துபவரின் நேர்மையிலும் திறத்திலும் கொள்ளும் நம்பிக்கை, நாணயம்; நன்மதிப்பு (*உறுப்*.261(1), *இ.அ.*); Credit.

செல்லத்தக்கதாக்கு-தல் *செயப்படு பொருள் குன்றா வினை*

சட்டத்திற்கு உகந்ததாகவும் போதியதாகவும் ஒன்றை நிறைவுசெய்தல். *படைத்துறை ஆட்சியின்கீழ்ச் செய்யப்பட்ட செயல் எதனையும் செல்லத்தக்கதாக்க நாடாளுமன்றம் வகைசெய்யலாம்* (*உறுப்*.34, *இ.அ.*); To Validate.

செல்லறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு நீதிய நடவடிக்கையையோ இயற்றுச்சட்டத்தையோ செல்லுந்தன்மை அற்றது என விளம்புதல் (*பி*.69 (*வி.கா.*) *இ.ஒ.ச.*) *குற்றத்தீர்ப்பைச் செல்லறவு செய்தல்* (*பி*.368 (ஆ), *கு.ந.தொ.ச.*); To annul.

செல்லாற்றல் *பெயர்*

நடைமுறையில் செல்லுந்தன்மையுடன் இருத்தல் (*உறுப்*.249(2), *இ.அ.*); Force.

செல்லுந்தன்மை *பெயர்*

சட்டப்படி செல்லுபடியாகும் நிலை அல்லது பொருளியம், செல்லுநிலை, செல்லுடைமை. *சட்டம் செல்லுந்தன்மையதா என்பது பற்றிய சிக்கல்* (*பி*.395(1), *உ. ந தொ.ச*); Validity.

செல்லுந்தன்மையற்ற *பெயரடை*

செயல்விளைவு இல்லாத, செல்லுடைமையில்லாத. *சட்ட வகைமுறை எதுவும் ஏற்பிசைவு அளிக்கப்பட்டிருந்தது என்றால் அது செல்லுந்தன்மையற்றதாக ஆகாது* (*உறுப்*. 255, *இ.அ.*); Invalid.

செல்லுந்தன்மையான *பெயரடை*

சட்டப்படி போதுமானதாகவும் கட்டுறுத்தக் கூடியதாகவும் உள்ள. செல்லுநிலையான, செல்லுடைமையான (*பி*.30, *சொ.மா.ச.*); Valid.

செல்வாக்கு *பெயர்*

மற்றவர்மீது ஒரு தாக்கத்தையோ செயல்விளைவையோ ஏற்படுத்தும் திறமை. *தெரிந்ததைச் சொல்லுமாறு தூண்டுவதற்குச் செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடாது* (*பி*.316, *கு.ந.தொ.ச.*); Influence.

செலவினம் *பெயர்*

பலவகையிலும் செலவழிக்கப்படும் பணம். *செலவினமும் வரவினமும்* (*உறுப்*. 202(1), *இ.அ.*); Expenditure.

செலவுமுன்பணம் *பெயர்*

அலுவலகத்தில் நினையாநிகழ்வுச் செலவுகளை எதிர்நோக்கி முன்னதாகவே கொடுத்து வைக்கப்படும் தொகை, அலுவல்முன்பணம், வசக்கட்டுத்தொகை (*உறுப்*. 267(1), *இ.அ.*); Imprest.

செலுத்தம் *பெயர்*

செலுத்துநர் எனப்படும் ஒருவர், பெறுநர் எனப்படும் மற்றொருவருக்குக் கொடுக்கும் பணத்தொகை (*உறுப்*. 29 (2) *இ.அ.*); Payment.

செலுத்தம்பெறுநர் *பெயர்*

காண்க: பணம் பெறுநர்.

சே

சேர்வடைவு முறையாவணம் *பெயர்*

முன்னை இந்திய மன்னர்களின் குறுநில அரசை நாடு விடுதலையடைந்தபின்பு இந்திய ஒன்றியத்துடன் சட்டப்படி இணைத்த ஆவணம் (*உறுப்*.370 (1) (ஆ) (i), *இ.அ.*); Instrument of accession.

சேரிடம் *பெயர்*

1. பயணத்தின் முடிவிடம், பயண இலக்கு (*பி*.78 (ஆ), *இ.இ.ச.*).
2. குறிக்கோளை எய்தும் இலக்கு (*ச.ஆ.சொ.க.*); Destimation.

சை

சைகை *பெயர்*

உடல் அசைவு வழி உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துகை. *ஒரு பூசலை விளைவிக்க உதவும் சைகைகள்* (*பி*.48 (ஆ) *க.ப.ச.*); Gesture.

சொ

சொத்தாட்சியம் *பெயர்*

விருப்பாவணர் அமர்த்திய நிறைவேற்றாளராலோ, அந்நிறைவேற்றாளர் இல்லாநிலையில் நீதிமன்றம் அமர்த்திய சொத்தாட்சியாளராலோ, விருப்பாவணர் இறந்தபின்பு அவரது சொத்தில் கொள்ளப்படும் மேலாண்மை. (*பி*.5(1), *அ.கொ.க.ச.*); Administration.

சொத்தாட்சிய மடல் *பெயர்*

விருப்பாவணத்தை எழுதிவைக்காமல் அல்லது சொத்து நிறைவேற்றாளரை அமர்த்தாமல் ஒருவர் இறந்துவிட்டநிலையில், விருப்பாவண மெய்ப்பிதழ் வழங்கும் அதிகாரவரம்புள்ள நீதிமன்றம், தக்க ஒருவருக்கு அச்சொத்தின் மேலாண்மைக்காக வழங்கும் அதிகார ஆவணம் (*பி*.9 *வரம்*, *கா.வ.ச.*); Letters of administration.

சொத்தாட்சிய முறியம் *பெயர்*

சொத்தாட்சி எவரிடம் ஒப்படைக்கப்படுகிறதோ அவர் உரியவாறு செயலாற்றுவதாக உறுதிசெய்து எழுதித்தரும் பொறுப்பேற்பு ஆவணம் (*பி*.35, *கா.கா.ச.*); Administration bond.

சொத்தாட்சிய வழக்கு *பெயர்*

இறந்துபோனவரின் சொத்து மேலாண்மை குறித்து நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் உரிமை நடவடிக்கை (*கட்*.20 *விதி* 13, *உ.ந.தொ.ச.*); Administration suit.

சொத்தாட்சியர் *பெயர்*

விருப்பாவணர் நிறைவேற்றாளரை அமர்த்தாமல் இறந்த நிலையில், அவரது சொத்தை மேலாண்மைசெய்வதற்காக நீதிமன்றத்தால் அமர்த்தப்படும் ஒருவர்; சொத்தாட்சியர் (*பி*.2(i), *சொ.வ.ச.*); Administrator.

சொத்தியல் உரிமை *பெயர்*

உடைமையுரிமையின் பயன்திறனால் ஒரு சொத்தின்மீது உடைமையாளர் கொண்டுள்ள நலன் (*ச.சொ*.1983); Proprietary right.

சொத்து *பெயர்*

சொந்தங்கொண்டாடும் பொருளின் மீதுள்ள உரிமைத்தொகுதி (*பி*.2 (ஆ), *சொ.மா.ச.*); Property.

சொத்துச் சார்புறவு *பெயர்*

ஒரு சொத்துத் தொடர்பாகக் குத்தகைவிட்டவர், குத்தகைஎடுத்தவர், கூட்டுச் சொந்தக்காரர்கள் ஆகியோரிடை நிலவும் தொடர்புநிலை (*ச.சொ*.1968); Privity of estate.

சொத்துச்சேர்வடைவு *பெயர்*

இயற்கையாகவோ உழைப்பினாலோ நிலவிவரும் சொத்தில் உருவாகும் சேர்மானம் (*பி*.63, *சொ.மா.ச.*); Accession.

சொத்துடைமை *பெயர்*

1. (பொதுவகையில்) ஒருவருக்குச் சொந்தமான சொத்துகள் அனைத்தும்; சொத்திருப்புகள்; Assets.

2. (தனிவகையில்) தனியொருவர், நிறுமம் அல்லது இறந்துபோனவருக்குச் சொந்தமான சொத்துகள் அல்லது மரபுரிமையருக்கு இறங்குரிமை மூலம் கிடைக்கத்தக்க அல்லது இறந்தவரின் கடன்களையோ உயில்வழிக் கொடைப் பொறுப்புகளையோ தீர்க்கத்தக்க சொத்து (*பி*.2(2), *சொ.ச.*); Assets.

சொத்து மேம்பாடு *பெயர்*

மனித உழைப்பால் சொத்தின் பெறுமான மதிப்பை மிகுவிப்பது (*பி*.63, *அ* (1) *சொ.மா.ச.*); Improvement to property.

சொத்துரிமைக் குறி *பெயர்*

ஓர் அசையும் பொருள் குறிப்பிட்ட ஒருவருக்குச் சொந்தமானது என்பதைச் சுட்டிக்காட்ட இடப்படும் அடையாளம் (*பி*.479, *இ.த.தொ.ச.*); Property mark.

சொத்தெடுப்பு *பெயர்*

சரியீட்டுத் தொகை கொடுத்து ஒருவரது சொத்தை அரசு கட்டாயமாகக் கையகப்படுத்துகை (*இ.ப. உறுப்*.51, *ஆ.வ.வ.ச.*); Expropriation.

சொத்தெடுப்புரிமை *பெயர்*

நாட்டுநலன் கருதித் தனது குடிகளின் சொத்தை ஓர் அரசு பயன்படுத்திக்கொள்வதற்கான உரிமை (*ச.சொ*.1979); Eminent domain.

சொந்தக்காரர் *பெயர்*

ஒரு சொத்தின்மீது உரிமையுள்ளவர்; சொத்தாளர். *உரிமைப்படியான சொந்தக்காரர் இன்மையால் உரிமையிலிப் பொருளாக (உறுப். 246, இ.அ.)*; Owner.

சோ

சோதனைக் கட்டளை *பெயர்*

காண்க : தேடுகைக் கட்டளை.

த

தகவலாள் *பெயர்*

பிடியாணை வேண்டாக் குற்றம் செய்யப்பட்டதைக் காவல் அலுவலருக்கோ நீதிநடுவருக்கோ தெரிவிப்பவர். *தகவலாளுக்கு அது படித்துக் காட்டப்பட* வேண்டும் *(பி.154(1), கு.ந.தொ.ச.)*; Informant.

தகவான *பெயரடை*

சட்டமுறைமைக்கு அல்லது பகுத்தறிவுக்கு ஒத்த; (= நியாயமான). *குற்றச்சாட்டுகளைப் பொறுத்துக் கேட்பதற்குத் தகவான ஒரு வாய்ப்பு அளிக்கப்படுதல் (உறுப்.311(2), இ.அ.)*; Reasonable.

தகவு-நிகழ்வான காரணம் *பெயர்*

* வழக்கு நடவடிக்கை நேரிதாக நிகழக்கூடிய அடிப்படையைக் கொண்டுள்ளது என்னும் நம்பிக்கை *(எஸ்.டி.சாகிப் எதிர் ஹாசன் கனி சாகிப்*, AIR 1957 Mad.646); Reasonable and Probable cause.

தகாத செல்வாக்கு *பெயர்*

மற்றவரின் விருப்பத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள ஒப்பந்தச் சார்பினரில் ஒருவர் அதைப் பயன்படுத்தி நேர்மையற்ற வழியில் ஒரு நன்மையை அடைவது *(பி.161(1), இ.ஒ.ச.)*; Undue influence.

தகாவுறவுப் புணர்ச்சி *பெயர்*

திருமண உறவு தடைசெய்யப்பட்ட நெருங்கிய உறவினர்கள் கொள்ளும் உடலுறவு. *(எ.டு: அக்காள், தம்பி, அண்ணன், தங்கை போன்றவரின் பாலுறவு) (பி.3(6), இ.தி.மு.ச.)*; Incest.

தகுதி *பெயர்*

ஒரு பதவியை அல்லது அலுவலை ஏற்பதற்கு வேண்டுறுத்தப்படும் தேர்ச்சிநிலை. *உறுப்பினர்களாகப் பணியமர்த்தத் தேவைப்படும் தகுதிகள் (உறுப்.280(2), இ.அ.)*; Qualification.

தகுதிக்கேடு *பெயர்*

வேண்டுறுத்தப்படும் தேர்ச்சிநிலையை இழந்துவிடுதல் *(உறுப்.101, இ.அ.)*; Disqualification.

தகுதி யாது என்னும் நீதிப்பேராணை *பெயர்*

பொது அதிகாரப் பதவி, பொது உரிமை அல்லது தன்னுரிமை உடைய ஒருவரிடம் அல்லது அதைக் கைப்பற்றியவரிடம், எதன் அடிப்படையில் அவர் உரிமைகோருகிறார் என வினவும் ஆணை *(உறுப்.32(2), இ.அ.)*; Writ of quo warranto.

தகுதிறமுள்ள *பெயரடை*

சட்டப்படியான தகுநிலை பெற்றிருக்கிற. *ஒப்பந்தம் செய்யத் தகுதிறமுள்ள ஒருவர்* (*பி*.11, *இ.ஒ.ச.*); Competent.

தகுதிறன் *பெயர்*

ஒப்பந்தம், விருப்பாவணக்கொடையளிப்பு, விற்பனை போன்ற உரிமையியல் செயல்களை மேற்கொள்வதற்குரிய சட்டமுறைத் தகுதிப்பாடு; திறமுறை. *ஒப்பந்தச் சார்பினரிடம் உள்ள தகுதிறன் இன்மை மெய்ப்பிக்கப்படலாம்* (*பி*.92 *விலக்*. 1 *இ.சா.ச.*); Capacity.

தகுநிலை *பெயர்*

சட்ட நோக்கில் ஒருவருக்குச் சமுதாயத்தில் உளதாகிய நிலைமை (= அந்தஸ்து). *வழிபாட்டில் தன்னுரிமையும் தகுநிலையில் சமன்மையும் உறுதியாகக் கிடைக்கச் செய்தல்* (*முகப். இ.அ.*); Status.

தகுவயதடைந்தோர் வாக்குரிமை *பெயர்*

காண்க : முதிர்ந்தோர் வாக்குரிமை.

தடுப்புக் காவல் *பெயர்*

குற்றம் நிகழாமல் இருக்க ஐயுறப்பெற்றவரைக் காவலில் வைக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கை. *தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்களை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றுக்கு அகற்றுதல்* (*இ.ப.*VII-III-4 *இ.அ.*); Preventive detention.

தடை உறுத்துக்கட்டளை *பெயர்*

ஒன்றைச் செய்யக்கூடாதென்று தடைவிதிக்கும் நீதிமன்றக் கட்டளை (*ச.சொ.*1983); Prohibitory injunction.

தடைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அதிகாரவுரிமையினால் அல்லது ஆணையதிகாரத்தால் ஒரு நிகழ்வைத் தடுத்து நிறுத்தல். *மனித இழிதொழில் வாணிகமும்... வலுக்கட்டாய உழைப்பு முறைகளும் தடைசெய்யப்படுகின்றன* (*உறுப்*.23(1), *இ.அ.*); To prohibit.

தடையாணை *பெயர்*

கப்பல் துறைமுகத்தைவிட்டு வெளியேறலாகாது என அரசு பிறப்பிக்கும் கட்டளை (*ச.சொ.*1983); Embargo.

தடையிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றைச் செய்வதற்குச் சட்டம் தடைவிதித்தல். எ-டு: காலவரம்பீட்டுச் சட்டத்தின்படி குறித்த காலம் கடந்தபின்பு கடனைத் தண்டல்செய்வதற்கும் உரிமையைச் செயலுறுத்துவதற்குமான முட்டுக்கட்டை. *அந்தக் கூறிலுள்ள எதுவும் உறுப்பினரின் அமர்த்துகைக்குத் தடையிடுதல் ஆகாது* (*உறுப்*. 336, *இ.அ.*); To bar.

தண்டம் *பெயர்*

செய்த தீங்கிற்குச் சரியீடாகவோ தண்டனையாகவோ செலுத்தப்பட வேண்டியதும், ஒப்பந்த முறிவு ஏற்பட்டால் சரியீடாகக் கொடுக்க ஒப்புக்கொண்டதுமான தொகை. *பண்டங்களுக்குக் காரணங் காட்டாமைக்கான தண்டம்*. (*பி*.116 *சு.தீ.ச.*); Penalty.

தண்டமுறு செய்கை *பெயர்*

தண்டிக்கும் வகையில் சட்டம் விதிக்கும் ஒறுப்பு நடவடிக்கை (*ச.சொ.*1983); Penal action.

தண்டனை *பெயர்*

சட்டத்தை மீறியதற்கான ஒறுப்பு. *தண்டனைக்கு வகைசெய்வதான சட்டம்* (*உறுப்.* 35 (ஆ), *இ.அ.*); Punishment.

தண்டனைக் குடியிருப்புக்கு அனுப்புகை *பெயர்*

குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கழிப்பதற்காக அதற்கென அமைந்த கடுஞ்சிறை வளாகத்திற்கு அவரைக் கொண்டுசெல்லுவதாகவோ; நாடுகடத்தலாகவோ ஆங்கிலேய ஆட்சியில் நடைமுறையிலிருந்து இப்போது ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டுள்ள ஒறுப்பு வகை. *"தண்டனைக்குடியிருப்புக்கு அனுப்புகை" என்பதான குறிப்பு எதுவும் "ஆயுள் தண்டனை" என்பதைக் குறிப்பதாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும்* (*பி.*53, *இ.த.தொ.ச.*); Transportation for life.

தண்டனைகள் *பெயர்*

இறப்புத்தண்டனை, ஆயுள்சிறை, கடுங்காவல், வெறுங்காவல், சொத்தைத் தண்டமாகயிழப்பது, பணத்தண்டம். *குற்றவாளிகள் உள்ளாகக்கூடிய தண்டனைகளாவன* (*பி.*53, *இ.த.தொ.ச.*); Punishments.

தண்டனைத்தணிப்பு *பெயர்*

ஒரு வழக்கில் விதிக்கப்பட்ட தண்டனையின் கடுமையை மாற்றிக்குறைப்பது (*உறுப்.*13, *இ.அ.*); Commutation.

தண்டனைநிறுத்திவைப்பு *பெயர்*

தண்டனை நிறைவேற்றத்தை இடைநீக்கம்செய்வது. *குடியரசுத் தலைவர்... தண்டனை நிறுத்திவைப்புக்கான அதிகாரம் உடையவர்* (*உறுப்.*72, *இ.அ.*); Reprieve.

தணிக்கைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கணக்குகளைக் சான்றுச்சீட்டுடன் அதிகாரமுறையில் சரிபார்த்தல். *ஒரு மாநிலத்தின் கணக்குகளைத் தணிக்கைசெய்தல்* (*உறுப்.*110(1)(ஊ), *இ.அ.*); To audit.

தணிக்கையாளர் *பெயர்*

அதிகாரமுறையில் கணக்குகளைச் சரிபார்ப்பவர் (*ச.சொ.*1979); Auditor.

தந்தை *பெயர்*

பெற்றோரில் ஆண்.

* *இனமுறைச்சட்டம் ஏற்றுக்கொள்கிற மகவேற்புத்தந்தை* (*பி.*3 (20) *பொ.வ.ச.* 1897)

* *காலவரம்பீடு சட்டகையின் 109ஆம் பிரிவின்படி, பாட்டனார், கொள்ளுப்பாட்டனார் அல்லது தந்தைவழிச் சிற்றப்பன், பெரியப்பன் கொள்ளுச் சிற்றப்பன் அல்லது பெரியப்பன்* (*சுதர்சன் எதிர் இராதாகிஷன்ராம்* AIR 1982 All. 2(8); Father.

தரகர் *பெயர்*

தமக்குச் சொந்தமில்லாத பண்டங்களையும் உடைமைகளையும் பேரம்பேசி விற்பதும் வாங்குவதுமான தொழிலைச்செய்து, அந்த விலையில் குறிப்பிட்ட விழுக்காட்டைக் கழிவுத்தொகையாகப் பெறுகிற இடைவாணிகர் (*ச.சொ.*1983); Broker.

தரமதிப்பிடுநர் *பெயர்*

வரி வீதத்தையோ விற்பனை விலையையோ தீர்மானிப்பதற்காகச் சொத்து, இறக்குமதிப் பொருள்கள், கப்பல் அழிவில் சேதமான பண்டங்கள், நொடித்தவரின் சொத்து முதலியவற்றின் பெறுமான மதிப்பைக் கணக்கிட்டுத் தெரிவிப்பவர். (*பி.*51, *மா.சி.நீ.ச.*); Appraiser.

தலாக் *பெயர்*

மணமுறிவு விரும்பும் இசுலாமியக் கணவரால் (மனைவிமுன்) கூறப்படும் சொல் (*ச.சொ.*1983); Talak.

தலைக்கட்டு வரி *பெயர்*

ஓர் ஆளுக்கு இவ்வளவு என விதிக்கப்படும் கட்டணம். *ஆள் வீத வரி* (*ச.ஆ.சொ.க.*); Capitation.

தலைக்கொரு பங்காக *வினையடை*

(விருப்பாவணம் எழுதாது இறந்துபோனவரின் நேர்முக வழிமுறையுரிமையர், கிளைவழிப் பங்குரிமை பெறுபவரைப் போலன்றித் தங்கள் சொந்த உரிமையின்படி இறந்தவரின் சொத்தைச் சமஅளவில்) ஆளுக்கொரு பகுதியாக. (*பெறுதல்*) (*ச.சொ.*1983); Per capita.

தலைநிலைச் சான்று *பெயர்*

சார்நிலைக்கு மாறான ஆதாரச் சான்று. *(எ.டு)* நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படும் மூல ஆவணம் (*பி.*62, *இ.சா.ச.*); Primary evidence.

தலைமறைவாகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

காண்க : அஞ்சியொளிதல்.

தலைமை அமைச்சர் *பெயர்*

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரும், குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்பட்டு அவரது விழைவு உள்ளவரையில் பதவி வகிப்பவருமான இந்திய அரசின் முதன்மை அமைச்சர்; பிரதமர் (*உறுப்.*75, *இ.அ.*); Prime Minister.

தலைமை நீதியரசர் *பெயர்*

உயர் நீதிமன்றத்தின் அல்லது உச்ச நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதி. *நீதிபதியைப் பணியமர்த்துகையில் தலைமை நீதியரசர் கலந்தறியப்படுதல் வேண்டும்* (*உறுப்.* 124(2) *வரம்.* *இ.அ.*); Chief Justice.

தவணை *பெயர்*

குறிப்பிட்ட வெவ்வேறு காலஅளவில் விலை செலுத்தப்படும் பொருட்டுப், பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட முழுத் தொகையின் ஒரு கூறு. *உள்ளபடியே செலுத்தத் தவறிய தவணை* (*பி.*220(5), *வ.வ.ச.*) Instalment.

தவணைமுறை வாங்குகை *பெயர்*

கடனுக்கு வாங்கிய பொருள், அதற்குரிய தொகையைக் குறிப்பிட்ட காலஅளவில் செலுத்திய பின்பு வாங்கியவருக்கே சொந்தமாகும் ஒரு முறை (*பி.*3, *த.மு.வா.ச.*); Hire purchase.

தவற்றுச்சேர்ப்பு *பெயர்*

சட்ட நடவடிக்கையில் வழக்காளியாகவோ காப்பாளியாகவோ ஆட்களை முறைகேடாக இணைப்பது. *தவற்றுச் சேர்ப்பு உள்ளடங்கலாகக், குற்றச்சாட்டில் பிழை... முறைகேடு எதுவும் இருக்கிறது (பி.464(1), கு.ந.தொ.ச.)*; Misjoinder .

தவறு *பெயர்*

ஒரு பொருளின் உண்மையைப் பொறுத்தமட்டில், அறியாமை அல்லது பொய்நம்பிக்கை காரணமாகக் கொள்ளப்படும் பிழைபாடு. *சட்டம் பற்றிய தவறு (பி.21, இ.ஒ.ச.)*; Mistake.

தவறாகப்பயன்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டத்திற்கு முரணாகப் பதவி அதிகாரத்தைத் தகாத வழியில் செலுத்தி நன்மையடைதல். *நீதியக் கட்டளையைத் தவறாகப் பயன்படுத்துதல் (கட்.6 வி.16 (அ), உ.ந.தொ.ச.)*; To abuse.

தவிர்ப்புரை *பெயர்*

நீதிமன்றத்தில் முன்னதாக வைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கையை விலக்கிக்கொள்ளும் நோக்கத்துடன், புதிய பொருட்பாட்டை வாதுரையில், தெரிவிக்கும் கூற்று *(ச.சொ.1979)*; Avoidance.

தழுவமைவு ஆணை *பெயர்*

அரசமைப்பின் புதிய வகைமுறைகளுடன் பொருந்தும் வகையில் நிலவிவரும் சட்டங்களை மாற்றியமைப்பதற்கான கட்டளை *(ச.சொ.1979)*; Adaptation order.

தழுவமைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புதியதொரு சூழலுக்கு, பயன்பாட்டுக்கு அல்லது நிலைமைக்குப் பொருந்துமாறு மாற்றியமைத்துக் கொள்ளுதல். *சட்டங்களைத் தழுவமைவுசெய்யக் குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரம் (உறுப். 372 அ. இ.அ.)*; To adapt.

தள்ளுபடி *பெயர்*

தண்டனை, வரி, கடன் ஆகியவற்றை முழுமையாகவோ பகுதியாகவோ நீக்கிவிடுவது *(உறுப். 72, இ.அ.)*; Remission.

தற்கவனமின்மை *பெயர்*

தமக்கு ஏற்பட்ட இடர்வுக்கு மற்றவர் பகுதியாகவோ முழுமையாகவோ பொறுப்பாக அமைந்தாலும், முறையிடுநர் பால் சார்த்தத்தக்க விழிப்புணர்வு இன்மை *(ச.சொ.1979)*; Contributory negligence.

தற்காப்பு *பெயர்*

சட்டம் ஏற்கும் வகையில் தம்முடைய அல்லது பிறருடைய உடலையோ பொருளையோ காத்துக்கொள்ளுகை. *'ஔ'-வின் செய்கை தற்காப்புக்காகச் செய்யப்பட்டது (பி.79, (வி.கா.) இ.த.தொ.ச.)*; Self defence.

தற்காப்புரை *பெயர்*

***காண்க*:** எதிர் வழக்குரை.

தற்காப்பு உரிமை *பெயர்*

தமது அல்லது பிறரது உடலையோ சொத்தையோ காத்துக்கொள்ளும் பொருட்டு, அவருக்குச் சட்டம் வழங்கும் உரிமை (*பி*.101, இ.*த.தொ.ச.*); Right of private defence.

தற்செயல் *பெயரடை < தற்செயலான*

எதிர்பாராமல் நிகழ்கிற. *குடியரசுத்தலைவரின் பதவியில் தற்செயல் ஒழிவிடம் ஏற்படும்போது* (*உறுப்*.65(1), இ.*அ*.); Casual.

தற்செயல்நிகழ்ச்சி *பெயர்*

எதிர்பாராமல் நேரிடும் ஒன்று. (*பி*.33 ஆ. (*விளக்*. - (iii) *வ.வ.ச.*); Accident.

தறுவாய் *பெயர்*

ஓர் ஆவணத்தில் குறிப்பிட்ட ஒரு பத்தியை அல்லது வாசகத்தை ஒட்டி முன்னோ பின்னோ அமைந்து, அதன் பொருளைத் தீர்மானிக்கும் பகுதி (*உறுப்*.12, இ.*அ*.). Context.

தன்விருப்ப ஓய்வுறுகை *பெயர்*

வகுத்துரைக்கப்பட்ட பணி ஆண்டுக்காலம் முடிவதற்கு முன்பு தானே விரும்பிப் பணியிலிருந்து விலகிக்கொள்வது.

* *பணியறவு செய்தல் அல்லது பணியகற்றுதல் வேலைதருநரின் உரிமைச் செயலாக எவ்வாறு அமைந்துள்ளதோ அதேபோன்று தன்விருப்ப ஓய்வுறுகையும் வேலைபெறுநரின் உரிமைச் செயலாகும் (பி.எஸ்.தேசிகாச்சாரி எதிர் அசோசியேடட் நூல் வெளியீட்டாளர்கள்* AIR 1962 Mad. 327); Voluntary retirement.

தன்விருப்பாக *வினையடை*

தன்னுரிமையுடன்; விரும்பிய வழிவகை மூலமாக. *அயல்நாட்டு அரசின் குடிமையைத் தன்விருப்பாகப் பெற்றிருக்கிறார்* (*உறுப்*.101(1), (*ஈ*), இ.*அ*.); Voluntarily.

தன்விருப்பாண்மை *பெயர்*

* ஒருவர் மனம்போனபோக்கில் செயலாற்றும் நிலை.

* *ஒரு சட்டகை தன்விருப்பாண்மையுடன் செய்யப்பட்டிருக்கிற விடத்து, அரசியல் தருக்கம், அரசமைப்பு நெறி ஆகிய இரண்டுக்கும் ஏற்றவாறு இல்லை என்பது சட்டத்தின் உட்கிடை ஆகிறது (ராயப்பா எதிர் தமிழ்நாடு அரசு* (1974) 2 SCR 348); Arbitrariness.

தன்னாட்சி *பெயர்*

தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களால் அமைந்த அரசாங்கம் அல்லது ஆளுகை. *ஊராட்சிகள் தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அலுவற்பணியாற்றுவதற்குத் தேவையான அதிகாரங்கள்* (*உறுப்*.40, இ.*அ*.); Self government.

தன்னுரிமை *பெயர்*

ஒருவரது ஒழுக்கம் அல்லது அரசியல் நோக்குரைகள்மீது அதிகாரவுரிமையினால் சுமத்தப்படும் அடக்குமுறை வரையறைகளிலிருந்து விடுபட்டுத் தன்விருப்பாகச் செயற்படும் நிலை. *சிந்தனை, சிந்தனை வெளிப்பாடு, பற்றார்வம், வழிபாடு இவற்றில் தன்னுரிமையும்* (*முகப்*. இ.*அ*.); Liberty.

தன்னுரிமையர் *பெயர்*

இளவர், மனநிலைகுன்றியவர் போன்று சட்ட இயலாமை எதுவும் இன்றித் தமது சொத்தைப் பிறருக்கு மாற்றியளித்தல், ஒப்பந்தம் மூலம் தம்மைக் கட்டுறுத்திக்கொள்ளல், பிறர் மீது வழக்கிடுதல், தம் மீது வழக்கிடப்படுதல் ஆகிய செயலுரிமை உடையவர்; தன்னிலையுரிமையர் (*பி*.3(1) (*அ*) *அ.சொ.வ.ச.*); Suijuris (of his own right).

தன்னுரிமையாட்சி *பெயர்*

ஒரு நாடு, வட்டாரம் அல்லது அமைவனம் தன்னுடைய அலுவல்களைப் பிறர் தலையீடு இல்லாமல் தானே ஆளுகைசெய்வதற்கான உரிமைப்பேறு (=சுதந்திரம்); தன்னாட்சிமை. *அசாம் மாநிலத்திலுள்ள தன்னுரிமையாட்சி மாவட்டங்கள்* (*இ.ப*.VI.12 *இ.அ.*); Autonomy.

தனித்திருப்புரிமை *பெயர்*

தேவையற்ற விளம்பரத்திலிருந்து தன்னுரிமையுடன் இருப்பதற்கும், தானும் தன் குடும்பமும் பிறர் தலையீடின்றித் தனியே வாழ்வதற்குமான உரிமை (*ச. சொ*.1983); (Right of) Privacy.

தனிநிலைப்பணிக்கான *பெயரடை*

காண்க : அதற்கென அமைந்த.

தனிப்பட்டவர் *பெயர்*

குழுவாக இல்லாமல் தனிநிலையில் கருதப்படும் ஒருவர்; ஒற்றை மனிதர் (= தனி நபர்). *தனிப்பட்டவர்களின் குழுமம்* (*பி*.5, *சொ.மா.ச.*); Individual.

தனிமுழுவுரிமை *பெயர்*

தனி ஒருவருக்கோ கழகத்திற்கோ சட்டமுறைப்படி அரசால் வழங்கப்படும் பிறிதுவிலக்கிய வாணிகச் சிறப்புரிமை (= ஏகபோகவுரிமை). *அரசின் தனிமுழுவுரிமைகளுக்கு வகைசெய்யும் சட்டங்களுக்குக் காப்புரை* (*உறுப்*. 305, *இ.அ.*); Monopoly.

தனிமைச் சிறையடைப்பு *பெயர்*

குற்றத்தீர்ப்பாளியை ஏனைய சிறைஞரிடமிருந்து பிரித்துத் தனியாக அடைத்து வைக்கும் ஒருவகைச் சிறைதண்டனை.

* *எவருடைய நேரடித்தொடர்பும் பார்வையும் இன்றி, வேலையமைவு அறிவுறுத்தம் எதுவும் கொடுக்கப்படாமல் சிறைஞரை மனித சமுதாயத்திடமிருந்து தனிமைப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் அறையில் அடைத்துவைப்பது (சுனில் பாத்ரா எதிர் டில்லி ஆட்சியம்* AIR 1978 SC 1675); Solitary confriement.

தனிவகை அடைமானம் *பெயர்*

ஏனைய ஐந்து வகை அடைமானத்திற்குள் வராத ஒன்று (*கட்*.34 *விதி*.4(3)*உ.ந.தொ.ச.*); Anomalous Mortgage.

தனி வட்டி *பெயர்*

முதல்தொகைக்காக மட்டுமே கணக்கிடப்படும் வட்டி (*பி*.23, *இ.பொ.க.ச.*); Simple interest.

தனிவேறான *பெயரடை*

தன்மையிலும் வகையிலும் பிறவற்றிலிருந்து மாறுபட்டுத் தனிப்பண்புநலன் கொண்ட. *தமக்கெனத் தனிவேறான மொழி அல்லது பண்பாடு கொண்டிருக்கும் குடிமக்களின் பிரிவினர்* (*உறுப்*.29(1), *இ.அ.*); Distinct.

தா

தாக்கமுனை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வன்முறையைப் பயன்படுத்தும் உட்கருத்துடன் சொல்லால், சைகையால் அல்லது ஆயத்தங்களால் மற்றவரை அச்சுறுத்தல். (*பி*.351, *இ.த.தொ.ச.*). To assault.

தான்தோன்றிப் பொறுப்புரிமையர் *பெயர்*

மற்றவருக்குப் பயன்தரும் சொத்தின் மேலாண்மையில், அவரது இசைவு இல்லாமல், தனது சொந்த அதிகாரத்தைச் செலுத்துபவர் (*ச.சொ.*1983); Trustee de son tort.

தி

திட்டமுறை *பெயர்*

ஒரு சொத்தின் மேலாண்மையையோ பகிர்மானத்தையோ ஒழுங்குமுறைசெய்வதற்கான அல்லது முரண்படும் உரிமைகளைக் கொண்டிருக்கும் ஆட்களுக்கிடையே இசைவை உண்டாக்குதற்கான வகைமுறைகளைப் பொதுவகையில் கொண்டிருக்கும் ஆவணம். *பணிக்கு ஆள்தேர்வுசெய்தல் பற்றிய திட்டமுறைகள்* (*உறுப்*. 320(2), *இ.அ.*); Scheme.

திரள் தீர்ப்பு *பெயர்*

ஒரு வழக்கில் இரண்டு அல்லது மேற்பட்ட தனிவேறு குற்றச்செயல்களைப் பொறுத்து விதிக்கப்பெற்ற தனித்தனி இரண்டு தண்டனைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயற்படும் என்னும் தீர்ப்புரை; தொடரியல் தீர்ப்பு (*ச.சொ.*1979); Accumulative Judgement.

திரள் தீர்ப்புத்தண்டனை *பெயர்*

ஏற்கனவே ஒரு குற்றத்திற்காக முதல் தண்டனை வழங்கப்பெற்ற ஒரு வழக்கில், மற்றொரு குற்றத்திற்காக இரண்டாம் தண்டனையும் விதிக்கப்படுகிறது என்றால், இரண்டு தண்டனைகளும் ஒருசேர நிகழாமல், முதல் தண்டனை முடிந்த பின்பு இரண்டாம் தண்டனை தொடங்கும் எனத் தீர்ப்புரைக்கப்பட்ட தொடரியல் தண்டனை (*ச.சொ.*1979); Accumulative sentence.

திரள் நிதியம் *பெயர்*

அரசாங்கத்தினால் பெறப்பட்ட வருவாய்கள், கருவூல உறுதிமுறிகளின் வெளியீடு, பெறுகடன்கள் அல்லது வழிவகை முன்பணத்தொகை வாயிலாக அரசாங்கத்தால் திரட்டப்பட்ட பெறுகடன்கள், பெறுகடன்கள் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட பணங்கள் அனைத்தும் சேர்த்து வைக்கப்படும் நிதி அமைப்பு. *மாநிலத் திரள் நிதியத்தின் மீது சார்த்தப்பட்ட செலவினம்* (*உறுப்*.202(3), *இ.அ.*); Consolidated fund.

திரித்துக்கூறுகை *பெயர்*

ஓர் ஒப்பந்தத்தில் மற்றவரைச் சேர்க்கும் கருத்துடன் அதைச் செய்துகொள்ளும் முன்போ, செய்துகொள்ளும் நேரத்திலோ நிலவுகின்ற அல்லது நிலவிய ஓர் உண்மைவிவரம் பற்றிச் சொல்லும் பொய்க்கூற்று (*பி*.18, *இ.ஒ.ச.*); Misrepresentation.

திருட்டு *பெயர்*

கைக்கொள்ளும் கள்ள எண்ணத்துடன் மற்றவரின் உடைமையிலுள்ள அசையும் சொத்தை அவரது இசைவின்றிக் கவர்ந்து இடம்பெயரச்செய்வது (*பி*.378 *இ.த.தொ.ச*); Theft.

திருத்தப் பள்ளி *பெயர்*

குற்றச்சிறார்களைச் சீர்திருத்தும்பொருட்டு அமைத்த சிறைப்பள்ளி. *இளங்குற்றவாளிகள் சீர்திருத்த நிறுவனங்கள் (ச.சொ.1983)*; Reformatory School.

திருத்தமைவு *பெயர்*

* பிழையைச் சரிசெய்வது, குறைபாட்டைக் களைவது அல்லது முற்றுப்பெறாததை நிறைவு செய்வது (*பெர்னார்சிதாஸ் எதிர் டால்மியா சிமெண்டு* AIR 1959 Punj. 232); Rectification.

திருத்துகை *பெயர்*

நீதிமுறை நடவடிக்கைகளில் நிகழ்ந்த பிழையைச் சரியாக்குகை, விடுகையை நிறைவுசெய்கை அல்லது குறைபாட்டை நீக்குகை; திருத்தமைவு. *நாடாளுமன்றத்தின் ஈரவைகளாலும் உடன்பாடுகொள்ளப்பட்ட திருத்துகைகள் (உறுப்.107(1), இ.அ.)*; Amendment.

திருமணம் *பெயர்*

கணவன் மனைவி என்று சட்டப்படி செல்லுந்தன்மையுள்ள உறவை அமைத்துக் கொடுக்கும் வினைமுறை (=சடங்கு) அல்லது நடைமுறை. *திருமணமும் மணமுறிவும் (இ.ப.VII-III-5, இ.அ.)*; Marriage.

திறமுறை *பெயர்*

ஒன்றைச் செய்வதற்குரிய தகுநிலை அல்லது திறமை (*பி.466, இ.த.தொ.ச*); Capacity.

திருவிழாப்பொருட்காட்சி *பெயர்*

வேடிக்கை விளையாட்டுகளுடனோ இல்லாமலோ, சட்டத்தால் அல்லது மரபு வழக்கத்தினால்.. விதிக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் பொருளை வாங்குவோரும் விற்போரும் காலமுறையாகக் கூடும் இடம். (*பி.7, வி.கா.(அ), இ.சா.ச.*); Fair.

தீ

தீங்கான பொய்ம்மை *பெயர்*

ஒருவருக்கோ அவரது சொத்து அல்லது அலுவல்தொழிலுக்கோ ஊறு நேருமாறு வன்மத்துடன் கூறும் பொய்யுரை (*ச.சொ.1968*); Injurious falsehood.

தீங்குவிளை வெளியீடு *பெயர்*

ஒருவரின் நற்பெயருக்கும் நாணயத்திற்கும் ஊறு உண்டாக்கும் எழுத்துருச் செய்தியைப் பரப்புகை (*தலைப். இ. (தீ-வெ) ச.*) Harmful publication.

தீண்டாமை *பெயர்*

மனிதருள் இனம், பிறப்பு, குலம் காரணமாக வேற்றுமைபாராட்டும் சமுகக் குற்றம். *தீண்டாமை ஒழிக்கப்படுகிறது (உறுப்.17, இ.அ.)*; Untouchability.

தீய எண்ணம் *பெயர்*

நேர்மை, தகுந்த கவனம் அல்லது விழிப்பு இல்லாமல் ஒரு செயலைச் செய்யும் மனப்பாங்கு. *தீய எண்ணத்தில் எந்தச் செயலையும் அவர் செய்திருக்கவில்லை (பி. 55(3), உ.ந.தொ.ச.)*; Bad faith.

தீயநடத்தை *பெயர்*

* ஊழல், குற்ற உட்கருத்து ஆகியவற்றைத் தவிர்த்துப் பிறவாறுள்ள குற்றச்செயல், கடமைதவறுதல், தீயொழுக்கம், நடத்தைக்கேடு (*பகவத் பிரசாத் அதில் காவல்துறைத் தலைவரை*, AIR 1970 Punj. 81); Misconduct.

தீயநோக்கு *பெயர்*

வேண்டுமென்றே நேரிய காரணமின்றி முறைகேடான உள்நோக்கத்துடன் செய்யப்படும் செயல் (*உறுப்*.361*அ*.(1), இ.*அ*.); Malice.

தீர்நிறைவு *பெயர்*

1. சட்டப்படியான சரியீடு (*கட்*.24 *வி*.1 *உ.ந.தொ.ச*.)
2. கொடுக்கவேண்டிய கடனை அடைப்பது (*பி*.69*அ*(6), *சொ.மா.ச*.)
3. கடமைப்பொறுப்பை நிறைவேற்றுவது (*பி*.288(2), *கு.ந.தொ.ச*.); Satisfaction.

தீர்ப்பாணை *பெயர்*

உரிமைவழக்கில் சார்பினர்களின் முரண்படும் உரிமைகளைத் தீர்மானித்து நீதிமன்றம் வழங்கும் கட்டளை. *உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணைக்கு இந்த உறுப்பிலுள்ள எதுவும் பொருந்தாது* (*உறுப்*.348(2) *வரம்*. இ.*அ*.); Decree.

தீர்ப்பாணைபெறுநர் *பெயர்*

ஆதரவான அறுதித்தீர்ப்பு வழங்கப்பெற்றவர் அல்லது நிறைவேற்றத்தக்க ஆணையைப் பெற்றவர் (*பி*.2(3), *உ.ந.தொ.ச*.); Decree holder.

தீர்ப்பாயம் *பெயர்*

நீதித்துறைக்குப் புறத்தே, நீதிமுறை அல்லது நீதிமுறைபோன்ற அலுவற்பணியாற்றும் அதிகாரமுள்ள தனிஒருவர் அல்லது குழு. *உயர்நீதிமன்றம் தனது அதிகாரவரம்பிலுள்ள தீர்ப்பாயங்கள்மீது கண்காணிப்பு உடையது* (*உறுப்*.361 இ.*அ*.); Tribunal.

தீர்ப்பின் காரணவுரை *பெயர்*

* வழக்கில் நேரடியாகவும் ஊகமாகவும் உள்ள உண்மைவிவரத்தைக் கண்டறிந்து சட்டச் சிக்கல்களுக்குச் சட்ட நெறிமுறைகளைப் பொருத்தி நீதிபதி தமது தீர்ப்புரையில் தரும் விளக்கம் (*தல்பீர்சிங் எதிர் பஞ்சாப் அரசு* AIR 1979 SC 1384); Ratio decidendi.

தீர்ப்பின் புறவுரை *பெயர்*

தாம் ஆய்வு செய்யும் வழக்கிற்கு நேரடித் தொடர்பில்லாத பொருள்பற்றி நீதிபதி தமது தீர்ப்புரையில் கூறும் கருத்துரை (*ச.சொ*.1983); Obiter dictum.

தீர்ப்பு *பெயர்*

ஒரு வழக்கில் நீதிமன்றம் செய்யும் அறுதி முடிவு. *குற்றவியல் நடவடிக்கை ஒன்றில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு* (*உறுப்*.134(2), இ.*அ*.); Judgement.

தீர்ப்புக் கடனாளி *பெயர்*

கடனடைக்க வேண்டிய ஒரு தீர்ப்பாணை அல்லது நிறைவேற்றத்தக்க ஆணை எவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அவர் (*பி*.2(10), *உ.ந.தொ.ச*.); Judgement debtor.

தீர்ப்புத்தண்டனை *பெயர்*

குற்றவியல் அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றம் குற்றத்தீர்ப்பாளிக்கு விதிக்கும் பணத்தண்டம் அல்லது சிறைவைப்பு. *மாநில ஆளுநர்... தீர்ப்புத் தண்டனையை இடைநிறுத்திவைக்க... அதிகாரம் உடையவர் (உறுப்.*161 *இ.அ.*); Sentence.

தீர்ப்புத் திரட்டு *பெயர்*

உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் முன்னைத் தீர்ப்பு முறைமையைப் பின்னை வழக்குகளில் நீதிபதிகள் பின்பற்றும் பொருட்டு அவற்றை வெளியிடும் காலமுறை இதழ். *தீர்ப்புத்திரட்டு இதழ் சென்னை உயர்நீதிமன்றத்தின் வெளியீடு (ச.ஆ.சொ.க.)*; Law report.

தீர்ப்புவழிச் சட்டம் *பெயர்*

இயற்றப்பட்ட சட்டங்கள், பிற ஆதாரங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் விதிமுறைகளிலிருந்து தனிவேறுபட்டு நீதிபதிகளின் தீர்ப்புகளின் வழியே உருவாகும் விதிமுறை (*ச.சொ.*1983); Case law.

தீர்புரை *பெயர்*

பூசலைத் தீர்க்கும் பொருட்டு, நீதிப்பொதுவர், பொதுநடுவர், பணியாள் சரியீட்டு வாரியம் அல்லது கடலியல் ஆணையர் செய்யும் முடிபு அல்லது தீர்மானிப்பு. *ஒரு தீர்ப்பாணை போலச் செயலுறுத்தத்தக்க தீர்புரை (பி.*44,*அ, விளக்.*2 *உ.ந.தொ.ச.*); Award.

தீர்மானம் *பெயர்*

நீதி அல்லது அதிகார முறையில் செய்யப்படும் முடிவு. *உரிமை எதனையும் தீர்மானித்தல் (பி.*16*(ஈ), உ.ந.தொ.ச.*); Determination.

தீர்வழி *பெயர்*

உரிமை மீறலைத் தடுக்கவோ, நேர்ந்தத் துயரைத் துடைக்கவோ சரியீடு பெறவோ வகைசெய்யும் வழிமுறை. *உரிமைகளைச் செயலுறுத்துவதற்கான தீர்வழிகள் (உறுப்.* 32(1) *இ.அ.*); Remedy.

தீர்வளிப்பு *பெயர்*

வழக்கு எழுவதற்குக் காரணமான பொருளின் குறைநிறைகளை ஆராய்ந்து கூறப்படும் முடிவு; நீதிமுறைத்தீர்ப்பு. *ஒருவரின் உரிமையை முடிவுசெய்யும் நீதிமுறைத் தீர்வளிப்பானது தீர்ப்பாணை எனப் பொருள்படும் (பி.*2(2), *உ.ந.தொ.ச.*); Adjudication.

தீர்விணைவான *பெயரடை*

வாதப்பொருளின் தீர்வுக்கு உதவுகிற (*ச.சொ.*1983); Relevent.

தீர்விணைவில்லா *பெயரடை*

வழக்குப் பொருளில் உண்மையைக் கண்டறிவதில் தொடர்பில்லாத அல்லது உதவியாக இல்லாத (*ச.சொ.*1983); Irrelevant.

தீர்வுசெய்தல் *பெயர்*

வழக்கு, சொத்து முதலியவற்றில் செய்யப்படும் ஏற்பாடு. *மேல் முறையீடுகளை ஏற்றுக்கொண்டு தீர்வுசெய்தலுக்காக...* (*உறுப்.*374(4), *இ.அ.*); Disposal.

தீர்வுரை *பெயர்*

சான்றாயத்தினர் நீதிபதியிடம் வழக்கைப் பற்றிக் கூறும் கருத்துரை; ஆய்முடிவு (*ச.சொ.*1983); Verdict.

தீர்வை *பெயர்*

சரக்கு, வாணிகப்பண்டம் அல்லது ஆக்குபொருள் மீது விதிக்கப்படும் வரி. *சில வரிகள், தீர்வைகள் ஆகியவற்றின் தேறின அடைதொகை (உறுப்.266(1), இ.அ.)*; Duty.

தீர்வைச்சுமை *பெயர்*

இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி அல்லது தீர்வை.
* *சட்ட முரணான தீர்வைச்சுமை குடிமக்கள் உரிமையைப் பாதிக்கும் செயலாகும் (முகமது யாசின் எதிர் நகரக்குழு, ஜலால் பாக்* (1952) SCR 572); Impost.

தீருதவி *பெயர்*

நீதிமன்றத்தில் பரிகாரம் கோரிய தீங்குற்றோருக்குச் சட்டம் அளிக்கும் சரியீடு. *மகப்பேற்றுக் காலத் தீருதவி (உறுப்.42, இ.அ.)*; Relief.

தீவைப்பு *பெயர்*

வீடுகள், கட்டடங்கள், வைக்கோல்போர்கள், பிற சொத்துகள் முதலியவற்றை அழிப்பதற்காக வேண்டுமென்றே வன்மத்துடன் வைக்கப்படும் நெருப்பு (*பி.*59, *க.ச.*); Arson.

து

துணிபு *பெயர்*

நீதிய முறையில் கண்டறியப்பட்ட, மெய்ப்பிக்கப்பட்ட அல்லது உண்மையென ஏற்கப்பட்ட ஒரு பொருளியத்திலிருந்து தோன்றும் மற்றொரு பொருளியம் பற்றிக் கொள்ளும் முடிவு, கொள்துணிபு (*ச.சொ.*1983); Presumption.

துணைத்தொழில் *பெயர்*

காண்க : தேர்தொழில்.

துணைவிதி *பெயர்*

சொத்தினை ஏற்புநிறுவனத்தை, நிறுமத்தை, கழகத்தை அல்லது உள்ளூர் அதிகாரஅமைப்பை ஒழுங்குமுறையோ, ஆட்சியமோ, மேலாண்மையோ செய்வதற்காகக் குறித்தசில அதிகாரஅமைப்புகளால் உருவாக்கப்படும் நெறிமுறை. *சட்டம் என்பது..., அவசரச் சட்டம், ஆணை, துணைவிதி, விதி, எதனையும் உள்ளடக்கும் (உறுப். 12(3), இ.அ.)*; By-law, bye-law.

துய்ப்புரிமை *பெயர்*

ஒரு சொத்தின் சொந்தக்காரரோ கையுடைமைக்காரரோ அதனைப் பயன்கொள்ளும் வகையில், தமக்குச் சொந்தம் இல்லாத மற்றொரு சொத்தில் ஒன்றைச் செய்வதற்கும் அதைத் தொடர்வதற்கும் அல்லது ஏதேனும் ஒன்று செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் தடுக்காமலிருப்பதற்கும் அவருக்குள்ள உரிமை; வசதியுரிமை.
* *ஓங்கு சொத்தின் நலமான துய்ப்புரிமைகளுக்காக அல்லாமல், கலப்பற்ற சொந்த நலனுக்காகச் சார்பினர் உரிமை கோருகிறார் என்றால், அதில் துய்ப்புரிமை எதுவும் இல்லை (ராம் நந்தன்சிங் எதிர் ராம்கிஷன்* AIR 1958 Pat 571); Easement.

துறைத் தலைவர் *பெயர்*

1. தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளின் முதன்மை அலுவலர்களாகிய அரசுச் செயலாளர்கள் ஒவ்வொருவரும்.

2. இந்திய அரசின் அல்லது மாநில அரசின் கீழ் இணைக்கப்பட்ட அலுவலகங்களின் தலைமை அலுவலர்கள் ஒவ்வொருவரும். (இந்திய ஒன்றியம் எதிர் சுதிர் குமார் ராய் AIR 1963 Ori. III); Head of Department.

தூ

தூதர் *பெயர்*

ஒரு நாட்டின் தலைவரால் மற்றொரு நாட்டுத் தலைவரிடம் அதிகாரச்சான்றிதழ் அளித்து அனுப்பப்படுபவரும், (உரிமையியல்) சிறைவைத்தல், உடைமை பறிமுதல்செய்தல் ஆகியவற்றிலிருந்து காப்பளிக்கப்படுபவருமாகிய நேர்முகச் சார்பாளர் (*து.து.அ.(ஆ.க.) ச.*) *அயல்நாட்டுத் தூதர்களுக்கு எதிரான வழக்குகள் (பி.83, உ.ந.தொ.ச.)*; Ambassador.

தூத(ர)கம் *பெயர்*

ஒரு நாட்டுத்தூதரின் அலுவலகம்; தூதகம் (*ச.சொ.*1983); Embassy.

தூதியல் *பெயர்*

நாடுகளுக்கு இடையே அமைதியான வழிவகை மூலம் அரசியல் அலுவல்களை நடத்தும் முறை (*ச.சொ.*1983); Diplomacy.

தூதுத் துணைவர் *பெயர்*

வெளியுறவுத் துறை அமைச்சரால் மற்றொரு நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சருக்கு உரிய நற்சான்றளித்து அனுப்பப்படும் தூதுவர் (*பி.*10(6) (ii) *வ.வ.ச.*); Charge de affairs.

தூய்மைநலம் *பெயர்*

தொற்று, நோய் முதலியவற்றிலிருந்து நீங்கி அல்லது அவற்றைத் தடுக்கும் ஆற்றலுடன் உடல்நலம் பேணும்நிலை. *பொது நலவாழ்வும் தூய்மைநலமும் (ப.VII-ii-6, இ.அ.)*; Sanitation.

தெ

தெய்வச் செயல் *பெயர்*

மனிதனால் முன்கூட்டி அறிந்துகொள்ளவோ தடுத்துநிறுத்தவோ இயலாத நிகழ்ச்சி (*பி.*73 (*அ*), *இ.இ.ச.*); Act of God.

தெரிந்தெடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பலவற்றிலிருந்து ஒன்றை விருப்பத்துடன் கொள்ளுதல். *மாநிலங்கள் அவை அந்த அவையின் உறுப்பினர் ஒருவரைத் துணைத் தலைவராகத் தெரிந்தெடுத்தல் வேண்டும் (உறுப்.89, இ.அ.)*; To choose.

தெரிவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மற்றொன்றை அல்லது மற்றவரைவிட முன்னுரிமை அடிப்படையில் ஒன்றையோ ஒருவரையோ கொள்ளுதல். *ஆணைய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய முறையை நாடாளுமன்றம் தீர்மானிக்கலாம் (உறுப்.280(2), இ.அ.)*; To select.

தெளிதேற்றங்கொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

குழப்பமான ஒரு சூழ்நிலையில், ஒன்றைப் பற்றிய உண்மை நிலையை ஐயந்திரிபற அறிந்துகொள்ளல். *அரசமைப்பின்படி ஒரு மாநில அரசாங்கத்தை நடத்த இயலாத நிலைமை எழுந்திருக்கிறது எனக் குடியரசுத்தலைவர் தெளிதேற்றங்கொள்கிறார் என்றால் சாற்றாணை பிறப்பிக்கலாம்* (*உறுப்*.356(1), இ.*அ*.); To satisfy.

தெளிவுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சிக்கலோ ஐயப்பாடோ உள்ள ஒன்றை விளக்கிப் புரியவைத்தல். *அந்த அறிக்கை அரசின் கொள்கையைத் தெளிவுறுத்தியது* (*ச.ஆ.சொ.க.*); Clarification.

தே

தேடுகைக் கட்டளை *பெயர்*

குறிப்பிட்ட கட்டடத்தில் நுழைந்து, குறிப்பிட்ட பொருளையோ ஆவணத்தையோ கைப்பற்றுமாறு நீதிநடுவர் பெயர்குறித்து ஒருவருக்கு இடும் பணிப்புரை, *சோதனைக் கட்டளை எப்போது பிறப்பிக்கப்படலாம்* (*பி*.93, (ஆ) *கு.ந.தொ.ச.*); Search warrant.

தேர்தல் *பெயர்*

அரசியல் பதவிக்கோ பிற நிலைகளுக்கோ வகுத்துரைத்த விதிகளின்படி தாம் விரும்பும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான அமைப்புமுறை. *மக்கள் பேரவைக்கான பொதுத் தேர்தல்* (*உறுப்*.87, இ.*அ*.); Election.

தேர்தல் உரிமை *பெயர்*

தேர்தலில் வேட்பாளராக நிற்க, நிற்காமலிருக்க அல்லது வேட்பாளர் நிலையிலிருந்து பின்வாங்க, வாக்களிக்க அல்லது வாக்களிக்காதிருக்க ஒருவருக்குள்ள உரிமை (*பி*.39(1), *ம.சா.ச*. 1951); Electoral right.

தேர்தல்தொகுதி *பெயர்*

நாடாளுமன்றத்தின் அல்லது சட்டமன்றத்தின் தேர்தல்களுக்காக வரம்புகோலப்பட்ட வட்டாரம் (= பரப்பிடப்பகுதி) (*ச.சொ*.1983); Constituency.

தேர்தல் மனு *பெயர்*

வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தது செல்லுந்தன்மையதா என்பதை உசாவுகைசெய்யக் கோரும் விண்ணப்பம் (*பி*.83(1) *ம.சா.ச* 1951); Election petition.

தேர்தொழில் *பெயர்*

பிழைப்புக்கான வாழ்க்கைத்தொழில் ஒன்று முதன்மையாக இருக்கவும் ஆதாயம் கருதிச் செய்யப்படும் சிறுதிற வேலை. *குடிமக்கள் அவர்களுடைய வயதுக்கோ வலிமைக்கோ பொருந்தாத தேர்தொழில்களை மேற்கொள்ளும்படி வற்புறுத்தப்படவில்லை என அரசு உறுதிசெய்யவேண்டும்* (*உறுப்*.39 (ஊ), இ.*அ*.); Avocation.

தேர்ந்துகொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டம் வகுத்துரைத்தபடி சட்டமன்றம், நகராட்சி அல்லது வேறு அதிகாரஅமைப்புக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல். *தணிக்கைத் துறைத்தலைவர் பிறவாறாக விரும்பித் தேர்ந்துகொண்டிருக்கிறார் என்றாலன்றி, ஓய்வூதியத்திற்கு உரிமைப்பாடு உடையவர்* (*உறுப்*.377, இ.*அ*.); To elect.

தேர்ந்துகொளல் *பெயர்*

விரும்பும் ஒன்றைத் தன்விருப்பாகச் செய்வதற்கோ செய்யாமல் இருப்பதற்கோ ஒருவரது சொந்த முடிவுக்கே விட்டுவிடுதல் (*பி*.35, *சொ.மா.ச.*); Election.

தேர்ந்தெடுத்தல் *பெயர்*

ஒரு மனிதர், தாம் விரும்புகிற ஒன்றையோ, மற்றொன்றையோ கொள்ள அல்லது செய்யத் தமது சொந்த விருப்பத்திற்கு விடப்படுதல்.

* *தேர்தல் முடிவுக்குப் பின்னரே சார்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல் மறுத்துரைக்கப்படக்கூடும் என்பதால், தேர்தல் நடைமுறையின்போது நீதிமன்றத்தின் தலையீடு இசைவளிக்கத்தக்கதாக இல்லை (தோபாய் சுலாலாய் யாதவ் எதிர் இந்திரா நேரு காந்தி* AIR 1979 Raj. 130); Election.

தேர்வுக் குழு *பெயர்*

ஒரு பொருட்பாட்டை ஆராய்ந்து அறிக்கை கொடுப்பதற்காகச் சட்டமன்றத்தாலோ நாடாளுமன்றத்தாலோ அமர்த்தப்படும் உறுப்பினர் குழு (*ச.சொ*.1983); Select Committee.

தேவைப் பெயரவர் *பெயர்*

பணமாற்றுச்சீட்டிலோ மேற்குறிப்பிலோ எழுதப்பெற்றுள்ளவரின் பெயருக்கும் கூடுதலாக, தேவைப்பட்டால் பயன்படுத்திக்கொள்ளுவதற்காகப் பெயர் எழுதப்பெற்றுள்ள மற்றொருவர் (*பி*.7, *மா.மு.ச*); Drawee in the case of need.

தேவையான மாறுதலுடன் *வினையடை*

விவரக் கூறுகளில் வேண்டப்படும் திருத்தங்களுடன் (*பி*.39, *ப.ச.*); Mutatis mutantis.

தொ

தொகையளிப்பு *பெயர்*

ஒப்புக்கொண்டபடி செலுத்தப்படும் பணப் பங்களிப்பு (= சந்தா). *வருங்கால வைப்புநிதியத்திற்கான தொகையளிப்பு* (*உறுப்*.366, (17) *இ.அ.*); Subscription.

தொகையளிப்புச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிறுமப் பங்கு, சங்கம், நிதியம், செய்தியிதழ் முதலியவற்றுக்கு ஒருவர் பணம் செலுத்த ஒப்புக்கொள்ளுதல் (*ச.சொ*.1979); To subscribe.

தொடர்அமர்வு *பெயர்*

ஓர் அலுவல்தொழிலை முடிப்பதற்காகத் தொடர்ந்து நடத்தப்படும் நாடாளுமன்றத்தின் அல்லது சட்டமன்றத்தின் கூட்டம். *மக்கள் பேரவை தொடர்அமர்வில் இல்லாதபோது.. செலவினத்திற்கு அதிகாரமளிக்கக் குடிஆயரசுத் தலைவருக்குத் தகுதிறம் உண்டு* (*உறுப்*.357, *இ.அ.*); Session.

தொடர்பு வாயில் *பெயர்*

ஒருவர் அறிந்ததையோ செய்திகளையோ மற்றவருக்குத் தெரிவிக்க அல்லது பரிமாறிக்கொள்ள உதவும் அமைப்பு. *கடல், தரை மற்றும் வான்படைப் பணிகளைப் பொறுத்தவரையில் தன் அலுவற்பணிகளின் ஒரு பகுதியாகத் தொடர்பு வாயில்களைக் கட்டுமானம் செய்வதற்கு* (*உறுப்*.257(2), *இ.அ.*); Means of communication.

தொடர்புறுகிற *பெயரடை*

முன்னதாகவே கருதுகை செய்த வேறொரு நுதல்பொருளையும் சுட்டுகிற.
* *தொடர்புகிற என்னும் சொல்லமைப்பு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சுட்டிக்குறிக்கும் ஓர் உட்பொருளைக் கொண்டிருக்கிறது (டாய்பக் அமைப்பு எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1988 SC 782); Pertaining to.

தொடர்வரு பணத்தொகை *பெயர்*

அடிக்கடியோ காலமுறையாகவோ வைப்பீடுசெய்யப்படும் பணம்; முறைவரு தொகை. *அந்த மாநிலத்தின் வருவாய்க்கு உதவி மானியங்களாக இடுமுதலும் தொடர்வரு பணத்தொகைகளும் இந்தியத் திரள்நிதியத்தினின்றும் கொடுக்கப்படவேண்டும் (உறுப்.*275 (1), *வரம். இ.அ.*); Recurring sum.

தொல்பொருள் அமைவிடம் *பெயர்*

பண்டைக்காலக் கலை இலக்கியம் பண்பாடு வரலாறு ஆகியவற்றின் நினைவுச் சின்னங்கள் நிலைகொண்டுள்ள பகுதி (இ.*ப*.VII-I-67); Archaeological site.

தொல்லாவணம் *பெயர்*

முறையான காப்படைவும் முப்பதாண்டுப் பழமையும் கொண்டு நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்படுவதும், அதிலுள்ள கையெழுத்து, கையொப்பம், சான்றொப்பம் ஆகியவை மெய்யானவை என நீதிமன்றத்தால் துணியப்படுவதுமான ஆவணம் (*ச.சொ*.1983); Ancient document.

தொல்லை *பெயர்*

ஒரு பொருளின் பயனையோ துய்மானத்தையோ நுகரும் ஒருவரின் உரிமையில் மற்றவர் குறுக்கிட்டு விளைவிக்கும் இடையூறு. *ஒரு பொதுத் தொல்லை மன்னிக்கப்பட மாட்டாது* (*பி*.268, இ.*த.தொ.ச*.); Nuisance.

தொல்லொளி *பெயர்*

இருபது ஆண்டு அளவாகிய நீள்நுகருரிமைக் காலம் முழுவதும் எவ்வகை இடையூறுமின்றி, ஓர் உரிமை என்னும் முறையில் அமைதியாகப் பயன்கொண்டிருப்பதும், தனக்குச் சொந்தமல்லாத மற்றொருவரின் கட்டடத்திலுள்ள துளை வழியே வருவதுமான வெளிச்சம் (*ச.சொ*.1979); Ancient light.

தொல் வழக்காறு *பெயர்*

நினைவுக்கு எட்டாத காலம் முதற்கொண்டு நிலவிவரும் நடைமுறைப் பழக்கம் (*ச.சொ*.1979); Immemorial usage.

தொழில்முறை நடத்தைக்கேடு *பெயர்*

ஒருவர் தமது தொழிலாற்றுகையின்போது அத்தொழிலுக்கு இழிவை ஏற்படுத்துவதான அல்லது அதன் மதிப்பைக் குறைப்பதான செயல் எதையும் செய்திருக்கிறார் என்று புகழும் தகுதிறமும் உள்ள உடன் - தொழிலாற்றுபவர்களால் சுட்டிக்காட்டப்படும் முறைகேடான நடத்தை.
* *அந்த வழக்குரைஞர் தொழில்முறை நடத்தைக்கேடு என்னும் குற்றம் புரிந்திருக்கிறார் எனச் சொல்வது, வழக்குரைஞர் ஆயத்தின் அல்லது தீர்ப்பாயத்தின் விழைவுக்குட்பட்டதாகும்* (வழக்குரைஞர் P. வழக்கு AIR 1963 SC 1313); Professional misconduct.

தொழிலாற்றுநர் *பெயர்*

விருப்பமான பணியை வாழ்க்கைத்தொழிலாகக் கொள்பவர். *சட்டத் தொழிலாற்றுநர் (உறுப்.*22(1), *இ.அ.*); Practitioner.

தொழிற்பூசல் *பெயர்*

* வேலைதருபவர், வேலைபெறுபவர் ஆகியவர்களுக்கிடையே வேலைபொறுத்து உருவாகும் முரண்பாட்டையும் அதனால் கிடைக்கத்தக்க நீதிமுறைத் தீர்வையும் உள்ளடக்கிய பொருட்பாடு. (= தொழில் தகராறு). (*இந்துஸ்தான் லீவர் தொழிலாளர்கள் எதிர் இந்துஸ்தான் லீவர் நிறுமம்* AIR 1984 SC 1683).

* *தொழிற்பூசல் தனிமுறைப் பூசல் அன்று என்று கொள்ளப்பட்டபோதிலும் தொழிலாளர் சங்கமோ, குழுவாகப் பலரோ கொண்டுவரும் தனிமுறைப்பூசலும் தொழிற்பூசல் வீச்செல்லைக்குள் அடக்கப்படுகிறது (பக்கிங்காம் - கர்னாடிக் ஆலை எதிர் ப-க. பணியாளர் சங்கம்* AIR 1960 Mad. 106); Industrial dispute.

தோ

தோண்டியெடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிலத்துக்கு அடியில் மிக ஆழமான இடத்தில் உள்ள பொருள்களை வெடிவைத்துத் தகர்த்தோ சுரங்கம் வெட்டியோ ஆழ்துளையிட்டோ வெளிக்கொணர்தல். *கனிமம் அல்லது கனிம எண்ணெய் எதையும் தேடுவதற்கான அல்லது தோண்டியெடுப்பதற்கான உடன்பாடு (உறுப்.*31 *அ* (1) (*உ*), *இ.அ.*); To win.

தோன்றுதல் *பெயர்*

காண்க : முன்னிலையாதல்.

ந

நகரம் *பெயர்*

* வீடுகள் நெருக்கமாக இருத்தல், சிறிய பரப்பிடத்தில் பெரும் எண்ணிக்கையில் குவிந்திருத்தல், மக்களுள் பெரும்பகுதியினர் வேளாண்மை சாராத தொழில்களில் ஈடுபட்டிருத்தல் ஆகிய இயல்புகளைக் கொண்டிருக்கும் ஓர் இடம் (*பிலெட் ஷேக் எதிர் மேற்கு வங்க அரசு* AIR 1952 Cal. 753); Town.

நகராட்சி *பெயர்*

நகரத்தை ஆளுகைசெய்யும் உள்ளாட்சி அமைப்பு. *நகராட்சி... உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் வாக்காளர் தொகுதி (உறுப்.*171(3) (*அ*), *இ.அ.*); Municipality.

நடப்பு மூலதனம் *பெயர்*

வழக்கமாக நடைபெறும் தொழிலுக்குரிய மூலப்பொருள் வாங்குதல், வேலையாட்களின் பணியூதியம், வேலையுடன் தொடர்புடைய பிற செலவுகள் முதலியவற்றுக்காக ஒதுக்கிவைக்கப்படும் தொகை (*பி.*21 (*ஐ*) *தொ.நி.க.ச.*); Working Capital.

நடவடிக்கை *பெயர்*

1. சட்ட நடைமுறை.

* *பொதுவகையில், நடவடிக்கை என்னும் சொல், நீதிமன்றத்தின் அல்லது நீதிய அலுவலரின் முன்பு நடத்தப்படும் நீதிய அலுவல்தொழிலின் அமைப்பும் முறையும் என்று பொருள்படும் (என்.சி.தாஸ் எதிர் சின்மயி* AIR 1982 MP 120); Proceeding.

2. நீதிமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யப்படும் செயல்.

* *நீதிமன்றத்திலோ முறைப்படி தீர்வு செய்யும் அதிகாரஅமைப்பு முன்போ மேற்கொள்ளப்படும் உரிமை வழக்கின், மேல்முறையீட்டின் அல்லது வேறு ஏதேனும் செயலின் ஒரு பகுதியையும்கூட உள்ளடக்கும் செயல் (குலாம் முகமது எதிர் ஹாசன் ஆர்ம்* 1979 Kash. LJ. 354); Proceeding.

3. சட்ட நடவடிக்கைச் சார்பினர்களால் மேற்கொள்ளப்படும் செயற்படி; குறிப்பிட்ட ஒரு செயல் அல்லது தொடர்ந்த செயல்.

* *சட்டப்படியமைந்த ஓர் உரிமையை வலியுறுத்துவதற்காக வகுத்துரைக்கப்பட்ட செயற்போக்கு (பாபுலால் எதிர் ஹசாரிலால்* AIR 1982 SC 818); Proceeding.

நடுவுநிலைமை *பெயர்*

ஒரு சார்பினரைவிட மற்றொரு சார்பினருக்கு மிகுதியான பரிவுகாட்டாமை. *சான்றுரைஞரின் நடுவுநிலைமையைத் தாக்கமுனையும் வினா (பி.*153, *விளக்.* 2 *இ.சா.ச.*); Impartiality.

நடைமுறை *பெயர்*

அலுவலை அல்லது வழக்கை நடத்துவதில் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு நெறி. *வருவாய் நீதிமன்றங்களின் நடைமுறை (இ.ப.*VII-II-3 *இ.அ.*); Procedure.

நடைமுறைச் சட்டம் *பெயர்*

பழக்கத்தில் கொள்ளப்படும் ஒழுங்கு நெறியும், அதைச் செயற்படுத்தும் முறையும் பற்றிய விதிமுறை (*ச.சொ.*1983); Adjective law.

நம்பகர் *பெயர்*

* பொறுப்புக்கட்டளையர் என்னும் பண்புநலத்தவராகவோ கடன்தருநருக்கு நம்பிக்கை அடிப்படையில் பொறுப்புறுதியராக அமைபவருக்கு ஒப்பான பண்புநலத்தவராகவோ உள்ள ஒருவர். (*வேலாயுதம் எதிர் இந்திய அரசு வங்கி* AIR 1989, Kar.38); Fiduciary.

நம்பிக்கை *பெயர்*

ஒன்றைப் பற்றிய உறுதியான மனநிலை; நம்புகொள்கை (*முகப். இ.அ.*); Belief.

நயப்பாடு *பெயர்*

சூழலுக்கு ஏற்ப நடக்கும் நாகரிகப் பாங்கு; நடத்தைநயம். *அயல்நாட்டரசுகளுடன் நட்புறவு... நயப்பாடு (உறுப்.*19(2), *இ.அ.*); Decency.

நல்லெண்ணம் *பெயர்*

உரிய எச்சரிக்கையும் கவனமும் கொண்டு ஒரு செயலைச் செய்ததாகக் கருதும் மனநிலை (*பி.*52, *இ.த.தொ.ச*); Good faith.

நல்வாழ்வு *பெயர்*

நலமாகவும் வளமாகவும் அமையும் வாழ்க்கைத் தரம். *சமுதாய நல்வாழ்வு (உறுப்.*25(2) (*ஆ*), *இ.அ.*); Welfare.

நலவாழ்வு *பெயர்*

நோய்நொடி இல்லாத உடல்நிலை. *பொது நலவாழ்வை மேம்படுத்துவதற்கான அரசின் கடமை (உறுப்.*47, *இ.அ.*); Health.

நலன் *பெயர்*

நிகழ்காலத்திலோ எதிர்காலத்திலோ ஒரு பொருள் குறித்த உரிமைகள், நன்மைகள், கடமைகள், கடப்பாடுகள் முதலியவற்றில் ஒருவர் கொண்டிருக்கும் அக்கறை. *பொதுமக்களின் நலன் பொருட்டு உரிமைகளில் எதையும் செலுத்துதல் (உறுப்.*19(5), *இ.அ.*); Interest.

நலிந்த பிரிவினர் *பெயர்*

அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்காக அல்லற்படும் வறியவர். ** சமுதாயத்தின் நலிந்த பிரிவினரை இனங்கண்டறியும் வழிமுறைகளை வகுத்துரைக்கும் பொறுப்பு மாநில அரசிடம் விடப்படவேண்டும் (சாந்திசார் பில்டர்ஸ் எதிர் நாராயண் கிமாலால்* AIR 1990 SC 635); Weaker section.

நற்பெயருக்காக ஏற்குநர் *பெயர்*

எழுதப்பெறுநர் ஏற்க மறுக்கும் பணமாற்றுச்சீட்டை, எழுதுநரின் அல்லது மேற்குறிப்பாளரின் நாணயங் கருதி ஏற்றுக்கொள்பவர் (*பி.*7, *மா.மு.ச.*); Acceptor for honour.

நன்னடத்தை மேற்காணிப்பு *பெயர்*

குற்றத்தின் இயல்பையும் குற்றம்புரிந்த சூழலையையும் குற்றச்செயலரின் பண்புநலனையும் கருத்திற்கொண்டு, தண்டனை விதிப்பதற்கு மாற்றாக, நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் குறிப்பிட்ட காலத்திற்குக் குற்றவாளி இருக்கவேண்டும் என நீதிமன்றம் இடும் கட்டளை. *நன்னடத்தை மேற்காணிப்பின் மீது அக்குற்றவாளி விடுவிக்கப்பட வேண்டும் (பி.*360, *கு.ந.தொ.ச.*); Probation of good conduct.

நாட் குறிப்பேடு *பெயர்*

அன்றாடம் நடைபெறும் வாணிக நடவடிக்கைகள் அனைத்தையும் எழுதி வைக்கப்பெறும் சுவடி. (*ச.சொ.*1983); Day book.

நாட்டிடை நயனுடைமை *பெயர்*

பன்னாட்டுச் சட்டத்தின் பகுதியாக அமையாத போதிலும் இறையாண்மை நாடுகள் வசதிநலனையும் நடத்தைநயத்தையும் கருதித் தமக்குள் கடைப்பிடித்துவரும் விதிகள் (*ச.சொ.*1983); Commity of nations.

நாட்டுரிமை *பெயர்*

குறிப்பிட்ட ஒரு நாட்டுக் குடிமகன் என்னும் உறுப்பினர்நிலை அல்லது ஒரு நாட்டுக்குச் சொந்தமாகவுள்ள உண்மை விவரம்; நாட்டுரிமை நலம் (= தேசியம்) (*ச.சொ.* 1979); Nationality.

நாடாளுமன்றம் *பெயர்*

இந்தியாவில் மைய அரசின் சட்டமன்றம். *நாடாளுமன்றத்தின் அமைப்பு (உறுப்.*79, *இ.அ.*); Parliament.

நாணயச்செலாவணி *பெயர்*

கனிம வார்ப்பு அல்லது தாள் வடிவில் ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள பணம். *நாணயச் செலாவணி, நாணயமடித்தல், சட்டமுறையான செலாவணி* (*இ.ப.*VII-I-36, *இ.அ.*); Currency.

நாணயமடித்தல் *பெயர்*

கனிம வார்ப்பு அல்லது தாள் அச்சு வழியே நாணயத்தையும் பணத் தாள்களையும் உருவாக்குகை (*இ.ப.*VII-I-36, *இ.அ.*); Coinage.

நாள்குறிக்காமல் ஒத்திவை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

* ஓர் அலுவல்தொழில் முடிவுறாதநிலையில் அவைக்கூட்டத்தையோ நீதிமன்ற நடவடிக்கையையோ தேதி குறிப்பிடாமல் வேறு தேதிக்குத் தள்ளிவைத்தல் (*மேனகாபாலா எதிர் ஹீரலால்* AIR 1933 cal. 816); Adjouring sine die.

நி

நிகழ்தகுநிலை *பெயர்*

ஒரு பொருளோ நிலைமையோ இல்லை என்பதைவிட அது உளது என்பதற்கான சான்றுகள் மிகுதியாகவுள்ள சூழல்; நிகழ்தற்குரியது. *அவர் வாராதிருப்பது நிகழ்தகுநிலை ஆகும் (கட்.25 வி 1(2) உ.ந.தொ.ச.)*; Probability.

நிகழ்வடைவான *பெயரடை*

(சொத்துரிமை, நலன், உரிமை அல்லது பொறுப்பைப் பொறுத்து உருவாகும்) உறுதியில்லாத எதிர்மை நிகழ்ச்சி சார்ந்த (*ச.சொ.*1983); Contingent.

நிகழ் வழக்கு *பெயர்*

(ஒரு வழக்கின் இடையில் ஒரு சார்பினர் எதிர்ச் சார்பினருக்கு ஊறுநேரும் வகையில், சொத்துரிமையை மாற்றல்செய்ய முடியாதது என்னும் கோட்பாட்டின் அடிப்படையில்) நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை (*பி.*52, *சொ.மா.ச.*); Lis pendens.

நிகழ்வுசார் ஒப்பந்தம் *பெயர்*

ஓர் ஒப்பந்தத்துக்குப் பக்கச்சார்பான ஒரு நிகழ்ச்சி நிகழ்வதையோ நிகழாமலிருப்பதையோ பொறுத்து ஒன்றைச் செய்வது அல்லது செய்யாமலிருப்பது என்னும் உடன்பாடு, வருநிகழ்வு சார்ந்த ஒப்பந்தம் (*பி.*31 இ.*ஒ.ச.*); Contingent Contract.

நிகழ்வுநிலை *பெயரடை*

சட்ட உரிமை அல்லது உரிமையம் பற்றி வினா எதுவும் எழாதநிலையில், உண்மை நிலவரமாக உள்ள (*பி.*11 இ.இ.*கா.ச.*); Defacto.

நிகழ்வுநிலைக்காப்பாளர் *பெயர்*

* இயற்கையாகவோ, விருப்பாவணம் அல்லது நீதிமன்றத் தீர்ப்பு வழியாகவோ அமைந்ததாக இல்லாமல், இளவர் மீது அக்கறைகொண்டு அவரது சொத்தை மேலாண்மை செய்யும் ஒரு புதியவர் (*பழனிக்கவுண்டன் எதிர் வஞ்சியக்காள்* AIR 1956 Mad. 476); Defacto guardian.

நிதி *பெயர்*

அரசின் அல்லது நிறுமத்தின் செல்வ வளஆதாரம். *நிதிப் பொருட்பாடுகளில் நடைமுறை* (*உறுப்.* 264, இ.*அ.*); Finance.

நிதியம் *பெயர்*

குறித்த ஒரு நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள பங்கு அல்லது பணத்தொகை. *இந்தியாவின் திரள் நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினம்* (*உறுப்.* 137, இ.*அ.*); Fund.

நிருவாகம் *பெயர்*

காண்க : **செயலாட்சியம்.**

நிலக்கிழார் *பெயர்*

நிலத்தையோ மனையிடத்தையோ குடியாளருக்குக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடும் நிலவுரிமையாளர் (இ.*ப*.VII-I-18, இ.*அ*.); Land lord.

நிலக்குடிவாரம் *பெயர்*

குத்தகை வகையில் நிலத்தையோ மனையையோ கையுடைமை கொண்டிருப்பது. *நிலக்குடிவாரத் தீர்வுமுறையின் கீழ்க் கைக்கொண்டுள்ள நிலம்* (*உறுப்*.31 *அ*.(2) (ii) இ.*அ*.); Tenancy.

நிலக்குடிவாரர் *பெயர்*

குத்தகை உடன்பாட்டின்படி நிலத்தின் பயனைத் துய்ப்பவர், குடியானவர். *பயிரிடும் நிலக்குடிவாரர்கள்* (இ.*ப*. IX *எண்*.42 இ.*அ*.); Tenant.

நிலச்சேர்மானம் *பெயர்*

வெள்ளப் பெருக்கு, ஆறு திசைமாறுதல் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளினால், மண் வளம் கூடிச் சேர்ந்த சொத்தின் மிகுதி; நிலச்சேர்வு (*ச*.*சொ*.1983); Accretion.

நிலப் பிடிமானம் *பெயர்*

நிலத்தை அல்லது நிலச் சொத்துரிமையைக் கைக்கொண்டிருக்கும் முறை, அமைப்பு, செய்கை அல்லது உண்மைவிவரம். *நிலப்பிடிமானம் தொடர்பாக உள்ள சட்டம்* (*உறுப்*.31 *அ* (*உ*.*அ*.), இ.*அ*.); Land tenure.

நிலம் *பெயர்*

புல்வெளி, மேய்ச்சல்நிலம், காடு, நீர்நிலை, சதுப்புநிலம் முதலாய நிலப்பரப்பு, தரை அல்லது தளம்; வீடு, கட்டடங்கள் (*பி*.3 (*அ*), *நி*.*கை*.*ச*.); Land.

நிலம் கையகப்படுத்துகை *பெயர்*

பொது(ம) நோக்கத்திற்காக அரசு சட்டத்தின்மூலம் நிலத்தைக் கட்டாயமாக எடுத்துக் கொள்வது (*பி*.72(3) *சொ*.*மா*.*ச*.); Acquisition of land.

நிலவர விலை *பெயர்*

* வாங்குநர், விற்குநர் ஆகிய இருவரும் வாங்கவோ விற்கவோ விரும்பும் விலை அல்லது திறந்தவெளிச் சந்தையில் ஒரு பொருளை விற்றால் பெறக்கூடியது என எதிர்பார்க்கப்படும் தொகை; சந்தை மதிப்பு (*காலின்ஸ் எதிர் ஊரக மாவட்ட மன்றம்* (1937)4, All ER 189); Market value.

நிலவிவரும் *பெயரடை*

உளதாகிற, இப்போதிருந்துவருகிற. *நிலவிவரும் சட்டம்* (*உறுப்*.334, இ.*அ*.); Existing.

நிலுவைக் கணக்கு *பெயர்*

கடன்தந்தவர் கடன்வாங்கியவருக்குப் பற்றுவரவு விவரத்தைக் காட்டி மீதித் தொகையைக் கேட்பதும், இது பற்றிப் பூசல் ஏற்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டால் கணக்கின் சரியானதன்மை குறித்து நீதிமன்றத்தை மனநிறைவுகொள்ளச்செய்வதுமான பற்று வரவு விவரம் (*ச*.*சொ*.1983); Account rendered.

நிலுவைநிற்கிற *பெயரடை*

கடன் அடைக்கப்படாத நிலையிலுள்ள. *நிலுவைநிற்கிற பெறுகடனின் பகுதி எதுவும்* (*உறுப்*.293(8), இ.*அ*.); Outstanding.

நிலை ஆணை. *பெயர்*
நிலையாகவோ குறித்துரைக்கப்பட்ட மாற்றம் அல்லது அறவுசெய்யப்படும் வரையிலோ செல்லாற்றலிலுள்ள அறிவுறுத்தம் அல்லது வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை. *நடைமுறையை முறைப்படுத்தும் விதிகளுக்கும் நிலை ஆணைகளுக்கும் உட்பட்டுப்... பேச்சுரிமை இருத்தல் வேண்டும்* (*உறுப்*.105(1), இ.*அ*.); Standing order.

நிலைக்கட்டளை *பெயர்*
அறம், சமயம் சார்ந்த நோக்கங்களுக்காகச் சொத்தைக் கொடையாக அளித்து நிறுவப்பெறும் பொறுப்பமைப்பு. *சமயக்கல்வி வழங்கப்படவேண்டும் என வேண்டுறுத்துகிற நிலைக்கட்டளை* (*உறுப்*.28(2), இ.*அ*.); Endowment.

நிலைக்கால உறுத்துக்கட்டளை *பெயர்*
நிறைவேற்றுவதற்கான காலவரம்பு எதுவும் இல்லாமல் ஒரு தீர்ப்பின் பகுதியாக வழங்கப்படும் நீதிமன்ற ஆணை (*பி*.36, *கு.தீ.ச*.); Perpetual injunction.

நிலையகம் *பெயர்*
வெளியிடத்தில் இருந்தாலும் தமது இருப்பிடத்திற்கு வரவேண்டும் என்னும் எண்ணத்துடன் ஒருவர் நிலையாகத் தங்கி வாழுமிடம். *இந்திய ஆட்சிப் பரப்பில் நிலையகம் உடையவர்* (*உறுப்*.5, இ.*அ*.); Domicile.

நிலையியல் சொத்து *பெயர்*
காண்க : அசையாச் சொத்து.

நிலையுறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
அறுதிப்பாடு செய்தல், நிருணயித்தல். *சட்டத்தால் நிலையுறுத்தப்படலாகும் வரையூதியங்களும் படித்தொகைகளும்* (*உறுப்*.11/86, இ.*அ*.); To fix.

நிலையுறுமானக்கேடு *பெயர்*
காண்க : வரைமொழியுறு.

நிற்க ஓர்இடம் *பெயர்*
வழக்கை எடுத்துரைப்பதற்கான ஓர் உரிமை; வழக்குரை உரிமை (*ச.சொ*.1983); Locus standi

நிறுத்திவைப்பு *பெயர்*
நீதிமன்ற நடைமுறையையோ, ஆணையின் அல்லது நீதிக்கட்டளையின் நிறைவேற்றத்தையோ செயற்படுத்தாது தள்ளிவைப்பது. *நடவடிக்கைகளை நிறுத்திவைப்புக் குறித்த விதிகள்* (*உறுப்*.145(*ஏ*), இ.*அ*.); Stay.

நிறுமஒன்றிப்பு *பெயர்*
பல்வேறு வாணிக நிறுவனங்களை இணைத்து ஒன்றாக்குகை (*உறுப்*.31 *அ* (1) இ.*அ*.); Amalgamation.

நிறுமம் *பெயர்*
வாணிகமோ அலுவல்தொழிலோ நடத்தும் நோக்கத்திற்காக ஒன்று சேர்ந்ததாகவும், உறுப்பினர்களினின்றும் தனிவேறுபட்டுச் சட்ட ஆளுமை பெற்றதாகவும் உள்ள ஆட்களின் தொகுதி (*பி*.3 (ஐ) *நி.ச*.); Company.

நிறுவகம் *பெயர்*

* கூட்டுத்தொழிலில் துணிவுமுயற்சியை மேற்கொள்ளுவதற்காகத் தனிப்பட்ட பலர் ஒன்று சேர்ந்து அமைக்கும் நிறுவனம் (*மருதவாணன் எதிர் பாலசுப்பிரமணியம்* AIR 1963 Mad. 292); Firm.

நிறைவுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆவணம் ஒன்றை முறைப்படி எழுதிக் கையொப்பமும் முத்திரையும் இட்டு முற்றுவித்தல் (*உறுப்*.363, இ.*அ*.); To execute; enter into.

நிறைவேற்றுக் காலத்தாழ்வு *பெயர்*

சிறு ஓய்வுபெறுவதற்காகக் கடும் உழைப்பு, துன்பம் அல்லது தண்டனைக் காலத்தைத் தள்ளிவைத்தல். *மாநில ஆளுநர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவரின் தண்டனைக்கான குற்றமன்னிப்புகள்... நிறைவேற்றுக்காலத்தாழ்வுகள் அளிக்க அதிகாரம் உள்ளவர்* (*உறுப்*.161, இ.*அ*.); Respite.

நிறைவேற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. சட்ட முறைப்படி நடைமுறைப்படுத்துதல். *அ, ஆ ஆகிய நான் ஆளுநர் பதவிப் பொறுப்பைப் பற்றார்வத்தோடு நிறைவேற்றுவேன்* (*உறுப்*.159, இ.*அ*.); To execute.
2. இறப்புத் தண்டனையை நிறைவேற்றுதல் (*ச.சொ*.1979); To execute.

நிறைவேற்றுநர் *பெயர்*

விருப்பாவணத்தின் வாசகங்களையும் வரைக்கட்டுகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக விருப்பாவணரால் அமர்த்தப்பட்டவர். *'அ' என்பவர் 'இ' என்பவரை நிறைவேற்றுநராகப் பெயர் சுட்டி அமர்த்துகிறார்* (*கட்*.8 *வி*. 6(3) (*வி.கா*.) (*அ*), *உ.ந.தொ.ச*.); Executor.

நினையாநிகழ்வு *பெயர்டை < நினையா நிகழ்வான*

எதிர்காலத்தில் நடைபெறும் அல்லது நடைபெறாது என்று உறுதிசெய்ய இயலாத ஒன்றைச் சார்ந்த. *இப் பகுதிப்பிரிவில் வகைசெய்யப்பட்டிராத நினையாநிகழ்வு எதிலும்* (*உறுப்*.160, இ.*அ*.); Contingent.

நீ

நீக்கறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு சட்டத்தையோ அதன் பகுதியையோ மற்றொரு சட்டத்தால் ஒழித்தல்; நீத்தறவுசெய்தல். *இவ்வுறுப்பு... சட்டத்தின் 5ஆம் பிரிவினால் நீக்கறவு செய்யப்பட்டது* (*உறுப்*.2 *அ*. இ.*அ*.); To repeal (an Act).

நீதி *பெயர்*

சட்டப்படி நல்லதைப் போற்றிக் காக்கவும் அல்லதை ஒறுத்து நீக்கவும் உள்ள அறநெறி. *சமுதாய, பொருளியல் மற்றும் அரசியல் நீதி* (*முகப்*. இ.*அ*.); Justice.

நீதி ஆட்சியம் *பெயர்*

* உரிமைகளைப் பேணிப்போற்றுவதற்கும், தீங்குகளை ஒறுத்துக் களைவதற்கும் நீதிய அதிகாரங்களைச் செலுத்துகை (*ஹரிநகர் சர்க்கரை ஆலை எதிர் சியாம்சுந்தர்* AIR 1961. SC 1669); Administration of Justice.

நீதிஆயம் *பெயர்*

1. *காண்க* : நீதியர் ஆயம்.
2. நீதிபதிகளின் குழு (*ச.சொ.*1983); Bench.
3. நீதிமன்றத்தில் நீதிபதிகள் அமரும் இருக்கை; நீதிப்பீடம் (*ச.சொ.*1983); Bench.

நீதிக்கட்டளை முறைகேடு *பெயர்*

வழக்கின் ஒரு சார்பினர் நேர்மையற்ற முறையில் எதிர்ச்சார்பினரைவிட நன்மையடையும் பொருட்டு நீதிமன்றத்தின் ஆணையைத் தவறாகப் பயன்படுத்துகை; சட்ட நடவடிக்கை முறைகேடு. *நீதிக்கட்டளை முறைகேட்டைத் தடைசெய்வதற்கான... உள்ளுறை அதிகாரத்தை வரம்பிடாது* (*பி.*482, *கு.ந.தொ.ச.*); Abuse of Process.

நீதித்துறையம் *பெயர்*

நீதிபதிகள் அனைவரையும் ஒரு குழுவாகக் குறிப்பிடுகை. *நீதித்துறையத்தைப் பிரிக்க அரசு செயற்படிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்* (*உறுப்.*50, *இ.அ.*); Judiciary.

நீதிநடுவர் *பெயர்*

சட்ட ஆட்சியப் பொறுப்பும் குற்றவியல் அதிகாரவரம்பின் நீதிய அதிகாரமும் உடைய பொதும அலுவலர்; குற்றவியல் நடுவர் (*பி.*3(32), *பொ.வ.ச.*); Magistrate.

நீதிநடுவர் ஆயம் *பெயர்*

மாநில அரசு மாநிலத் தலைநகருக்கு வெளியே உள்ள இடங்களில் இரண்டு அல்லது மேற்பட்ட நீதிநடுவர்களைக் குழுவாக அமர்த்தி, அவர்களுக்குக் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின் 15ஆம் பிரிவிலுள்ள அதிகாரங்களில் எவற்றையும் வழங்குகை (*ச.சொ.*1983); Bench Magistrate.

நீதி நேர்மை நன்மனச்சான்று *பெயர்*

ஒரு வழக்கைத் தீர்மானிக்கக் குறித்தவகை விதிகள் இல்லாநிலையில், நீதிபதி தம் ஆய்திறனறிவு, தகைமை, நல்ல மனப்பாங்கு ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்ப்புரைக்க வேண்டும் என்னும் சட்டக் கோட்பாடு (*ச.சொ.*1983); Justice, equity and good conscience.

நீதிப்பேராணை *பெயர்*

குறித்துரைத்த ஒன்றைச் செய்யுமாறோ தவிர்க்குமாறோ எழுத்துமூலம் ஒருவருக்கு இடப்படும் உயர் நீதிமன்ற அல்லது உச்ச நீதிமன்றக் கட்டளை. *நீதிப்பேராணைகளில் எது உரியதாக இருக்கலாமோ அதைப் பிறப்பிக்க... அதிகாரம்* (*உறுப்.* 32(2), *இ.அ.*); Writ.

நீதிப்பொதுவர் *பெயர்*

தங்கள் பூசலைக் கேட்டு முடிவுசெய்வதற்காகச் சார்பினர்கள் தெரிவுசெய்யும் நடுநிலையாளர் (*பி.*2 (*அஅ*), *தொ.பூ.ச.*); Arbitrator.

நீதிபதி *பெயர்*

ஒரு குற்றச்சாட்டை வேறு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பும் அதிகாரத்தை மட்டுமே கொண்டுள்ள ஒரு குற்றவியல் நடுவரைத் தவிர, நீதிமன்றத்தில் கொணரப்படும் வழக்கையோ எழுப்பப்படும் வினாக்களையோ ஆராய்ந்து தீர்மானிக்கும் அதிகாரவுரிமை சூட்டப்பெற்றவர் அல்லது அத்தகைய தீர்ப்பு வழங்க அதிகாரமளிக்கப்பெற்ற குழுவில் உள்ள உறுப்பினர். *உச்ச நீதிமன்றத்தின் மிக்க முதுநிலை நீதிபதி முன்னிலையில்* (*உறுப்.*60, *இ.அ.*); Judge.

நீதிமன்ற இகழ்வு *பெயர்*

நீதிமன்றங்களின் அதிகாரவுரிமையை மதிக்காமல் செய்யப்படும் செயல். *நீதிமன்ற இகழ்வுக்காகத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளடங்கலான அதிகாரங்களை உச்சநீதிமன்றம் உடையது* (*உறுப்*.129, *இ.அ.*); Contempt of Court.

நீதிமன்றப் பொது *பெயர்*

பொதுமக்கள் தடையின்றி வருகைதந்து வழக்கு நடவடிக்கையை நேரடியாக அறிந்துகொள்ளக்கூடிய நீதிமன்ற அமர்வு. *தீர்ப்பு எதுவும் உச்ச நீதிமன்றப் பொதுவில் அல்லாமல் வழங்கப்படுதல் ஆகாது* (*உறுப்*.145(4), *இ.அ.*); Open court.

நீதிமன்றம் *பெயர்*

1. நீதிபதிகள்; நீதிநடுவர்கள்; பொதுவர்களைத் தவிரச் சான்றுரை எடுக்கச் சட்டப்படி அதிகாரம் பெற்றவர்கள் (*பி*.3, *இ.சா.ச.*); Court.

2. சட்டமுறைப்படி நீதி வழங்குவதற்காக வழக்கை ஆய்வுசெய்யும் இடம். *இந்திய உச்ச நீதிமன்றம்* (*உறுப்*.124(1), *இ.அ.*); Court.

நீதிமுறைத் தீர்வளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

(பெரும்பாலும்) நொடிப்புநிலை நடவடிக்கையில் வழக்காய்வுசெய்து சட்டமுறைப்படி தீர்மானித்தல் (*கட்*.1 *வி*.10(2), *உ.ந.தொ.ச.*); To adjudicate.

நீதிய *பெயரடை*

நீதிபதி என்னும் நிலையில் அவருக்குச் சொந்தமான அல்லது அவரிடமிருந்து தோன்றுகிற. *நீதிய அதிகாரஅமைப்புகள்* (*உறுப்*.144, *இ.அ.*); Judicial.

நீதிய அணுகுகை *பெயர்*

* ஒரு வழக்கின் பொருளியங்கள், சூழ்நிலைகள், சார்பினரின் சான்றுரைகள், சட்டத்தின் பொருந்துகை, நீதியின் குறிக்கோள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சட்ட நடவடிக்கை (*பர்துமான் சிங் எதிர் பஞ்சாப் அரசு* AIR 1959 Punj. 63); Judicial access.

நீதிய அறிநிலை *பெயர்*

சான்று காட்டி மெய்ப்பிக்கப்படாமலேயே நீதிபதி ஏற்றுச் செயற்படுவதற்கு ஆதாரமாக அமைந்த அறிவுறுகை நீதியமுறைக் கொள்தகுநிலை (*ச.சொ*.1983); Judicial Cognizance.

நீதிய உளத்தேர்வு *பெயர்*

நீதிமன்ற நடவடிக்கையின்போது முறைகடவாமல் சட்ட உணர்வுக்கு இணங்க நீதிபதி கொள்ளும் மனப்பாங்கு (*ச.சொ*.1983); Judicial discretion.

நீதியக் கட்டளை *பெயர்*

நீதிமன்றத்தாலோ நீதிய அதிகாரங்களைச் செலுத்தும் அலுவலராலோ அனுப்பப்படும் அறிவிப்பு அல்லது அழைப்பாணை. *நீதிமன்ற அலுவலர் என்ற முறையில் நீதியக் கட்டளையை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்* (*உ*.(17) (*ஈ*), *உ.ந.தொ.ச.*); Judicial process.

நீதிய நடவடிக்கை *பெயர்*

சான்றுரைஞர் உறுதிமொழி செய்து அளிக்கும் சான்றினைக் கேட்கவும் ஏற்கவும் ஆராயவும் சட்டப்படி அதிகாரம்பெற்ற தீர்ப்பாயத்தின் அல்லது ஆளரின் முன்னிலையில் நடைபெறும் செய்கைப்பாடு. *சூளுரையின்மேல் எடுக்கப்படும் சான்று நீதிய நடவடிக்கையில் அடங்கும்* (*பி*.2 (*ஐ*), *கு.ந.தொ.ச.*); Judicial proceedings.

நீதியப் பிரிந்துறைவு *பெயர்*

திருமணத்தை முறித்துவிடாமலும், கணவன்-மனைவி உடலுறவு கொள்ளாமலும் தனித்து வாழ வகைசெய்யும் நீதிமன்ற ஆணை (*பி*.10(1), *இ.தி.ச.*); Judicial separation.

நீதியப் பிழை *பெயர்*

* வழக்கின் மேல்முறையீட்டிலோ மறுஆய்விலோ சரிசெய்யப்படக்கூடிய நீதிமன்றத் தீர்ப்புரையிலுள்ள தவறு (*மனஷாராம் எதிர் தேஜ் பான்* ILR (1961) 1 Punj. 728); Judicial error.

நீதிய மெய்யேற்பு *பெயர்*

எல்லோரும் அறிந்துள்ள குறித்தசில பொருட்பாடுகளில் மெய்ப்பிப்பு இல்லை என்றாலும், அவற்றை ஏற்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள உரிமை, நீதியத் துணிபேற்பு (எ.டு. உலகம் உருண்டையானது) (*பி*.87 *அ* (2), *உ.ந.தொ.ச.*); Judicial notice.

நீதிய மேலாய்வு *பெயர்*

சட்டமன்றச் சட்டங்கள் அரசமைப்பு நெறிகளுடன் பொருந்துகின்றனவா என்பதையும், ஆட்சிய முகமைகள் ஒப்படைவுச் சட்டங்களின்படி செய்த விதிமுறைகளும் மேற்கொண்ட முடிவுகளும் செல்லுந்தன்மை உடையனவா என்பதையும் மறுஆய்வு செய்வதற்கான நீதிமன்ற அதிகாரம் (*ச.சொ.*1983); Judicial review.

நீதியர்ஆயம் *பெயர்*

முழு ஆயமாக இல்லாததும் உயர்நீதிமன்றத்தின் மற்றொரு நீதியர் ஆயம் செய்த முடிவை ஆய்வுசெய்யும் அதிகாரவரம்பு அற்றதும், இரண்டு நீதிபதிகளைக் கொண்டதுமான நீதிமன்றம். *ஒற்றை நீதிபதிகளுக்கும் நீதியர் ஆயங்களுக்கும் வகைசெய்யலாம்* (*உறுப்*.145(2), *இ.அ.*); Division bench.

நீதியுறுதிசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒரு வழக்கில் கேட்பு நல்கி அல்லது வழக்காய்வு செய்து நீதிமுறையில் தீர்ப்பளித்தல். *நீதி உறுதிசெய்யப்பெற்ற நொடிப்புநிலையர்* (*பி*.103, *மா.த.நொ.ச.*); To adjudge.

நு

நுகர்வோர் *பெயர்*

காண்க : பயனீட்டாளர்.

நுகர்வோர் நீதிமன்றம் *பெயர்*

பொருள்களை விலைக்கு வாங்கிப் பயன்கொள்ளும் பயனீட்டாளர்களின் நலன்களுக்குக் காப்பளிக்கவும், குறைபாடுள்ள வாங்கு பொருள்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துத் தீருதவி அளிக்கவும் நிறுவப்பட்ட முறைமன்றம் (*ச.சொ.*2003); Consumer court.

நுண்பொருட் சொத்து *பெயர்*

பருப்பொருள் அல்லாத பிற பொருள்களின் மீதுள்ள சொத்துரிமை. *புழக்கத்திலுள்ள நுண்பொருட் சொத்துரிமையை இழக்கச் செய்தல்* (*பி*.141, *இ.த.தொ.ச.*); Incorporeal property.

நுதல்பொருள் பெறுமதி *பெயர்*

நீதிமன்றக் கட்டணச் சட்டகையில் வேண்டுறுத்தியவாறு, வழக்கீட்டில் உள்ள பொருளின் உண்மையான அல்லது சந்தையின் விலைமதிப்பு.

* *நுதல்பொருள் பெறுமதி என்பது வாதுரையில் சொல்லப்படும் விலைமதிப்பு எனப்பொருள்படாது (மித்ருபானு பிஸ்வால் எதிர் கமால்* AIR 1968 Oris. 60); Value of subject matter.

நுழைவிசைவு *பெயர்*

ஒரு கடவுச்சீட்டில் அயல்நாட்டு அதிகாரி உறுதியொப்பம் இடுகை; வழிச்சாத்து (*இ.ப*.VII-I-19, *இ.அ.*); Visa.

நுழைவுவரி *பெயர்*

* நுகர்வதற்காகவோ பயன்படுத்துவதற்காகவோ விற்பதற்காகவோ நகராட்சிப் பகுதிக்குள் கொண்டுவரப்படும் பண்டங்கள் மீது விதிக்கப்படும் தீர்வை (*பர்மா ஷெல் எதிர் பெல்காம் நகராட்சி* AIR 1963 SC 906); Octroi.

நெ

நெடுந்துய்ப்புரிமை *பெயர்*

தமக்கு உரிமையில்லாத ஒர பொருளையோ சொத்தையோ நீண்ட காலம் இடையறவு இல்லாமல் பயன்கொண்டமையால் சட்டப்படி பெறும் உரிமையம். *தனியார் உடைமை எனில்* 20 *ஆண்டுகளும் அரசுடைமை எனில்* 60 *ஆண்டுகளும் நெடுந்துய்ப்புரிமை பெற்றிருக்க வேண்டும் (பி*.15, *இ.து.ச.*); Prescription.

நெருக்கடிநிலை *பெயர்*

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய இக்கட்டான எதிர்பாராத சூழ்நிலை. *நெருக்கடிநிலைச் சாற்றாணை (உறுப்*.352, *இ.அ.*); Emergency.

நெறிபிறழ்ந்த ஆணை *பெயர்*

* வாதுரைகளுக்கும் சட்டத்திற்கும் மீறுகையாக மனமறிந்து செய்யப்பட்ட தீர்ப்பு. (*நாராயண கோண்டா எதிர் கிரிஜம்மா* AIR 1977 Karm. 58); Perverse order.

நெறிபிறழ்ந்த காண்புரை *பெயர்*

* நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சான்றுரைக்கு முற்றிலும் எதிர்மாறாக வழங்கப்பட்ட தீர்ப்புரை. (*பாரி ஊழியர்கள் எதிர் சங்கம் பாரி நிறுமம்* AIR 1966 Cal. 31); Perverse finding.

நெறிமுறை *பெயர்*

காண்க : நடைமுறை.

நே

நேர்முகவாக்கு *பெயர்*

குறித்த ஒரு பொருட்பாடு பற்றி வாக்காளர்கள் நேரடியாகவே அளிக்கும் வாக்கு (*ச.சொ*.1983); Referendum.

நேர்மைநெறி *பெயர்*

1. *முதன்மைப் பொருளில்* அனைவராலும் பின்பற்றப்பட வேண்டிய நேர்மை அல்லது நடத்தைவிதி.

2. *வரம்பிடப்பட்ட பொருளில்* கண்டிப்பான சட்டத்தினின்றும் தனிவேறுபாடு கண்டறியும் வகையில் கண்ணோட்ட உணர்வுக்கிணங்க மேற்கொள்ளப்படும் முறைமை.

3. *வரலாற்றுப் பொருளில்* தகவுநெறி நீதிமன்றத்தினால் இசைந்தேற்கப்பட்டதாகவும் பொது மரபுச்சட்டத்திற்கு இணையானதாகவும் உள்ள குறித்தசில உரிமை, குறைதீர்வழி. (*ச.சொ.*1983); Equity.

நேரடி அறிவிப்பு *பெயர்*

வாய்மொழியாகவோ வரைமொழியாகவோ குறிப்பிட்ட பேரத்தின் அல்லது ஒப்பந்தத்தின்போது ஒருவர் மற்றொருவரிடம் வெளிப்படையாகத் தெரிவிக்கும் செய்தி (*பி.*3, *சொ.மா.ச.*); Actual notice.

நொடிப்புநிலை *பெயர்*

முழுக்கடனையும் அடைக்கப் போதுமான சொத்தில்லாத சூழல் (*இ.ப.*VII-III-9, *இ.அ.*); Insolvency.

நொடிப்புநிலைச் சொத்தாட்சியர் *பெயர்*

மாநிலத் தலைநகரில் நொடிப்புநிலையரின் சொத்துகளை மேலாண்மைசெய்வதற்கென நீதிமன்றத்தால் அமர்த்தப்படும் அலுவலர் (*பி.*7(3), *பொ.தீ.ச.*); Official assignee.

நொடிப்புநிலையர் *பெயர்*

அப்போதைய சந்தை நிலவர விலைப்படி கடனைத் தீர்க்கப் போதிய சொத்துடைமை கொண்டிராதவர்; Insolvent.

நொடிப்புமனுக் கடன்தருநர் *பெயர்*

தம்மிடம் கடன்பெற்றவரைக் கடன்தீர்க்கும் திறனற்றவர் என அறிவிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கைசெய்கின்ற கடன் கொடுத்தவர் (*பி.*5 (ஆ), *மா.த.நொ.ச.*); Petitioning Creditor.

நொடிப்புமனுக் கடனாளி *பெயர்*

தம்மைக் கடன்தீர்க்கும் திறனற்றவராக அறிவிக்கவேண்டி நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும் கடன்காரர் (*பி.*112(2) (ஒஓ) *மா.த.நொ.ச.*); Petitioning debtor.

நோ

நோக்கம் *பெயர்*

எய்துவதற்காகக் கருதப்படும் இலக்கு; இலட்சியம். *இச்சட்டகையின் நோக்கமும் குறிக்கோளும்* (*ச.ஆ.சொ.க.*); Aim.

ப

பகர அதிகாரஆவணம் *பெயர்*

குறித்துரைத்த செயல்களில் தம் சார்பாகச் செயலாற்றுமாறு ஒருவர் மற்றொருவருக்கு அதிகாரமளித்துத்தரும் முறையாவணம். *பகர அதிகார ஆவணத்தைக் கொண்டிருக்கும் முகவர்* (*பி.*102, *சொ.மா.ச.*); Power of attorney.

பகரக் கடப்பாடு *பெயர்*

தாம் அளித்த அதிகாரத்தின்படி தமக்காகச் செயலாற்றிய பணியாளரின் அல்லது முகவரின் செயலுக்குப் பணித்தலைவரோ முதலரோ பொறுப்பாவது (*ச.சொ.*1983); Vicarious liability.

பகரர் *பெயர்*

மற்றவரின் அதிகாரம் பெற்று அவர் சார்பாகச் செயலாற்றுபவர் (*பி*.59, *ம.சா.ச.* 1951); Proxy.

பகுதி நிறைவேற்றம் *பெயர்*

அசையாச்சொத்தை மறுபயனுக்காக மாற்றல்செய்வதாக எழுதிக் கையொப்பமிட்டு ஒப்பந்தம் செய்துகொண்ட மாற்றல்செய்பவரின் சொத்தின் உடைமையை, மாற்றல்பெறுபவர் கைக்கொண்டு ஒப்பந்தப்படி தமது பங்கை நிறைவேற்றிய நிலையில், சட்டப்படி அந்த ஆவணம் பதிவுசெய்யப்படாமலோ முடிவுறாமலோ இருந்தாலும்கூட, மாற்றல்செய்தவருக்கு அந்த ஒப்பந்தத்தில் சொல்லியதைத் தவிர வேறு உரிமை எதுவும் இல்லை என்னும் கோட்பாடு.
* *ஓர் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தில் உரிமைமாற்றல்பெற்றவர் சொத்தின் உடைமையைக் கொண்டிருக்கவேண்டும் (இராமச்சந்திரையா வழக்கு,* (1964) SC 876); Part performance.

பங்களிப்பு *பெயர்*

பொதுவகையில் பணம், கருத்து முதலியவற்றைக் கொடுத்து உதவுகை (*உறுப்*.290, *இ.அ.*); Contribution.

பங்கு *பெயர்*

ஒரு நிறுமத்தின் பங்காகவோ மூலதனத்தின் பகுதியாகவோ அமைகின்ற தொகை. *ஒரு கழகத்தில் கொண்டிருக்கும் பங்குகள்* (*பி*.2(19), *உ.ந.தொ.ச.*); Share.

பங்குவிழை வழக்குதவி *பெயர்*

தொடர்புடைய நிலம் அல்லது பண்டம் பற்றிய வழக்கில் வெற்றிபெறும்போது அதன் மதிப்பில் ஒரு பகுதியைத் தரவேண்டும் என்னும் வரைக்கட்டுடன், ஒரு வழக்கையோ சட்ட நடவடிக்கையையோ வழக்காளிக்காக அல்லது எதிராளிக்காக நடத்துபவர் பெறும் சட்டமுரணான கைம்மாறு (*ச.சொ.*1983); Champerty and maintenance.

பசுமை அறிக்கை *பெயர்*

நாடாளுமன்றத்தில் கலந்தாய்வுசெய்ய அரசு திட்டமிட்டிருக்கும் கொள்கை பற்றிய விவரவுரை (*ச.ஆ.சொ.க.*); Green paper.

பட்டிகை மாதம் *பெயர்*

ஓர் ஆண்டின் காலப்பகுதியான பன்னிரண்டு மாதங்களில் ஒன்றையும், அந்த மாதத்தின் குறித்த ஒரு தேதியிலிருந்து அதற்கடுத்த மாதத்தின் அதே தேதிவரையும் குறிக்கின்ற ஒரு காலஅளவு (*பி*.49, *இ.த.தொ.ச.*); Calender month.

பட்டியல் குலத்தினர் *பெயர்*

இந்திய அரசமைப்பின் 341ஆம் உறுப்பில் கொள்ளப்படும் குலத்தினர், இனத்தினர் அல்லது பழங்குடியினர் (= ஆதி திராவிடர்). *குடியரசுத்தலைவர் எந்தக் குலத்தினர் இந்த அரசமைப்பின் நோக்கங்களுக்காகப் பட்டியல் குலத்தினர் எனக் கருதப்படவேண்டும் என்பதைப் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்* (*உறுப்*.341, *இ.அ.*); Scheduled caste.

பட்டியல் பழங்குடியினர் *பெயர்*

இந்திய அரசமைப்பின் 342ஆம் உறுப்பின்கீழ் வரும் குலத்தினர், இனத்தினர் அல்லது பழைய மரபைச் சேர்ந்தவர் (= ஆதிவாசிகள்). *குடியரசுத்தலைவர் எந்தப் பழங்குடிச் சமூகத்தினர் இந்த அரசமைப்பின் நோக்கங்களுக்காகப் பட்டியல் பழங்குடியினர் எனக் கருதப்படவேண்டும் என்பதைப் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்* (*உறுப்*.342, *இ.அ.*); Scheduled tribe.

படிநிலை *பெயர்*

பதவியிலோ, தகுதியிலோ, சமூகத்திலோ உள்ள தர அமைப்பு. *அத்தகையவர் உசாவுகைக்குப் பின்பு தவிர, பணியறவு செய்யப்படுதலோ அகற்றப்படுதலோ படிநிலையில் தாழ்த்தப்படுதலோ ஆகாது* (*உறுப்*.311, *இ.அ.*); Rank.

படிநிலையமைவு *பெயர்*

ஏறு வரிசையிலான தர வகைப்பாடு (*ச.சொ.*1979); Hierarchy.

படியம் *பெயர்*

1. கையெழுத்தில் அல்லது அச்சில் உள்ள மூலத்தின் ஆக்கம்; படி (= பிரதி).

* *படியம் என்பது மூலத்தின் உண்மையான மறுவடிவம் (ரோசம்மா எதிர் பாலகிருஷ்ணன்* AIR 1958 Ker. 154); Copy.

2. *குறிப்பிட்ட சில நேர்வுகளில் உறுதிச்சான்றுப் படியம்.*

* *உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின் கட்டளை* 41 *விதி* 1 *இல் உறுதிச்சான்றுப் படியம் (உ.பி. அரசு எதிர் சி. தோபிட்* 1958 SCR 1275); Copy.

படைஆட்சேர்ப்பு *பெயர்*

படைத்துறை வீரர் பணிக்கு வல்லந்தமாக ஆட்களைச் சேர்ப்பது (*ச.சொ.*1983); Conscription.

படைத்துறை ஆட்சி *பெயர்*

வழக்கமாக நிலவும் பொது உரிமையியல் சட்டம் செயற்படாமல் இடைநிறுத்திவைக்கப்பட்ட நிலையில் படைத்துறையினர் நடைமுறைப்படுத்தும் செயலாட்சி. *படைத்துறை ஆட்சி பரப்பிடம் எதிலும் செயலில் இருக்கையில், உரிமைகள் மீதான வரையறை* (*உறுப்*.34, *இ.அ.*); Martial law.

படைத்துறைச் சட்டகை *பெயர்*

படைத்துறை அலுவலர்கள், வீரர்கள் போன்றோரால் செய்யப்படும் குற்றச்செயல்களை உசாவித் தண்டிப்பதும், படைத்துறை நீதிமன்றத்தால் செயலுறுத்தப்படுவதுமான விதிமுறை (*பி.*7, *ப.ச.*); Military law.

படைத்துறை நீதிமன்றம் *பெயர்*

படைத்துறையினர் செய்யும் குற்றங்களை உசாவுகைசெய்து தண்டிக்கும் அதிகாரவரம்பைக் கொண்ட தீர்ப்பாயம் (*பி.*4 (xvi) *வா.ப.ச.*); Court martial.

பண்டங்கள் *பெயர்*

சரக்குகள், வாணிகப்பொருள்கள், அசையும் சொத்துகள். *மறுத்தொதுக்கிய பண்டங்கள்* (*பி.*43, *ப.வி.ச.*); Goods.

பணச் சட்டகம் *பெயர்*

நிதியும் வரிவிதிப்பும் பற்றிய வகைமுறைகளை மட்டுமே கொண்டிருக்கும் பணச் சட்டமுன்வரைவு. *பணச் சட்டகம் என்பதன் பொருள்வரையறை (உறுப்.110, இ.அ.)*; Money Bill.

பணத்தண்டம் *பெயர்*

செய்த குற்றத்துக்கு ஒறுப்பு என்னும் நிலையில், குற்றம்புரிந்தவர் அரசுக்குச் செலுத்தவேண்டும் என ஆணையிடப்பட்ட பணத்தொகை; தண்டப்பணம் (= அபராதம்) (*பி*.68, *இ.த.தொ.ச.*); Fine.

பணம்பெறுநர் *பெயர்*

மாற்றுமுறையாவணத்தில் எந்த ஒருவருக்கு அல்லது எவருடைய ஆணையின்படி பணம் தரவேண்டும் எனக் கண்டுள்ளதோ அந்த ஒருவர் பணம்பெறுபவர். (*பி*.7, *மா.மு.ச.*); Payee.

பணமாக்கத்தக்க சொத்து *பெயர்*

பணம் அல்லது எளிதில் பணமாக மாற்றத்தக்க சொத்துடைமைகள் (*ச.சொ*.1983); Liquid assets.

பணிக்குழாம் *பெயர்*

ஓர் அலுவலகத்தின் அல்லது நிறுவனத்தின் அலுவற்பணிகளுக்குப் பொறுப்பாகவும், ஒரு தலைவரின் உளத்தேர்வுப்படி குறித்தொதுக்கிய பணிகளை நிறைவேற்றவும் அமர்த்தப்பட்ட பணியாளர்களின் குழு. *நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றும் தனித்தனியே செயலகப் பணிக்குழாம் ஒன்றை உடையது (உறுப்.98(1) இ.அ.)*,; Staff.

பணிக்கொடை *பெயர்*

* பாராட்டத்தக்க நீண்டகாலப் பணியின் பொருட்டு, ஓய்வுபெறும் பணியாளருக்கு வழங்கப்படும் பணத்தொகை (*கல்கத்தா காப்பீட்டுக் கழகம் எதிர் பணியாளர்கள்* AIR 1967 SC 1296); Gratuity.

பணித்தலைவர்-பணியாள் *பெயர்*

தமது வேலையைத் தம் கட்டுப்பாட்டிற்கும் கட்டளைக்கும் உட்பட்டுச் செய்யவேண்டும் என்னும் வரைக்கட்டுடன் பணியமர்த்தும் முதலாளி மற்றும் அவ்வாறு அமர்த்தப்பட்ட தொழிலாளி. *பணியாள் என்ற முறையில் தம்மை வேலைக்கு வைத்துக்கொண்ட பணித்தலைவர் (பி.381, இ.த.தொ.ச.)*; Master and servant.

பணித்தொழில் *பெயர்*

ஒருவர் திறமையுடன் பின்பற்றும் தொழில் அல்லது வழக்கமாகத் தமது வாழ்வுக்காகப் பொருளீட்டும் தொழில். *குறிப்பாக, (இறைபணி சட்டம், மருத்துவம் போன்று) கல்வியறிவை அல்லது அறிவியல் அறிவை உட்கொண்டிருக்கும் ஒரு துறை; கற்றறிந்த பணித்தொழில்* (*பி*.2 (36), *வ.வ.ச.*); Profession.

** கற்றல் அல்லது அறிவியல் விளைவாக, அறிவு அல்லது தொழில்நுட்பப் பயிற்சியுடன் தொடர்புடையது பணித்தொழில் (சுந்தர நாராயணப்பிள்ளை எதிர் செயல் அலுவலர்* AIR 1966 Mad. 262); Profession.

பணிப்பாணை *பெயர்*

குறித்த ஒரு செயலைச் செய்வதற்காக வழங்கப்பெறும் அதிகாரம். *பணிப்பாணை எவருக்குப் பிறப்பிக்கப்படவேண்டும் (பி.*285(1), *கு.ந.தொ.ச.*); Commission.

பணியம் *பெயர்*

அரசு அல்லது பொது(ம)த் துறையின் வேலையமைவு. *ஒன்றியத்து அரசுப் பணியங்கள்* (*இ.ப.*VII-I-70, *இ.அ.* 1991); Service.

பணியமர்த்தம் *பெயர்*

ஓர் அலுவலில் இடம்பெறச்செய்வது; பணியமர்த்துகை.

* பணியமர்த்தம் என்பது பணிப்பெயர், பணியிடம் அல்லது பணியமைவு எனப் பொருள்படுமே தவிர, முழுப்பணியையும் குறிக்காது (*ஆர்.கே.கபூர், எதிர் வி. பிரதாப் சிங்* (1964) SCR 224); Appointment.

பணியமர்த்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஓர் அலுவலகத்தின் அல்லது பொறுப்புக்கட்டளையின் கடமைகளைச் செய்வதற்காக ஒருவரைப் பெயர் குறித்து அமர்த்துதல். *எந்தச் சொத்துக்கும் சொத்தாட்சியராக ஒருவரைப் பணியமர்த்தலாம்* (*பி.* 94 (*ஈ*), *உ.ந.தொ.ச.*); To appoint.

பணியறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பதவி, வேலையமைவு அல்லது நிலையிலிருந்து ஒருவரை நீக்கிவிடுதல்; பணி நீக்கம் செய்தல். *ஒருவரைப் பணியறவு செய்யவோ, அகற்றவோ அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரஅமைப்பு* (*உறுப்.*311(2), *இ.அ.*); To dismiss.

பணியிடம் *பெயர்*

வேலை அமைவில் ஒரு நிலை.

* *பணியிடம் என்பது வேலையமைவு, ஆனால் வேலையமைவு ஒவ்வொன்றும் பணியிடம் ஆகாது* (*அசாம் அரசு எதிர் கனக் சந்திரதத்தா* AIR 1967 SC 884); Post.

பணியூதியம் *பெயர்*

ஆற்றிய பணிச்சேவைக்கோ செய்த வேலைக்கோ அளிக்கப்படும் பணம் அல்லது பரிசு. *அரசுத் தலைமை வழக்குரைஞர் குடியரசுத் தலைவர் தீர்மானிக்கலாகும் பணியூதியத்தைப் பெறுதல் வேண்டும்* (*உறுப்.*76(4), *இ.அ.*) Remuneration.

பணையம் *பெயர்*

அக்கறை கொண்டிராததும் உறுதியில்லாததுமான ஒரு நிகழ்வு பொறுத்து, ஒருவர் பணம் பெறுவதாகவும் மற்றவர் இழப்பதாகவும் தங்களுக்குள் செய்துகொள்ளும் உறுதிமொழி; பகடைப் பணையம். *பணைய ஒப்பந்தம்* (*பி.*30, *இ.ஒ.ச.*); Wager.

பதவி *பெயர்*

அதிகாரவுரிமை கொண்ட அலுவல் நிலை. *ஆளுநர் பிற ஆதாயம் நல்கும் பதவி எதனையும் ஏற்றல் ஆகாது* (*உறுப்.*158(2), *இ.அ.*); Office.

பதவி உறுதிமொழி *பெயர்*

குறித்த சில பணியை ஏற்பவர் முதன் முறையாகப், பணியை ஏற்கும்போது ஆணையிட்டுக் கூறும் உரை; பதவி ஆணையுறுதி. *ஆளுநர் அவருக்குப் பதவி உறுதிமொழி செய்து வைத்தல் வேண்டும் (உறுப்.*164(3), *இ.அ.*); Oath of office.

பதவிக் காலவரை *பெயர்*

ஒரு பணியில் அலுவற்பணியாற்றும் காலத்தின் வரம்பை வகுத்துரைக்கும் வரைக்கட்டு; *ஒழிவிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவரின் பதவிக் காலவரை முழுப்பதவிக்காலமாகிய ஐந்தாண்டு ஆகும் (உறுப்.*62(2), *இ.அ.*); Term of office.

பதவிப்பெயர் *பெயர்*

ஓர் அதிகாரமுள்ள பணியமைவைச் சுட்டிக் குறிப்பிடுவது. *குடியரசுத்தலைவர் தாம் குறித்துரைக்கும் பதவிப்பெயருடன் தம்மால் அமர்த்தப்படும் ஓர் ஆட்சியாளர் வழியே... ஆட்சிசெய்ய வேண்டும் (உறுப்.*239 (1), *இ.அ.*); Designation.

பதவிப் பொறுப்பாற்றுகிற *பெயரடை*

காண்க : அலுவலாற்றுகிற.

பதவியுயர்வு *பெயர்*

பணியமைவில் உள்ள படிநிலையில் அல்லது மதிப்பில் மேல்நிலை பெறுகை. *பதவியுயர்வு அளிக்கப்பட்டவர்களின் பணிமுதன்மை; (உறுப்.*371, *அ* (3*ஆ*), *இ.அ.*); Promotion.

பதவியூதியம் *பெயர்*

அதிகாரப் பதவியில் அல்லது வேலையமைவில் இருக்கும் ஒருவர் தமது வரையூதியத்துக்கும் கூடுதலாகப் பெறக்கூடிய நன்மை அல்லது ஆதாயம், வருவாயூதியம். (*கிட்டி எதிர் இலண்டன் துறைமுகம்* (1929) 93 JP 203)

* *நாடாளுமன்றம் சட்டத்தின்வாயிலாகத் தீர்மானிக்கலாகும் பதவியூதியங்கள், படித்தொகைகள், சிறப்புரிமைகள் ஆகியவற்றுக்குக் குடியரசுத் தலைவர் உரிமைப்பாடுடையவர் (உறுப்.*59(3), *இ.அ.*); Emoluments.

பதவிவகிப்பவர் *பெயர்*

அலுவலாற்றுபவர்; பணியிலிருப்பவர். *சமயக்கிளை சார்ந்த நிறுவன அலுவல்களுடன் தொடர்புடைய பதவிவகிப்பவர் (உறுப்.*16(5), *இ.அ.*); Incumbent.

பதவிவழி *பெயரடை*

ஓர் அதிகாரமுள்ள பணியில் இருப்பதன் பயன்திறனால் அல்லது காரணமாக; அலுவல்வழி (*பி.*15, *பொ.வ.ச.*); Ex-officio.

பதவிவிலகல் *பெயர்*

இருந்துவரும் வேலையமைவை விட்டு நீங்குதல்.

* *பதவிவிலகல் பணித்தலைவரால் ஏற்கப்பட்டால்தான் செயல்விளைவு கொள்ளும் (ராஜ்குமார் எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1969 SC 180); Resignation.

பதிவேடு *பெயர்*

இன்றியமையா விவரங்களைக் கொண்டுள்ள ஆவணம். *ஒரு பொது அலுவலர் பதிவேட்டிலோ பதிவிதழிலோ செய்யும் பதிவு சிக்கலுக்குத் தொடர்புடைய உண்மைவிவரம் ஆகும்* (*பி*.35, *இ.சா.ச.*); Register.

பதுங்கி மனைஅத்துமீறல் *பெயர்*

எல்லைமீறி நுழைபவரைத் தடுக்கவோ வெளியேற்றவோ உரிமையுள்ள ஒருவரின் கண்ணில்படாமல் மறைவாக வீட்டுக்குள் நுழைதல். *கதிரவன் மறைந்த பின்பும், தோன்றும் முன்பும் பதுங்கி மனை அத்துமீறலைச் செய்பவர்* (*பி*.444, *இ.த.தொ.ச.*); Lurking house trespass.

பயனாளி *பெயர்*

* ஒரு சொத்தினையோ நன்மையையோ துய்க்கும் உரிமையுள்ளவர் அல்லது எதிர்காலத்தில் துய்க்கும் வளவாய்ப்புள்ளவர் (*பத்மசுந்தரி எதிர் பார்பதிதேவி* ILR 37 Pat. 138); Beneficiary.

பயனீட்டாளர் *பெயர்*

பொருளையும் பணிச்சேவையையும் விலைக்கு வாங்கித் தமக்காகப் பயன்படுத்திக்கொள்பவர்; நுகர்வோர் (*பி*.2,(*ஈ*), *நு.கா.ச.*); Consumer.

பயனீடுகொள்-(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பண்டங்களை விலைக்கு வாங்கிப் பயன்படுத்துதல். *இந்திய அரசாங்கத்தினால் பயனீடு கொள்ளப்படுகிற... மின்னாற்றல்* (*உறுப்*.287, *இ.அ.*); To consume.

பரத்தமை *பெயர்*

பாலுறவுச் சுரண்டல் அல்லது வர்த்தக நோக்கத்திற்காக உடம்பைத் தவறாகப் பயன்படுத்துதல் (*பி*.2 (*ஊ*) *ம.இ.தொ.வா.(த)ச*).

* *பரத்தமை என்பது பணம் பெற்றுக்கொண்டு வரையறையற்ற ஆண்பெண் உடலுறவுக்காக உடலை விற்றல்* (*மாணிக்க ஆசாரி* in Rem. AIR 1976 Mad. 491); Prostitution.

* *இசை நாடக மகளிர், உண்டிச்சாலை ஆடல் மகளிர், மகளிர் உள்ளாடை விளம்பர மகளிர்; பயணிகளின் விருந்தோம்பலுக்கும் தேவைப்பொருள் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் விமானப் பணிப்பெண்கள்* (*ஒல்கா தெல்லீஸ் எதிர் பம்பாய் மாநகராட்சி* AIR 1986 SC 180); Prostitution.

பரிமாற்றம் *பெயர்*

பணமாக இல்லாமல் சொத்தினை மட்டும் இருவர் தங்களுக்குள் மாற்றல்செய்துகொள்ளுவது (*பி*.118, *சொ.மா.ச.*); Exchange.

பருப்பொருட் சொத்து *பெயர்*

நிலம் அல்லது பண்டங்கள் போன்று உண்மையிலேயே உளதாகிற மற்றும் தொட்டுணரத்தக்க உடைமைப்பொருள் (*ச.சொ*.1979); Corporeal property.

பல்கலைக் கழகம் *பெயர்*

1. மைய, மாகாண அல்லது மாநில அரசுச் சட்டகை ஒன்றின்படி நிறுவப்பட்டோ கூட்டிணையமாக்கப்பட்டோ அல்லது இதற்கென இயற்றப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி, பல்கலைக்கழக மானியக் குழுவினால் இசைந்தேற்கப்பட்டோ உள்ள உயர்கல்வி நிலையம் (*பி*.2 (*ஊ*), *ப.மா.கு.ச.*); University.

2. பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைக்கு இணங்க, மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கைமூலம் விளம்புகின்ற பல்கலைக்கழகம் அல்லாத வேறு உயர்கல்வி ஆய்வுநிறுவனம் (*பி*.3, *ப.மா.கு.ச.*); University.

பலதுணை மணம் *பெயர்*

ஒரு கணவன் பல மனைவியரை ஒரே சமயத்தில் கொண்டிருத்தல், பல்தாரமணம் (*பி*.56, *வி.கா. இ.ஒ.ச.*); Polygamy.

பலனில் வழக்காய்வு *பெயர்*

சார்பினரின் முறைகேடான செயல் அல்லது நடத்தை காரணமாக அமையாதிருந்தும், வழக்கு ஒன்றில் தீர்வு எதுவும் எட்டப்படாதிருக்கிற நீதிமன்ற நடவடிக்கை (*ச.சொ*.1979); Abortive trial.

பழிப்பூறு *பெயர்*

ஒருவரது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கக் கருதி அல்லது களங்கம் நேரிடும் என்பதை அறிந்து, அவர்மீது வாய்மொழியாகவோ வரைமொழியாகவோ செய்யப்படும் இகழ்ச்சி, பழிப்புரை; அவதூறு. *பழிப்பூறு அல்லது குற்றச்செயலுக்குத் தூண்டுதல்* (*உறுப்*.19(2), *இ.அ.*); Defamation.

பழிப்பூறுவாதம் *பெயர்*

முகநிலையில் குற்றம் இல்லாததுபோல் காணப்படும் வாசகத்தின் உள்ளார்ந்த பொருள் இகழ்ச்சிசெய்வதாகும் என அவமதிப்பு வழக்கில் எடுத்துரைக்கப்படும் வாதுரை, மறைமுக அவதூறு (*ச.சொ*.1983); Innuendo.

பற்றிவை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைக் கைப்பற்றிச் சட்டத்தின் காப்படைவில் இருத்திக்கொள்ளல். *நீதிமன்றம் ஆவணத்தைப் பற்றிவைத்தலுக்கு ஆணையிடலாம்* (*பி*.30, *உ.ந.தொ.ச.*); To impound.

பற்றுகை *பெயர்*

நீதிமன்ற ஆணைப்படி ஆளை அல்லது சொத்தினைக் கைப்பற்றிச் சட்டப் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளுகை. *சொத்தினுடைய பற்றுகையும் விற்பனையும்* (*கட்*.21.*விதி* 30, *உ.ந.தொ.ச.*); Attachment.

பற்றுகையர் *பெயர்*

அடைகடனாளியாகிய எதிர்வழக்காளியின் சொத்தைக் கைப்பற்றித் தமது உடைமையில் வைத்திருக்கும் மூன்றாமவர் பற்றுகைப்பொருளர். *பற்றுகையர் மீதான சார்வாணை* (*பி*.128 (*உ,ஈ*), *உ.ந.தொ.ச.*); Garnishee.

பற்றுரிமை *பெயர்*

கடன்கொடுத்தவர் கடன்வாங்கியவரின் சொத்தின் வழியே தமது கடன்தொகையைப் பெறுவதற்கான உரிமை. *விற்பவரின் பற்றுரிமை* (*பி*.47, *ப.வி.ச.*); Lien.

பற்றுவழி *பெயர்*

ஒருவரின் நாணயத்தை நம்பிக் கடனுக்குப் பண்டங்களை விற்பது (*ச.சொ*.1983); Credit.

பற்றுறுதி *பெயர்*

1. அரசு அளிக்கும் பாதுகாப்பின் அடிப்படையில் குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையே ஏற்படும் பிணைப்பு. *அயல் நாட்டரசிடம் தமக்குப் பற்றுறுதியோ ஒட்டுறவோ உள்ளதை ஒப்புக் கொள்கிறார்*.(*உறுப்*.102 (1) (ஈ), *இ.அ.*); Allegiance.

2. அரசு, அரசமைப்பு ஆகியவற்றின்மீது இயல்பாகவும், சட்டமுறையாகவும், உண்மையாகவும் ஒரு குடிமகன் கொண்டுள்ள கடமையுணர்ச்சி. *இந்திய அரசமைப்பில் உண்மையான பற்றார்வமும் பற்றுறுதியும் கொண்டிருப்பேன்*. (*உறுப்*.69, *இ.அ.*); Allegiance.

பறிமுதல் *பெயர்*

தண்டனை என்னும் முறையில் பண்டங்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல் (*பி*. 115, *சு.ச.*); Confiscation.

பா

பார்வைக்குப் பின்பு *வினையடை*

1. (கடனுறுதிச்சீட்டு வகையில்) அதன் விவரங்களை அறிந்துகொள்வதற்காகக் கொடுத்ததன் பின்னர். (*ச.ஆ.சொ.க.*); After sight.

2. (பணமாற்றுச்சீட்டு வகையில்) அதன் ஏற்பு, ஏற்காமை அல்லது ஏற்காமைக்கான மறுப்புக்குப் பின்னர் (*பி*.21, *மா.மு.ச.*); After sight.

பாலினம் *பெயர்*

உயிரினங்களில், குறிப்பாக மனித இனத்தில் உள்ள ஆண் பெண் பிரிவு. *பாலினம் காரணமாக அரசு வேற்றுமைபாராட்டுதல் ஆகாது* (*உறுப்*.15, *இ.அ.*); Sex.

பி

பிடியாணை *பெயர்*

சட்டமுறைப்படி கையாளுவதற்காக, ஒருவரைச் சிறை (=கைது) செய்யுமாறோ ஒரு சொத்தைக் கைப்பற்றுமாறோ கையொப்பமும் முத்திரையும் இட்டு விடுக்கப்படும் கட்டளை 'ஔ' என்பவரைக் காவல் அலுவலர் பிடியாணை இன்றிச் சிறைசெய்கிறார் (*பி*. 6 *வி.கா.* (*ஆ*), *இ.த.தொ.ச.*); Warrant.

பிடியாணை வழக்கு *பெயர்*

இறப்புத்தண்டனை, வாழ்நாள் தண்டனை அல்லது ஓராண்டுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கத்தக்க குற்றச்செயல் பற்றிய சட்ட நடவடிக்கை. (*பி*. 2(x) *கு.ந.தொ.ச.*); Warrant case.

பிடியியல் குற்றம் *பெயர்*

குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில் கண்டுள்ளபடியோ, அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள சட்டப்படியோ காவல் அலுவலர் பிடியாணை இன்றி ஒருவரைச் சிறைசெய்யத்தக்க குற்றச்செயல், பிடியாணை வேண்டாக் குற்றம், கைது செய்தற்குரிய குற்றம் (*பி*. 2 (இ), *கு.ந.தொ.ச.*); Cognizable offence.

பிடியியலாக் குற்றம் *பெயர்*

பிடியாணை இல்லாமல் காவல் அலுவலர் சிறைசெய்ய முடியாத குற்றச்செயல், பிடியாணை வேண்டுங் குற்றம். *கைது செய்தற்கு உரியதல்லாத குற்றம்* (*பி*. 2 (ஔ), *கு.ந.தொ.ச.*); Non-cognizable offence.

பிண ஆய்வு *பெயர்*

சாவின் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காக உயிரற்ற உடலில் மருத்துவர் செய்யும் ஆராய்வு (*ச.சொ.* 1983); Post mortem examination.

பிணையாள் *பெயர்*

கடமைப்பொறுப்பை ஒருவர் செய்யத் தவறுகையில் தாமே அதை நிறைவேற்றுவதாக ஒப்பித் தம்மைக் கட்டுறுத்திக்கொள்பவர் (*பி.* 126, இ.*ஒ.ச.*); Surety.

பிணைவிடாக் குற்றம் *பெயர்*

காவல் அலுவலர் பிணையம் பெற்றுக்கொண்டு குற்றம் சுமத்தப்பட்டவரைக் காவலில் இருந்து வெளியே விடமுடியாத குற்றச்செயல், (= ஜாமீனில்விடாக் குற்றம்.) (*பி.* 2 (*அ*), *கு.ந.தொ.ச.*); Non bailable offence.

பிணைவிடு குற்றம் *பெயர்*

காவல் அலுவலர் பிணையம் பெற்றுக்கொண்டு குற்றம் சுமத்தப்பட்டவரைக் காவலிலிருந்து வெளியே விடக்கூடிய செயல். (= ஜாமீனில்விடுங் குற்றம்.) (*பி.* 2 (*அ*), *கு.ந.தொ.ச.*); Bailable offence.

பித்தர் *பெயர்*

மனநலம் அற்றவர் (இ.*ப.* VII-III-16, இ.*அ.*); Lunatic.

பித்துநிலை *பெயர்*

பித்தர் என்னும் நிலை அல்லது மனநலம் குன்றியநிலை (*பி.* 6(4), இ.*ஒ.ச.*); Insanity.

பிரிந்துறையுதவி *பெயர்*

கணவனிடமிருந்து பிரிந்துவாழும் உரிமைபெற்றுள்ள மனைவி வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக, அவனது சொத்திலிருந்து அவளுக்குக் கொடுக்கப்படும் படித்தொகை (*பி.*25, இ.*தி.ச.*); Alimony.

பிரிவினை *பெயர்*

ஒரு சொத்துக்குக் கூட்டாக உரிமையுள்ளவர்கள் அவரவருக்குரிய பகுதியைப் பிரித்துக்கொள்ளுவது.

* *ஒரு பாகப்பிரிவினையாக அமைவதற்குத் தேவையானதெல்லாம் கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர், குடும்பத்திலிருந்து தாம் பிரிந்துசெல்வதற்கான உட்கருத்தைப் பிரிவினையால் பாதிக்கப்படுபவர்களின் அறிவுக்கு எட்டும் வகையில் திட்டவட்டமாகவும் ஐயத்திற்கிடமின்றியும் சுட்டிக்காட்டுவது ஆகும் (கல்யாணி எதிர் நாராயண்* AIR SC 1700); Partition.

பிழை-பொருள்கோள் *பெயர்*

சட்ட வாசகங்களுக்குத் தவறாகப் பொருள்செய்துகொள்ளுவது (*ச.சொ.*1983); Misconstruction.

பிற்பட்ட வகுப்பினர் *பெயர்*

சமுதாய நிலையில் போதிய அளவு வளர்ச்சியுறாத வகுப்பினர்;

* சமுதாயம், கல்வி, பொருளியல் நிலையிலும் அது போன்ற பிற வகைகளிலும் பிற்பட்ட வகுப்பினர் (*கேசவ ஐயங்கார் எதிர் மைசூர் அரசு*, ILR 1955 Mys 597); Backward class.

* சமயம், இனம், குலம், பாலினம் அல்லது பிறப்பிடம் பிற்பட்ட வகுப்பினர் நிலைக்கான அளவுகோல் ஆகாது (*ஆந்திர அரசு எதிர் வி.பி. சாகர்*, AIR 1968 SC/379); Backward class.

பிறக்காத குழந்தை *பெயர்*

சட்டத்தின் பார்வையில் தாயின் கருவிலுள்ள குழவி. *இன்னும் பிறக்காத நிலையிலிருக்கும் ஒரு குழந்தையின் இறப்பை விளைவித்தல்* (*பி*.316, *இ.த.தொ.ச.*); Unborn child.

பிறர்க்குரிமைமாற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

காண்க : அயலுரிமையாக்குதல்.

பிறர்மண் துய்ப்புரிமை *பெயர்*

மற்றொருவர் நிலத்தின் நலனைப் பயன்கொள்வதற்கான உரிமை. (எ-டு.) மேய்ச்சல் உரிமை (*ச.சொ*.1968); Profit a prendre.

பிறவிமந்தன் *பெயர்*

பிறந்தது முதல் மனநலம் குன்றியவன் (*பி*.2(10), *ப.ச.*); Idiot.

பிறழ் சான்றுரைஞர் *பெயர்*

* தம்மை அழைத்த சார்பினருக்கு முதலில் ஆதரவாகவும் பின்னர் எதிராகவும் சான்று கூறுபவர் (*ரபீந்திரதேவ் எதிர் ஒரிசா அரசு* AIR 1977 SC 170); Hostile witness.

பின்தேதி *பெயர்*

ஆவணத்தில் கையொப்பமிடும் அல்லது எழுதிக்கொடுக்கும் நாளுக்குப் பிந்திய தேதியை இடுதல் (*பி*.68, *இ.மு.ச.*); Post date.

பின்பு பிறந்தகுழந்தை *பெயர்*

விருப்பாவணர் சொத்தை எழுதிவைத்ததற்கு அல்லது அவரது இறப்புக்குப் பின்பு பிறந்த குழந்தை (*ச.ஆ.சொ.க.*); After born child.

பின் வரைக்கட்டு *பெயர்*

முன்னரே மரபுரிமைவழிப் பெற்ற சொத்தையோ நலனையோ இழக்கச்செய்யும் நிபந்தனை (*பி*.29, *சொ.ம.ச.*); Condition subsequent.

பின்னடை உரிமை *பெயர்*

குறித்த நிகழ்ச்சி நடைபெறுகிற அல்லது குறித்த காலம் முடிவுறுகிற வரையில் செயற்படமுடியாத சொத்தின் துய்ப்புரிமை (*ச.சொ*.1983); Reversionary right.

பின்னடையுரிமையர் *பெயர்*

குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது நிகழ்ச்சிக்குப் பின்பு, சொத்துரிமையை எய்துபவர் (*பி*.15(2), *கு.தீ.ச.*); Reversioner.

பின்னழிப்பு *பெயர்*

ஒன்றைச் செய்த ஒருவர் அதைத் தாமே எதிர்மாறாக்குவது, பின்னறவு (*பி*.3, *இ.ஒ.ச.*); Revocation.

பின்னறவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

முன்னர் உள்ள ஒன்றைப் பின்னர் மீளப்பெற்று இல்லாமற்செய்தல். *உரிமைமாற்றலைப் பின்னறவுசெய்* (*பி*.42, *சொ.சா.ச.*); To revoke.

பின்னுறுதித் தீர்ப்பாணை *பெயர்*

குறித்துரைத்த காலத்திற்குப் பின்போ குறித்தகாலத்திற்குள் தகுந்த விளக்கம் தரக் குறையுற்றவர் தவறுகையிலோ செயல்விளைவுகொள்ளும் தீர்ப்பு (*ச.சொ.*1979); Decree nisi.

பு

புகலிடம் *பெயர்*

அரசியல் குற்றவாளிகளைச் சிறைசெய்தல், அவர்கள்மீது வழக்குத் தொடர்தல் ஆகியவற்றிலிருந்து காக்கும்பொருட்டு அளிக்கப்படும் மறைவிடம் (*ச.சொ.* 1983); Asylum.

புத்தீடு *பெயர்*

பழைய ஒப்பந்திற்கு மாற்றாக அதே சார்பினரோ வெவ்வேறு சார்பினரோ புதிய ஒப்பந்தம் செய்துகொள்வது (*பி.*62, இ.ஒ.ச.); Novation.

புத்துரு உசாவுகை *பெயர்*

உசாவி முடித்த வழக்கையே புத்தம்புதியதாக மீண்டும் ஆய்வுசெய்வது (*ச.சொ.*1983); Trial de novo.

புலனாய்வுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு நிகழ்வின் அல்லது சாட்டுரையின் உண்மைவிவரத்தைக் கண்டுபிடிப்பதற்காக அமைப்புமுறையான அல்லது முறைப்படியான உசாவுகையை மேற்கொள்ளுதல். *குடியரசுத்தலைவருக்கு எதிரான மன்றக்குற்றச்சாட்டைப் புலனாய்வு செய்த நாடாளுமன்ற அவை உறுப்பினர்கள்* (*உறுப்.* 61(4), இ.அ.); To investigate.

புறத்தாக்குகை *பெயர்*

அசையாச்சொத்தை உடைமையில் கொண்டுள்ளவரை அப்புறப்படுத்தி அவ்வுடைமையைத் திரும்பப்பெறுவதற்காக ஒருவர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கை; வெளியேற்றுகை (*ச.சொ.* 1983); Ejectment.

புனைவுரிமை *பெயர்*

புதுக் கண்டுபிடிப்புகளை ஆக்கவோ பயன்படுத்தவோ, விற்கவோ ஒருவருக்குக் குறிப்பிட்ட காலம்வரை அரசினர் வழங்கும் தனிச்சிறப்புரிமை. *புனைவுரிமைகள், புதுக்கண்டுபிடிப்புகள் மற்றும் வடிவமைப்புகள்* (இ*ப.* VII-I-49. இ.அ.); Patent.

பூ

பூத்தையல்கலை *பெயர்*

ஊசி நூல் கொண்டு துணிகளில் செய்யப்படும் அழகுவேலை (*ச.ஆ.சொ.க.*); Embroidary.

பெ

பெயரவர் *பெயர்*

எவர்மீது பணமாற்றுச்சீட்டு அல்லது பணம் வழங்கு ஆணை எழுதப்பெறுகிறதோ அவர் (*பி.*7, *மா.மு.ச.*); Drawee.

பெயரளவில் *பெயரடை*

உண்மையான அல்லது உள்ளபடியான என்பதிலிருந்து வேறுபடுத்தி அறிவதான பெயருக்கு மட்டுமே. *பெயரளவில் வாடகை* (*பி.*464, விளக்.1, இ.கு.தொ.ச.); Nominal.

பெயரளவு இழப்பீடு *பெயர்*

உரியவாறு அமையாமல் ஒப்புக்காக (= பெயரளவில்) அளிக்கப்படும் சரியீட்டுத் தொகை (*ச.சொ.*1983)

* நீதிமன்றம் பெயரளவு இழப்பீடு வழங்கி உண்மையான இழப்பீட்டைத் தள்ளுபடி செய்ததால், சட்டவுரிமை மீறப்பட்டிருக்கிறது (*இந்தியன் ஹ்யூம் நிறுமம் எதிர் வெங்கண்ணா*, AIR 1963 Andh. Pra. 58); Nominal damages.

பெயரிரவலர் *பெயர்*

தமது பெயரைக் கடனாகத்தந்த நடவடிக்கையுடன் தொடர்புடைய உரிமை எதற்கும் சொந்தம் இல்லாமல், பெயரளவில் மட்டுமே குறிக்கப்படும் ஒருவர், மலரணையர் (நெல்லை வழக்கு) (*பி.*2, *வ.ச.*); Benamidar.

பெருங்குற்ற வழக்கு *பெயர்*

காண்க: பிடியாணை வழக்கு

பெரும்பான்மை *பெயர்*

ஐம்பது விழுக்காட்டுக்கும் மேற்பட்ட எண்ணிக்கை (*உறுப்.*61(2), இ.*அ.*); Majority.

பெரும்பான்மையினர் *பெயர்*

பேசும்மொழி, பிறந்த இனம், தழுவும் சமயம், எண்ணிக்கை முதலியவற்றில், அரைப் பகுதிக்கும் மேற்பட்டுள்ள வகுப்பினர் அல்லது ஐம்பது விழுக்காட்டுக்கும் மேற்பட்ட அவை உறுப்பினர்கள். *நாடாளுமன்றத்தில் எழும் வினாக்கள் அனைத்தும் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் வாக்குகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்* (*உறுப்.*100(1), இ.*அ.*); Majority.

பெறுகடன் *பெயர்*

திருப்பித்தரவோ செலுத்தவோ வேண்டும் என்னும் வரைக்கட்டுடன், மற்றவருக்குக் கொடுக்கப்படும் தொகை. *அரசாங்கத்தினால் எழுப்பப்பெற்ற பெறுகடன்கள் அனைத்தும் மாநிலத் திரள் நிதியமாக அமைதல் வேண்டும்* (*உறுப்.*366(4), இ.*அ.*); Loan.

பெறுமதி *பெயரடை < பெறுமதியான*

கற்பனையாகவோ பெயரளவிலோ இருக்கும் ஒரு மறுபயனிலிருந்து தனிவேறுபட்டு; உண்மையாக உள்ள; மதிப்புடைய.

* *பெறுமதிக் காப்பாவணம்* (*பி.*30, இ.*த.தொ.ச.*); Valuable.

பெறுமதி ஆவணம் *பெயர் < பெறுமதியான+*

சட்ட உரிமை எதையும் ஆக்குதல், விரிவாக்குதல், மாற்றல், வரையறுத்தல், அழித்தல் அல்லது விட்டுவிடுதலைச் சுட்டுவதாகவோ, சட்டப்படி தாம் கட்டப்பட்டுள்ளதாக அல்லது குறித்த உரிமை தமக்கு எதுவுமில்லை என்பதாக ஒருவர் ஒப்புகைசெய்வதாகவோ உள்ள ஆவணம். *அந்த மேற்குறிப்பு ஒரு பெறுமதி ஆவணம் ஆகும்* (*பி.*30, இ.*த.ச.தொ.*); Valuable security.

பெறுமதி பெறப்பட்டது *தொடர்*

கடனுறுதிச் சீட்டானது பெறுமான மதிப்புள்ள மறுபயன் உடையது.

* *கடனுறுதிச்சீட்டை எழுதிக் கொடுப்பவர் பணத்தைப் பெறுகையில் 'பெறுமதி பெறப்பட்டது' என எழுதுவதும் அவ்வாறு எழுதவில்லை என்றாலும் அச் சீட்டுச் செல்லுந்தன்மையது என்று கொள்ளுவதும் நடைமுறைப் பழக்கமாகும் (கிளேட்டன் எதிர் காஸ்லிஸ்* 5 B&E 360); Value received.

பெறுமதி மறுபயன் *பெயர் < பெறுமதியான+*

உறுதிமொழிகொடுத்தவரைச் சேரும் நன்மை அல்லது உறுதிமொழிபெறுபவருக்கு உண்டாகும் நன்மைக்கேடு.

* *இதுவரையில் செலுத்தப்படாத அடைகடன் பெறுமதி மறுபயன் ஆகலாம் (டேவிஸ் எதிர் வோல்டன்* (1894) 3 Ch. 678); Valuable consideration.

பே

பேச்சுவழக்கு *பெயர்*

எழுத்து நடைக்குப் பொருந்தாவிடினும் பொதுமக்களின் உரையாடலில் கையாளப்படும் சொல் வழக்காறு (*ச.ஆ.சொ.க.*); Colloquialism.

பேரரசாண்மை *பெயர்*

காண்க : இறையாண்மை.

பொ

பொதும ஆவணங்கள் *பெயர்*

இறையாண்மை அதிகாரம்பெற்ற செயல்களின் அல்லது அவற்றின் பதிவுகளைக் காட்டும் ஆவணங்கள், அதிகாரக் குழுமங்கள், தீர்ப்பாயங்கள், இந்தியாவில் அல்லது அயல்நாடுகளில் உள்ள சட்டமன்ற, நீதிமன்ற, ஆட்சிய அலுவலர்கள் ஆகியோரின் செயல்களை அல்லது பதிவுகளைக் காட்டும் ஆவணங்கள்; தனியார் ஆவணங்களைப் பொறுத்து அரசு வைத்துவரும் பொதுப் பதிவுகள் (*பி.*74, இ.*ஒ.ச.*); Public documents.

பொதும ஊர்தியர் *பெயர்*

வேறுபாடின்றி எல்லோருடைய பொருள்களையும் தரைவழியாகவோ உள்நாட்டு நீர்வழியாகவோ ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வாடகைப்பணத்திற்காகக் கொண்டுசெல்வதைத் தொழிலாகக்கொண்டவரும், அரசினராக இல்லாதவராகவும் உள்ள ஓர் ஆளர் (= நபர்). *எதிர் வழக்காளிகள் இருப்புப்பாதை வழியாகப் பயணிகளை ஏற்றிச்செல்லும் பொதுஊர்தியர்களாக இருந்தார்கள்* (இ.*ப.*1, *பிற். அ.படி.* 29 *உ.ந.தொ.ச.*); Common carrier.

பொதுக் குற்றவிலக்களிப்பு *பெயர்*

பித்தர், இளவயதினர் செய்த குற்றங்களுக்கு விலக்களிப்பு இருப்பதைப் போன்று எல்லாக் குற்றங்களுக்கும் உள்ள பொதுவான விதிவிலக்குகள்; குற்றப் பொது விலக்கு (*ச.சொ.* 1983); General exception.

பொது நிலக்குடிவாரம் *பெயர்*

பங்குகள் சமமாகவோ சமமில்லாமலோ, உரிமையம் ஒன்றாகவோ வெவ்வேறாகவோ உள்ள தனித்தனிச் சொத்துகளின் சொந்தக்காரர்கள் அவற்றைப் பிரிக்காமல் பொதுவாகத் துய்க்கும் நலன், பொது நிலச் சொத்துரிமை (*ச.சொ.*1968); Tenancy in common.

பொதும *பெயரடை* < *பொதுமையான*

1. பொதுமக்களுக்குரிய, பொதுமக்கள் சார்பான (*பி.*126 (1), *ம.சா.ச.* 1951)

2. தனிப்பட்ட வாணிக நிறுமத்தினால் அல்லாமல் அரசினால் வகைசெய்யப்படுகிற அல்லது அரசினுடைய; பொதுத்துறை சார்ந்த (*பி.*21, *இ.த.தொ.ச.*)

பொதும அலுவலர் *பெயர்*

தனிப்பட்ட வாணிப நிறுமத்தில் பணியாற்றுபவர் என்பதற்கு எதிர்நிலையில் அமையும் அரசு அல்லது அரசு சார்ந்த பணியாளர்; பொதுத்துறை அலுவலர்.

அ) நீதிபதி.

ஆ) அனைத்திந்தியப் பணி உறுப்பினர்.

இ) அரசாங்கப் பணியிலிருக்கையில், ஒன்றியத்துத் தரை, கடல் அல்லது வான் படையிலுள்ள ஆணை அலுவலர், அரசிதழ்ப் பதிவுற்ற அலுவலர்.

ஈ) நீதிமன்றத்தில் ஏதேனும் பொருட்பாடுபற்றிப் புலனாய்வு செய்தல் அல்லது அறிக்கை செய்தலையோ, ஏதேனும் ஆவணத்தை உறுதி செய்தல் அல்லது பேணிக்காத்தலையோ, சொத்து எதையும் பொறுப்பில் கொள்ளுதல் அல்லது தீர்வுமுறை செய்தலையோ, நீதியக் கட்டளையை நிறைவேற்றுதலையோ, உறுதிமொழி செய்துவைத்தலையோ, ஆணைக்குப் பொருள்விளக்கம்கூறல் அல்லது ஆணையைப் பேணிவருதலையோ கடமையாகக் கொண்டிருக்கிற நீதிமன்ற அலுவலர் ஒவ்வொருவரும்; அத்தகைய கடமைகளையாற்ற நீதிமன்றத்தால் சிறப்பாக அதிகாரமளிக்கப்பெற்ற ஆட்கள்.

உ) ஆள் எவரையும் காவலில் வைக்க அல்லது அடைத்து வைக்கப் பதவிவழி அதிகாரம் கொண்டுள்ள அலுவலர்.

ஊ) குற்றச்செயலைத் தடுத்தல், குற்றச்செயல் பற்றிச் செய்தியளித்தல், குற்றவாளிகளை நீதிமுன் கொணர்தல், அல்லது பொதுமக்களின் உடல்நலம், காப்புநிலை மற்றும் வசதிகளுக்குப் பாதுகாப்பளித்தல் ஆகியவற்றைக் கடமைகளாகக் கொண்டுள்ள அரசு அலுவலர்.

எ) அரசு சார்பாகச் சொத்தினை எடுத்துக் கொள்ளல், பெற்றுக்கொள்ளல், பேணிக்காத்தல் அல்லது செலவு செய்வதையோ, அரசு சார்பாக நில அளவை, மதிப்பீடு அல்லது ஒப்பந்தம் செய்வதையோ, வருவாய்த்துறை நீதிக்கட்டளையை நிறைவேற்றுவதையோ, அரசு நிதி நலனைப் பாதிக்கும் பொருட்பாடு பற்றிப் புலனாய்வு செய்தல் அல்லது அறிக்கை செய்தலையோ, அரசு நிதி நலன் தொடர்பான ஆவணத்தை உருவாக்குதல், உறுதிசெய்தல் அல்லது பேணிக்காத்தலையோ, அரசு நிதிநலனைக் காப்பளிப்பதற்காகச் சட்ட மீறுகையைத் தடுத்தலையோ கடமையாகக் கொண்டுள்ள அலுவலர் ஒவ்வொருவரும்

*ஏ) அரசுப் பணியிலுள்ளவராகவோ, அரசிடம் ஊதியம் பெறுகிறவராகவோ, பொதுமைக் கடமையாற்றுவதற்காக அரசிடம் கட்டணம் அல்லது கழிவுத்தொகை பெறுகிறவராகவோ உள்ள அலுவலர் (பி.*2 (17), *உ.ந.தொ.ச.)*

** நிலக்கரிச் சுரங்க வருங்கால வைப்பு நிதிய ஆணையாளர், நிதியத்திலிருந்து வரையூதியம் பெறுவதால், பொதுத்துறை அலுவலர் ஆவார்* (நிலக்கரிச் சுரங்க வருங்கால வைப்புநிதி ஆணையர் எதிர் ரமேஷ் சந்தர் AIR 1990 SC 648); Public Officer.

பொதும நலன் *பெயர்*

சமூகத்தினரின் அல்லது அதன் ஒரு பிரிவினரின் நல்வாழ்வுக்கும் உரிமைகளுக்கும் தொடர்புடைய அக்கறை.

** பொது நலன் என்பது செய்தியறிதலையோ அல்லது வேடிக்கையான ஆர்வத்தையோ அவாவினையோ நிறைவுசெய்தல் எனப் பொருள்படாமல், சமூகத்தின் ஒரு பிரிவினரின் பணம் பற்றிய நலனையோ பாதிக்கப்படும் அவர்களுடைய சட்டப்படியான உரிமைகளையோ கட்டுப்பாடுகளையோ குறித்த அக்கறை எனப் பொருள்படும் (சவுத் ஹாட்டன் நிறும எதிர் ஈஸ்டரின் செய்தி நிறுவனம்* (1894) 1 QB 133); Public interest.

பொதுமநல வழக்கீடு *பெயர்*

உச்சநீதிமன்றம் தனியொருவரால் எழுதப்பட்ட கடிதத்தையும் வழக்காய்வுக்காக ஏற்றுச் செயல்புரிய வழிவகை செய்யும் சட்ட நடவடிக்கை.

** ஒரு குறித்தவகை வகுப்பை அல்லது குழுவைச் சார்ந்த ஆட்களுக்குச் சட்டத்தவறோ சட்டத்தீங்கோ விளைவிக்கப்படுகிறவிடத்து அல்லது அத்தகைய குறித்தவகை ஆட்களுக்கு அல்லது ஆட்களின் குழுவினுக்கு அரசமைப்பால் அல்லது சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமை மீறுகை செய்யப்படுகிறவிடத்து, கொணரப்படும் பொது(மை)நல வழக்கீட்டில் நீதிமன்றம் அதன் உத்தியுடன்கூடிய அதிகாரவரம்பைச் செலுத்தித் தீர்வுசெய்யலாம் (எஸ்.பி.குப்தா எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1982 SC 149); Public Interest litigation.

பொதுமக்கள் *பெயர்*

பொதுமக்களின் பிரிவு அல்லது சமூகம் சார்ந்த ஒருவர்.

** உலகத்தில் வாழ்பவர்கள் என்றோ இந்நாட்டு மக்கள் என்றோ பொருள் தராமல், குறித்தவகையில் சுட்டப்படும் ஒரு வட்டார மக்கள் அல்லது தொழில்முறை, அரசியல், சமுதாயம், கலை அல்லது உள்ளூர்த் தொடர்பான பொருட்பாட்டில் அக்கறையுள்ள சமூக உறுப்பினர் (பாட்டம் கப்பல் போக்குவரத்துக் கழகம் எதிர் உள்நாட்டு வருவாய் ஆணையர்* (1941) 2 KB 194); Public.

பொதுமன்னிப்பு *பெயர்*

குறித்த நாள்வரை அரசுக்கு எதிராக இழைத்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுகிற அல்லது அக்குற்றத்தை இல்லை என விளம்புகிற இறையாண்மைச் செயல் (*ச.சொ.*1983); Amnesty.

பொது முத்திரை *பெயர்*

ஒரு கழகம் தனது அடையாளக் குறியாகப் பயன்படுத்தும் பொறிப்பு (*ச.சொ.* 1979); Common seal.

பொதுவர் *பெயர்*

தங்களுக்கு இடையுள்ள பூசலைத் தீர்த்து வைப்பதற்காகச் சார்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர். *நீதிமன்றம் என்பது எல்லா நீதிபதிகளையும் நீதிநடுவர்களையும் மற்றும் பொதுவர்களைத் தவிரச் சான்றெடுக்க அதிகாரமளிக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கும் (பி.*3, *இ.சா.ச.*); Arbitrator.

பொதுவர்தீர்வு *பெயர்*

தமக்குச் சுட்டிக்குறிக்கப்பட்ட வாதெழுவினாவை ஆய்வுசெய்த பொதுவரின் முடிபு. *பன்னாட்டிடையே உள்ள பூசல்களைப் பொதுவர்தீர்வு வாயிலாகத் தீர்த்துக்கொள்வதை அரசு ஊக்குவிக்க வேண்டும் (உறுப்.51,(ஈ) இ.அ.)*; Arbitration.

பொதுவியல் பட்டி *பெயர்*

இந்திய மைய அரசும் மாநில அரசும் சட்டமியற்றுதற்குரிய பொருட்களின் தொகுப்புப் பட்டியல்; ஒருங்கியல் பட்டி (இ.ப. VII-iii, இ.அ.); Concurrent list.

பொதுவுரிமையாக்கம் *பெயர்*

ஒரு சொத்தின் சொந்தக்காரர் பொதுப் பயன்பாட்டுக்காக அளித்த சொத்தைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்வது (பி.2(19), அ.வ.ச.); Dedication.

பொய்ச்சான்று *பெயர்*

உண்மையே உரைக்கவேண்டும் என்று சூளுரைத்தபடியோ சட்டத்தின்படியோ கட்டுறுத்தப்பட்டிருக்கிற அல்லது ஒரு பொருள்குறித்து உறுதியுரைக்கச் சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிற ஒருவர், பொய் எனத் தான் அறிகிற அல்லது நம்புகிற ஒன்றைப் பற்றிச் சொல்லும் கூற்று. *பொய்ச்சான்று சொன்ன குற்றத்திற்காக 'ஓஎ' என்பவரைச் சிறைசெய்து நீதிநடுவர் முன் நிறுத்துகின்றனர் (பி.165 வி.கா.(இ) இ.த.தொ.ச.)*; Perjury.

பொய்ப்பிக்கப்பட்டது *பெயர்*

நீதிமன்றம் பொருட்பாடுகளை நன்கு ஆராய்ந்த பின்னர் ஒரு பொருளியம் இலது என்று நம்பினாலோ, பொது அறிவுள்ள ஒருவர் இலது என்று கருதிச் செயலாற்றும் சூழ்நிலை உள்ளது என்று கருதினாலோ அப்பொருளியம் மெய்ப்பிக்கப்படவில்லை எனக் கொள்ளும் நிலை (ச.சொ.1983); Disproved.

பொய்ப்புனைவு ஆவணம் *பெயர்*

போலியாக ஆக்கமைவுசெய்த ஆதாரச்சான்று.

* *பொய்ப்புனைவு ஆவணம் இரண்டு சார்பினர்களையும் கட்டுறுத்துவதாகவோ சட்டமுறைச் செயல் விளைவு உள்ளதாகவோ அமையாது (சாகிப்தாஸ் எதிர் கௌரிலால்* AIR 1965, J&K11); Fictitious document.

பொய்ப்புனைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஏமாற்றும் பொருட்டு (ஒரு கையொப்பம், வங்கித்தாள் போன்றவற்றின்) படியம் ஒன்றை உருவாக்குதல், கள்ளப்படைப்புச் செய்தல். *அதிகார ஆவணத்தைப் பொய்ப்புனைவுசெய்கிற எவரொருவரும் ஏழாண்டுகள் வரையில் சிறைத்தண்டனை.. விதித்துத் தண்டிக்கப்பட வேண்டும் (பி.466, இ.கு.தொ.ச.)*; To fabricate.

பொய்மைக் குறிப்பு *பெயர்*

உண்மையை மறைத்தும் திரித்தும் கூறுவது (ச.சொ.1983); Suggestio falsi.

பொய்யான ஒளி *பெயர்*

கப்பலோட்டியைத் திசைதிருப்பும் உட்கருத்துடன் காட்டப்படும் அடையாள ஒளி. *பொய்யான ஒளி எதனையும் காட்டுகிற எவரொருவரும் சிறைத் தண்டனையோ, பணத்தண்டமோ, இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார் (பி.281, இ.கு.த.தொ.)*; False light.

பொருட்பாடு *பெயர்*

1. அக்கறை அல்லது தொடர்பு உடைய ஒரு பொருளியம், நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சியின் போக்கைக் குறித்தோ, ஒரு சூழ்நிலை, நிலைமை அல்லது வினாப்பொருளைக் குறித்தோ கருதப்படும் நுதல்பொருள். *நிதிப் பொருட்பாடுகளில் நடைமுறை (உட்.தலை. உறுப்.*112, *இ.அ.*); Matter.

2. நீதிமன்றத்தில் ஆய்வுசெய்ய அல்லது மெய்ப்பிக்கப் படவேண்டிய ஒன்று. *வாதெழுவினாவாக உள்ள பொருட்பாடு (இப.* 14(1), *கா.வ.ச.*); Matter.

பொருட்பிணைக் கொடை *பெயர்*

ஓர் உரிமைமாற்றலில் பயன்தரும் நன்மையும் சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைப்பொறுப்பும் அமைந்துள்ள நிலையில் ஒருவருக்கு அளிக்கப்படும் சொத்து, பொறுப்புச்சுமைக் கொடை; அளிப்பு. *பொருட்பிணைக் கொடையின் பயன்பெறுவோர் அதிலுள்ள சுமையையும் ஏற்கவேண்டும் என்பது சட்டக் கோட்பாடு (பி.*127, *சொ.மா.ச.*); Onerous gift.

பொருட்பிணைப்பொறுப்பு *பெயர்*

ஆட்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தாலோ சட்டத்தின் செயற்பாட்டாலோ ஒருவர் மற்றொருவருக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காக, அவருடைய அசையாச்சொத்து அடைமானம் ஆகாத நிலையில் காப்புறுதிப்பிணையமாக்கப்படும் செயல் (*பி.*100 *சொ.மா.ச.*)

* *பொருட்பிணைப் பொறுப்பை வாய்மொழியாக ஏற்படுத்த முடியாது; எழுதிப் பதிவு செய்ய வேண்டும் (சத்தியநாதன் எதிர் வேங்கடராமன்* 1955(1) MLJ. 399)

* *பொருட்பிணைப் பொறுப்பு ரூ.*100/- *க்குக் குறைவாக இருந்தால் வாய்மொழியாக ஏற்படுத்தலாம் (விசுவநாதன் வழக்கு* AIR 1939 *சென்னை* 202); Charge.

பொருண்மை *பெயர்*

காண்க: பொருளியம்.

பொருள்கோள்செய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சட்ட நடவடிக்கை, வாசகம், உரை அல்லது சொற்களுக்கு உரிய பொருளை ஒருவர் உளங்கொள்ளுதல் அல்லது விளக்குதல். *இக்கூறு சட்டமன்றத்தில் கலந்தாய்வுசெய்தலைத் தடுப்பதாகப் பொருள்கோள் செய்யப்படுதல் ஆகாது (உறுப்.* 203(1), *இ.அ.*); To construe.

பொருள்சுட்டிய *பெயரடை*

(= ஒரு பொருளைப் பற்றிய); வழக்கில் தொடர்புடையவரை மட்டுமின்றி உலகினர் அனைவரையும் கட்டுப்படுத்துகிற (*ச.சொ.*1983); In rem.

பொருள்மயக்கம் *பெயர்*

எழுதப்பெற்ற முறையாவணத்தின் சொற்களுக்குப் பொருள்கூறுகையில் உண்டாகும் உறுதியற்றநிலை (*பி.*93, *இ.சா.ச.*); Ambiguity.

பொருள்வரையறை *பெயர்*

சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருட்சிறப்பைப் பற்றிய விளக்கம். *அரசின் கொள்கையினை வழிச்செலுத்து நெறிகளின் - பொருள் வரையறை (பகு.* IV, *உறுப்.*36, *இ.அ.*); Definition.

பொருளியத் தவறு *பெயர்*

ஒரு பொருளியத்தின் உளமையையோ பொருளியமும் சட்டமும் கலந்த வினாப்பொருள் சார்ந்த உரிமையின் உளமையையோ பிழையாகக் கருதிக் கொள்ளுகை (*ச.சொ.*1983); Mistake of fact.

பொருளியம் *பெயர்*

புலனறிபொருள், பொருளின் நிலை அல்லது பொருளின் உறவு என்று பொருள்தருவதுடன், ஒருவரது உணர்வுக்குத் தெரிகிற மனநிலை என்பதையும் உள்ளடக்கிய உண்மைவிவரம், பொருண்மை, நிகழ்மை (= சங்கதி) *குறிப்பிட்ட ஒன்றை ஒருவர் கேட்டார் அல்லது பார்த்தார் என்பது ஒரு பொருளியம்* (*பி.*3 *எ.டு:* (*ஆ*) *இ.-சா.ச.*); Fact.

பொறுத்தேற்றல் *பெயர்*

ஒரு குறையை மன்னித்தல் அல்லது புறக்கணித்தல். *காலத்தாழ்வைப் பொறுத்தேற்றல்* (*பி.*637 *ஆ.* (*அ*), *நி.ச.*); Condonation.

பொறுப்பிலி உரை *பெயர்*

தனக்குப் பொறுப்பில்லை என்று மேற்குறிப்பாளரால் எழுதப்படும் சொற்றொடர் (*ச.சொ.*1983); Endorsement "without recourse".

பொறுப்புக்கட்டளை *பெயர்*

சொத்தின் உடைமையுரிமையுடன் இணைந்துள்ளதும், மற்றவரின் நன்மைக்காகவோ மற்றவரோடு சேர்ந்து தமது நன்மைக்காகவோ அமைவது எனச் சொந்தக்காரரால் விளம்பப்படுவதுமான பொறுப்புரிமை அமைப்பு. *ஒரு கல்வி நிறுவனம் நிலைக்கட்டளை அல்லது பொறுப்புக்கட்டளை எதன் கீழும் நிறுவப்பட்டிருக்கிறது எனின் 1ஆம் பிரிவு அதற்குப் பொருந்தாது* (*உறுப்.*28(2) *இ.அ.*); Trust.

பொறுப்புவிடுவி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவரையோ சொத்தையோ கட்டுப்பாட்டிலிருந்து ஒருவர் விடுதலைசெய்தல் (*பி.*9(1) (*ஆ*), *உ.க.ச.*); Exoneration.

பொறுப்புறுதி *பெயர்*

கடனடைக்கவோ கடமையாற்றவோ தவறும் நேர்வில், அதற்கெனத் தம்மைக் கட்டுறுத்திக்கொள்பவர் தரும் உறுதிமொழி. *ஒப்பந்தம் பற்றிய பொறுப்புறுதி* (*பி.*126, *இ.ஒ.ச.*); Guarantee.

பொறுப்புறுதியர் *பெயர்*

ஓர் உறுதிமொழியால் தம்மைக் கட்டுறுத்திக் கொள்பவர் (*ச.சொ.*1979); Guarantor.

போ

போக்குவரத்து *பெயர்*

ஆட்களையோ சரக்குகளையோ ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுசெல்லுதல் (*ச.ஆ.சொ.க.*); Transport.

போக்குவரவு *பெயர்*

போக்குவரத்து வழித்தடத்தில் மக்களையோ ஊர்திகளோ போய்வருகை *போக்குவரவு அடையாளக்குறிகள்* (*பி.* 2(31) *இ.ஊ.ச.*); Traffic.

போரிடைக் காப்பு *பெயர்*

போரிடும் நாட்டுக் குடிமக்கள் ஒரு நாட்டிற்குள் வந்துபோக அந்நாட்டு அரசு அளிக்கும் காப்பளிப்பு (*ச.சொ*. 1983); Safe conduct.

ம

மக்கள்கணக்கெடுப்பு *பெயர்*

பாலினம், வயது, வாழ்க்கைத்தொழில் முதலிய விவரங்களுடன் காலமுறையாக (= பத்தாண்டுக்கு ஒருமுறை) எடுக்கப்படும் மக்களின் எண்ணிக்கை. *முந்தைய மக்கள் கணக்கெடுப்பில் தொடர்புற்ற எண் வடிவுகள்* (*உறுப்*. 55(3), *விளக். இ.அ.*); Census.

மக்கள்தொகை *பெயர்*

குறிப்பிட்ட ஒரு பரப்பிடத்தில் வாழும் அனைத்து வகை மக்களின் எண்ணிக்கை. *மக்கள் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மக்கள்தொகை* (*உறுப்*.55, *விளக். இ.அ.*); Population.

மக்கள் பேரவை *பெயர்*

பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றக் கீழவை. *நாடாளுமன்றம் மாநிலங்கள் அவை, மக்கள் பேரவை என்னும் இரண்டு அவைகளைக் கொண்டிருக்கும்* (*உறுப்*.79, *இ.அ.*); House of the People.

மக்களாட்சி *பெயர்*

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்கள் அரசாங்கத்தை நடத்தும் அரசியல் அமைப்புமுறை. *இந்தியா இறையாண்மை சமயநெறி, சமயச்சார்பின்மை, மக்களாட்சி சார்ந்த ஒரு குடியரசு* (*முகப். இ.அ.*); Democracy.

மகவேற்பு *பெயர்*

ஒருவர் மற்றொருவரின் மகனையோ மகளையோ தமக்கு மரபுரிமையராகச் சட்டமுறைப்படி ஏற்றுக்கொள்ளும் செயல். *தத்தெடுப்பு மகவேற்பு மைந்தன்*. (*பி*.7, *இ.இ.கா.ச.*); Adoption.

மட்டுப்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தண்டனையின் அல்லது இழப்பீட்டின் கடுமையைத் தணித்தல் அல்லது குறைத்தல். *குற்றத்திற்கான தண்டனையை மட்டுப்படுத்தாது* (*பி*. 352, *விளக். இ.த.தொ.ச.*); To mitigate.

மணக்கொடை *பெயர்*

திருமணத்தின்போது கொடுக்கப்படும் (அன்பளிப்பு) சீர்வரிசை (*இ.ப*.1, *இன*. 29 *இ.மு.ச.*); Dower.

மணமிலிப்பிறப்பு *பெயர்*

முறைப்படி திருமணங்கொள்ளாத பெற்றோருக்குப் பிறந்த குழந்தைநிலை (*பி*.50 (3), *கு.ச.*); Illegitimacy.

மணமுறிவு *பெயர்*

சட்டமுறைப்படி திருமண உறவு அற்றுப்போவது; விவாகரத்து. *திருமணமும் மணமுறிவும்* (*இ.ப*.VII-III-5 *இ.அ.*); Divorce.

மணமுறிவுகொள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கணவனோ மனைவியோ தங்களுக்கு கொண்டிருந்த காதலையோ பற்றையோ விலக்கிக்கொள்ளுதல் (*ச.சொ.*1983); To alienate.

மணவாழ்வுரிமை *பெயர்*

கணவனும் மனைவியும் கூடி வாழ்வதற்கும் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கும் உள்ள உரிமை, கலந்துறை உரிமை. *மணவாழ்வுரிமைகளை மீட்டுத் தருவதற்கான தீர்ப்பாணை* (*கட்*.21 *விதி* 32(1), *உ.ந.தொ.ச.*); Conjugal right.

மணவாழ்வுரிமை மீட்டளிப்பு *பெயர்*

தகுந்த காரணமின்றித் தம் வாழ்க்கைத்துணை தம்மிடமிருந்து பிரிந்து வாழ்வதால் குறையுற்ற கணவனோ மனைவியோ வேண்டிக்கொண்ட நிலையில், பிரிந்துசென்றவர் தம் வாழ்க்கைத்துணையுடன் குறித்தகாலத்திற்குள் மீண்டும் சேர்ந்து வாழவேண்டும் என்று நீதிமன்றம் இடும் கட்டளை (*கட்*.21 *விதி*. 32, *உ.ந.தொ.ச.*); Restitution of conjugal right.

மணவுரிமை வழக்கு *பெயர்*

திருமண உரிமைகளுக்கு நேர்ந்த தீங்குக்குத் தீர்வழி கோரும் சட்ட நடவடிக்கை (*முகப்*. *இ.தி.வ.ச.*); Matrimonial cause.

மதிப்பீடு *பெயர்*

பெறுமான விலையை அறிந்து கொள்வது *மதிப்பீடுகளைப் பொறுத்தவரை சட்டமன்றத்தின் நடைமுறை* (*உறுப்*.203(1), *இ.அ.*); Valuation.

மதிப்புறு செலுத்தம் *பெயர்*

பணமாற்றுச்சீட்டுக்குத் தொகையளிக்க மறுத்தநிலையில், அதை வரைந்தவரின் நாணயத்தைக் காப்பதற்காக வேறொருவர் பணம் கொடுப்பது (*பி*.113, *மா.மு.ச.*); Payment for honour.

மதிப்புறு பயன் *பெயர்*

ஒன்றன் பெறுமதிக்கு மாற்றாகப் பெறுமதியுள்ள மற்றொன்றை அளிப்பது (*ச.சொ.*1983); Quid Pro Quo.

மதிப்புமறு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பணமாற்றுச்சீட்டில் பெயர் எழுதப்பெற்றவர் அதை ஏற்கமறுத்தல் அல்லது ஏற்றாலும் ஒப்பியவாறு பணம் செலுத்தத் தவறுதல் (*பி*.130 *விளக்*. (*ஆ*), *இ.ஒ.ச.*); To Dishonour.

மதுத்தொடர்பான *பெயரடை*

மதுபானத் தொழில், வரி, துறை பற்றிய (*நமச்சிவாயம் எதிர் சுப்பிரமணியன்* 34, IC 927); Abkari.

மயக்கமூட்டி *பெயர்*

உட்கொண்டாலோ ஊசி வழிச் செலுத்தினாலோ மயக்கம், தூக்கம் அல்லது மரத்தநிலை ஏற்படுத்துகிற அல்லது இடர்விளை மருந்துப்பொருள் என அறிவிக்கப்பட்டிருக்கிற பொருள் (எ-டு= மதுக்குடிவகை) (*இ.ப*.VII-I-84, *இ.அ* .); Narcotics.

மரண தண்டனை *பெயர்*

காண்க : இறப்புத் தண்டனை.

மரபுரிமை *பெயர்*

1. ஒரு குடிவழியில் பிறப்பு முறையினால் சொத்தைப் பெறும் உரிமை (= *வாரிசுரிமை*) (*ச.சொ*.1983); Succession by descent.

2. விருப்பாவணம் எழுதாது இறந்தவரின் வழிமுறையுரிமையருக்கு வரும் சொத்துரிமை (*ச.சொ*.1983); Inheritance.

மரபுரிமையர் *பெயர்*

* விருப்பாவணத்தின் வழியேனும் விருப்பாவணம் இல்லை எனினும் இறந்தவரின் அடைசொத்துக்கு இறங்குரிமையுள்ளவர் (*குல்சரா சிங் எதிர் தேஜ் கவுர்* AIR 1961 Punj. 288);

மரபுவழக்கம் *பெயர்*

நீண்ட நெடுங்காலமாக நிலைத்து எழுதாச் சட்டமாகக் கருதப்படும் நடைமுறை. *சட்டம் என்பது மரபுவழக்கம் எதனையும் உள்ளடக்கும்* (*உறுப்*. 13(3), *இ.அ*.); Custom.

மரபுவழிஇறங்குரிமை *பெயர்*

விருப்பாவணம் எழுதாது இறந்துபோன மூதாதையரின் சொத்து உரிமையம் முதலியன பிறப்புரிமையினால் ஒருவரைச் சென்று அடைவது; இறங்குரிமை (*ச.சொ*.1979); Inheritence.

மரமுவழிமுன்னோர் *பெயர்*

ஒரு குடும்பத்தில் குருதி வழி உறவுள்ள முந்தையர். *நேர்முக மரபுவழி முன்னோர்* (*பி*.3, (ஊ) (ii), *இ.தி.ச*.); Ascendents.

மருத்துவச் சட்டவியல் *பெயர்*

மருத்துவ இயலின் பிரிவுகளைச் சட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் அறிவியல் (*ச.சொ*.1983); *Medical jurisprudance.*

மருமக்கள்தாயம் *பெயர்*

ஆண் வழியிலன்றிப் பெண்வழியில் சொத்தினை அடையும் வழிமுறை உரிமை (*பி*. 7(1), *அ.வ.ச*.); Marumakkattayam law.

மறுஆய்வு *பெயர்*

குறித்தசில சூழ்நிலைகளில் ஒரு நீதிமன்றம் தான் அளித்த தீர்ப்பையே மறுபடியும் ஆராயும் செயல். *தீர்ப்புரையின் மறு ஆய்வு* (*கட்*. 47 *வி*.1, *உ.ந.தொ.ச*.); Review.

மறுத்துவாதிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு சட்டம் சாற்றிய கொள்கைக்குச் செயல்விளைவு அளிக்கவில்லை அல்லது வழங்கிய உரிமைகளுக்கு முரணாகிறது என்னும் காரணங்காட்டி அதற்கு எதிராக வழக்கு நடவடிக்கை எடுத்தல். *நீதிமன்றம் எதிலும் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது* (*உறுப்*. 31, *இ.அ*.); To call in question.

மறுப்புரை *பெயர்*

கடனுறுதிச்சீட்டோ பணமாற்றுச்சீட்டோ ஏற்கப்படாமல் அல்லது செலுத்தப்படாமல் மதிப்புமறுக்கப்படும் நிலையில், தகவான காலத்திற்குள் அம்மறுப்பு விவரம் பற்றிச் சான்றுறுதி அலுவலர் அளிக்கும் சான்றிதழ் (*பி*. 2(36), *இ.நி.ச*.); Protest.

மறுபயன் *பெயர்*

வாக்குறுதியளிப்பவர் விரும்பியவண்ணமே, வாக்குறுதிபெறுபவரோ வேறொருவரோ மேற்கொள்ளும் செய்கை, செய்யாமை அல்லது உறுதிமொழி (*பி.* 2 (ஈ), *இ.ஒ.ச.*); Consideration.

மறுவிடை *பெயர்*

காப்புரையில் எழுப்பிய வினாவுக்கு வழக்காளி எழுத்து வழி அளிக்கும் விடை. *தொடங்கும் சார்பினர் பொதுப்படையாக மறுவிடை அளிக்கலாம்* (*கட்.* 18 *வி*3, *உ.ந.தொ.ச.*); Reply (by plaintiff).

மறைகாப்பு ஆணையுறுதி *பெயர்*

ஆட்சிப் பொறுப்பேற்பவர்கள் பதவி ஏற்கும்போது அரசின் மறையங்களை (= இரகசியங்களை)க் காப்பாற்றுவதாகக் கூறும் சூளுரை. *ஆளுநர் அமைச்சருக்குப் பதவியும் மறைகாப்பும் பற்றிய ஆணையுறுதிகளைச் செய்துவைக்க வேண்டும்* (*உறுப்.* 164(3), *இ.அ.*); Oath of secrecy.

மறைமுக அவதூறு *பெயர்*

காண்க : பழிப்பூறு வாதம்.

மறைமுகச் சான்று *பெயர்*

வாதப்பொருளாகவோ மெய்ப்பிக்க வேண்டியதாகவோ உள்ள பொருளியத்தின் உளமை குறித்துச் சட்டமுறை ஊகத்திற்கு வழிவகுக்கும் சான்று; சூழ்நிலைச்சான்று (=சந்தர்ப்ப சாட்சியம்.) (*ச.சொ.* 1983); Indirect evidence.

மறைவான வாக்கு *பெயர்*

ஒரு தேர்தலில் தாம் விரும்பியவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒருவர் மற்றவர் அறியாதவாறு பயன்படுத்தும் வாக்குரிமை; இரகசிய வாக்கு. *குடியரசுத் தலைவரின் தேர்தலில் வாக்களிப்பு மறைவான வாக்கு வாயிலாக இருக்கவேண்டும்* (*உறுப்.* 55(3), *இ.அ.*); Secret ballot.

மன்றக்குற்றச்சாட்டு *பெயர்*

நாட்டுத் துரோகம் போன்ற பெருங் குற்றச்செயல்களுக்காக ஒருவர் மீது நாடாளுமன்றத்தில் கொணரப்படும் கடும்பழிச்சாட்டு. *குடியரசுத் தலைவர்மீது மன்றக்குற்றச்சாட்டுக்கான நடைமுறை* (*உறுப்.* 61(1), *இ.அ.*); Impeachment.

மன்றக்கோரிக்கை *பெயர்*

முறைப்படி ஓர் அவையில் முன்வைக்கப்படும் செயற்குறிப்பு. *மன்றக்கோரிக்கை செய்யப்படுதல் ஆகாது* (*உறுப்.* 12, *இ.அ.*); Motion.

மன்றச் செலுத்தம் *பெயர்*

நீதிமன்றத்தில் தொடங்கிய வழக்கு நடவடிக்கையின் பொருட்டு நீதிமன்றத்தின் அலுவலரிடமோ வங்கியிடமோ செலுத்தப்படும் வைப்பீட்டுத் தொகை (*வி.* 24, *உ.ந.தொ.ச.*); Payment into court.

மன்றத்தீர்மானம் *பெயர்*

முன்மொழியப்பெற்ற ஒன்றைப்பற்றி அவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் செய்யும் முடிவு. *சாற்றாணைக்கு நாடாளுமன்ற இரண்டு அவைகளின் மன்றத் தீர்மானங்கள் வாயிலாக ஒப்புதலளிக்கப்பட்டிருக்கிறது* (*உறுப்*. 352(4), *இ.அ.*); Resolution.

மன்றம் *பெயர்*

ஆய்வு, அறிவுரை, ஆட்சிமுறை, சட்டம் அல்லது பல்கலைக்கழகம் சார்ந்த அவை (*பி*.2, *ப.க.ச.*); Council.

மன்றுசுட்டிய உரிமை *பெயர்*

பொதுப்படையாக மக்கள்மீதோ, குறித்த சிலர் தவிர்த்து உலகோர் அனைவரின் மீதோ சுமத்தப்படுவதும், அதற்கு எதிராக எவரும் எதையும் செய்தல் ஆகாது எனத் தடையிடுவதுமான கடப்பாடு. (எ-டு.) 'அ' என்பவரின் நிலத் துய்ப்புரிமையில் எவரும் குறுக்கிடல் ஆகாது (*ச.சொ*.2003); Right in rem.

மன்னர் மானியம் *பெயர்*

இந்திய அரசு முன்னைக் குறுநில மன்னர்களின் ஆட்சிப்பரப்பை இணைத்துக்கொண்டதற்கு ஈடாகக் காலந்தோறும் வழங்கிவந்த உதவித்தொகை. *அரசர்களின் மன்னர் மானியத் தொகைகள்* (*உறுப்*.291, *இ.அ.*); Privy purse.

மன்னித்துவிடுவி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பழி, குற்றம், உறுதிமொழி, கடமை அல்லது தீவினையிலிருந்து விடுதலை அளித்தல். *கடப்பாட்டிலிருந்து மன்னித்து விடுவி* (*பி*. 342(2), *நி.ச.*); To absolve.

மன்னிப்புக்கோருகை *பெயர்*

நீதிமன்றம் விடுதலைசெய்யவோ தண்டனையைக் குறைக்கவோ கருதும்வகையில் குற்றஞ்சுமத்தப்பட்டவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்காக வருந்துகை (*பி*. 4, *நீ.அ.ச.*); Apology.

மனச்சாய்வு *பெயர்*

* ஒருவர் தன் வழக்கில் தானே நீதிபதியாக முடியாது மற்றும் நீதி வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, அது வெளிப்படையாகவும் ஐயத்திற்கு அப்பாற்பட்டதாகவும் அமையவேண்டும் என்னும் சட்டக் கோட்பாட்டின் அடிப்படையைச் சுட்டுகிற உள்ளத்தின் ஒருதலைச் சார்பு (*நாகேஸ்வரராவ் எதிர் மாநில அரசு* AIR 1959 SC 1376); Bias.

மனித இழிதொழில் வாணிகம் *பெயர்*

சட்டமுரணான அல்லது பெயருக்குக் களங்கம் விளைவிக்கிற அலுவல்தொழில் அல்லது செய்கைப்பாடு. *மனித இழிதொழில் வாணிகம்* (*உறுப்*. 23, *இ.அ.*); Traffic in humanbeing.

மனு *பெயர்*

ஒரு நீதிமன்றத்தின் அதிகாரவரம்புக்குள் வரும் பொருள் குறித்த நீதிய நடவடிக்கைக்காக எழுத்துருவில் அதற்குச் செய்யப்படும் முறைப்படியான விண்ணப்பம் (*உறுப்*. 329, *இ.அ.*); Petition.

மா

மாகாணச் சட்டகை *பெயர்*

இந்தியா மன்றங்கள் சட்டங்கள் அல்லது இந்திய அரசாங்கச் சட்டம் 1915இன் கீழ் ஒரு மாகாணத்தின் மன்றத்தமர் ஆளுநரால், மன்றத்தமர் துணைநிலை ஆளுநரால் அல்லது மன்றத்தமர் தலைமை ஆணையாரால் செய்யப்பட்ட ஒரு சட்டகை அல்லது இந்திய அரசாங்கச் சட்டகையின் கீழ் உள்ளூர்ச் சட்டமன்றத்தால் அல்லது மாகாண ஆளுநரால் செய்யப்பட்ட ஒரு சட்டகை. *இந்திய அரசாங்கச் சட்டம்* 1935*இன் கீழ், மாகாணச் சட்டமன்றத்தால், மாகாண ஆளுநரால் அல்லது கூர்க் சட்ட மேலவையால் இயற்றப்பட்ட ஒரு சட்டகை* (*பி*.3 (46), *பொ.வ.ச*.); Provincial Act.

மாண்புறுத்து நீதிமன்றம் *பெயர்*

தனது அதிகாரவுரிமையை அவமதிப்பவருக்குப் பணத்தண்டமோ சிறைத்தண்டனையோ விதிக்கும் அதிகாரம் பெற்ற முறைமன்றம். *உச்ச நீதிமன்றம் ஒரு மாண்புறுத்து நீதிமன்றமாக இருத்தல்* (*உறுப்*. 129, *இ.அ*.); Court of record.

மாநில அரசுப் பணியிடம் *பெயர்*

* மாநில ஆட்சியக் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேலையமைவு என்பதால் அரசு அப்பணியிடத்தை உருவாக்கலாம், ஒழிக்கலாம். பணியிடத்துக்கு அமர்த்தப்பட்டவர்களின் பணிவரைக்கட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்தலாம் (*அசாம் அரசு எதிர் கனக் சந்திர தத்தா* AIR 1967 SC 884); Post under the State Government.

மாநிலங்கள் அவை *பெயர்*

இந்தியாவில் நாடாளுமன்றத்தின் மேலவை. *மாநிலங்கள் அவை பெயர்குறித்தமர்த்திய* 12 *உறுப்பினர்களையும்* 238*க்கு மேற்படாத தேர்ந்தெடுக்கப்பெற்ற சார்பாளர்களையும் கொண்டிருக்கும்* (*உறுப்*. 80(1), *இ.அ*.); Council of States.

மாநிலப் பட்டி *பெயர்*

ஒரு மாநில அரசு சட்டமியற்றுதற்குரிய இனங்களின் தொகுப்புப் பட்டியல் (*இ.ப*.VII-ii, *இ.அ*.); State list.

மாவட்ட நீதிமன்றம் *பெயர்*

ஒரு வருவாய் மாவட்டம் முழுவதற்கும் உரிமையியல் குற்றவியல் உசாவுகைசெய்யும் அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றம். (*பி*. 2(4), *உ.ந.தொ.ச*.); District court.

மாற்றமர் அடைமானவுரிமை *பெயர்*

ஓர் அடைமானச் சொத்தில் உரிமையுள்ளவர் அடைமானக் கடனை அடைத்து அச்சொத்தை மீட்கும்போது, அடைமானமீட்பு, மீட்புரிமை அடைப்பு, அச்சொத்து விற்பனை ஆகியவற்றைப் பொறுத்து, அடைமானம் பெறுபவருக்கு அடைமானம் வைப்பவர் மீதோ அடைமானம்பெற்ற மற்றவர்மீதோ என்னென்ன உரிமைகள் உண்டோ அந்தந்த உரிமைகளை அவர் அடைகிறார் என்னும் சட்டக் கோட்பாடு (*பி*.92, *சொ.மா.ச*.); Right of subrogation.

மாற்றமைவுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொது நோக்கத்தையும் கருப்பொருளின் செயல்விளைவையும் விட்டுவிட்டு வவரங்களில் புதிய கூறுகளைப் புகுத்துதல். *நடைமுறைவிதிகள் மக்கள் பேரவைத் தலைவரால் செய்யப்படும் மாற்றமைவுகளுக்கு உட்பட்டுச் செயல்விளைவு கொள்ளும்* (*உறுப்*.118(2), *இ.அ*.); To modify.

மாற்றல்செய்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சார்பினர்களின் செயலாலோ சட்டத்தின் செயற்பாட்டாலோ ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அசையாச் சொத்தின் உரிமையைக் கைமாற்றி அளித்தல் (*பி*.44, *சொ.மா.ச.*); To transfer.

மாற்றல்செய்பவர் *பெயர்*

உரிமையை மாற்றல்செய்து கொடுப்பவர். *உரிமையை மாற்றல்செய்பவர் சொத்தின் வெளித்தோற்றச் சொந்தக்காரராக இருக்க வேண்டும்* (*பி*. 41, *சொ.மா.ச.*); Transferor.

மாற்றல்பெறுபவர் *பெயர்*

மாற்றல்செய்த உரிமையைப் பெற்றுக்கொள்பவர்.

* *சொத்தை நல்லெண்ணத்தில் வாங்கியிருக்கிறார் என்று மெய்ப்பிக்கும் சுமை உரிமை மாற்றல் பெறுபவருக்கு உண்டு (சூரஜ் ரத்தன் வழக்கு.)* (1965) *உ.நீ*.295); Transferee.

மாற்றளிப்பு *பெயர்*

1. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் சொத்தின் உடைமையுரிமையை மாற்றல்செய்யும் செயல்.
* *பாகப் பிரிவினையில் புதிய உரிமையோ நலனோ இல்லை என்பதால் அது மாற்றளிப்பு ஆகாது (இராதாகிருஷ்ணையா எதிர் சரசம்மா*. ILR 1951 *சென்னை* 607); Conveyance.
2. சொத்துரிமையை முறைப்படி மாற்றல்செய்யும் முறையாவணம் (*ச.சொ*.1983); Instrument of conveyance.

மாற்றளிப்புச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவர் தமது சொத்துரிமையை முறைப்படி ஆவணம் எழுதிப் பதிவுசெய்து மற்றொருவருக்குக் கைமாற்றிக்கொடுத்தல்; 'அ' தமது பண்ணைச்சொத்தை 'ஆ'வுக்கு மாற்றளிப்புச் செய்ய உடன்படுகிறார் (*பி*. 23, *வி.கா*. (i), *இ.ஒ.ச.*); To convey.

மாற்றாந் தந்தை *பெயர்*

ஒருவருக்கு நேரடித் தந்தையாக இல்லாமல், அவருடைய தாய்க்குக் கணவராக உள்ளவர் (*பி*.6, *விளக். இ.இ.கா.ச.*); Step father.

மாற்றாந் தாய் *பெயர்*

நேரடித் தாயாக இல்லாமல், தந்தைக்கு மனைவியாக உள்ளவர் (*பி*.6, *விளக். இ.இ.கா.ச.*); Step mother.

மாற்றாம் புதல்வன் *பெயர்*

ஒருவரது மனைவிக்கு முந்திய கணவன் வழியே அல்லது ஒருத்தியின் கணவனுக்கு முந்திய மனைவி வழியே பிறந்த மகன் (*ச.சொ*.1938); Step son.

மாற்றாம் புதல்வி *பெயர்*

ஒருவரின் மனைவிக்கு முந்திய கணவன் வழியே அல்லது ஒருத்தியின் கணவனுக்கு முந்திய மனைவி வழியே பிறந்த மகள் (*ச.சொ*.1983); Step daughter.

மாற்றிக்குறைப்பு *பெயர்*

பெருந்தண்டனையின் கடுமையைத் தணிக்கும் வகையில் அமைந்த தண்டனை மாற்றீடு (*பி*. 222, *இ.த.தொ.ச.*); Commutation.

மாற்றுகைசெய்தல் *பெயர்*

மூலத்தை மாற்றாமல் ஏதோ ஒருவகையில் அதைப் பிறவாறாகச் செய்கை அல்லது வேறுபடுத்துகை. *மாநிலங்களின் பரப்பிடங்களை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றுகை செய்தல்* (*உறுப்*. 3, (*அ*) *இ.அ.*); Alteration.

மாற்றுச்சீட்டு *பெயர்*

பெயர் எழுதப்பெற்றவருக்கு, அவரது ஆணைபெற்றவருக்கு அல்லது அதைக் கொணர்பவருக்கு மட்டுமே குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுக்கும்படி, குறிப்பிட்ட ஒருவருக்கு ஆணையிட்டு, எழுதுநரால் கையொப்பமிடப்பட்ட முறையாவணம்; பணமாற்றுச்சீட்டு (*பி*.51, *மா.மு.ச.*); Bill of exchange.

மாற்றுச் செயலுரிமையாவணம் *பெயர்*

காண்க : பகர அதிகார ஆவணம்.

மாற்றுமுகச் சார்வு *பெயர்*

நீதிமன்ற அழைப்பாணை பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டுக் காப்பாளி மறைந்திருக்கிறார் அல்லது வழக்கமான முறையில் அதைச் சார்வுசெய்ய முடியவில்லை என்னும் நிலையில், காப்பாளி கடைசியாகக் குடியிருந்த இடத்திலோ, தொழில் அல்லது ஊதியத்திற்காக வேலைசெய்த இடத்திலோ அந்த அழைப்பாணையின் படியத்தைப் பலரும் பார்க்கும் நிலையில் ஒட்டவேண்டும் என்று நீதிமன்றம் இடும் கட்டளை, பதிலமைவுச் சார்வு. *மாற்றுமுகச் சார்வு செய்யப்படுமிடத்து முன்னிலையாகக் காலம் குறிப்பிடுதல்* (*கட்*. V *வி*. 20(3), *உ.ந.தொ.ச.*); Substituted service.

மாற்று முறையாவணம் *பெயர்*

கொணர்பவருக்கோ அவர் ஆணையிடும் வேறொருவருக்கோ பணம்தரவேண்டும் என்பதான கடனுறுதிச்சீட்டு, பணமுறிச்சீட்டு அல்லது காசோலை (*பி*.13(1), *மா.மு.ச.*); Negotiable instrument.

மாற்றுமேலாண்மைஏற்பு *பெயர்*

சொத்தை வாங்கிய அல்லது கையகப்படுத்திய புதிய நிலக்கிழாரை நிலக்குடிவாரர் ஒப்புக்கொள்ளுகை (*ச.சொ*.1983); Attornment.

மி

மிகை *பெயரடை* < *மிகையான*

வழக்கமான அல்லது குறித்துரைக்கப்பட்ட அளவுக்கும் மேலாக. *மிகை ஆதாய வரி* (*உறுப்*.366, *இ.அ.*); Excessive.

மிகைப் பற்று *பெயர்*

வங்கியில் தமது கணக்கிலுள்ள பணத்திற்கும் கூடுதலாக எடுக்க இசைவளிக்கப்பட்ட தொகை (*பி*.133 *விகா*.(*அ*), *இ.ஒ.ச.*); Over draft.

மிகையான தீருதவி *பெயர்*

* வருமானவரிச் சட்டத்தின் வகைமுறைகள் சிலவற்றிலிருந்து தப்பித்துக்கொண்டு முழுவரி அளவையும் செலுத்தத்தவறிய வரிக்கணிப்புறுநர் ஒருவர், மிகவும் குறைந்ததொரு வீதப்பாட்டில் மதிப்பீடு செய்யப்படுதல். (*சுந்தரம் நிறுமம் எதிர் வருமானவரி ஆணையர் சென்னை*, AIR 1968 IC 124); Excessive relief.

மிதப்பு மூலதனம் *பெயர்*

அன்றாட அலுவல்தொழிலை நடத்துவதற்காக வாணிகரால் ஒதுக்கிவைக்கப்படுவதும், நிலையான முதலீட்டிலிருந்து வேறுபடுவதுமான பணத்தொகை (*ச.சொ.*1983); Floating capital.

மீ

மீட்டடைவிப்பு *பெயர்*

சட்டமுரணாக ஒருவரிடமிருந்து எடுத்த பொருளை மீண்டும் அவர் பெறுமாறு செய்கை. *சொத்தின் மீட்டடைவிப்பு* (*பி.*453, *கு.ந.தொ.ச.*); Restitution.

மீட்புத் தடை *பெயர்*

ஓர் அடைமானப் பொருளை அதற்குரிய கடனை அடைத்தோ, கடப்பாட்டை நிறைவேற்றியோ மீட்டுக்கொள்வதைத் தடுக்கும் வரையீடு. (= ஷரத்து) (*பி.*60(2), *சொ.மா.ச.*)

* *அடைமான மீட்புரிமையைத் தடுக்கும் எந்த வாசகமும் மீட்புத்தடை எனப்படுவதுடன், அது இல்லாநிலையது ஆகும். நீதிபதி விண்ட்லே (ஸ்டேன்லி எதிர் வொயிட்* (1899) clo. 474); Clog on redemption.

மீட்புரிமை *பெயர்*

மீட்க ஒப்புக்கொண்ட தேதி கடந்தபோதிலும், விற்கும் அதிகாரத்துடன் அடைமானம் பெற்றவர் அச்சொத்தை விற்பதற்குமுன் அடைமானம் வைத்தவர் அடைமானத் தொகையை வட்டியுடன் செலுத்தி மீட்டுக் கொள்ளுவதற்கான உரிமை. *மீட்புரிமைக்காக வழக்கிடலாகும் ஆட்கள்* (*பி.*91, *சொ.மா.ச.*); Equity of redemption.

மீண்டும் காவலில்வை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கான சான்றுகளைத் திரட்டுவது முடிவுறாத நிலையில் அவரை மறுபடியும் காவலுக்கு அனுப்பிவைத்தல். *கட்டளை ஒன்றின்மூலம் எதிரியை மீண்டும் காவலில்வைக்கலாம்* (*பி.*309(2) *விளக்.* *கு.ந.தொ.ச.*); To remand.

மீளப்பெறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கொடுத்திருந்த, இசைவளித்திருந்த, துய்த்திருந்த அல்லது பட்டறிந்திருந்த ஒன்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல். *பற்றுகையை மீளப்பெறு* (*பி.*146(1), *கு.ந.தொ.ச.*); To withdraw.

மீறுகை *பெயர்*

உரிமைக்குக் கேடு சூழ்வது அல்லது சட்டத்திற்குப் புறம்பாக நடப்பது. *பதிப்புரிமையின் மீறுகை* (*பி.*4, *ப.ச.*); Infringement.

மீறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சட்டம், ஒழுங்கு முதலியவற்றை மதித்து நடக்காதிருத்தல். *வரைக்கட்டை மீறுதல்* (*பி.*227, *இ.கு.தொ.ச.*); To violate.

மு

முகத்திரைப் பெண் *பெயர்*

* நெருங்கிய சில ஆண் உறவினர்களைத் தவிர, வேறு ஆண்களுடன் திரைக்குப் பின்னிருந்தபடியே செய்தித்தொடர்பு கொள்கின்றவரும், அந்தப்புரத்தில் தனியே வாழுபவருமாகிய உயர்குடிப் பெண் (*சதீஷ் சந்திரா எதிர் காளிதாசி* AIR 1922 Cal. 203)

* *ஓர் ஆடவரைப்போல், பல்வேறு நீதிமன்றங்களில் உரிமை வழக்குகளையும் முறையீடுகளையும் முன்கொணர்ந்து வைத்தும் மனு எழுதுபவர்களையும்*

வழக்குரைஞர்களையும் சந்தித்து, வழக்கு நடவடிக்கை தொடர்வு செய்தும் ஆடவர்போல் நடந்துகொள்ளும் ஒருபெண் முகத்திரைப் பெண் ஆகமாட்டார் (குலாம் ஜீக்ரா எதிர் ஹபீபாபேகம் AIR 1985 J&K. 22); Pardanashin Woman.

முக நிலையிலான *பெயரடை < முகநிலையிலான*

பொருளியம் பற்றிய வினா மறுதலிக்கப்படவில்லை என்றால் சட்டப்படி சரியானது அல்லது போதுமானது என மேற்போக்காகத் துணிபுகொள்ளும் நிலையில்; முதல் நிலையில்; முக நோக்கில்.

* *முகநிலை வழக்கா அன்றா என்பதைத் தீர்மானிப்பதற்கு சான்றுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள முடிபு சரியானதுதானா என்பதைக் கருத வேண்டும் (நேஷனல் புகையிலை நிறுமம் எதிர் நான்காம் தொழில் தீர்ப்பாயம்* AIR 1960 Cal. 249); Prima facie.

முகப்புரை *பெயர்*

இயற்றுச்சட்டம் அவசரச்சட்டம் அல்லது ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கத்தையும் குறிக்கோளையும் எடுத்துக்கூறும் அறிமுகப் பகுதி.

* *சட்டமொழி தெளிவின்றிப் பலபொருள் தருவதாக இருந்தால் மட்டுமே பொருள்கோள் செய்வதற்கு உதவியாக முகப்புரையைக் கொணரவேண்டும் (புராக்கர் நிலக்கரி நிறுமம் எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1961 SC 154); Preamble.

முகமதிய மணக்கொடை *பெயர்*

இசுலாமியத் திருமணத்தின் மறுபயனாகக் கணவனிடமிருந்து மனைவி பெறத்தக்க பணம் அல்லது வேறு சொத்து; மஹர் (*ச.சொ.*1983); Mahr.

முகமை *பெயர்*

ஒரு முகவரின் அலுவலகம் அல்லது அலுவற்பணி. *அலுவல்தொழில் முகமை (பி.*215, இ.*ஒ.ச.*); Agency.

முகவர் *பெயர்*

மற்றவருக்காகச் செயலாற்றப் பணியமர்த்தப்படுபவர்.

தமக்காக ஒரு செயலைச் செய்யவோ அலுவல்தொழிலை நடத்தவோ முதலர் எனப்படும் மற்றொருவரால் அதிகாரமளிக்கப்பெற்றுவரும், அந்த அதிகாரவரம்புக்குள் வரும் செயல் முதலரால் செய்யப்படவில்லை என்றாலும் அவரைக் கட்டுப்படுத்தும் நிலையில் அமர்த்தப்படுபவருமான ஒருவர். விற்பனை முகவர் (*பி*.189, (*வி.கா*) (*அ*) இ.*ஒ.ச.*); Agent.

முடக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைக் கைப்பற்றிச் சட்டக் காப்படைவில் வைத்தல் (*பி.*30, (*அ*), *உ.ந.தொ.ச.*); To impound.

முடிபுசெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு வழக்கை, வினாவை அல்லது முரண்பாட்டை நீதி முறையில் தீர்மானித்தல். *நீதிமன்றம் வினாவைத் தவறாக முடிபு செய்திருக்கிறது என்னும் காரணங்காட்டி உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்* (*உறுப்.*132(3), இ.*அ.*); To decide.

முடியாட்சி *பெயர்*

மன்னராட்சி; விடுதலைக்கு முன்பு இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில முடியரசு. *இந்த அரசமைப்பின் தொடக்கத்திற்கு முன்பு இந்திய முடியாட்சியின் கீழ்... பணிபுரிந்திருக்கிற ஒருவர்* (*உறுப்.*290, இ.*அ.*); Crown.

முடிவுறச்செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூட்டாண்மையின் அல்லது கழகத்தின் சொத்துடைமைகளைக் கடன்காரர்களுக்குப் பங்குபிரித்துக் கொடுத்துக் கடனை நேர்செய்து நிறுமத்தைக் கலைத்துவிடுதல். *வாணிகக் கூட்டிணையங்களை முறைப்படுத்துதல் அல்லது முடிவுறச்செய்தல்* (*இ.ப.*VII-1-43, *இ.அ.*); To wind up.

முடிவுறாநிலையில் *பெயரடை*

முடிபு செய்யப்படாமல் உள்ள அல்லது தீர்வை எதிர்நோக்கியுள்ள. *நாடாளுமன்றத்தால் செலவினத்திற்கு ஒப்பளிப்பது முடிவுறாநிலையில் செலவினத்திற்கு அதிகாரமளிக்கக் குடியரசுத்தலைவருக்குத் தகுதிறம் உண்டு* (*உறுப்.* 357 (1) (இ) *இ.அ.*); Pending.

முடிவுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றை முடிவுக்குக் கொண்டுவருதல்; இல்லாமல் ஆக்குதல். *உரிமம் எதையும் முதிர்வுக்கு முன்னரே முடிவுறுத்துவதற்கு அல்லது அறவுசெய்வதற்கு வகை செய்யும் சட்டம்* (*உறுப்.* 31(1) (ஊ), *இ.அ.*); To terminate.

முடிவுறுதல் *பெயர்*

சட்டம், ஒப்பந்தம் அல்லது உடன்பாடு மூலம் வரையறுக்கப்பட்ட நேரம் அல்லது கால அளவு முடிந்துவிடுதல்; கழிவுறுதல். *குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் முடிவுறுவதால் ஏற்படும் ஒழிவிடம்* (*உறுப்.* 62(1), *இ.அ.*); Expiry.

முத்தவல்லி *பெயர்*

இசுலாமிய அறக்கட்டளையாகிய வக்புச் சொத்திற்கு உரியவாறு அமர்த்தப்பட்ட மேலாளர் (*ச.சொ.*1983); Muthavalli.

முத்திரை *பெயர்*

ஓர் அடையாளம் அல்லது பதவிக் குறி; பொறிப்படையாளம். *பின்வரும் பொறிப்பையுடைய முத்திரை* (*பி.*15 *ப.ச.*); Seal.

முதல் ஆராய்வு *பெயர்*

நீதிமன்றத்தில் சான்றுரைஞரை முன்னிலைப்படுத்தும் சார்பினர் முதற்கண் அவரிடம் வினாக்கள் விடுத்து விடைபெறுவது; முதல் விசாரணை (*பி.*137, *இ.சா.ச.*); Examination in Chief.

முதல் தகவல் அறிக்கை *பெயர்*

சிறைசெய்தற்குரிய குற்றத்தைச் செய்திருப்பதாகச் சாட்டுரைத்துக் காவல் நிலையத்தில் முறையீட்டைப் பதிவுசெய்யும் முதற்படியான செய்திக்குறிப்பு (*பி.*154, *கு.ந.தொ.ச.*); First information report.

முதல்நிலை உசாவுகை *பெயர்*

அமர்வு நீதிமன்றத்தால் ஆய்வுசெய்யப்படவேண்டிய குற்றத்தைத் தகுதிறம் வாய்ந்த நீதிநடுவர் முதற்படியாக விசாரணை செய்வது (*பி.*159, *கு.ந.தொ.ச.*); Preliminary enquiry.

முதல்நிலைச் சான்று *பெயர்*

சார்நிலைச் சான்றுக்கு எதிர்நிலையில் அமையும் தலையாய சான்று. (எ-டு.) நீதிமன்றத்தில் முன்னிடப்படும் மூல ஆவணம். (*பி.*62, *இ.சா.ச.*); Primary evidance.

முதலமைச்சர் *பெயர்*

ஒரு மாநில அரசாங்கத்தின் தலைமை அமைச்சர்; முதல் மந்திரி. *மாநில ஆளுநரால் முதலமைச்சர் அமர்த்தப்படுதல் வேண்டும் (உறுப்.* 164(1), இ.*அ.*); Chief minister.

முதலர் *பெயர்*

முகவரைப் பணியமர்த்தி அவர் வழியே தம் அலுவலை நடத்துபவர்; முதல் மந்திரி. (*பி.*3 *விளக்.*3 *வரம். சொ.மா.ச.*); Principal.

முதலேற்பு அதிகாரவரம்பு *பெயர்*

ஒரு சட்ட நடவடிக்கையைத் தொடங்குகையில் மாறுபாடுள்ள கருத்தைக் கவனத்தில் கொள்வதற்கான நீதிமன்றத்தின் அதிகாரவுரிமை (*பி.*193, *கு.ந.தொ.ச.*); Original jurisdiction.

முதன்முறைக் குற்றவாளி *பெயர்*

1. பணத்தண்டம் மட்டுமோ ஏழாண்டு அல்லது அதற்குக் குறைவான காலத்திற்குச் சிறைத்தண்டனையோ விதிக்கப்பட்டு முன்தண்டனை ஏதுமில்லாத 21 வயதுக்குக் கீழ்ப்பட்டிராதவர் (*ச.சொ.*1979); First offender.

2. இறப்புத் தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதித்துத் தண்டிக்கத்தக்கதாக இராத வேறு குற்றச் செய்கையில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவரும், முந்திய குற்றத்தீர்ப்பு எதிராக மெய்ப்பிக்கப்படாதவரும் ஆகிய 21 வயதிற்குட்பட்டவர் அல்லது ஒரு பெண் (*பி* 360(1), *வரம். கு.ந.தொ.ச.*); First offender.

முதிர்ந்தோர் வாக்குரிமை *பெயர்*

உரிமை வயது எய்தியவர் தமது விருப்பப்படி ஒருவரைத் தெரிவு செய்வதற்காகச் சட்டம் அளிக்கும் உரிமை; தகுவயதடைந்தவர் வாக்குரிமை. *மக்கள் பேரவைக்கான அல்லது மாநிலச் சட்டப்பேரவைக்கான தேர்தல்கள் முதிர்ந்தோர் வாக்குரிமை அடிப்படையில் இருக்க வேண்டும் (உறுப்.* 326, இ.*அ.*); Adult suffrage.

முதிர்மை *பெயர்*

தமது அலுவலைத் தாமே செய்து கொள்ளவும், குடியியல் உரிமைகளைத் துய்க்கவும் சட்டப்படி உரிமை பெறுகை (*உறுப்.*61(2), (ஆ), இ.*அ.*); Majority.

முதிர்வு *பெயர்*

குறித்துரைத்த காலம் முடிந்தபின்னர் மாற்றுச்சீட்டுக்கோ கடனுறுதிச்சீட்டுக்கோ பணம் கொடுபடவேண்டிய காலம்; முதிர்வு அடையும் காலம் (*ச.சொ.*1979); Maturity.

முந்துரிமை *பெயர்*

உரிமைக்கோரிக்கை, பணச்செலுத்தம், காலம், இடம் அல்லது படிநிலையில் முற்பட்டிருக்கும் நிலை. *வில்லங்கத்தாரர்களின் வரிசைமுறையான முந்துரிமைகள் பற்றிய உரை* (இ.*ப.*I *பிற். ஈ. படி.* 17 (10) (இ), *உ.ந.தொ.ச.*); Priority.

முரண்தடை *பெயர்*

ஒருவர் மற்றவரைத் தம் உரையாலோ செய்கையாலோ விடுகையாலோ ஒன்றை உண்மையென வேண்டுமென்றே நம்புமாறு செய்து அந்த நம்பிக்கையின்மீது மற்றவரைச் செயற்படவைக்கும் நிலையில், நம்பவைத்தவருக்கும் நம்பியவருக்கும் இடையில் எழுந்த வழக்கில், நம்பவைத்தவரோ அவருடைய சார்பாளரோ நம்பவைத்த பொருளை உண்மை அன்று என மறுக்கக்கூடாது என்னும் சட்டக் கோட்பாடு (*பி.*115, இ.*சா.ச.*); Estoppal.

முரண்பாடு *பெயர்*

சட்டத்திற்கு ஒவ்வாத, மாறான அல்லது பொருந்தாத நிலை. *மாநிலச் சட்டத்தின் வகைமுறை எதுவும் நாடாளுமன்றச் சட்டத்தின் வகைமுறை எதற்கும் முரண்பட்டிருக்கிறது என்றால், அந்த முரண்பாட்டின் அளவுக்குச் செயற்பாடு அற்றிருத்தல் வேண்டும்* (*உறுப்*.122(1), இ.*அ*.); Repugnancy.

முரணான *பெயரடை*

மாறாகவோ ஒவ்வாததாகவோ உள்ள (*பி*.3, *சொ.மா.ச*.); Repugnant.

முரணுகை *பெயர்*

பொதுவான அல்லது இயல்பான விதிமுறையிலிருந்து விலகிச்செல்வது. (*பி*.24, *நி*.(*ஆ*.) *மே.வ.ச*.); Anomaly.

முழுக் குருதியுறவு *பெயர்*

ஒரே தாய் தந்தையருக்குப் பிறந்த மக்களிடையே நிலவும் சொந்தம்; இருவழி உறவு (*பி*.2, *விளக்*. *சி.தி.ச*.); Full blood.

முழுதளாவிய கொடைபெறுநர் *பெயர்*

ஒருவரது அனைத்துச் சொத்தையும் நன்கொடையாகப் பெறுபவர் (*பி*.128, *சொ.மா.ச*.); Universal donee.

முழு நம்புறுதியிலான *பெயரடை*

ஒப்பந்தம் செய்துகொள்வதா வேண்டாமா என்பதை முடிவுசெய்வதன் முன்பு, அறியவேண்டிய அனைத்துப் பொருளியங்களையும் சூழல்களையும் உறுதிமொழிபெறுபவர் உறுதிமொழிதருபவருக்குத் தெரிவிப்பது கடமையாகும் என்னும் நிலையிலுள்ள (ஒப்பந்தம்) (*ச.சொ*.1983); Ubberimae fidei.

முழு நீதியராயம் *பெயர்*

நீதிபதிகளில் மூவரோ மேற்பட்டவரோ ஒருங்கமர்ந்து வழக்காய்வு செய்யும் குழு (*ச.சொ*.1983); Full bench, full division.

முழுநேர நீதிபதி *பெயர்*

ஊதியம் பெற்று அலுவலாற்றும் முறைமன்ற நடுவர் (*பி*.123 (7) (*ஆ*), *ம.சா.ச*, 1951); Stipendiary Magistrate.

முற்கோள் *பெயர்*

முந்தைய வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்ட அதே பொருளியம் கொண்ட பிந்தைய வழக்கைத் தீர்மானிக்கும் பொருட்டு, அதே முறை, நெறி அல்லது ஒப்புமை கொண்டது என்னும் வகையில், மேற்கோளாகச் சுட்டப்படும் நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பு; முன்தீர்ப்புமுறை (*ச.சொ*.1983); Precedent.

முற்றளிப்பு *பெயர்*

வரையீடு, வரைக்கட்டு முதலிய எதனாலும், செயலறவு செய்யவியலாதபடி அமைந்த சொத்து மாற்றல் (*ச.சொ*.1983); Absolute conveyance.

முற்றுச் சிறப்புரிமை *பெயர்*

வரம்பீடு எதுவுமின்றி அளிக்கப்படும் தனிச்சலுகை (*ச.சொ.*1983); Absolute privilege.

முற்றுரிமையர் *பெயர்*

பிணைப்பொறுப்புக்கு அல்லது வில்லங்கத்திற்கு உட்படுத்தியிருந்தாலும், அசையாச் சொத்தில் முழு உரிமையும் அதை மாற்றியளிக்கும் தகுதிறமும் கொண்ட உடைமைக்காரர்; முழுச்சொந்தக்காரர். *சொத்தின் முற்றுரிமையர்* (இ.*ப*.1 *பிற்.அ*.13(2), *உ.ந.தொ.ச.*); Absolute owner.

முற்றுறுதியான *பெயரடை*

வரம்பீடோ, வரைக்கட்டோ எதுவுமின்றி முழுமையான; மாற்றுகைக்கோ முடிவுகட்டுவதற்கோ உட்பட்டிராத; அறுதிமுடிவான. *விற்பனை முற்றுறுதியானது* (*பி*.58, (இ) *சொ.மா.ச.*); Absolute.

முறிக்கமுடியாத *பெயரடை*

பின்னறவுசெய்ய இயலாத. *முறிக்கமுடியாத உரிமைமாற்றல்* (*பி*.4(5), *சொ.வ.ச.*); Irrevocable.

முறைகேடான அடைத்துவைப்பு *பெயர்*

குறித்தொரு சுற்றெல்லைக்கு அப்பால் செல்லமுடியாதபடி ஒருவரைத் தடுத்துக் கட்டுப்படுத்துகை (*பி*.340, இ.*த.தொ.ச.*); Wrongful Confinement.

முறைகேடான இழப்பு *பெயர்*

சட்டமுறையற்ற வழிவகைமூலம் சட்டப்படி உரிமையுள்ள சொத்துக் கைநழுவுகை (*பி*.23, இ.*த.தொ.ச.*); Wrongful loss.

முறைகேடான தடையுறு *பெயர்*

ஒரு திசையில் செல்ல உரிமையுள்ளவரை அத்திசையில் செல்லமுடியாதபடி தடுத்துநிறுத்துவது (*பி*.339, இ.*த.தொ.ச.*); Wrongful restraint.

முறைகேடான தேட்டம் *பெயர்*

சட்டப்படி உரிமைப்பாடில்லாததும் சட்டத்திற்கு ஒவ்வாத வழிவகை மூலமும் அடையப்படும் சொத்து (*பி*.23, இ.*த.தொ.ச.*); Wrongful gain.

முறையாவணம் *பெயர்*

உருவாக்கப்படுகிற அல்லது உறுதி செய்யப்படுகிற உரிமையையோ, பதிவுசெய்யப்பட்ட உண்மைவிவரத்தையோ கொண்டிருக்கும் சட்டமுறைப்படியான ஆவணம்; விருப்பாவணமாக இல்லாத ஆவணம்; தொழில்துறை நீதிமன்றத்தின் தீர்ப்பு.

* *குடியரசுத்தலைவர் தமது அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்திப் பிறப்பிக்கும் ஆணையும் முறையாவணம் ஆகும்* (*மோகன் க்ஷத்திரி எதிர் தலைமை ஆணையர்* AIR 1964 SC 173); Instrument.

முறையிடுநர் *பெயர்*

நீதிமன்றத்தில் மற்றவருக்கு எதிராக முறைப்படி குற்றம் சாட்டுபவர். *முறையிடுநர்களையும் வழக்கில் தொடர்புகொண்ட அனைவரையும்* (*பி*.170(2), *கு.ந.தொ.ச.*); Complainant.

முறையீடு *பெயர்*

1. தீங்கிழைக்கப்பட்டிருக்கிறது என்றோ மனக்குறை விளைவிக்கப்பட்டது என்றோ கூறப்படும் சாட்டுரை.

2. குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் ஒரு நீதிநடுவர் முன்பு, தெரிந்த அல்லது தெரியாத யாரோ ஒருவர் குற்றம்புரிந்தார் என்று வாய்மொழியாகவோ வரைமொழியாகவோ செய்யப்படும் சாட்டுரை (*பி*.95, *இ.கு.த.தொ*.); Complaint.

முன்தண்டனை வாதுரை *பெயர்*

அதே குற்றத்தைத் தகுதிறமுள்ள நீதிமன்றம் முன்னரே ஆராய்ந்து தமக்குக் குற்றத்தீர்ப்பு அளித்திருக்கிறது எனக் குற்றம் சாட்டப்பட்டவர் எடுத்துரைக்கும் கூற்று (*ச.சொ*.1983); (Plea of) Autre fois convict.

முன்தீர்ப்புஏற்பு *பெயர்*

வழக்கீடுகளில் எழும் ஒரே மாதிரியான கூறுகளைப் பொறுத்து, முன் தீர்ப்புகளில் சொல்லிய முறையை ஏற்றுப் பின்பற்றுகை (*ச.சொ*.1983); Stare decisis.

முன்தீர்ப்புத்தடை *பெயர்*

அதே சார்பினர்களுக்கிடையே அதே நீதிமன்றத்தில் நடந்த முந்திய வழக்கில் அதே வழக்கெழுவினா உசாவுகை செய்யப்பட்டுத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கையில், அந்த வழக்குப் பொருள் பற்றி அந்தச் சார்பினர்களோ அவர்களுடைய சார்பாளர்களோ பிந்திய நிலையில் கொணரும் வழக்கை நீதிமன்றம் எதுவும் உசாவுதல் கூடாது என்னும் சட்டக் கோட்பாடு (*பி*.11, *உ.ந.தொ.ச*.); Resjudicatta.

முன்தீர்ப்புமுறை *பெயர்*

காண்க : முற்கோள்.

முன்நடத்தை *பெயர்*

ஒருவருடைய முந்தைய வரலாறு. *குற்றவாளியின் முன்னடத்தை* (*பி*.360(1), *கு.ந.தொ.ச*.); Antecedent.

முன்பணம் *பெயர்*

ஒப்பந்தத்தின் மறுபயனாக அமைவதும், கொடுக்கப்பட வேண்டிய காலத்திற்கு முன்னரே பகுதியாகவோ முழுமையாகவோ கொடுக்கப்படுவதுமான தொகை. *முன்பணமும் பற்றெழுதுகையும்* (*பி*.79, *சொ.மா.ச*.); Advance.

முன் வரைக்கட்டு *பெயர்*

ஓர் அடைசொத்தை அல்லது உரிமையைப் பெறுவதற்கு முன்பே நிகழவேண்டிய அல்லது நிகழ்த்த வேண்டிய கட்டுப்பாடு. *முன் நிபந்தனை* (*பி*.26, *சொ.மா.ச*.); Condition, precedent.

முன்விடுதலை வாதுரை *பெயர்*

அதே குற்றத்தைத் தகுதிவாய்ந்த நீதிமன்றம் முன்னரே ஆராய்ந்து விடுதலைத்தீர்ப்பு அளித்திருக்கிறது எனக் குற்றம் சாட்டப்பட்டவர் எடுத்துரைக்கும் கூற்று (*பி*.403, *கு.ந.தொ.ச*.); (Plea of) Autre fois quit.

முன்னிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. முறைப்படியாக ஒரு நீதிமன்றத்தில் அறிமுகப்படுத்துதல்; (*பி*.249 (2), *வ.வ.ச.*)

2. அதிகாரத்திலுள்ள ஒருவரின் முன்போ கவனத்திற்கோ ஒரு வேண்டுகோளை அல்லது கோரிக்கையை வைத்தல். *ஒரு வேண்டுரையைக் குடியரசுத் தலைவரிடம் முன்னிடுவதற்கான ஒரு மன்றக் கோரிக்கை* (*உறுப்*. 121, *இ.அ.*); To present.

முன்னிலைப்படுத்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முன்கொணர்ந்து வைத்தல் அல்லது ஒப்படைத்தல். *காவலில் இருத்தி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் மிக்க அருகிலுள்ள குற்றவியல் நடுவர் முன்பு இருபத்து நான்கு மணி நேரக் காலஅளவுக்குள் முன்னிலைப்படுத்தல்* (*உறுப்*. 22(2) *இ.அ.*); To produce.

முன்னிலையா-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உரிமைவழக்கின் சார்பினர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நீதிமன்றத்தில் வந்து தோன்றுதல் (= ஆஜராதல்) (*பி*.88, *கு.ந.தொ.ச.*); To appear.

முன்னுறுகிற *பெயரடை*

குறித்துரைக்கப்படும் காலத்திற்கு முன்னரே உள்ள செயலையோ உரிமையையோ பொருந்துகிற; முன்னுற இயங்குகிற; முன்மேவுகிற. *பணி வரைக்கட்டுகளையும் உரிமைகளையும் முன்னுறுமாறோ பின்னுறுமாறோ மாறுதல் செய்யலாம்* (*உறுப்*.212 *அ*, *இ.அ.*); Retrospective.

முன்னெச்சரிப்பாளர் *பெயர்*

நீதிமன்றத்திற்கோ தொடர்புடைய அலுவலருக்கோ தமக்குக் கேள்வி நல்காமல் ஒரு செயலைச் செய்ய வேண்டாம் எனச் சட்டமுறை அறிவிப்பைக் கொடுப்பவர் (*பி*.148, *அ*(2), *உ.ந.தொ.ச.*); Caveator.

முனைமம் *பெயர்*

1. ஆயுள் அல்லது சொத்துக் காப்புறுதியின் பொருட்டுக் காலமுறையாகச் செலுத்தப்படும் தொகை (*பி*.2(3), *வை.கா.க.ச.*); Premium.

2. குத்தகைக்காகக் கொடுக்கப்படும் முன்தொகை (*ச.சொ*.1983); Premium.

3. நிறுமத்தின் பங்குகளின் அல்லது சரக்கிருப்புகளின் முக மதிப்பிற்கும் மிகையாகக் கொடுக்கப்படும் தொகை (*ச.ஆ.சொ.க.*); Premium.

முனைய வரி *பெயர்*

* நகராட்சி வரம்புக்குள் இறக்குமதியோ ஏற்றுமதியோ செய்யப்படும் பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரி. (*பர்மாஷெல் எதிர் பெல்காம் நகராட்சி* AIR 1963 SC 906); Terminal tax.

முனைவுரை *பெயர்*

ஒருவர் ஒன்றைச் செய்ய ஆயத்தநிலையில் இருப்பதைத் தெரிவிக்கும் வெளிப்பாடாகவும், அதை மற்றொருவர் வரைக்கட்டு (=நிபந்தனை) இல்லாமல் ஏற்றுக்கொண்டால் ஒப்பந்தமாக உருவாவதுமான கூற்று (*பி*.38, *வி.கா*, *இ.ஒ.ச.*); Offer.

மூ

மூலகம் *பெயர்*

வருமானம் என்பதற்கு எதிர்நிலையில் அமைந்த மூலதன நிதியம். *சொத்தின் மூலகம்* (*பி.*7 (*ஆ*), இ.*செ.ச.ச.*); Corpus.

மூலதனச் செலவினம் *பெயர்*

குறுகிய காலத்தில் ஆதாயம்தரும் வருவாய்ச் செலவினத்திற்கு எதிர்நிலையில், நெடுங்காலத்துக்குப் பலன்தருவதான செலவு (இ.*ப.*II இன. 3(*ஈ*) *மேன்.அ.ச.*); Capital expenditure.

மூலதனம் *பெயர்*

தொழில் தொடங்குகையில் முதன்முதலாக ஈடுபடுத்தப்படும் பணம் அல்லது சொத்துடைமை, அதனைப் பின்பு தொடர்ந்து நடத்துவதற்குக் கிடைக்கக்கூடிய பணம் அல்லது சொத்துடைமை, இடுமுதல் (*கட்.*21 *வி.* 46(1) (*ஆ*) *உ.ந.தொ.ச.*); Capital.

மூன்றாமவர் *பெயர்*

ஒரு செயலிலோ வழக்கு நடவடிக்கையிலோ தொடர்புள்ள சார்பினராக இல்லாதவர் (*பி.*27, இ.*கூ.ச.*); Third party.

மெ

மெய்ந்நிலை உடைமை *பெயர்*

கொள்நிலை உடைமை என்பதற்கு எதிர்நிலையில், நிலங்களையோ பண்டங்களையோ பதவிகளையோ உள்ளபடியே கொண்டிருப்பது (*பி.*1 *விளக்.* 2, இ.*த.தொ.ச.*); Actual possession.

மெய்ப்பிக்கப்பட்டது *பெயர்*

நீதிமன்றம் நன்கு ஆராய்ந்த பின்னர் ஒரு பொருளியம் உளது என நம்பினாலும் அல்லது குறித்த சூழலில் நல்லறிவுள்ள மனிதர் எவரும் அதை உளது என்றே கொண்டு செயற்படுவார் எனக் கருதினாலும், அந்தப் பொருளியம் உண்மையானது எனக் கொள்ளும் நிலை (*பி.*3, இ.*சா.ச.*); Proved.

மெய்ப்பிக்கப்படாதது *பெயர்*

ஒரு பொருளியம் உண்மை என்றோ பொய் என்றோ நிறுவப்படாத நிலை (*பி.*3, இ.*சா.ச.*); Not proved.

மெய்ப்பிக்கும் சுமை *பெயர்*

ஒருவர் தமது வழக்கைச் சான்றுகாட்டி நிறுவ வேண்டிய கடமைப்பொறுப்பு. *மெய்ப்பிக்கும் சுமை எவரைச் சார்ந்தது* (*பி.*102, இ.*சா.ச.*); Burden of proof.

மெய்ப்பிப்பு *பெயர்*

காண்க : சான்றுறுதி.

மெய்யுறுதிக்கூற்று *பெயர்*

வாதுரையில் முழுநம்பிக்கையுடன் தெரிவிக்கப்படும் உண்மைவிவரம் அல்லது உறுதியுடன் கூறும் புதிய செய்தி. (*கட். விதி.* 6, *உ.ந.தொ.ச.*); Averment.

மெய்யுறுபுணர்ச்சி *பெயர்*

ஆண்பெண் உடலுறவுகொள்ளுகை (*ச.சொ.*1979); Carnal knowledge.

மெய்யெனக் கொள்ளலாம் *தொடர்*

ஒரு பொருளியம் பொய்ப்பிக்கப்படுகிறது அல்லது மெய்ப்பிக்கப்படுகிறது என நீதிமன்றம் கட்டளையிடுகிற வரையில், அது மெய்ப்பிக்கப்பட்டதாகக் கருதும் நிலை (*ச.சொ.*1968); May presume.

மே

மேல்வரி *பெயர்*

குறிக்கோளை வரையறுத்துக் கூறுவதுடன் வழக்கமான வரிக்கும் கூடுதலாக விதிக்கப்படும் வரி. *உள்ளூர்ப் பரப்பிடத்தின் நோக்கத்திற்காகச் சட்டமுறைப்படி விதிக்கப்பட்ட வரிகள், தீர்வைகள், மேல் வரிகள்* (*உறுப்.*277, *இ.அ.*); Cess.

மேல்வரை *பெயரடை < மேல்வரையான*

மிக உச்ச அளவான. *மேல்வரை வட்டி விழுக்காட்டினை வகுத்துரைக்கலாம்* (*இ.ப.*VI-10(2), *இ.அ.*); Maximum.

மேல்வாரம் *பெயர்*

நில விளைச்சலில் நிலக்கிழாருக்கோ அரசுக்கோ உரிய பங்கு (*ச.சொ.*1983); Melvaram.

மேலவர் பொறுப்பாகுக *தொடர்*

முகவரின் செயலால் விளைந்த இழப்புக்கு முதலரும், பணியாளின் செயலுக்குப் பணித்தலைவரும் பொறுப்பாகின்றனர் என்னும் கோட்பாடு (*ச.சொ.*1983); Respondent superior.

மேலாண்மைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஓர் அலுவல்தொழிலை, அமைவனத்தை அல்லது ஏற்புநிறுவனத்தை ஒருவர் தமது பொறுப்பிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருத்தல். *சமயப் பிரிவு எதுவும் தன் சொந்த அலுவலைத் தானே மேலாண்மைசெய்வதற்கான உரிமை* (*உறுப்.*26, *இ.அ.*); To manage.

மேலாளர் *பெயர்*

ஓர் அமைவனத்தை அல்லது பணிக்குழாத்தை (= பணியாளர் தொகுதியை)த் தமது கட்டுப்பாட்டில் கொண்டு ஆட்சியம் செய்பவர். *கூட்டிணைய மேலாளரின் உரிமைகளை அழித்துவிடுவதற்கு வகைசெய்யும் சட்டம்* (*உறுப்.*31(அ) (1) (ஈ), *இ.அ.*); Manager.

மேற்கட்டணம் *பெயர்*

வரிவிதிக்கத்தக்க சொத்தைப் பொறுத்துப் பொய்க்கணக்குக் காட்டியதற்குத் தண்டமாகவோ, அதிகாரமுறைக் கணக்குத் தணிக்கையரால் ஏற்கப்படாததால் பொறுப்புக்குரியவரால் திருப்பிச்செலுத்தக் கூடியதாகவோ, வரவு காட்டப்படவேண்டிய கணக்கில் விடுபாடாகவோ உள்ள தொகை; பொறுத்துச் செலுத்தப்படும் கூடுதல் வரி; தண்டக் கட்டணம். *சில வரிகள் மற்றும் தீர்வைகள் மீதான மேற்கட்டணம்* (*உறுப்.*271, *இ.அ.*); Surcharge.

மேற்குறிப்பு *பெயர்*

ஆவணத்தின் பின் எழுதுவதையும், பணமாற்றுச்சீட்டின் மேலெழுதுவதையும் பணம் செலுத்தியதற்குச் சான்றாகச் செல்வைப்பதையும் சுட்டும் வாசகம். புறக்குறிப்பு, மேலெழுத்து. *முற்றுவிக்கப்பட்ட முறையாவணத்திலுள்ள மேற்குறிப்பு எதிலிருந்தும் எழுகிற பூசல்* (*உறுப்*.312 (3) *அ*.(*அ*)(i)*இ*.*அ*.); Endorsement.

மேற்குறிப்பெழுதப்பெறுநர் *பெயர்*

எவருக்கு ஆதரவாக மேற்குறிப்பு எழுதப்படுகிறதோ அவர் (*ச*.*சொ*.1979); Endorsee.

மேற்குறிப்பெழுதுநர் *பெயர்*

எவர் ஆவணத்தின் மேல் எழுதுகிறாரோ அவர் (*ச*.*சொ*.1979); Endorser.

மேன்தொகை *பெயர்*

சில நிகழ்வுகள் மீது ஆதாயஈவுக்கும் அல்லது உழைப்பூதியத்துக்கும் மிகையாகக் கொடுக்கப்படும் தொகை. *பங்கு மேன்தொகை* (*பி*.75(1),(*ஆ*), *நி*.*ச*.); Bonus.

மேன்முறையிடுநர் *பெயர்*

கீழ்நிலை நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து மேல்நிலை நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்பவர். *'அறுதி ஆணை' என்னும் சொல்லமைப்பு மேன்முறையிடுநருக்குச் சார்பாக முடிவுசெய்யப்படும் எழுவினாவைத் தீர்மானிக்கும் ஆணையை உள்ளடக்கும்* (*உறுப்*.132, *இ*.*அ*.); Appellant.

மேன்முறையீடு *பெயர்*

கீழமை நீதிமன்றத்தின் முடிவை எதிர்மாறாக்குவதற்காகவோ மாற்றுகைசெய்வதற்காகவோ மேலமை நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பம் (*பி*.45, *இ*.*பொ*.*ச*.); Appeal.

மை

மைய அரசு அமைவிடம் *பெயர்*

குடியரசுத்தலைவர் அமைச்சரவை வழியே ஆட்சி நடத்துகிறார் எனப்பொருள்படுவதால், மைய அரசு தில்லியில் அமைவிடம் கொண்டு அங்கிருந்து அலுவல் நடத்துகிறது என்பதை மறுக்க முடியாது (*சுராஜ்மல் எதிர் ம.பி. அரசு* AIR 1958 MP 103); Location of the Central government.

மொ

மொழி *பெயர்*

வாக்குமூலம் (*செ*.*ப*.*த*.*பே*.); Deposition.

மொழிச் சிறுபான்மையர் *பெயர்*

தாய்மொழியை ஆட்சிமொழியாகக் கொண்ட ஒரு மாநிலத்துப் பெரும்பான்மை மக்களிடையே வேற்றுமொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் சிறு குழுவினர். *மொழிச் சிறுபான்மையரின் குழந்தைகளுக்குத் தொடக்கமுதலே தாயின் தாய்மொழியில் கல்வி கற்க மாநில அரசு முனைந்து முயலுதல் வேண்டும்* (*உறுப்*. 350 *அ*,*இ*,*அ*.); Linguistic minorities.

வ

வகுத்தமை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நெறிமுறைக்கு இணங்க விதியையோ வகைமுறையையோ உருவாக்குதல் அல்லது ஆக்கமைவுசெய்தல் (*உறுப்*.272, *இ.அ.*); To formulate.

வகுத்தாக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

(ஒரு கருத்துரு, திட்டம் அல்லது அமைப்பு முறையை) உருவாக்குதல் (*உறுப்*.370, *இ.அ.*); To frame.

வகுத்தியக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

காண்க : ஆளுகைசெய்தல்.

வகுப்பினர் *பெயர்*

சமுதாய அமைப்பின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள். *கல்வி நிலையில் பிற்பட்ட வகுப்பினர்* (*உறுப்*.15(4), *இ.அ.*); Persons belonging to a class.

வகுப்பு *பெயர்*

பொதுவான பெயரும் பண்புகளும் கொண்டு, மற்றவற்றிலிருந்து வகை, பிரிவு அல்லது தன்மையினால் வேறுபட்டுள்ள ஒரு தொகுப்பு. ஒழுங்கமைவு *அல்லது படிநிலை* (*பி*.69(i) (*அ*), *சொ.மா.ச.*); Class.

வகை *பெயர்*

ஒத்த பண்புகளைக் கொண்டிருக்கும் மக்களின் அல்லது பொருள்களின் தொகுதி (*பி*.2(8), *வி.ச.*); Kind.

வகைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒழுங்குமுறை செய்வதற்கான நெறிமுறையை அல்லது ஏற்பாட்டை வகுத்தமைத்தல் *நாடாளுமன்றம் வகைசெய்யலாகும் முறையில் இருபது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல்* (*உறுப்*.81(1), *இ.அ.*); To provide.

வகைப்பாடு *பெயர்*

(மக்களின் அல்லது பொருள்களின் தொகுதியை) இயல்புக்கும் பண்புக்கும் ஏற்ப வரிசைமுறைப்படுத்துகை (*பி*.35(2), *தொ.நி.க.ச.*); Classification.

வகைமுறை *பெயர்*

குறிப்பிட்ட ஒரு பொருட்பாட்டை ஒழுங்குமுறை செய்வதற்காக வகுத்தமைக்கப்பட்ட விதி. *எஞ்சிய வகைமுறைகள்* (*உறுப்*.394, *இ.அ.*); Provision.

வகையினம் *பெயர்*

ஒரு வகுப்பு, தொகுப்பு அல்லது வகைப்பாட்டின் ஒரு கூறு (*பி*.197 *அ. நி.ச.*); Category.

வங்கி *பெயர்*

பணம் தொடர்பான கொடுக்கல் வாங்கல், முதலீடு செய்தல், *புழக்கத்தில் விடுதல் முதலிய தொழிலைச் செய்துவரும் ஒரு நிறுவனம்* (*பி*.2(2), *வ.தொ.க.சா.ச.*); Bank.

வங்கிச் சீட்டு *பெயர்*

கொணர்பவர் கோரியவுடனேயே பணம் கொடுக்கத்தக்கதும், பணமாகச் சுற்றுக்குவிடக் கருதப்படுவதுமாகிய வங்கி அளிக்கும் கடனுறுதிச்சீட்டு (*பி*.489, *அ. விளக். இ.த.தொ.ச.*); Bank note.

வங்கித்தொழில் *பெயர்*

கோரியவுடனேயோ பிறவாறாகவோ திருப்பித்தரத்தக்க பண வைப்பீடுகளை (கடன் கொடுத்தல் அல்லது முதலீடு செய்தல் நோக்கத்திற்காக) பொதுமக்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளும் அலுவல்தொழில் (*பி*.5ஆ, *வ.தொ.நி.ச.*); Banking.

வங்கியர் *பெயர்*

வங்கித்தொழிலைச் செய்துவரும் தனியொருவர், கழகம் அல்லது நிறுமம் (*பி*.2(2), *வ.க.சா.ச.*); Banker.

வஞ்சக்கூட்டு *பெயர்*

மோசடியான நோக்கத்துடனோ பொதுநலக் கொள்கையை முறியடிப்பதற்காகவோ இருவர் அல்லது மேற்பட்டவர் தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்பாடு. *தீர்ப்பு வஞ்சக் கூட்டால் பெறப்பட்டது* (*பி*.44, *இ.சா.ச.*); Collusion.

வட்டாரச் சட்டம் *பெயர்*

(இந்தியாவில்) குறித்த ஒரு பரப்பிடத்திற்கு மட்டுமே பொருந்தத்தக்க சட்ட முறைமை. ஒரு *வட்டாரச் சட்டம் என்பது இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு பகுதியின்மீது மட்டுமே இயங்குகிற ஒரு சட்டமாகும்* (*பி*.42, *இ.த.தொ.ச.*); Regional law.

வயது *பெயர்*

1. ஒன்றைச் செய்வதற்கு இயற்கையாகவோ சட்டமுறைப்படியோ ஒருவர் தகுதிபெறும் வாழ்வின் காலகட்டம் (*பி*.14, *சொ.மா.ச.*); Age.

2. ஒரு பொருள் நிலைபெறுகிற அல்லது ஒருவர் வாழ்கின்ற காலப்பட்டிகை ஆண்டு (*பி*.6 *வி.கா.* (*அ*), *இ.தொ.ச.*); Age.

வரம்புடை ஏற்பு *பெயர்*

பணமாற்றுச்சீட்டில் குறிப்பிட்ட தொகை செலுத்தும் இடத்தை அல்லது காலத்தைப் பொறுத்துச் செய்யப்பட்ட மாறுதலுடன் அதை ஒப்புக்கொள்ளுகை (*ச.சொ*.1983); Qualified acceptance.

வரம்புரை *பெயர்*

ஒரு வரைக்கட்டாகவோ வரம்பீடாகவோ ஓர் ஆவணத்தில் அல்லது முறையாவணத்தில் உள்ள பிரிவுக்கூறு, கட்டுவாசகம். (*நீதிபதிகள் (1) ஆம் கூறின், வரம்புரைக்கு உட்பட்டு.. பதவி ஏற்றிருத்தல் வேண்டும்.* (*உறுப்*.376(2), *இ.அ.*)1 Proviso

வரவழைப்பாணை *பெயர்*

சான்றுரைஞரையோ வேறு எவரையுமோ முன்னிலையாகுமாறும் தவறினால் தண்டனை விதிக்கப்படும் என்றும் ஆணையிடும் நீதிமன்றக் கட்டளை (*ச.சொ*.1983); Subpoena.

வரி *பெயர்*

அரசின் பயன்பாட்டுக்காகச் சட்டமியற்றும் அதிகாரத்தின் மூலம் மக்கள் அல்லது சொத்துகள்மீது விதிக்கப்படும் தொகை. *வரி பற்றிய தடையிலாச் சான்றிதழ்* (*பி*.230(1), *வ.வ.ச.*); Tax.

வரிக்கணிப்பு *பெயர்*

சொத்து, வருமானம் முதலியவற்றை வரிவிதிப்புக்கு உட்படுத்துவதற்காக அதிகாரமுறையில் மதிப்பிடுகை, வரிமதிப்பீடு. *வரிக்கணிப்பு ஆண்டு (பி.2(8) வ.வ.ச.)*; Assessment.

வரியிடைப்பிளவு *பெயர்*

முறையாவணத்தை எழுதி முடித்த பின்போ அதில் கையொப்பம் இட்ட பின்போ இடையிடையே புதிதாக எழுதிச்சேர்ப்பது (*பி.20(1), பதி.ச.*); Interlineation.

வரிவிதிப்பு *பெயர்*

செலுத்த வேண்டிய தொகையை வரையறுத்துச் சுமத்துகை (*உறுப்.366(28), இ.அ.*); Taxation.

வருகை *பெயர்*

வழக்காய்வின்போது தொடர்புடையவர் வந்து இருப்பது. *வருகையை முயன்று பெறமுடியாது (பி.32, இ.சா.ச)*; Attendance.

வருங்காலவைப்பு நிதியம் *பெயர்*

பணியாளர்களின் கையொப்பத்தொகை அல்லது வைப்பீடுகள் பெறப்பட்டு அவர்களுடைய தனிக் கணக்கில் வைக்கப்படுவதும், வேலைதருநரின் பங்களிப்பு ஏதுமிருப்பின், அதையும் உள்ளடக்குவதுமான பணச்சேமிப்பு (*உறுப்.366 (17), இ.அ.*); Provident fund.

வருமானக் குவிப்பு *பெயர்*

முதலீட்டிலிருந்து கிடைக்கத்தக்க வட்டி, குத்தகை, ஆதாயஈவு முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளாமல், ஒருவரின் எதிர்கால நன்மை கருதி அவற்றை மீண்டும் முதலீடாக்கி வருவாயைப் பெருக்குகை (*பி.93(3) விளக்.(அ), வ.வ.ச.*);
Accumulation of income.

வருமானம் *பெயர்*

வேலையமைவு, அலுவல்தொழில், நிலங்கள் அல்லது முதலீடுகளிலிருந்து காலமுறையாகப் பெறப்படும் தொகை, விளைமானம் அல்லது வரவினம். *வருமானம் மீதான வரி (உறுப்.366, இ.அ.)*; Income.

வருவாய் *பெயர்*

பொதுப் பயனுக்காக ஆண்டுதோறும் அல்லது காலமுறையாக ஒரு நாடு, மாநிலம் அல்லது நகராட்சியால் திரட்டப்பட்டுக் கருவூலத்தில் பெறப்படுகின்ற வரிகள், ஆயத்தீர்வைகள், சுங்கத் தீர்வைகள், பிற வளஆதாரங்கள் மூலம் கிடைக்கும் தொகைகள். *நில வருவாய் (உறுப்.31 அ, (2ஆ,) இ.அ.)*; Revenue.

வருவாயூதியம் *பெயர்*

காண்க : பதவியூதியம்.

வரைக்கட்டு *பெயர்*

ஓர் உரிமையின் உளமை ஒரு நிகழ்வைச் சார்ந்தது என்னும் வரையீடு (= நிபந்தனை). *வரைக்கட்டும் வரம்பீடும் (பி.10, சொ.மா.ச.)*; Condition.

வரைதாள் *பெயர்*

1) முறையாவணம் எழுதப்பயன்படும் தோல், காகிதம் அல்லது வேறு பொருள். (*பி.2(18), இ.மு.ச.*); Paper.

2) புத்தகமல்லாத ஏதேனும் செய்தித்தாள் உள்ளடங்கிய ஆவணம். (*பி.1, அ.பு.ப.ச.*); Paper.

3) * *பெருவாணிக நோக்கில்*, கரிமத்தாள் தவிர, அச்சிடும்தாள், எழுதும்தாள், சிப்பங்கட்டும் தாள். (*உ.பி.அரசு எதிர் கோரிஸ் (இந்தியா)* AIR 1977 SC 132); Paper.

4) * பயிற்சிச் சுவடி. (*அரசு எதிர் மகாராஜா புத்தக நிலையம்* (1977) 18 Guj. LR. 810); Paper.

வரைநிலைநிறுமம் *பெயர்*

பங்காளர் ஒவ்வொருவரும் நிறுமத்தில் கொண்டிருக்கும் பங்குகளின் அளவுக்குத் தக்கவாறு வரையறைசெய்துள்ள அவர் தம் கடப்பாடு (*பி.*2(23), *நி.ச.*); Limited company.

வரைமீறல் *பெயர்*

காண்க : அத்துமீறல்.

வரைமொழிஉடன்பாடு *பெயர்*

ஏதேனுமொன்று செய்யப்பட்டது அல்லது செய்யப்படும் என்று ஒரு சார்பினர் மற்றொரு சார்பினருக்கு எழுத்து வடிவில் உறுதி செய்யும் உடன்பாடு. *புதுப்பித்தலுக்கான வரைமொழி உடன்பாடு* (*பி.*65 *அ.*(இ). *சொ.மா.ச.*); Covenant.

வரைமொழியூறு *பெயர்*

ஒருவரது புகழுக்குக் கேடு விளையுமாறு எழுதி வெளியிடப்பட்ட உரை, எழுத்துவழிப் பழிப்புரை. *வாய்மொழியூறுக்கு இலக்கானவர்* (*பி.*32, *வி.கா.* இ.*சா.ச.*); Libel.

வரையறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இயல்பையோ நோக்கெல்லையையோ பொருளையோ துல்லியமாக உரைத்தல் அல்லது விளக்குதல். *ஆணையம் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அந்த ஆணை வரையறுத்தல் வேண்டும்* (*உறுப்.*344, இ.*அ.*); To define.

வரையறைப்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எல்லை கோலுதல்; கட்டுப்பாட்டிற்குள் வைத்தல். *கடமை ஆற்றுவதை எந்த அளவுக்கு வரையறைப்படுத்த வேண்டும் என நாடாளுமன்றம் தீர்மானிக்கலாம்* (*உறுப்.*33, இ.*அ.*); To restrict.

வரையிலாநிலை-எதிர்விதி *பெயர்*

சொத்து மாற்றல் தேதியில் உரிமைபெறும் ஒருவரின் அல்லது பலரின் வாழ்நாள் கழிந்தபின், தொடர்ந்து அச்சொத்தில் உரிமைபெறும் இளவர் ஒருவர் இருக்கும் நிலையில், அவர் உரிமைவயது அடையும்வரை அச்சொத்தில் நலன் எதையும் எவரும் உருவாக்க முடியாது என்னும் விதிமுறை (*பி.*14, *சொ.மா.ச.*); Rule against Perpetuity.

வரையீடு *பெயர்*

ஒரு செயலை மேற்கொள்ளவோ உடன்பாட்டைச் செய்துகொள்ளவோ தேவைப்படும் கூறு. *அந்த வரையீடுகள் மாற்றுகைசெய்யப்படும் வரையில் தொடர்ந்து செல்லாற்றலில் இருக்கும்* (*உறுப்.* 35(ஆ), இ.*அ.*); Terms.

வரையுடைச் சிறப்புரிமை *பெயர்*

முற்றுரிமை என்பதற்கு எதிர்வேறான வரம்புக்கட்டுடன்கூடிய தனிச்சலுகை (*ச.சொ.*1983); Qualified privilege.

வரையுரிமைவிடுப்பு *பெயர்*

வாழ்நாள் நலன் அல்லது குறிப்பிட்ட ஆண்டு வரை நலன் உடையவர், அவ்வுரிமையைத் தம்முடைய பின்னடை உரிமையருக்கோ எஞ்சுரிமையருக்கோ விட்டுக்கொடுத்து, அவ்விருவரின் இசைவுடன் இரு உரிமைகளையும் ஒன்றச்செய்வது (*ச.சொ*.1983); Surrender.

வரையூதியம் *பெயர்*

குறித்த பணிக்குக் குறித்த தொகை என வரையறுத்துப் பணியாளருக்குக் காலமுறையாக அளிக்கப்படும் கைம்மாறு; மறுபயன், சம்பளம். *மக்கள் பேரவைத் தலைவருக்கு நாடாளுமன்றம் நிலையுறுதிசெய்யும் வரையூதியங்களும் படித்தொகைகளும் கொடுக்கப்படுதல் வேண்டும்* (*உறுப்*.97, *இ.அ.*)

* ஏறத்தாழ நிலையான தன்மைகொண்ட உடலுழைப்புச்சாராத வேலைக்குக் காலந்தோறும் கொடுக்கப்படும் நிலையுறுதியான பணத்தொகை (*முகமதலி எதிர் இந்திய ஒன்றியம்* AIR 1964 SC 980); Insert.; Salary.

வலியும் துன்பமும் *பெயர்*

உடல்பற்றியதாக மட்டுமன்றி, உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றையும் குறித்து இழப்பீடு பெறத்தக்க துயரம். (S. 3(a), PCAA); Pain and Suffering.

வலுக்கட்டாயம் *பெயர்*

ஓர் உடன்பாட்டில் மற்றவரைச் சேர்க்கும் உட்கருத்துடன், இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள செயலைச் செய்வது அல்லது செய்யப்போவதாக அச்சுறுத்துவது; பிறருடைய சொத்தை அவருக்கு ஊறு நேரிடும் வகையில் சட்டமுரணாக வலுக்கட்டாயமாக இருத்திக்கொள்வது அல்லது இருத்திக்கொள்வதாக அச்சுறுத்துவது (*பி*.15, *இ.ஒ.ச.*); Coercion.

வலுத்தாக்குதல் *பெயர்*

முதலில் தொடங்கப்படும் போர், உரிமைமீறல் அல்லது மோதிவீழ்த்துதல் இந்தியாவின் ஏமக்காப்பானது போரினால், புற வலுத்தாக்குதலினால் அல்லது படைக்கலக் கிளர்ச்சியினால் அச்சுறுத்தப்படுகிறது (*உறுப்*. 352(1), *இ.அ.*); Aggression.

வழக்கமரபு

அரசமைப்புப் பேராவணத்தில் விதிமுறையாக அமையவில்லை என்றாலும் வழிவழியாக வரும் நடைமுறை நெறி. (*ச.சொ*.1983); Convention.

வழக்காடி *பெயர்*

ஓர் உரிமைவழக்கைத் தொடுப்பவர் (*ச.சொ*.1983); Litigant.

வழக்காய்வு *பெயர்*

அதிகாரவரம்புள்ள நீதிபதி முன்பு உரிமையியல் குற்றவியல் வழக்குகள் சட்டப்படி ஆய்வு செய்யப்படுவது. *நேரிய, நடுநிலையான உசாவுகையோ வழக்காய்வோ கீழமைந்த குற்றவியல் நீதிமன்றத்தில் நடத்தப்பட முடியவில்லை* (*பி*.407(1) (இ) (iii) *கு.ந.தொ.ச.*); Trial.

வழக்காளி *பெயர்*

நீதிமன்றத்தில் ஒரு வழக்கைக் கொணருபவர்; வழக்காளர்; வாதி. *வழக்காளிகளுள் ஒருவர்* (*கட்*.22.*வி.உ*. *உ.ந.தொ.ச.*); Plaintiff.

வழக்காற்றுநர் *பெயர்*

வழக்குப் பொருளியங்களை ஆயத்தம்செய்து வழக்கீடுகளை நடத்துவதற்கு உரியவாறு தகுதிப்பாடு பெற்றுள்ள சட்ட முகவர். *உயர்நீதிமன்றம்.. அங்குத் தொழிலாற்றும் வழக்காற்றுநர்கள், வழக்குரைஞர்கள், வாதுரைஞர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படவேண்டிய கட்டண அட்டவணையைத் திட்டப்படுத்தலாம் (உறுப்.227(3), இ.அ.)*; Attorney.

வழக்காறு *பெயர்*

பல்லாண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் பழக்கம். *சட்டம் என்பது வழக்காறு எதனையும் உள்ளடக்கும். (உறுப்.13(3) இ.அ.)*; Usage.

வழக்கிடத்தக்க கோருரிமை *பெயர்*

அசையாச் சொத்தின் அடைமானம் மூலமோ, அசையும் சொத்தின் ஒத்தி அல்லது அடகு மூலமோ பெறப்பட்ட கடன் அல்லாத வேறு கடனையோ உரிமை வேண்டுபவரின் உடைமையில் இல்லாத அசையும் சொத்தின் நலனையோ குறித்த உரிமைக்கோரிக்கை, தொடர்தகு உரிமை. *வழக்கிடத்தக்க கோருரிமை இப்போதிருந்துவருதல், இனிமேல் சேர்தல், வரைக்கட்டுடன் இருத்தல் அல்லது எதிர்மையில் நிகழ்தல் எனப்படும் எவ்வகையைச் சார்ந்ததாக இருந்தாலும், அது குறைதீருதவிக்கு இடமளிக்கின்றது என உரிமையியல் நீதிமன்றங்களால் இசைந்தேற்கப்படுகிறது (பி.3, சொ.மா.ச.)*; Actionable claim.

வழக்கிடத்தக்க தீங்கு *பெயர்*

* வழக்குத்தொடுக்க இடமளிக்கும் வகையில், மற்றொருவரின் உரிமைக்கு ஊறு விளைவிக்கும் சட்டமுரணான செயல், தொடர்தகு தீங்கு *(ஜோஷி எதிர் மும்பை அரசு,* AIR 1959 Bom. 363); Actionable wrong.

வழக்கிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் தமது உரிமையை நிலைநிறுத்த வேண்டி மற்றவருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுதல். *இந்திய அரசு இந்திய ஒன்றியத்தின் பெயரால் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம் (உறுப்.300(1), இ.அ.)*; To sue.

வழக்கிடுவறியர் *பெயர்*

போதிய பணம் இல்லாத காரணத்தால் நீதிமன்றக் கட்டணம் செலுத்தாமல் வழக்கிட இசைவளிக்கப்படுபவர் அல்லது வழக்கில் வழக்காளிக்கென வகுத்துரைத்த கட்டணத்தைச் செலுத்த வழிவகை இல்லாத ஏழை அல்லது வழக்குக் கட்டணம் இவ்வளவு எனக் குறிப்பிடாத நிலையில் உடுத்திய உடையும் வழக்குப்பொருளாக உள்ள உடைமையையும் தவிர ரூ.100 மதிப்புள்ள சொத்து இல்லாதவர் *(ச.சொ.1983)*; *வழக்கிடு வறியரின் உரிமை வழக்கு (கட்.33 வி.11 அ, உ.ந.தொ.ச.)*; Pauper.

வழக்கிடை *பெயரடை*

வழக்கின் முதன்மை நோக்கத்திற்கு இடைவிளைவாக எழுகிற. *வழக்கிடை ஆணை (பி.397(2), கு.ந.தொ.ச.)*; Interlocutory.

வழக்கு *பெயர்*

தமது உரிமையைச் செயலுறுத்தவோ மற்றவர் தீங்குசெய்வதைத் தடுக்கவோ ஒரு சார்பினர் மற்றொரு சார்பினருக்கு எதிராக நீதிமன்றத்தின் முன்பு கொணரும் சட்ட நடவடிக்கை. *ஒரு வழக்கில் காவல் அலுவலர் அறிக்கையைத் தாக்கல் செய்த பின்பு (பி.2 (ஈ) விளக், கு.ந.தொ.ச.)*; Case.

வழக்கு ஒத்திவைப்பு *பெயர்*

நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு முடிவடையாத நிலையில், அதைப் பின்னொரு நாளுக்குத் தள்ளிவைப்பது. *எதிர்ச்சார்பினர் எதிர்வாதம் செய்வதற்காக வழக்கு ஒத்திவைப்பு எதுவும் அளிக்கப்படக் கூடாது* (*கட்*.45, *வி* 7 (4 *வரம்*.2), *உ.ந.தொ.ச.*); Adjournment of case.

வழக்குச்செய்கை *பெயர்*

காண்க: வழக்கு நடவடிக்கை.

வழக்குச்சொத்துப்பேணுநர் *பெயர்*

வழக்குக்கு உட்பட்ட சொத்தைக் கையகப்படுத்தி, அவ்வழக்கின் அறுதித் தீர்ப்பு வரும்வரை நீதிமன்றத்தின் முகவராக அச்சொத்தின் ஆட்சியத்திற்கென நீதிமன்றத்தால் அமர்த்தப்படுபவர். *வழக்குச் சொத்துப் பேணுநரின் பாதுகாப்பில்... ஒப்படைக்கலாம்* (*கட்*.40 *வி*.1.*உ.ந.தொ.ச.*); Receiver.

வழக்குட்படுத்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் மற்றொருவர் மீது சட்டமுறைப்படி உரிமைவழக்கோ குற்றவழக்கோ தொடுத்தல் (*பி*.32, *அ. ம.ஒ.ச.*); To implead.

வழக்குத்தொகை *பெயர்*

நீதிமன்ற வழக்கிற்காகவோ சட்ட நடவடிக்கைக்காகவோ செலவழிக்கப்படும் பணம். *வழக்குத்தொகை, செலவீடுகள் மற்றும் செலவுகள்* (*கட்*.34, *வி.உ.*(*அ*) (iii) *உ.ந.தொ.ச.*); Costs.

வழக்கு நடவடிக்கை *பெயர்*

வழக்கின் ஒரு சார்பினர் மற்றவருக்கு எதிராகத் தம் உரிமையை நிலைநிறுத்தவோ, பிறர் தமக்குத் தீங்குசெய்வதைத் தடுக்கவோ நீதிமன்றத்தில் முன்னிடும் வழக்கீடு; வழக்குச் செய்கை. *நீதிநடுவர் வழக்குச்செய்கையை மேற்கொள்ளவேண்டுமென்று* (*பி*.2 (*ஈ*) *கு.ந.தொ.ச.*); Action.

வழக்குப் பட்டி *பெயர்*

நீதிமன்ற அமர்வுகளின்போது ஒவ்வொரு நாளிலும் வழக்காய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும் வழக்குகளின் விவரப் பட்டியல் (*ச.சொ*.1983); Cause list.

வழக்கு மதிப்பு *பெயர்*

உரிமைவழக்கு வகையில் கோரப்படும் தொகை அல்லது வழக்கில் குறிப்பிடும் பொருளின் விலைமதிப்புத் தொகை (*ச.சொ*.1983); Value of suit.

வழக்குமூல ஒன்றிணைப்பு *பெயர்*

ஒரே உரிமைவழக்கிலோ நடவடிக்கையிலோ இரண்டு அல்லது மேற்பட்ட வழக்கிற்கு அடிப்படையான நிகழ்வுகளை இணைப்பது; வழக்குமூலச் சேர்க்கை. *கூட்டாக அக்கறை கொண்டுள்ள வழக்காளிகள் ஒரே உரிமை வழக்கில் அத்தகைய வழக்குமூலங்களை ஒன்றிணைப்பாகச் செய்யலாம்* (*கட்*.2 *வி* 3(1) *உ.ந.தொ.ச.*); Joinder of causes of action.

வழக்குமூலம் *பெயர்*

வழக்கிற்கு அடிப்படையாய் அமையும் நிகழ்வு. *உரிமை வழக்கானது வழக்குமூலம் எழுகிற இடங்களில் தொடுக்கப்பட வேண்டும் (பி.20, உ.ந.தொ.ச.)*; Cause of action.

வழக்குரிமைப் பொருள் *பெயர்*

வெறும் உரிமை மட்டுமேகொண்டு உடைமையின் துய்மானம் பெற்றிராத சொந்தக்காரர் வழக்கிட்டுப் பெறுதற்குரிய சொத்து (*பி*.130(1), *சொ.மா.ச.*); Chose in action.

வழக்குரை அதிகாரம் *பெயர்*

நீதிமன்றத்தில் வாதிடுவதற்காக வழக்குரைஞருக்கு ஒருவர் எழுத்துவழி அளிக்கும் அதிகாரம் (*ச.சொ*.1983); Vakalatnama (Vakalat).

வழக்குரைஞர் *பெயர்*

ஒரு நீதிமன்றத்தில் அல்லது நீதியத் தீர்ப்பாயத்தில் மற்றவரின் வழக்கை எடுத்துரைத்து வாதாடும் அதிகாரம் பெற்றவர் (*பி*.2 (*அ*), *வ.ச.*); Advocate.

வழக்குரைஞர் சங்கம் *பெயர்*

வழக்குரைஞர்களின் கழகம் (*ச.சொ*.1979); Bar association.

வழக்குரை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்குரைஞர் ஒருவர் தம் கட்சிக்காரரின் வழக்கைப் பற்றிய வாதுரையைத் தொடங்கிவைத்தல் (*ச.சொ*.1983); To state a Case.

வழக்கு விவரஅறிக்கை *பெயர்*

ஒரு சட்டச் சிக்கலில் கருத்துரையைப் பெறுவதற்காக ஒரு நீதிமன்றம் மற்றொரு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கும் வழக்குரை (*ச.சொ*.1968); Case stated.

வழக்கெழுவினா *பெயர்*

ஒரு வழக்கில் வழக்காளியும் காப்பாளியும் கூறும் குற்றச்சாட்டிலிருந்து எழுவதும் நீதிமுறையில் ஆய்வுசெய்து தீர்வுசெய்யப்படவேண்டியதுமான வாதச்சிக்கல். *வராதழுவினாக்கள் தீர்வுசெய்யப்பட்டன (பி.22, உ.ந.தொ.ச.)*; Issue.

வழிகாட்டுந் தீர்ப்பு *பெயர்*

சட்டப் பிரிவின் நெறிகளுக்குத் தீர்வுமுறை செய்வதாகவும் பின்னைத் தீர்ப்புகளுக்கு முன்னோடியாகவும் உள்ள நீதிய முடிவு அல்லது தீர்ப்புரை (*ச.சொ*.1983); Leading case.

வழிச்செலுத்தும் நெறி *பெயர்*

செயற்பட வேண்டிய முறைபற்றி அறிவுறுத்தும் விதிமுறை. *அரசின் கொள்கையினை வழிச்செலுத்தும் நெறிகள் (பகு.VI. இ.அ.)*; Directive principle.

வழித்தோன்றல் *பெயர்*

குறிப்பிட்ட ஒரு மூதாதையரின் குடிவழியில் வருபவர் (*பி*.213(1) இ.*வ.ச.*); Descendant.

வழிபாடு *பெயர்*

கடவுளிடம் அல்லது இயற்கை கடந்த ஆற்றலிடம் கொள்ளும் பக்தி. *பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் தன்னுரிமை (முகப். இ.அ.)*; Worship.

வழிமுறையுரிமை *பெயர்*

சொத்துக்குரியவர் இறந்ததும் அவர் சொத்தை வழித்தோன்றல் என்னும் நிலையில் மற்றவர் அடையும் உரிமை, வாரிசுரிமை. (*பி*.25, இ.*வ.ச*.); Succession.

வழிமுறையுரிமையர் *பெயர்*

ஓர் உரிமையை, நிலையை அல்லது சொத்தினை மரபுரிமையாகப் பெறுபவர். *சொத்தில் நலன்பெறும் வழிமுறையுரிமையர்* (*பி*.100, *வா.வ.கு.ச*.); Successor.

வழியாவணஏற்பெழுத்து *பெயர்*

காண்க : நுழைவிசைவு.

வளரிளைஞர் *பெயர்*

குழந்தை நிலைக்கும் மனித நிலைக்கும் இடைப்பட்ட குமரப் பருவத்தினர். *இளங்குமரர்* (*பி*.2 (*அ*) *கி.உ.ச*.); Adolescent.

வன்கொலை *பெயர்*

அரசியல் காரணத்திற்காகச் செய்யப்படும் கொலை (*ச.சொ*.1979); Assasination.

வன்தாக்கு *பெயர்*

குற்றம் புரியும் நோக்குடன் வேண்டுமென்றே ஒருவருடைய இசைவின்றி அவருக்கு உடலூறு (=காயம்) அச்சம் அல்லது அமைதிக்குலைவை விளைவிப்பதான வன்முறை (*பி*.350, இ.*த.தொ.ச*.); Criminal force.

வன்புணர்ச்சி *பெயர்*

ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகவோ, அவளது இசைவு இன்றியோ, அவளுக்கு இறப்போ காயமோ விளையும் என அச்சுறுத்திப் பெற்ற இசைவுடனோ, சட்டப்படி மணந்த கணவன் எனத் தவறாக நம்பி இசைவளிக்கிறாள் என்பதைத் தெரிந்துமோ, பதினாறு வயதுக்கு உட்பட்டிருந்தால் அவளது இசைவுடனோ இசைவு இல்லாமலோ அப்பெண்ணுடன் கொள்ளும் உடலுறவு; (பதினைந்து வயதுக்கும் குறைவாக உள்ள மனைவியுடன் கொள்ளும் உடலுறவு "வன்புணர்ச்சி"க் குற்றம் ஆகாது) (*பி*.375, இ.*த.தொ.ச*.); Rape.

வன்மச் சிறை *பெயர்*

தீயநோக்குடனோ போதிய காரணம் இன்றியோ ஒருவர் மற்றொருவரைச் சிறை(=கைது) செய்விப்பது; தீயநோக்குக் கைது (*ச.சொ*.1983); Malicious arrest.

வன்மம் *பெயர்*

காண்க : தீய நோக்கு.

வன்ம வழக்குத்தொடர்வு *பெயர்*

* தகவான அல்லது நிகழ்வதற்கான காரணம் இல்லாமல் தீய எண்ணத்துடன் குற்றவழக்கைத் தொடுத்து நடவடிக்கையை நடத்துவது (லக்கன்லால் *மிஸ்ரா எதிர் காசிநாத்* AIR 1960 MP 1972); Malicious prosecution .

வன்முறை *பெயர்*

உடலுக்குத் தீங்கோ சொத்துக்குச் சேதமோ உண்டாக்கும் வகையில் உடல் வலிமையைப் பயன்படுத்தும் செய்கைப்பாடு அல்லது நடத்தை.

** வன்முறை என்பது உயிருள்ள மனிதருக்கு எதிராக மட்டுமல்லாமல் உயிரற்ற பொருளுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் வன்மை (சுந்தர்சிங் எதிர் அரசு* 1955 All. 232); Violence.

வா

வாக்களி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உரிமைப்பாடுள்ள ஒருவர் ஒரு தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துதல். *அவைத்தலைவர் பேரவைத்தலைவர் அல்லது இடையேற்புச் செய்பவர் முதற்படியாக வாக்களித்தல் ஆகாது (உறுப்.*100(1), *இ.அ.*); To Vote.

வாக்காளர் *பெயர்*

ஒரு தேர்தலில் தாம் விரும்பியவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமையையும், வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவையும் கொண்டுள்ள ஒருவர் (*பி.*17 இ.(ஆ) (2) *இ.த.தொ.ச.*); Voter.

வாக்காளர் குழாம் *பெயர்*

தேர்தல் தொகுதி அடிப்படையில் அமையாமல், ஒரு தேர்தலில் வாக்களிக்கும் உரிமைப்பாடுள்ள ஆட்களின் குழுமம். *குடியரசுத்தலைவர் நாடாளுமன்றம் மாநிலச் சட்டப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் வாக்காளர் குழாத்தால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (உறுப்.* 54, *இ.அ.*); Electoral college.

வாக்காளர் தொகுதி *பெயர்*

ஒரு பொதுத் தேர்தலில் சார்பாளரைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களின் குழுமம் அல்லது தேர்தல் ஆணையத்தால் எல்லை வரம்பிடப்பட்ட பகுதி.

*மேலவையின் மொத்த உறுப்பினர்களுள் பன்னிரண்டில் ஒரு பகுதியினர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற வாக்காளர் தொகுதியினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (உறுப்.*171(3) *அ. இ.அ.*); Electorate, electoral constituency.

வாக்காளர் பட்டியல் *பெயர்*

ஒரு தேர்தலில் வாக்களிக்கும் உரிமைபெற்றவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய அதிகாரமுறை வெளியீடு.

** வாக்காளர் பட்டியலைத் திருத்துவதற்கும், அதில் பதிவுற வேண்டிய உரிமைக் கோரிக்கைகளை நீதிமுறையில் தீர்மானிப்பதற்கும் அத்தகைய பதிவுக்கான மறுப்புரைகளை ஏற்பதற்குமான வாய்ப்புக் கொடுக்கப்படவேண்டும் (தலைமைத் தேர்தல் ஆணையர் எதிர். ராதேசாம்* AIR 1957 SC 304); Electral roll.

வாக்கு *பெயர்*

ஒரு தேர்தலில் தாம் விரும்பியவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை; வாக்குரிமை (*பி.*171 *அ* (ஆ) *இ.த.தொ.ச.*); Vote.

வாக்குச் சாவடி *பெயர்*

(பள்ளிக்கூடம் அல்லது சமூக மையம் போன்ற கட்டடத்தில்) ஒரு தேர்தலின்போது வாக்களிப்பு நடைபெறும் இடம் (*பி.*26(1) *ம.சா.ச.*1951); Polling booth.

வாக்குச் சீட்டு *பெயர்*

வாக்குரிமையைப் பதிவுசெய்வதற்கான தாள்நறுக்கு (*பி*.171 *ஈ*, *இ.த.தொ.ச.*); Ballot paper.

வாக்குப் பெட்டி *பெயர்*

வாக்காளர் வாக்குச் சீட்டை இடுவதற்காக மூடி முத்திரையிடப்பட்டிருக்கும் பெட்டி; வாக்குச்சீட்டுப் பெட்டி (*பி*.58(1), (*அ*), *ம.சா.ச*.1951); Ballot Box.

வாங்குபவனே விழித்திரு *தொடர்*

விற்பவரைவிட வாங்குபவருக்கு விழிப்புணர்வு தேவை என அறிவுறுத்தும் சட்ட மெய்ம்மொழி (*பி*.55(3), *சொ.மா.ச.*); Caveat emptor.

வாங்கு முன்னுரிமை *பெயர்*

மற்றவர்களுக்கு முன்னதாகவோ முதற்படியாகவோ ஒரு சொத்தை விலைகொடுத்துப் பெறுவதற்கான சிறப்புச் சலுகை, (*கட்*.20 *வி*. 14 *உ.ந.தொ.ச.*); Pre emption.

வாடகை *பெயர்*

அசையாச் சொத்தைக் குத்தகைஎடுப்பவர் குத்தகைவிடுபவருக்குக் காலமுறையாகவோ குறித்துரைத்த காலங்களிலோ செலுத்தும் பணம், விளைச்சல் பங்கு, பெறுமதியான பணி அல்லது வேறுபொருள்; வாரம், பாட்டம், குத்தகை (*பி*.105, *சொ.மா.ச.*); Rent.

வாணிக உறுதிமடல் *பெயர்*

ஒருவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றொருவருக்கு முன்பணமோ வாணிகப்பண்டங்களோ கொடுக்குமாறு எழுதும் கடிதம் (*பி*.2(3) (*இ*), *இ.மு.ச.*); Letter of credit.

வாணிகக் கடனுதவி *பெயர்*

வாணிக நடவடிக்கையில் நெருக்கடி நேரிடும்போது கொடுக்கப்படும் கடன்தொகை. (*பி*.44 *மா.மு.ச.*)

* *வாணிகக் கடனுதவியானது, அதைப் பெறுபவரின் வசதிக்காக வழங்கப்படுவதால் ஏற்குநர்மீது வழக்கிடும் உரிமை பணம்கொடுப்பவருக்கு இல்லை (நந்துராம் எதிர் சிட்ல பிரசாத்* 5 All 484); Accommodation.

வாணிகக் குறி *பெயர்*

ஆக்குபொருளரோ வாணிகரோ தம் வாணிகப்பண்டங்களைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகப் பயன்படுத்தும் பதிவு அடையாளம் (*இ.ப*.I *பிற். அ* (4) *எண்* 9, *உ.ந.தொ.ச.*); Trade mark.

வாணிகத் தூதுவர் *பெயர்*

தமது நாட்டின் வாணிக நலன்களைக் காப்பளிப்புச்செய்யும் முதன்மை நோக்கத்துடன் அயல்நாட்டிலிருக்கும் ஓர் அரசு முகவர் (*ச.சொ*.1983); Consul.

வாணிக நற்பெயர் *பெயர்*

ஒரு தொழிலில் மூலதனம் முதலிய வெறும் பணமதிப்புக்கும் அப்பாற்பட்டுப் பொதுமக்களின் பேராதரவால் ஈட்டப்படும் புகழ் (*பி*.14, *இ.கூ.ச.*); Good will.

வாணிகப் போலி *பெயர்*

வேறு வாணிகரால் ஆக்கி விற்கப்படும் பண்டம் என மக்கள் நம்பும் வகையில் அதேபோன்ற அடையாளக்குறியைப் பயன்படுத்தியோ அதனுடன் இணைத்தோ தமது பண்டத்தை ஒரு வாணிகர் விற்கும் தீங்கான செயல் (*பி*.27(2), *வா.வ.கு.ச.*); Passing off.

வாணிகம் *பெயர்*

* ஆதாயம் பெறும் பண்டங்களை வாங்கி விற்கும் அலுவல்தொழில் (*தேசிய சங்கம் எதிர் எம். ஆர். மெகர்*. AIR 1960 Bom. 22); Trade.

வாணிகவியல் சட்டம் *பெயர்*

பணமாற்றுச்சீட்டுகள், கடல்காப்பீடுகள், முகமை, கூட்டாண்மை முதலிய வாணிக நடைமுறைகளைப் பற்றிய சட்டகை. (*ச.சொ.*1968); Mercantile law.

வாதத்திற்குரிய கூறு *பெயர்*

வாதத்திற்கும் கலந்தாய்வுக்கும் இடங்கொடுக்கிற அல்லது தீர்வேற்பாடு செய்யப்பட்டிராத எழுவினா. (*ச.சொ.*1983); Moot point

வாதமுடிப்பு *பெயர்*

ஒரு பொருள்பற்றி ஆழ்ந்து ஆராய்வுசெய்யும் அவையில் நடைபெறும் வாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முறை (*ச.சொ* 1983); Closure.

வாதமுடிவுக்குரிய *பெயரடை*

வாதுரை, ஆணையுறுதியாவணம் அல்லது வாய்மொழிஉரை வெறும் பொருளியங்களை மட்டும் தெரிவிக்காமல் முடிவுக்கும் வழிவகுக்கும் தன்மையில் அமைந்த (கில்மர்) *வாதமுடிவுக்குரிய பொருட்பாடு (கட் 19 விதி 3(2) உ ந தொ ச)*, Argumentative.

வாதவுரை *பெயர்*

சார்பினர் தமது உரிமைக்கோரிக்கைக்கு அல்லது எதிர்வாதவுரைக்கு அடிப்படையாகக் கொள்கிற பொருண்மைகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் வாதுரை அல்லது எழுத்துரை
* *சென்னை உயர்நீதிமன்ற முதல்நிலை விதிகளுக்கிணங்க, வாதவுரை என்பது ஆணையுறுதியாவணத்தையும் உள்ளடக்கும் (பி எஸ். ஆதித்தன் எதிர் ஆர்.கே.ஆதித்தன்* (1983) 2 Mad LJ 32); Pleading.

வாதிடுமிடம் *பெயர்*

நீதிமன்றத்தில் தன் கட்சிக்காரருக்காக ஒரு வழக்குரைஞர் நின்று வழக்குரைக்கும் இடம் (*ச.சொ* 1983), Bar

வாதுரை *பெயர்*

கோருரிமையின் அல்லது காப்புரையின் அடிப்டைப் பொருளியங்கள் அடங்கிய சுருக்கமான வழக்குரை அல்லது எதிர்வழக்குரை *வாதுரைமூலம் சார்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ள பொருளியம் எதுவும் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை (பி 58, இ.சா ச)*, Pleading

வாதுரைசெய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வழக்குரைஞர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை எடுத்துரைத்து வாதம்செய்தல் *உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி ஏற்றிருந்த எவர் ஒருவரும் இந்திய நீதிமன்றத்தின் அல்லது அதிகாரஅமைப்பின் முன்பு வாதுரைசெய்தல் கூடாது (உறுப் 124(7). இ அ)*. To plead

வாதுரைஞர் *பெயர்*

ஒரு வழக்கின் சார்பினருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதாடுபவர். *வழக்காற்றுநர்கள், வழக்குரைஞர்கள், வாதுரைஞர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்பட வேண்டிய கட்டணங்கள்* (*உறுப்*.227(3), *இ.அ.*); Pleader.

வாய்தா *பெயர்*

காண்க : கேட்பு.

வாய்மொழிச்சான்று *பெயர்*

காண்க : உரைச்சான்று.

வாய்மொழியூறு *பெயர்*

ஒருவரைப் பற்றிப் பேச்சுவழி ஏற்படுத்தும் பழிப்புரை, அவதூறு (*உறுப்*.76, *கா.வ.ச.*); Slander.

வாரம் *பெயர்*

நிலக்கிழாருக்கும் பயிரிடுவோருக்கும் அல்லது குத்தகை விடுபவருக்கும் எடுப்பவருக்கும் இடையே விளைச்சலில் பிரித்துக்கொள்ளும் பங்கு (*ச.சொ*.1983); Waram.

வாராக் கடன் *பெயர்*

* கொடுத்த கடனைத் திரும்பப்பெறும் வாய்ப்பற்ற தொகை; (*தியோநிதி பிரசாத் எதிர் வருமானவரி ஆணையர்* AIR 1953 Pat. 360); Bad debt.

வாராமை *பெயர்*

ஒரு வழக்கின் சார்பினர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமை; *வாராமை காரணத்தால்* (*உறுப்*.316 (1*அ*) *இ.அ.*); Absence.

வாரிசு *பெயர்*

காண்க : வழிமுறையுரிமையர்.

வாழ்க்கைத்தொழில் *பெயர்*

வாழ்வதற்கு வேண்டிய ஊதியத்தை ஈட்டும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பிழைப்புவகை. *வாழ்க்கைத் தொழில், வாணிகம் அல்லது அலுவல்தொழில் எதனையும் செய்து வருவதற்குத்* தேவைப்படும் (*உறுப்*.19(6)(1), *இ.அ.*); Occupation.

வாழ்க்கைப் பொருளுதவி *பெயர்*

காண்க : பிரிந்துறை உதவி.

வாழ்நாள் அளவு *பெயர்*

ஒருவர் எத்தனை ஆண்டு உயிர் வாழ்வார் என எதிர்பார்க்கப்படும் காலநீட்சி (*ச.சொ*.1983); Expectation of life.

வாழ்நாள்பொருளுதவி *பெயர்*

சார்ந்து வாழ் நிலையினருக்கு உணவு, உறையுள் முதலிய தேவைப்பொருள்களையோ அவற்றிற்கு மாற்றாகப் பணத்தையோ வழங்குவது; வாழ்க்கைச் செலவுத்தொகை (=ஜீவனாம்சம்) (*ச.சொ*.1983); Maintenance.

வாழ்வூதியம் *பெயர்*

ஒரு வேலையாள் தன் குடும்பத்துடன் வறுமை வாய்ப்படாமல் வாழ்வதற்குப் போதிய கூலி; உயிர்வாழ் உழைப்பூதியம். *உழைப்பாளர்க்கு வாழ்வூதியம்... உறுதியாகக் கிடைக்கச் செய்தல்* (*உறுப்*.43, இ.*அ*.); Living wage.

வாழ்வோரிடைக் கொடை *பெயர்*

உயிருடன் இருக்கும் ஒருவரால் மற்றொருவருக்கு வழங்கப்படும் நன்கொடை (*ச.சொ*.1983); Gift inter vivos.

வி

விடுதலை ஆணை *பெயர்*

குற்றம் தொடர்பான ஐயப்பாட்டிலிருந்து அல்லது குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கும் கட்டளை. *உயர்நீதி மன்றம் குற்றம் சுமத்தப்பட்டவரின் விடுதலை ஆணையை மேல்முறையீட்டின்மீது எதிர்மாறாக்கி இறப்புத் தண்டனை அளித்துள்ளது* (*உறுப்*.134(1)(*அ*), இ.*அ*.); Acquittal order.

விடுமுறைக்கால நீதிபதி *பெயர்*

உடனடியாகவோ அவசரமாகவோ உள்ள வழக்குகளை ஆராய்வதற்காக நீதிமன்றத்தின் நீள்விடுமுறையின்போது அலுவல் புரியும் முறைமன்ற நடுவர் (*ச.சொ*.1979); Vacation judge.

விடுவிக்கப்படுதல் *பெயர்*

சிறையிலிருந்தோ குற்றச்சாட்டிலிருந்தோ விடுதலை பெறுதல் அல்லது உரிமை, கடன், பொறுப்பு அல்லது கடப்பாடு முடிந்துவிடுதல்.

* *கடன், சொத்துடைமை, கட்டளைப்பொறுப்பு முதலிய பலபொருட்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுதல் (சாரதாபிரசாத் எதிர் ஜம்னாபிரசாத்* 1961 SC 1074); Discharge.

விடுவி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சட்டப் பிணைப்போ அதிகாரவுரிமையோ உடையவர், வழக்கை நடத்தும் கடமைப்பொறுப்போ உரிமையோ உள்ள வரை அந்தப் பொறுப்பிலிருந்து அகற்றிவிடுதல். *விசாரணைக்காக மட்டுமே காவலில் வைக்கப்பட்டிருப்பவரை விடுவிக்க வேண்டும்* (*பி*.118, கு.ந.*தொ.ச*.); To release.

விடுவினா *பெயர்*

வழக்காய்வுக்கு முன்பு ஒரு சார்பினரால் எழுத்துமூலம் அளிக்கப்படுவதும், அதற்கு மறுசார்பினர் ஆணையுறுதி செய்து விடையளிக்க வேண்டியதுமான கேள்வி (*ச.சொ*.1983); Interrogatories.

விடை *பெயர்*

நீதிமன்ற வாதுரைப் போக்கில் பொருளிய வினாக்களுக்கான எதிர்க்கூற்று அல்லது சான்றுரைஞரைக் கேள்வி கேட்டபின் அவர் அளிக்கும் உண்மைவிவரம் பற்றிய மறுமொழி. *உரிமைக்கோரிக்கைக்கான விடையைச் சொல்வதற்காக எதிர்வழக்காளிக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்படலாம்* (*கட்*.5 *விதி*(1), *உ.ந.தொ.ச*.); Answer.

விடைபொதி வினா *பெயர்*

கேள்வி கேட்பவர் தாம் பெற விரும்புகிற அல்லது எதிர்பார்க்கிற மறுமொழியும் அக் கேள்வியிலேயே அமையுமாறு விடுவிக்கும் வினா. *விடையைக் குறிப்பாய் உணர்த்தும் எந்த வினாவும் விடைபொதி வினா என வழங்கப்படும்* (*பி*.141, இ.*சா.ச*.); Leading question.

விண்ணப்பம் *பெயர்*

உரிய முறையில் அதிகார அமைப்புக்கு விடுவிக்கப்படும் மனு; ஆய்வுக்காக எந்தக் காலத்திற்குள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யப்படவேண்டும் என்பது பற்றிய நடைமுறை (*உறுப்*.145(1), இ.*அ*.); Application.

விதிமுறைப்படி நிறுவுகை *பெயர்*

சமய, சாத்திர அல்லது வழக்காற்றுச் சடங்குடன் தெய்வப் படிவம் அமைத்தல் அல்லது கோவிலமைத்தல். (= பிரதிஷ்டை)

* *மாசுபட்ட தெய்வப்படிமத்தை, வீட்டினை அல்லது கோவிலைத் தூய்மைப்படுத்தல் அல்லது மறுபடியும் அமைத்தல் (கபிலவாயி காசி ராமராவ் கோட்டா எதிர் வேங்கடரத்னம்* AIR 1947 PC 88); Pratista, Consecration.

விதிவிலக்கு *பெயர்*

செய்த விதிமுறையிலிருந்து விலக்கு அளிக்கும் காப்புரை வாசகம் அல்லது கூறு (*பி*.6, இ.*த*.*தொ*.*ச*.); Exception.

விருப்பத்தேர்வு *பெயர்*

இரண்டோ இரண்டுக்கு மேற்பட்டோ உள்ள வாய்ப்புகளிலிருந்து ஒன்றைத் தெரிவுசெய்வது. *கைது செய்யப்பட்டவர் தமது விருப்பத் தேர்வின்படியான ஒரு சட்டத்தொழிலாற்றுநரைக் கலந்தறிதல்* (*உறுப்*.22(1), இ.*அ*.); Choice.

விருப்பாவணஇணைப்பு *பெயர்*

விருப்புறுதியின் முடிவுகளை விளக்குவதற்கோ மாற்றுகை, குறைப்பு அல்லது சேர்மானம் செய்வதற்கோ ஆவணத்தின் பகுதியாக அமைக்கப்படும் பிற்சேர்க்கை; உயிலிணைப்பு (*பி*.2 (*ஆ*), *கு*.*தீ*.*ச*.); Codicil.

விருப்பாவணஉரிமையர் *பெயர்*

விருப்புறுதி வழியே கொடையைப் பெறுவர், உயில்வழி உரிமையர் (*பி*.19(6), *சொ*.*மா*.*ச*.); Legatee.

விருப்பாவண எஞ்சுரிமையர் *பெயர்*

விருப்புறுதியில் எழுதியவாறு கொடைகளைக் கொடுத்ததற்கும், அனைத்துக் கடன்களை அடைத்ததற்கும் பின்பு, மிஞ்சியுள்ள சொத்தைப் பெறுதற்குரியவர். *எஞ்சியிருக்கிற உயில்வழி உரிமையர்; எச்சம் ஏதாவது இருப்பின் விருப்பாவண எஞ்சுரிமையருக்குச் செலுத்தப்படுவதாகுக* (இ.*ப*.1,*பிற்*. *ஈ*. *படி*.18(3), *உ*.*ந*.*தொ*.*ச*.); Residuary legattee.

விருப்பாவணக்கொடை *பெயர்*

விருப்புறுதி வழியே நன்கொடையாக அளிக்கப்படும் அசையும் சொத்து, உயில்கொடை (*பி*.6 (*அ*), *சொ*.*மா*.*ச*.); Legacy.

விருப்பாவணக்கொடைஞர் *பெயர்*

விருப்புறுதி வழியே சொத்தையளிப்பவர், உயில் கொடையாளி; உயில்வழி அளிப்பவர் (*ச*.*சொ*.1983); Legator.

விருப்பாவணச்சொத்தளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் தம்முடைய உடைமையை விருப்பம்போல் தீர்வுமுறைசெய்தல் (இ.*ப*.1 *பிற்.அ.எண்*. 43, *உ.ந.தொ.ச.*); To bequeath.

விருப்பாவணச்சொத்து *பெயர்*

விருப்புறுதி வழியே அடையப்பெறும் சொத்து; உயில் சொத்து (*பி*.13 (*அ*), இ.*து.ச.*); Bequest.

விருப்பாவணம் *பெயர்*

தமது இறப்புக்குப் பின்பு தமது சொத்தை எவ்வாறு தீர்வு செய்ய வேண்டும் என்பதைக் குறித்து விருப்புறுதி எழுதுபவரின் உட்கருத்தை விளம்பும் சட்டமுறை ஆவணம்; உயில்; விருப்புறுதி (*பி*.3(64), *பொ.வ.ச.*); Will.

விருப்பாவணம் அழிசெயல் *பெயர்*

முதலில் தாம் எழுதிவைத்த கொடையளிப்பை விருப்பாவணர் பின்னர் விற்பது போன்ற செயல் மூலம் இல்லாமல் செய்தல்; உயிலழிவு செய்தல் (*ச.சொ*.1979); Ademption of legacy.

விருப்பாவணம்எழுதாது இறத்தல் *பெயர்*

* ஒரு சொத்துரிமையர் சொத்தின் தீர்வுச்செய்கை பொறுத்துத் தமது விருப்பத்தைத் தெரிவிக்க மனமின்றி இறந்து போதல் (*சம்பத்குமாரி எதிர் லட்சுமி அம்மாள்* 1963 Mad. 50); Dying intestate.

விருப்பாவண மெய்ப்பிதழ் *பெயர்*

ஒருவர் எழுதிவைத்த விருப்புறுதி உண்மையானது என்றும் அதில் கண்டுள்ள நிறைவேற்றுநருக்குச் சொத்தை ஆட்சியம் செய்யும் அதிகாரம் வழங்கப்படுகிறது என்றும், உரிய அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றம் முத்திரையுடன் அளிக்கும் சான்றிதழ், உயில் மெய்ப்பிதழ் (*பி*.41, இ.*சா.ச.*); Probate.

விருப்பாவணர் *பெயர்*

செல்லுந்தன்மையுள்ள ஒரு விருப்புறுதியை எழுதிவைத்து இறந்து போனவர்; உயிலெழுதிவைத்தவர். *விருப்பாவணரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் ஆவணம்* (*கட்*.31, *வி*.2, *உ.ந.தொ.ச.*); Testator.

வில்லங்கம் *பெயர்*

சொத்தில் இணைந்துள்ள பிணைப்பொறுப்பு அல்லது கடப்பாடு. *ஓர் அசையாச் சொத்திலுள்ள வில்லங்கத்தைத் தீர்த்தல்* (*பி*.73(1),*வரம்* (இ), *உ.ந.தொ.ச.*); Encumbrance.

விலக்களிப்பு *பெயர்*

ஊறுத்தம் (=பாதிப்பு) இல்லாத கடப்பாடு, கடமைப்பொறுப்பு, தண்டம், சட்டம் அல்லது அதிகாரவுரிமையின் தாக்கத்திலிருந்து காப்புநிலை (*ச.சொ*.1979); Exemption.

விலக்களிப்புக் கோவில் *பெயர்*

* தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் ஒருகோவிலின் பொறுப்புக்கட்டளையர் பதவிக்கான வழிமரபுரிமை, அதை நிறுவியவரால் மரபுரிமையாக்கப்பட்டுள்ள வழிபாட்டுத்தலம். (*இந்து அறநிலைய ஆணையர், தஞ்சாவூர் எதிர் சித்தி விநாயக முதலியார்* (1971) MLJ 422); Excepted temple.

விலக்குரிமையளி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் செயலினால் ஏற்படும் தீங்கு அல்லது இழப்புக் காரணமாக அவர் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைக்கு எதிராகக் காப்புறுதியளித்தல். *படைத்துறையாட்சி செல்லாற்றலில் இருந்த பரப்பிடத்தில் அரசுப்பணியாளர் செய்த செயலுக்கு விலக்குரிமையளிக்க நாடாளுமன்றம் வகைசெய்யலாம்* (*உறுப்*.43, *இ.அ.*); To indemnify.

விலங்கு *பெயர்*

மனிதர் அல்லாத, மற்றைய இயங்கும் நாற்கால் உயிரினம் (*பி*.47, *இ.த.தொ.ச.*); Animal.

விலைக்குவாங்குநர் *பெயர்*

ஒருபொருளைப் பணம் கொடுத்து வாங்குபவர் (*பி*.10, *கா.அ.ச.*); Vendee.

விவரஅறிக்கை *பெயர்*

சாட்டுரை, வாதுரை, வாக்குமூலம், விளம்புரை முதலியவற்றைக் காலமுறையாக முன்னிடும் ஆவணம் (*ச.சொ*.1979); Statement.

விவரஉரை *பெயர்*

உசாவுகையிலுள்ள பொருளுக்குத் தொடர்புடைய எண்ணிக்கை தொகை முதலியன பற்றி அதிகாரமுறையில் தெரிவிக்கப்படும் செய்தி (*கட்*.5, *வி*:18, *உ.ந.தொ.ச.*); Returns.

விவரக்குறிப்பு *பெயர்*

1. வழக்குக்கு ஆதரவாகவோ எதிராகவோ உள்ள காரணங்களின் சுருக்குரை (*ச.சொ*.1979); Memorandum.
2. நினைவுக்குறிப்பு (*பி*.3, *விளக்*.1, *சொ.மா.ச.*); Memorandum.
3. வாணிக ஒப்பந்தங்களில் அடங்கிய வரையீடு (*ச.சொ*.1979); Memorandum.
4. குறிப்பிட்ட ஒரு பொருட்பாட்டைப் புலனாய்வுசெய்து அளிக்கப்படும் அறிக்கை. *குடியரசுத்தலைவர்... மேற்கொண்டு செய்கையை விளக்கும் ஒரு விவரக்குறிப்புடன் அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்கும்படி செய்ய வேண்டும்* (*உறுப்*.340 (3), *இ.அ.*); Memorandum.

விவரக்கூறு *பெயர்*

ஒப்பாவணம், உடன்பாடு அல்லது முறையாவணத்தில் அதன் செயற்பாட்டுப் பகுதியை விளக்குகிற அல்லது அதற்கு வழிவகுக்கிற எழுத்துரை; வாசகம். *முடியாட்சிச் சார்பாளரின் அறிவிக்கையில் அல்லது அரசின் அறிவிக்கையில் அடங்கியுள்ள ஒரு விவரக்கூறு... ஒரு தொடர்புடைய பொருளியம் ஆகும்* (*பி*.37, *இ.சா.ச.*); Recital.

விழலாக்கத்தக்க *பெயரடை*

செய்யாமல் தவிர்த்திருக்கவேண்டிய. *விழலாக்கத்தக்க ஒப்பந்தம்* (*பி*.2(i), *இ.ஒ.ச.*); Voidable.

விழலாக்கத்தக்க ஒப்பந்தம் *பெயர்*

ஒப்பந்தத்தின் இரண்டு சார்பினர்களில் ஒருவருக்கு அதை நிறைவேற்றும் விருப்பம் இல்லையெனில் சட்டப்படி செயற்பட முடியாத உடன்பாடு; தவிர்தகு ஒப்பந்தம் (*பி*.2 (i), *இ.ஒ.ச.*); Voidable contract.

விழுக்காட்டளவு *பெயர்*

பருமன், தன்மை அல்லது அளவைப் பொறுத்தமட்டில் முழுமையான ஒன்றுடன், அதன் ஒரு சிறு கூறுகொள்ளும் தொடர்பு. *அசாம் தன்னுரிமையாட்சி மாவட்டத்தின் மக்கள்தொகைக்கும் அந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகைக்கும் இடையேயுள்ள விழுக்காட்டளவு (உறுப்.332 (4) இ.அ.)*; Proportion.

விளக்கவுரை *பெயர்*

வாதப்பொருளுக்குரிய கருத்துரையை அல்லது மனப்பாங்கை வெளிப்படுத்தும் நுண்ணாய்வுரை அல்லது குறிப்புரை. *கண்டனம் தெரிவிக்கும் விளக்கவுரைகள் இப்பிரிவின் கீழ்க் குற்றமாக அமையா (பி.124அ, விளக்.2, இ.த.தொ.ச.)*; Comment.

விளம்புகை *பெயர்*

அனைவரும் அறியும்படி வெளிப்படுத்தும் கூற்று; சாற்றுரை. *பொதுமக் கொள்கைபற்றிய விளம்புகை; சாற்றுரை (பி.171(ஆ), (ii) வரம். இ.த.தொ.ச.)*; Declaration.

விளம்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஐயமோ தயக்கமோ இன்றிப் பலரும் அறியும்படி வெளிப்படையாக அறிவித்தல்; சாற்றுரைசெய்தல்; விளம்புகைசெய்தல். *குடியரசுத்தலைவர்... மாநில அரசாங்கத்துடன் கலந்தறிந்து விளம்புகின்ற பொருட்பாடுகள் (உறுப்.370(ஆ-i), இ.அ.)*; To declare.

விளம்புரை *பெயர்*

காண்க : விளம்புகை.

விற்குநர் *பெயர்*

ஒரு பொருளை விலைக்கு விற்பவர் *(பி.28(2) (அ), கு.தீ.ச.)*; Vendor.

விற்குநர் பற்றுரிமை *பெயர்*

ஒருநிலச்சொத்தை விற்றவருக்குச் சேரவேண்டிய பணத்தொகை முழுவதுமாகவோ பகுதியாகவோ கொடுக்கப்படாத நிலையில், அத்தொகையைப் பெறும் பொருட்டு விற்றவர் அச்சொத்தை இருத்திவைத்துக்கொள்ளும் உரிமை *(பி.55(1), சொ.மா.ச.)*; Vendor's lien.

விற்பனை *பெயர்*

செலுத்திய அல்லது உறுதிமொழியளித்த விலைக்காகவோ பணம் தொடர்பான வேறு மறுபயனுக்காகவோ அசையும் சொத்தின் அல்லது அசையாச்சொத்தின் உரிமையை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றல்செய்வது *(பி.54, சொ.மா.ச.)*

* *விற்பனை என்பது ஓர் ஒப்பந்த நிறைவேற்றத்தில் தொடர்புடைய பண்டங்களின் சொத்துரிமைமாற்றல் உள்ளடங்கியும், அடைமானம், உரிமை அடைமானம், பொருப்பிணைப் பொறுப்பு அல்லது அடகு உள்ளடங்காமலும், கைப்பணம், காலந்தள்ளிச் செலுத்துகை, பெறுமதியான மறுபயன் ஆகியவை பொறுத்துச் சொத்துரிமையை மாற்றிக் கொடுத்தல் (விஷ்ணு முகமை எதிர் வணிகவரி அலுவலர் 77 CWN. 141)*; Sale.

விற்பனை அடைமானம் *பெயர்*

அடைமானம் வைத்தவர் குறித்த தேதிக்குள் பணம் செலுத்தத் தவறினால் அடைமானப்பொருளின் விற்பனை உறுதிப்படுவதும், பணம் செலுத்திவிட்டால் விற்பனை விழலாகிவிடுவதும், பணம் செலுத்திய உடனேயே வாங்கியவர் விற்றவருக்குச் சொத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்னும் வரைக்கட்டுக் கொண்டதுமான அடைமான வகை *(பி.58(இ), சொ.மா.ச.)*; Mortgage by conditional Sale.

விருப்புறுதி *பெயர்*

காண்க : விருப்பாவணம்.

வீ

வீடு *பெயர்*

வாழும் இடம், குடியிருப்பிடம், உறைவிடம். *வீடு என்பது கட்டமைப்பை அல்லது கட்டுமானத்தை மட்டுமின்றி, மனைவளாகக் கட்டடங்கள், வெளியிடங்கள், தோட்ட முற்றம், பழத்தோட்டம் முதலியவற்றையும் குறிக்கும் (காளிபாதா எதிர் துளசிதாஸ்* AIR 1960 Cal. 467); House.

வெ

வெட்டுரிமை *பெயர்*

ஓர் அவை நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்க மறுப்பதுடன், அதைத் தடைசெய்வதற்குமான தனி அதிகாரம் (*ச.சொ.*1983); Veto.

வெள்ளை அறிக்கை *பெயர்*

குறித்த ஒரு பொருள் பற்றி நாடாளுமன்றம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அரசு வழங்கும் அச்சிட்ட விவரவுரை (*ச.ஆ.சொ.க.*); White paper.

வெளித்தோற்றமான *பெயரடை*

இல்லாத ஒன்று இருப்பதைப்போல் புலப்படுகிற; வெளித்தோற்ற அதிகாரவுரிமை (*பி.*16(2) (*அ*), *இ.ஒ.ச.*); Apparent.

வெளிநாட்டவர் *பெயர்*

காண்க : அயல்நாட்டவர்.

வெளியிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அறிக்கை, நூல், செய்தியிதழ், கலைப் படைப்பு முதலியவற்றைப் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக வெளிப்படுத்துதல். *சட்டமன்ற அதிகாரவுரிமையின்படி வெளியிடப்பட்ட அறிக்கை, வரைதாள் வாக்குகள் அல்லது நடவடிக்கை (உறுப்.*194(2), *இ.அ.*); To Publish.

வெளியேற்றுகை *பெயர்*

முறைகேடாக நிலத்தைக் கைப்பற்றியுள்ளவரை நிலத்திலிருந்து அகற்றுவதுடன் அதற்கான வழக்குச் செலவுத் தொகையையும் தண்டல் செய்தல்.

* *தற்போதைக்குக் குடியிராமை மட்டுமே வெளியேற்றுகை என்பதாக அமையாது (முகமது அமீர் எதிர் தியோகி* 1963 All. L.J. 338); Eviction.

வெளியேறியவர் *பெயர்*

அச்சம், குழப்பம், போர் முதலிய காரணத்தினால் இடம் பெயர்ந்த ஒருவர்; நாடிலி, ஊரிலி.

* *இந்தியா, பாக்கிஸ்தான் தன்னாட்சியங்களை நிறுவியமைத்ததனாலோ உள்நாட்டுக் குழப்பங்கள் முதலியவற்றினாலோ, ஒரு மாகாணத்திலுள்ள இடம் எதிலிருந்தும், இந்தியாவின் பகுதியாக இப்போது அமையும் ஆட்சிப்பரப்புக்கு வெளியேயுள்ள இடம் எதற்கும், 1 மார்ச்சு 1947 அன்றோ அதற்குப் பின்போ செல்கின்ற அல்லது சென்றிருக்கிற ஒருவர். (ஹர்கோவிந்து எதிர் அசீஸ் அகமது* (1970) 1 SCJ 324); Evacuee

வெறிதாகி விழலாதல் *பெயர்*

சட்டத்தின் ஆற்றலையோ செல்லுநிலையையோ கொண்டிராத நிலை (*பி*.16, *இ.தி.ச.*); Null and Void.

வே

வேட்பாளர் *பெயர்*

ஒரு பதவி, சிறப்புரிமை, தகுநிலை அல்லது மதிப்புக்காகத் தாமே முன்வந்து நிற்கிற அல்லது மற்றவர்களால் நிறுத்திவைக்கப்படுகிற போட்டியாளர். *பதவிஉயர்வுகள் அல்லது மாற்றல்களுக்கான வேட்பாளர்களின் தகுதியுடைமை பற்றி அரசுப் பணியாளர் தேர்வாணையம் கலந்தறியப்படுதல் வேண்டும்* (*உறுப்*.320, *இ.அ.*); Candidate.

வேண்டுகோள் *பெயர்*

1. ஒன்றைச் செய்துமுடிக்கும் திறமுள்ளவரிடம் தெரிவிக்கும் விருப்பம் (*பி*.145 *விளக்*. (இ) *இ.ஒ.ச.*)

2. * ஒரு கீழமை அலுவலருக்கு அரசினால் இடப்படுவதும் அதை அவர் புறக்கணிக்க இயலாததுமாகிய கட்டளை அல்லது ஆணை (*சி.ஏ.ஏ. விற்பனைச் சங்கம் எதிர் ஆந்திர அரசு* AIR 1975 SC 2313); Request.

வேண்டுமடல் *பெயர்*

அதிகாரவுரிமையுள்ளவருக்கோ அரசாங்கத்திற்கோ அடிப்படையாக அமையும் உண்மை விவரங்களை எடுத்துரைத்து முறைவேண்டும் விண்ணப்பம். *குடியியல் பணிபுரியும் ஒருவருக்கு உறுத்தம்செய்யும் ஒழுங்குக்கட்டுப்பாட்டுப் பொருட்பாட்டுடன் தொடர்புடைய வேண்டுமடல்கள்* (*உறுப்*.320(3-ஆ), *இ.அ.*); Memorial.

வேண்டுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொதுமை நெறிகளுக்குத் தேவையானது அல்லது இன்றியமையாதது என்றோ, குறிப்பிட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு நடக்கும் பொருட்டோ, ஒன்றை அதிகாரத்துடன் கேட்டுப்பெறுதல். *ஆளுநர் பேருரை நிகழ்த்தும் நோக்கத்திற்காகச் சட்டமன்ற உறுப்பினர்களின் வருகையை வேண்டுறுத்தலாம்* (*உறுப்*.175(1), *இ.அ.*); To require.

வேலைக்கமர்த்துதல் *பெயர்*

1. ஊழியர்களை வேலையில் பயன்படுத்திக் கொள்ளுதல்.

2. * வேலைபெறுநருக்கும் வேலைதருநருக்குமிடையே நிலைபெறும் பணிஒப்பந்தம் (*முகமது சத்தார் எதிர் அரசு* AIR 1959 All. 404); Being employed.

வேலைதருநர் *பெயர்*

தம் பொருட்டாகப் பிறரிடம் பணிகொண்டு அதற்கு மறுபயனாக ஊதியம் கொடுப்பவர்; பணித்தலைவர் வேலைக்கு அமர்த்துபவர். (*ச.சொ*. 1979); Employer.

வேலைபெறுநர் *பெயர்*

குறிப்பாக அரசு அல்லது தொழில்துறை நிறுவனத்தில் பணிக்கு அமர்த்தப்படுபவரும் அதிகாரமுறை அலுவலரின் தகுநிலைக்குக் குறைந்த படிநிலையில் இருப்பவருமாகிய ஊழியர். *ஒன்றியத்து வேலைபெறுநர்கள் தொடர்புடைய தொழில்துறைப் பூசல்கள்* (இ.ப. VII-1-61, *இ.அ.*); Employee.

வேலையமைவு *பெயர்*

ஊதியம் பெறும் பணியைக் கொண்டிருக்கும்நிலை பணித்தொழில்கள், வாணிகங்கள், கொள்தொழில்கள், வேலையமைவுகள் ஆகியவற்றின்மீதான வரிகள் (*உறுப்*. 276(1), *இ.அ.*); Employment.

வேற்றுமைபாராட்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒருவர் மற்றவருக்கு ஆதரவாகவோ எதிராகவோ வேறுபாடுகாட்டுதல். குடிமகன் எவருக்கும் *எதிராக அரசு வேற்றுமை பாராட்டுதல் ஆகாது* (*உறுப்*. 15, *இ.அ.*); To discriminate.

வை

வைப்பீடு *பெயர்*

பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு மற்றவரின் பொறுப்பில் வைக்கப்படும் பணத்தொகை அல்லது பொருள். *வைப்பீட்டுச் சான்றிதழ்* (*பி*.2 (2-ஆ), வ.வ.ச.); Deposit.

இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வ. ஜெயதேவன் இல்லினாய்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா அவர்களிடம் நேரிடையாக அகராதியியலில் பயிற்சி பெற்றவர்; தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் முதல் இயக்குநர்; தமிழ் மொழித்துறையின் முன்னைத் தலைவர்; தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியர்; தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் தலைமைப் பதிப்பாசிரியர்; இந்திய அகராதியியல் கழகத்தின் பொதுச் செயலாளர்; ஆசிய அகராதியியல் கழகத்தின் தலைவர்; அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுநூல்கள், பதிப்புக்கள் பலவற்றின் ஆசிரியர்; இவர் மேற்பார்வையில் 28 பேர் முனைவர் பட்டமும் 100 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

இந்த அகராதி பல
சிறப்பியல்புகளையும் தனித்
தன்மைகளையும் கொண்டு
விளங்குவதையும்
சட்ட ஆர்வலர்களுக்கும்,
ஆராய்ச்சியாளர்களுக்கும்,
அறிஞர்களுக்கும்
உதவும் வகையில்
அமைந்திருப்பதையும் இதைப்
பார்வையிடுவோர்
காணுதல் கூடும்.

சென்னைப் பல்கலைக்கழகம்
2007